வினை விதைத்தவன்
வினையறுப்பான்

செவ்விலக்கியம்

...வினை விதைத்தவன் வினையறுப்பான்

கன்னடமூலம்

எம்.எஸ். புட்டண்ணா

தமிழில்

பாவண்ணன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

இந்தப் புத்தகம், சுற்றுச்சூழல் தோழமை கொண்ட மறுசுழற்சிக் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது

ISBN 81-237-1388-6

முதற்பதிப்பு: 1995 (சக, 1916)

Madidunno Maharaya (Tamil)

ரூ. 37.00

வெளியீடு : இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,
ஏ-5, கீரின் பார்க், புதுதில்லி-110 016

அறுவடை: ஓர் அறிமுகம்

1854ல் மைசூரில் பிறந்த திரு. எம்.எஸ்.புட்டண்ணா அவர்கள் கன்னட மொழியின் முன்னேற்றத்திற்காக உழைத்த படைப்பாளிகளிடையே முக்கியமானவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ பட்டம் பெற்ற அவர் ஆசிரியராகவும், மொழிபெயர்ப்பாளராகவும், தாசில்தாராகவும், எழுத்தாளராகவும் பணிபுரிந்தார் பற்பல தொழில்களில் பல்வேறு காலகட்டங்களில ஈடுபட்டவரெனினும், கன்னடத்திற்காக உழைப்பதை அவா ஒரு போதும் நிறுத்தவில்லை. பல்கலைக்கழகத்திலும் பல்வேறு கல்வி நிறுவனங்களிலும் நேர்வாளராகவும், பாடநூல் திட்டக்குழுவின் உறுப்பினராகவும், மொழியின் பல்வேறு வடிவங்கள் குறித்து விவாதிக்கும் குழுவின் உறுப்பினராகவும் அவர் பணிபுரிந்தார். கன்னட சாகித்ய பரிஷத்' எனகிற அமைப்பை நிறுவிய தொடக்கக் கால உறுப்பினர்களுள் ஒருவரான அவர். அதன் செயலாளராகவும் சிறிது காலம் பணிபுரிந்தார். பொதுச்சேவையிலும் அவர் ஆர்வத்துடன் உழைத்தார் ஆங்கிலம், சமஸ்கிருதம், மராத்தி, உருது, சிந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் அவர் வல்லவராக இருந்தாலும் கன்னடத்தில் பேசுவதிலும் எழுதுவதிலும் அவர் தீராக் காதல் கொண்டிருந்தார். அதே சமயத்தில் சமூகப் போக்கால் கன்னடத்தோடு வந்து கலந்துவிட்ட பிற மொழிச் சொற்களை நீக்க வேண்டும் என்று முரட்டுப் பிடிவாதமும் பிடிக்கவில்லை.

புட்டண்ணா அவர்களின் முதல் திருமணம் தோல்வியில் முடிந்தது. மனம் பொருந்தாத கணவனும் மனைவியும் விலகினார்கள் மனைவியின் நடத்தைமேல் சந்தேகம் கொள்ளும் அளவுக்கு மனம் மாறிய பிறகு இருவரும் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை. அதன் பிறகு தனக்கு விருப்பமான ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து அவளையே திருமணம் செய்து கொண்டார் அவர். இரண்டாம் மனைவி வழியாக அவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தார்கள்.

தன் வேலையில் மிகவும் நேர்மையானவராகவும் தூய்மையானவராகவும் இருந்தார். தாசில்தாராகப் பணி புரிந்த காலத்தில் மாதத்திற்குப் பத்து நாள்கள் பல ஊர்களிலும் முகாமிட்டு மேற்பார்வை செய்ய வேண்டும்.

அவ்விடைக்காலத்தில் ஒரு போதும் கிராமத்துக்காரர்களை மிரட்டி பால், பழங்கள், காய்கறிகள் முதலியவற்றைப் பணம் தராமல் ஏமாற்றி வாங்கியதே இல்லை. தம் மேல்அதிகாரிகளுக்கு ஏதாவது பொருள்களை வாங்கி அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அவர்களுக்குப் பொருள்களோடு அவற்றிற்குரிய கட்டண ரசீதையும் அனுப்பிப் பணத்தை வசூல் செய்து விடுவார். இப்படிப் பல விதங்களிலும் கண்டிப்புப் பேர்வழியாக இருந்ததால், நியாயமாக உரிய காலததில் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் அவருக்கு வராமலேயே போயின. 1930ல் அவர் மறையும் வரை, எழுத்தாளராகவும், பொதுச் சேவையில் ஆர்வம் உள்ளவராகவும் இருந்தார்.

* * *

எழுதத் தொடங்கிய ஆரம்பக் கட்டத்திலேயே உரைநடையின் நுணுக்கங்களை மிகவும் வேகமாக அறிந்து கொண்டார் அவர். புராணம் சார்ந்த எழுத்துக்களானாலும், சமூகம் சார்ந்த எழுத்துக்கள் ஆனாலும், எழுத்துக்கான 'கரு' என்பது நம் வாழ்விலேயே காணக்கூடிய ஒன்றுதான், என அறிந்து செயல்பட்ட தொடக்கக் கால எழுத்தாளர்களுள், புட்டண்ணா அவர் களும் ஒருவர். அப்போது பி.வெங்கடாச்சார் அவர்களும், கலகநாதர் அவர் களும் தம் சொந்த நாவல்களாலும் மொழிபெயர்ப்பு நாவல்களாலும் கன்ன டத்தை வளப்படுத்திக் கொண்டிருந்தார்கள். சமஸ்கிருதம் கலந்த கன்னட மொழியால் பி.வெங்கடாச்சார் அவர்களின் உரைநடை ஒருவித அழகுடன் விளங்கியது. கலகநாதர் அவர்களுடைய உரைநடை, எளிமையும் சரளமும் வாய்ந்தது. இதிகாச புருஷர்களைப் பற்றியும், அவர்களது சாகசங்களைப் பற்றியும், நிறைய எழுதிய அவரது உரைநடைக்கு அது பொருத்தமாகவும் இருந்தது. மொத்தத்தில் பி.வெங்கடச்சார் மற்றும் கலகநாதர் அவர்களுடைய படைப்புகள் சாமான்ய வாசகர்களுக்குப் புது இன்பம் தரக்கூடியவையாக இருந்தன என்பது முக்கியமான விஷயமாகும். அச்சூழலில் புட்டண்ணா தம் படைப்புகள் மூலம் கன்னடப் படைப்புலகத்திற்கு உறுதியான அடித்தள மிட்டார்.

* * *

புட்டண்ணா அவர்கள் வாழ்ந்த காலம் கன்னட மறுமலர்ச்சிக் காலம் ஆகும். இலக்கியப் படைப்புகளுக்கு நல்ல ஆதரவு கிடைத்த காலம். அந்த நாட்களில்தான் மொழிபெயர்ப்புகளும், தழுவல்களும், புதிய நாவல்களும், மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருந்தன. சமஸ்தான வளர்ச்சியில், ஆர்வம் கொண்டிருந்த திவான்கள் கொடுத்த ஆதரவும், ஆங்கிலக் கல்வியும், கன்னட ஆக்கங்கள் உருவாகப் பலவிதங்களிலும் துணை புரிந்தன.

ஆங்கிலேயர்களின் ஆட்சியின் காரணமாக இந்தியர்களின் வாழ்க் கையில் பலவிதமான மாற்றங்கள் தோன்றின. ஆட்சியமைப்பில் முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன. வருணாசிரமக் கட்டுப்பாடுகள் தளர்ந்தன.

கல்வியிலும் வேலை அமைப்பிலும் புதிய மாற்றங்கள் உருவாகின. குழந்தைத் திருமணம் தடுக்கப்பட்டது! பெண்கல்வி ஊக்குவிக்கப்பட்டது! படைப்புகள் கவிதை யுருவத்தைத் தாண்டி உரைநடை உருவத்திற்கு மாறின. படைப்புகளில் இறுக் கங்கள் தளர்ந்து இலக்கியரீதியாக எளிமையும் அழகும் குடிகொண்டன. பழைய அத்தியாயம் முடிந்து புதிய அத்தியாயம் தொடங்கியது.

பண்பாட்டு ரீதியாக ஆங்கிலேய ஆட்சியின் தாக்கங்கள் கன்னடச் சமூகத்தில் பல மாற்றங்களை உருவாக்கின. அதே அளவில் அவற்றை உள் வாங்கிய புட்டண்ணா அவர்களும், அவரது சம காலத்திய படைப்பாளி களும் தம் படைப்புகளில் பயன்படுத்தினர் தம் மொழியில் புதிய நடையை உருவாக்கிக் கொண்டனர். பேச்சு மொழியின் பெருமை நாளாவட்டததில் அதிகமானது. கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்களின் இலக்கிய உலகிற்கு, ஆங்கில இலக்கிய அறிமுகம் புதிய வாசலைத் திறந்தது. தேசமே அடிமைப்பட் டிருந்தாலும் கூட நிராசைகளோ, ஏமாற்றங்களோ இவர்களுடைய வாழ்வை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. மதிப்பீடுகளைப் பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். பொறுப்புகளைக் கண்டு அஞ்சாதவர் களாகவும் இவர்கள் இருந்தார்கள்.

முதலில் மொழிபெயர்ப்பாளராகவும், பாடநூல்கள் எழுதுபவராகவும் தான் தன் எழுத்து வாழ்க்கையைத் தொடங்கினார் புட்டண்ணா. அவரது உரைநடையை ஒரு சாதனை என்றுதான் சொல்லவேண்டும். அவர் இயற்றிய கதைகள், நாவல்கள், வாழ்க்கை வரலாறு நூல்கள், மொழியாக்கங்கள், தழுவல்கள், பாடநூல்கள், கட்டுரைகள் அனைத்துமே இதற்குச் சாட்சியாக உள்ளன.

கன்னடர்களுக்கு அறிமுகமில்லாத பல்வேறு சமூகச்சூழலைச் சார்ந்த சித்திரங்களை உள்ளடக்கிய மொழி பெயர்ப்பு நாவல்களுக்கு இடையே, கன்னட மக்களின் பழக்கவழக்கங்கள், மதிப்பீடுகள், எண்ணங்கள், ஆசைகள், ஏக்கங்கள் அனைத்தையும் தம் அழகான கன்னட மொழியில் புட்டண்ணா எழுதினார் 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' (1915),* 'முகத்திரையை விலக்கு அழகியே' (1928) மற்றும் 'அவர் இல்லாத உணவு' '(1959) ஆகிய நாவல்கள் புட்டண்ணாவின் இலக்கிய ஆளுமைக்கு எடுத்துக்காட்டான படைப்புகள் ஆகும். அவருடைய நாவல்களைப் போல, கன்னட மொழியின் வேறு எந்த நாவலும் மைசூர் அரண்மனை வாழ்க்கையைப் பற்றிச் சித்த ரித்ததில்லை. உண்மையான அரச பக்தி கொண்டவர்களிலிருந்து, அதிகாரி களின் அடிவருடி தாளம் போடுபவர்கள் வரை எல்லாரையும் தம் படைப்பு

* இந்நூலின் கன்னடத தலைப்பு 'மாடித்துண்ணோ, மகாராயா' என்பதாகும். 'நீ செய்ததற்கான பலனை நீயே அனுபவி' என்பதுதான் இத்தலைப்பால் சுட்டப்படும் பொருள் ஆகும். இதற்கு இணையான 'வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்கிற தமிழ்த் தொடர் தலைப்பாக்கம் பெற்றுள்ளது — மொ.ர்

களில் பாத்திரங்களாக்கி இருக்கிறார் இவர். கலை இலக்கியங்களுக்கு ஆதரவு கொடுத்த மும்முடி கிருஷ்ண ராஜ உடையாரின் செல்வாக்கை எடுத்துரைக்கும் அதே நேரத்தில் செல்வத்தை இழந்து, அரசியலில் தோல்வியுற்று வாழ்க்கையை நடத்தவே அல்லாடும் அரசர்களின் சித்திரங்களையும் அவர் தீட்டிக் காட்டினார். மும்முடி கிருஷ்ணராஜ உடையார் மீது புட்டண்ணா அவர்கள் மதிப்புடையவராக இருந்தார். 'அரசன் என்பவன் நடமாடும் கடவுள்' என்பதை புட்டண்ணா மனசார நம்பினார்.

'நீதி சிந்தாமணி' (1884) என்கிற தொகுதி, புராணம், இதிகாசம், காவிய காலச் சம்பவங்களை அடிப்படையாய்க் கொண்டு எழுதப் பெற்ற ஏறத்தாழ 150 கதைகளின் தொகுப்பு ஆகும். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்காலத்திற்கும் மேல் குழந்தைகளின் மனத்தை ஈர்ந்து வசப்படுத்திய இத்தொகுதி குழந்தை இலக்கியத்தில் ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது. குழந்தை இலக்கியப் படைப்பாளி என்கிற பட்டம் இவருக்கு இத்தொகுதி மூலமே கிடைத்தது. இன்னும் இப்பட்டத்தால் இவர் அழைக்கப் பெறுகிறார். 'புட்டண்ணா சொன்ன கதைகள்'[2] (1981) என்கிற தொகுப்பு மூன்று பாகங்களாக வெளிவந்துள்ளது. குழந்தைகள் மனத்தில் எளிதில் பதியும் வண்ணம் கதை சொல்வதில் இவர் வல்லவர் என்பதற்கு இத்தொகுப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

'ஊரில் என்ன விசேஷம், பாட்டி?' (1927) என்பது நாட்டுப்புறக் கதை வடிவத்தைக் கொண்ட அழகான கதை. 'கலாவதி கல்யாணம்' போன்ற காவியத்தின் கதைக்கும், இக்கதைக்கும் பல ஒற்றுமைகளைக் காணலாம். ஷேக்ஸ்பியரின் ALL'S WELL THAT ENDS WELL ' என்ற நாடகத்திற்கும், இதற்கும் கூட சில ஒற்றுமைகள் உண்டு. பெண்மையை முதன்மைப்படுத்துவது என்பது புட்டண்ணா அவர்களின் படைப்புகளில் காணப்படும் முக்கியமான விஷயம் தனது பத்தினித்தன்மையின் பலத்தால் எப்படிப்பட்ட சிரமங்களையும் எதிர்கொண்டு வெற்றி பெறும் பாத்திரமாகிய சலுவாஜிக்கு, ஆன மட்டும் முக்கியத்துவம் தந்து படைத்துள்ளார் புட்டண்ணா.

சீனத் தேசத்துத் தத்துவ ஞானியாகிய கன்பூசியஸ் அவர்களைப் பற்றிய ஒரு வாழ்க்கை வரலாற்று நூல் (1892), மும்முடி கிருஷ்ணராஜ உடையார் அவர்களின் ஆஸ்தானத்தில் கல்விமானாக விளங்கிய குனிகல் ராமசாஸ்திரி அவர்களின் வாழ்க்கை வரலாறு (1910), ஐதராபாத்தின் அமைச்சர் சர்.சாலார் ஜங் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் (1917), பாமினி சமஸ்தானத்தில் அமைச்சராக இருந்த முகமது கவான் அவர்களின் வாழ்க்கை வரலாறு, திறமையோடு ஆட்சியை நிறுவி ஆண்ட சத்ரபதி சிவாஜியின் வாழ்க்கை வரலாறு (1981)[3] ஆகியவை புட்டண்ணா அவர்களால் எழுதப்பெற்ற வாழ்க்கை வரலாற்று நூல்கள். புட்டண்ணா தம் படைப்புகளில் முக்கியமாக இரண்டு நிலைகளில் மனிதர்களைப் படைத்துள்ளார். ஆன்மீக ரீதியிலும் லௌகிக ரீதியிலும் வென்ற மனிதர்களை ஒரு நிலையிலும் அதிகார நிலையில் இருக்கும்போது கூட நேர்மையைக் கைவிடாத மனிதர்களை இன்னொரு

நிலையிலும் சித்தரித்துள்ளார். சமயம் சார்ந்த மதிப்பீடுகள் மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுக்கும் இருக்கிற உள் உறவுகளை நுணுக்கமாகச் சித்தரித்தவர் புட்டண்ணா.

ஷேக்ஸ்பியரின் மூன்று நாடகங்களைத் தழுவி புட்டண்ணா கன்னடத்தில் எழுதியுள்ளார். 'சிம்பலைன்' என்கிற நாடகத்தைத் தழுவி 'ஜய சிம்மராஜ சரித்திரம்' (1881) என்கிற தலைப்பில் கதையாகவே வடித்துள்ளார். 'கிங் லியர்' என்கிற நாடகத்தைத் தழுவி எழுதப்பட்ட 'ஹேமசந்திர ராஜ விலாஸம்' (1899) கவிதைகளும் உரைநடையும் விரவிய நாடகம் ஆகும். 'ஹேம்லெட்' என்கிற நாடகத்தைத் தழுவி எழுதப்பட்ட 'ஹேமலதா' (இயற்றிய ஆண்டு 1920, பிரசுரிக்கப்படாதது)வும் கவிதையும் உரைநடையும் கலந்த நாடகம் ஆகும். இந்த மூன்று நாடகங்களையும் கன்னட சமூகத்துக்குப் பொருந்தும் வகையில் அழகாக மாற்றி வடிவமைத்துள்ளார். ஷேக்ஸ்பியரின் நாடகங்களைக் கன்னடத்தில் திறம்பட தழுவிய ஆசிரியர்களுள் முக்கியமானவர் புட்டண்ணா. அந்தக் காலத்தில் இது ஒரு அபூர்வமாக வெற்றி தாமஸ்டே அவர்களால் எழுதப்பெற்ற 'த ஹிஸ்டரி ஆப் ஸ்டான்டர்ட் அன்ட் மாடர்ன்' என்கிற நாடகத்தைத் தழுவி 'சுமதி மதன குமாரரின் சரிததிரம்' (1897) என்று கன்னடத்தில் எழுதினார். கதைகளின் வாயிலாக நன்னடத்தையைப் பற்றியும் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைப்பதில் அவர் மிகவும் விருப்பம் கொண்டிருந்தார். இந்த நான்கு படைப்புகளுமே தழுவல்கள்தாம். 'ஹாதிம் தாய்' (எழுதிய ஆண்டு 1920, பிரசுரமாகாதது) பாரசீக மொழியில் வந்த படைப்பாகும். இதன் ஆங்கில மொழி பெயர்ப்பை ஆதாரமாய்க் கொண்டு கன்னடத்தில் மொழிபெயர்த்தார் புட்டண்ணா. நமக்குக் கிட்டிய தகவல்களின் அடிப் படையில் பார்த்தால், 'ஹாதிம்தாய்' என்கிற ஒரே படைப்பே புட்டண்ணா அவர்களின் மொழிபெயர்ப்புப் படைப்பாகும்.

பாளையக்காரர்களைப் பற்றி இவர் எழுதிய முதல் படைப்பு 'பாளையக்காரர்கள்' (1923) ஆகும். அடுத்து 'சித்திரதுர்கத்தின் பாளையக்காரர்கள்' (1924), 'கும்ம நாயக பாளையத்தைச் சேர்ந்த பாளையக்காரர்கள்' (1926), 'ஹாகலவாடி பாளையக்காரர்கள்'[4] (1931), 'இக்கேரி சமஸ்தானத்தின் சரித்திரம்'[5] (1931) ஆகியவை பிரசுரமாகின. தாசில்தாரராகப் பணியாற்றும்போது பல ஊர்களுக்குப் போகும் சந்தர்ப்பங்களில் அந்தந்தப் பாளையக்காரர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்களைச் சந்தித்துத் தகவல்களை ஆனமட்டும் திரட்டினார். பாளையக்காரர்களைப் பற்றிய கருத்துக்கள் வேறெங்கும் இவ்வளவு விரிவான முறையில் கிடைப்பது சிரமமாகும். தம் ஓயாத உழைப்பாலும் முயற்சியாலும் புட்டண்ணா அவர்கள் பல புதிய விஷயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். அந்த நாள் வரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த பல தவறுகளை வெளிப்படுத்தினார். இன்னும், இந்நூல்கள் இத்துறையில் சிறந்த நூல்களாக விளங்குகின்றன.

இரண்டு பாகங்களில் வெளிவந்த 'இந்து சரித்திரக் கண்ணாடி' (1882), 'இந்து சரித்திரத் தொகுப்பு' (1887), கன்னடத்தின் முதல்நூல் (1895) மற்றும் 'கன்னட எழுத்துக்கலை' (1915) ஆகிய நான்கு நூல்களும் புட்டண்ணா அவர் களின் பாட நூல்களாகும். முதல் இரண்டு நூல்களையும் திரு.எம்.பி சீனிவாச ஐயங்கார் அவர்களுடன் சேர்ந்து எழுதினார். மூன்றாவது நூல், நவகாலக் கவிதைகளைப் பற்றி, உரைநடையில் எழுதப்பட்டதாகும். இந்நூலைப் புட்டண்ணா திரு. எஸ்.ஜி நரசிம்மாச்சார்ய அவர்களுடன் சேர்ந்து எழுதி னார். நான்காவது நூலை அவரே தனிப்பட எழுதினார். கன்னடத்தில் இப்படிப்பட்ட நூல்களை எழுத எந்த முன்மாதிரியும் இல்லாத காலத்தில் இவை எழுதப்பட்டன என்பது முக்கியமான விஷயமாகும் குழந்தைகளுக்கு உணர்த்தப்பட வேண்டிய நற்கருத்துக்களையும் இணைத்தே இவர் நூல் களை எழுதிய விதம், எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நூல்களின் தோற்றத் திற்கு வழிகாட்டியாக இருந்தது.

எம்.பி. சீனிவாச ஐயங்கார் அவர்களுடன் இணைந்து புட்டண்ணா 1883ல் அக்டோபர் மாதத்தில், 'இத போதினி' என்கிற மாத இதழைத் தொடங் கினார். புட்டண்ணா அவர்களின் சமூக உணர்வு அவருடைய எல்லாப் படைப்புகளிலும் காணக் கிடைக்கிற ஒன்றாகும். இலக்கியம், கலை, விஞ் ஞானம், இதிகாசம், வாழ்க்கை வரலாறு, அயல்நாட்டுச் செய்திகள் பற்றிய படைப்புகள் பலவற்றையும் எழுதி வெளியிட்டார். ஆறு மாதங்கள் கழித்து பி.ஏ. படிப்புக்காக சென்னைக்குச் செல்ல வேண்டி இருந்தபோது, 'இத போதினி' இதழின் பொறுப்பை எம்.வெங்கடகிருஷ்ணய்யா அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார்.

மொத்தத்தில் முப்பத்தைந்து கன்னடப் படைப்புகளையும், பதினைந்து ஆங்கிலப் படைப்புகளையும் புட்டண்ணா எழுதியுள்ளார். இவை அனைத் திலும் கன்னட மொழியின் மீது இவர் கொண்டிருந்த அன்பே, மேலோங்கித் தெரியும்; அத்தோடு சமூக அக்கறையும் தெரியவரும். கன்னட நாட்டின் அர சர்கள், அரச பக்தர்கள்; வீரர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரைப் பற்றியும் இவர் எழுதியுள்ளார். அறிவியலோடு தொடர்புடைய கட்டுரை களும், மாணவ மாணவிகளைக் கருத்தில்கொண்டு எழுதப்பட்ட கட்டுரை களும், தம் சமகாலத்தவரைப் பற்றிய கட்டுரைகளும் கூட எழுதியுள்ளார். பல படைப்புக்களை கன்னடத்திற்கு மொழிபெயர்த்துள்ளார். இவை எல்லா வற்றிலும் அடிச்சரடாகக் காணப்படுவவது இவருக்கிருந்த சமூக அக்கறை ஆகும்.

1915ல் வெளிவந்த 'வினை விதைத்தவன் வினையறுப்பான்' என்னும் நாவல் எம்.எஸ். புட்டண்ணா அவர்களின் மிகச் சிறந்த நாவல் ஆகும். இந்த நாவல் வெளிவரும் முன்பேயே கன்னடத்தில் நாவல்கள் வெளிவரத் தொடங்கி இருந்தன. 1899ல் வந்த குல்லாடி வெங்கடராயரின் 'இந்திராபாய்', 1905ல் போளார பாபுராயரின் 'வாக்தேவி' ஆகிய நாவல்கள் வந்திருந்தன.

ஆனால் பேச்சு மொழியைப் பயன்படுத்தி எழுதப்பட்ட முதல் நாவல் 'வினை விதைத்தவன் வினையறுப்பான்' ஆகும். இந்நாவலில் மூலக் கருவான மிகச் சிறிய விஷயத்தைச் சுற்றிச் சிற்சில துணைக் கதைகளையும் வர்ணனை களையும் மிக அற்புதமாக இணைந்திருப்பதை இதைப் படிப்பவர்கள் உணரக் கூடும்.

சதாசிவ தீட்சிதர் மைசூர் அரண்மனைக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் அவருடைய மனைவி ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுத் தந்துவிட்டு இறந்துவிட்டாள். தீட்சதரின் வயதான தாயே குழந்தையைப் பார்த்துக் கொண்டாள். சஞ்சவாடியைச் சார்ந்த நீலகண்ட ஜோசியரின் ஒரே மகளான திம்மம்மாவை தீட்சிதர் திருமணம் செயது கொண்டார். தன் மகனுக்கு அவ்வளவாக நிர்வாகத் திறமை இல்லையென்பதால் வீடு மற்றும் சொத்துப் பொறுப்புகளையெல்லாம் மருமகனிடம் ஒப்படைத்துவிட்டு ஜோசியர் இறந்து விட்டார் தீட்சிதரின் மகன் மகாதேவன் சின்னம்மாவின் அரவணைப்பில் சுகமாக வளர்ந்தான். ஊரில் இருந்த பண்டிதரான நாரப்பய்யாவிடம் இச்சிறுவனின் கல்விப் பயிற்சி தொடங்கியது. முதலில் உதை, அப்புறம்தான் பாடம் என்பது நாரப்பய்யாவின் கொள்கை. இதனால் வெகுண்ட பெரிய மாணவர்களின் பழி வாங்கும் படலத்தால் உயிருக்கே ஆபத்தான நிலைக்கு ஆளான நாரப்பய்யா குணமடைய நான்கு மாதங்களுக்கும் அதிகமான காலம் பிடித்தது அப்போது, அன்பால்தான் குழந்தைகளுக்குப் பாடம் சொல்ல வேண்டும், அடியால் அல்ல என்று புத்தி சொன்ன தீட்சிதரின் மேல் அவன் மனசுக்குள்ளேயே வன்மம் வளர்ந்தது.

மகாதேவன் வளர்ந்து பெரியவனானான். நல்ல கல்விமானாகவும் ஆனான். தீட்சிதரின் தாய் மாமனாகிய பசுபதி சாம்பசாஸ்திரியின் பேத்தி சீதையை இவன் மணந்து கொண்டான். சீதை நற்குணம் வாய்ந்தவள். அழகி. கணவனின் மனசுக்குகந்தவள். தன்னுடைய உறவு வகையில் இருந்து பெண் எடுக்கவில்லை என்கிற கோபத்தால் திம்மம்மாவுக்கு சீதையைக் கண்டாலே வெறுப்பும் எரிச்சலும் பொங்கி எழுந்தன. இதனால் மகாதேவன் மீது கொண்ட அன்பும் கூட கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. திம்மம்மாவின் மகள் வேறு தொண்டைக்குள் அகப்பட்டுக் கொண்ட முள்ளைப் போல சீதைக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தாள். சீதைக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்த பிறகும் திம்மம்மாவின் மகள் திருமணம் செய்து கொண்டு புகுந்த வீடு போன பிறகுதான் அத்தைக்காரியின் ஆட்டம் கொஞ்சம் நின்றது.

ஊரில் இருந்த அம்மன் கோயில் பூசாரி இறந்த பிறகு அவனுடைய உறவினன் என்று சொல்லிக் கொண்டு வந்த சித்தன் பூசாரியானான். நாளுக்கு நாள் அவனுடைய பேரும்புகழும் வளர்ந்தன. ஊர்க்காரர்கள் அவனை அப்பாஜி என்று அழைத்தார்கள். கோயிலுக்குப் பூசாரியான இவனே கள்ளர் கூட்டத்துக்கும் முக்கிய ஆளாக இருந்தான். கோயிலுக்குப் பக்கத்திலேயே இருந்த அருந்தம்மாளின் சமாதிக்குத் தினந்தோறும் சென்று பூசை செய்து வந்த சீதையின் மேல் இவனுடைய வக்கிரப்பார்வை விழுந்தது.

சகுனி புத்தி கொண்ட நாரப்பய்யாவின் வார்த்தைகள் அவனுடைய ஆசைக்கு நெய் வார்த்தன. பூசாரியின் விருப்பத்துக்குச் சீதை உடன்படாததால், அவன் மனத்தில் குரோதம் வளர்ந்தது. இறுதியில் அவள் மிது மாய மந்திரங்களை ஏவிவிட பல நாள்கள் பேச்சு மூச்சின்றி படுத்த படுக்கையாகிவிட்டாள் சீதை. எந்த மருந்தும் அவள் நோயைக் குணப்படுத்தவில்லை. இறுதியில் கண் மூடினாள். ஆனால் அவள் ஆயுள் முடியவில்லை. சவத்திற்குத் தகனம் செய்த பிறகு, ஈரவிறகு நிதானமாய்த் தான் தீப்பற்றி எரியும் என்று எண்ணி அனை வரும் சுடுகாட்டில் இருந்து திரும்பினார். அப்போது தன் நண்பனுடன் கோயம் புத்தூர்க்கு நடந்து சென்று கொண்டிருந்த ஒருவன் அந்த வழியாக வந்தான். மந்திர வித்தைகளில் கை தேர்ந்தவன் அவன். சிதையில் கிடத்திய உடலுக்கு உயிர் இருக்கிறது என்பதைத் தன் மந்திர ஆற்றலால் அறிந்த அவன், மாற்று மந்திரங்களைப் பிரயோகித்து அவளை உயிர் பெற வைத்தான். மந்திர சக்தியால் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்த பூசாரி தான் சூனியம் வைத்ததை ஒப்புக் கொண்டு, சீதை நடமாடும் வழியில் தான் புதைத்து வைத்த பொம்மையை ஓடிப்போய் எடுத்து வந்து தந்தான். அதை வாங்கி நெருப்பில் எரித்து விட்டான் மந்திரவாதி. பூசாரியின் பற்களையெல்லாம் உடைத்து, மறுபடி அவனால் யாருக்கும் தொல்லை வராதபடி செய்தான். சீதையை உயிருடன் கண்ட வீட்டார் அனைவருக்கும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது கள்ளர் கூட்டத்தில் ஒருவனான அம்மாசி சர்க்கார் கையில் அகப் பட்டுக்கொண்டபிறகு உண்மையெல்லாம் வெளிவந்தது. அம்மாசி ஒரு வனைத் தவிர்த்து மற்றவர்கள் அனைவருமே சிறைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நாரப்பய்யாவுக்கும் பூசாரிக்கும் தக்க தண்டனை கிடைத்தது. சஞ்சவாடியின் மக்கள் அனைவரும் ஊரைவிட்டு வெளியேறி னார்கள். சதாசிவ தீட்சிதரும் தன் குடும்பத்தாரோடு சஞ்சவாடியிலிருந்து மைசூருக்கு மீண்டும் திரும்பிச் சென்றார்.

கதைக்களத்தின் பின்னணியான இடங்கள் மிகத் தெளிவாக இருக் கின்றன. சாமராஜ நகருக்குப் பக்கத்தில் உள்ள சஞ்சவாடியில் கதை நிகழ் கிறது. புட்டண்ணா அவர்கள் தன் முன்னுரையில், "புராணப் பாத்திரங்கள் பற்பல மதிப்பீடுகளின் சூத்திரதாரிகளாக இருக்கிறார்கள்; சாதாரண மனிதா களிடையே வாழும் வீரர்கள் உதாரண புருஷர்களாகிறார்கள்" என்று சொல் கிறார். ராமாயணத்தை மனசில் எண்ணிக்கொண்டே அவர் இந்த நாவலை எழுதியிருப்பதை, அதைப்படிக்கும் போதே நம்மால் புரிந்து கொள்ள முடியும். ராமாயணத்தில் வரும் சீதையே இந்த நாவலில் வரும் சீதையாகும் என்பதும் புரியும்.

பரம்பரையாக போற்றப்பட்டு வரும் பெண்களின் நற்குணத்துக்கு எடுத்துக் காட்டாகவும் அடையாளமாகவும்தான் சீதையை இந்நாவலில் சித்தரித்துள்ளார் புட்டண்ணா. அவளைச் சுற்றியே கதை நிகழ்கிறது. அவளே மையப் பாத்திரமாகிறாள். தன் வேதனையைத் தனக்குள்ளேயே விழுங்கி சிரித்தபடி நடமாடுவது அவள் பழக்கம். கணவனுக்குப் பணிந்து நடக்கும்

குணம், குழந்தை மிது பேரன்பு, வீட்டில் உள்ள பெரியவர்கள் மீது மரியாதை ஆகியவை இவளுடைய சுபாவங்கள். தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியாதவளாக இருக்கிறாள். சரி அல்லது தவறுகளின் எல்லைக்குட்பட்ட குடும்ப அமைப்பின் குறையையே இது சுட்டுகிறது. வீட்டுக்குள் இவளுக்குக் கிடைத்ததெல்லாம் ஒரு விதமான பாராட்டும் இரக்கமும்தான். ஆனால் துன்பம் நேர்ந்த காலத்தில் துணை என்று யாரும் இல்லை. அத்தைக் காரியின் வசைகளையெல்லாம் தாங்கிக் கொள்கிறாள். ஆனால் தன்னை மைசூரைச் சேர்ந்த விலைமகளோடு ஒப்பிடும்போதும் மகாதேவனைத் திட்டிய போதும் மட்டும் அவள் தன் அத்தைக்கு நிதானமாகவே பதில் உரைப்பது பாகவும் பொருளுடைய ஒரு விஷயமாகும். என்னதான் அமைதி யானவர்களாக இருந் தாலும் தம் இருப்புக்கும் மதிப்புக்கும் ஆதாரமான ஒன்றை அவமானப்படுத்தும் போது சகித்துக் கொண்டு பொறுமையாக இருக்கமாட்டார்கள் என்கிற விஷயத்தின் பின்னணியில் இதைப் பார்க்க வேண்டும். சீதையின் பாத்திர வார்ப்பு வெறும் லட்சிய பாத்திரமாக மாறுவதில் இருந்து விலகி நம்பிக்கைக் குரிய எதார்த்த பாத்திரமாக மாற இது காரணமாகிவிட்டது. அத்தை மற்றும் நாத்தனார் தரும் கொடுமைகளால்தான் அவள் நலிகிறாள். இத்தோடு வெளி யிலிருந்தும் அவள் மீது காமவலை வீசப்படுகிறது. இப்படிப்பட்ட சூழலில் அவளுடைய தாய்மையின் பெருமையும் மன உறுதியும், அபூர்வமாக அக்கம் பக்கத்தார்கள் அவள்மீது காட்டும் இரக்கமும் பதிவிரதைகளின் கதைகளும் தான் அவளுக்குத் துணையாக இருக்கின்றன. தன்னைச் சுற்றிச் சூழ்ந்த அக்கினிப் பரீட்சையில் வென்று வந்த சீதை, மந்திரவாதியின் உதவியால் உண்மையிலேயே அக்கினியிலிருந்து எழுந்து வருகிறாள்.

புட்டண்ணா அவர்களின் சொந்த வாழ்வில் முதல் திருமணம் தோல் வியில் முடிந்ததைக் குறித்து இதற்கு முன்பேயே குறிப்பிட்டேன். பெண்களின் கற்புநிலை பற்றி மிகவும் உயர்வாக எண்ணுகிறார் புட்டண்ணா. இச்சூழலில், புட்டண்ணா போன்ற மிகவும் மென்மையான மனம் படைத்தவர்களுக்கு நேரும் பாதிப்புகள் தீவிரமாகவே இருக்கும். இந்த இழப்பை ஈடு கட்டும் வகையில் தான் அவர் இலக்கியப் படைப்பு முயற்சிகளில் முழு மூச்சுடன் ஈடுபட்டார். ராமாயணம் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. பெண்ணின் கற்புக்கு அந்த இதிகாசத்தில் கிடைத்திருக்கும் இடத்தை முன்னிட்டு இது அவருக்குப் பிடித்துப் போயிருக்கலாம். புட்டண்ணா அவர்களின் வாழ்விலும் இலக்கியத்திலும் இவ்விதத்தில்தான் ஒரு முழுமை உண்டானது. அவர் தன் சொந்த வாழ்வின் வேதனையை அனுபவித்த காலத்துக்கும் 'வினை விதைத் தவன் வினையறுப்பான்' நாவல் வெளிவந்த காலத்துக்கும் இடையிலான ஆண்டுகளில் துக்கங்களாலும் ரோஷங்களாலும் இவரது வாழ்க்கை ஒரு பக்குவப்பட்ட நிலையை எய்தியதோடு மட்டுமல்லாமல், எழுத்தும் பக்குவப் பட்டது. பண்பாட்டு ரீதியான ஒரு பிரச்சனையை வாழ்வின் அடிப்படையில்

எதிர்கொண்டு அனுபவித்து, பக்குவமுற்று, அதையே ஒரு நல்ல இலக்கியப் படைப்பாகவவும் எழுதினார். அதுவே இந்த நாவல்.

நாவல் வெளிவந்த காலத்தை முன்வைத்துக் கொண்டு பார்த்தால் இதில் பேச்சுமொழி அதிக அளவு பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகத் தெரியும். புரியும் வகையில் சொல்ல வேண்டும் என்பதே புட்டண்ணா அவர்களின் உத்தேசம். மொழி தொடர்பான எந்த தயக்கமும் கூச்சமும், அவருக்கில்லை. மரபுச் சங்கிலிகளிலிருந்தும் இறுக்கத்திலிருந்தும் கன்னட உரைநடையை விடுவித்து எளிமையையும் அழகையும் சேர்ந்தவர் அவர்.

'கர்மம்' என்னும் சித்தாந்தமே இந்நாவலில் தெளிவாக முன் வைக்கப் படுகிறது. ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய பின்பு, அதன் முடிவிலிருந்து தப்பிப்பது என்பது முடியாத காரியம். இந்தத் தத்துவம் தான் இந்த நாவலில் மேலோங்கி இருக்கிறது. இதனாலேயே இந்தத் தலைப்பையும் பெற்றி ருக்கிறது. புட்டண்ணா அவர்களின் பிரச்சாரக் குரல் மேலோங்கி இருப் பதால் நாவலின் கலை அம்சத்திற்குக் குறை ஏற்படுகிறது என்று சொல்லப் படுவது உண்டு. ஆனால், "இந்தத் தலைப்பு நீதியை விரும்பும் அவருடைய மனத்தின் முழக்கமாகும். அதன் வெற்றி என்பது ஒரு படைப்பாளியின் கலாரீதியான தோல்விக்கு அடிப்படையாகும் என்கிற வாதம் வெறுமையான தாகும்"[6] என்கிற வரிகளை இங்கே நினைவில் கொள்ளலாம். நாவல் எழுதப் பட்ட முறையைப் பார்க்கும்போது, தற்காலத்திய முறைகளிலிருந்து வேறுபட் டிருப்பதை உணர முடியும். ஆனால் இது வெளியான காலத்தைய கவனித்தால் இந்தக் குறை அவ்வளவு பெரியதும் அல்ல, முக்கியமானதும் அல்ல என்று புரியும். உண்மையில் நாவலின் சாரம் அதன் நிறைகுறைகளுடனேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நாவல் வெளியாகி எண்பது ஆண்டுகளுக்கு மேல் ஆன பிறகும் கூட, இன்னும் வாசிக்கும் வண்ணத் திலேயே இந்நாவல் அமைந்திருக்கிறது.

டாக்டர் எச்.எஸ். சுஜாதா

1,2,3,4,5— இந்த எண்களால் குறிக்கப்பட்டுள்ள புட்டண்ணா அவர்களின் படைப்புகள் அவர் வாழும் காலத்தில் கையெழுத்துப் பிரதியாகவே இருந்ன; அவரது மறைவுக்குப் பின் பிரசுரிக்கப்பட்டன.

6. எம்.ஜி கிருஷ்ணமூர்த்தி; பழங்கால இந்திய இலக்கியம் மற்றும் சில கட்டுரைகள்; பக்கம் 268; 1970: அட்சரா பிரசுரம், சாகர், கர்நாடகம்.

1

கிட்டு ஜோசியர்: "சுபமஸ்து. சுக்லாம்பரதரம் விஷ்ணும் சஷிவர்ணம். சதுர்புஜம். ப்ரஸன்னவதனம். த்யாயே. சர்வ விக்னோஉபசாந்தயே."

"வெற்றிமேல் வெற்றியைக் கொடுக்கிற சாலி வாகன யுகத்தில் 'ப்ரமாத' என்கிற பெயருடைய வருஷம். மாசி மாதம். நாலாம் செவ்வாய்க்கிழமை 63-82; தனிஷ்டா நட்சத்திரம் 5-0; வைத்ருதி 60-72; பாலகரணம் 63-4; பகல் பொழுது குறைவு, இரவுநேரம் அதிகம். மசணக்கம்மணின் ரத உற்சவம். சீரங்கத்தில் ப்ரஹதேஸ்ரவ சாமியின் ரத உற்சவம் ஏசாழ்வார் திருநட்சத்திரம். இன்றைய தினம் முழுக்கத் தொடங்கப்படும் காரியங்களில் வெற்றி. நாளை தொடங்கும் காரியங்களிலும் வெற்றி. இன்று மற்றும் நாளை இரண்டு தினங்களும் நல்ல காரியங்களுக்கு அனுகூலமானவை. நாளை முதல் தனிஷ்டா பஞ்சகம் தொடங்கவிருக்கிறது. விஷ்ணுபஞ்சகம் பினபற்றுகிறவர்களுக்கும் அனு கூலமாய் இருக்கும். அரசுத்துறையிலிருந்து வெற்றியும் அனுகூலமும் பெருகும். சகல மங்களங்களும் உண்டாகட்டும். தானிய செல்வம் பெருகிக் குவியட்டும். இன்றைய தினமும், நாளையும் இந்த விதத்திலே இருக்கின்றன."

பஞ்சாங்க வாசிப்பின்பொழுது அதைச் சற்றும் கவனிக்காமல் இருந்த மாரமணராயர் "அரசுத் துறையிலிருந்து வெற்றியும் அனுகூலமும் பெருகும்" என்கிற வாசகத்தைக் கேட்டதும் ஜோசியர் சொல்வதற்கொப்ப மேல் அதிகாரியின் கருணை பெருகும் பார்வை தன் மேல் விழக்கூடும் என்று யோசிக்கத் தொடங்கினார். "தானிய செல்வம் பெருகிக் குவியட்டும்" என்கிற வார்த்தை ஜோசியரின் வாயிலிருந்து உதித்த மறு கணமே தலையாரி வீர நாயக்கன் வந்து, "படேல் சங்கே கௌடா வந்திருக்கிறான் " என்று சொன்னான்.

மாரமணராயா: "ஜோசியரே, நீங்கள் சொன்னது பலித்து விட்டது. தானிய செல்வம் என்று நீங்கள் ஆரம்பிக்கும் போதே அது உண்மையாகி விட்டது. என்ன சங்கண்ணா, வந்துட்டியா..."?

சங்கேகௌடா: " வந்துட்டங்க ஐயா, வணக்கம்."

மாரமணராயர்: " நான் சொன்னதெல்லாம் வந்தாச்சா? "

சங்கேகௌடா: " வந்தாச்சுங்க "என்று நூறு ரூபாயை எண்ணி சுபேதாரரின் மேசையின் மேல் வைத்தான்.

மாரமணராயர்: (பணம் வந்ததைக் கண்டு உள்ளூற சந்தோஷப்பட்டான் என்றாலும், வெளியே புலப்பட்டு விடா வண்ணம் முகத்தில் கோப ரேகைகளைப் படரவிட்டபடி..) மிச்சம் ஐம்பது ரூபாயைக் குறைச்சிட்டியே. ஒங்க ஆளுங்களுக்கே புத்தி கெடையாது. பாக்கிப் பணம் வராத வரைக்கும் கணக்கு முடிக்க முடியாது தெரியுமா? சொன்னது இருநூறுரூபாய். கொண்டு வந்தது நூறு ரூபாய். ஒவ்வொண்ணிலயும் இப்படியே குறைச்சிட்டே போனா எங்க போய் முடியும். கொஞ்சம் கொஞ்சமா சேந்தா எவ்வளவு ஆகும், இதற்காகவா நாங்க தேசம் விட்டு தேசம் வந்திருக்கோம்? சொல்லுயா..?"

சங்கேகௌடா: "நாளைக்கி கொண்டு வரன் ஐயா"

மாரமணராயர்: "ஜோசியரே. நம்ம ஊர்பக்கத்துல இப்படியில்ல. பேச்சு எப்படியோ காரியமும் அப்படித்தான் இருக்கும். இங்க இருக்கறவனுங்களுக்கு வாய் சுத்தம் இல்ல. சொல்றது ஒண்ணு. செய்யறது இன்னொண்ணு. இது நம்ம பக்கம் போல தர்மபூமி இல்ல."

ஜோசியர்: "ஆஹா.. அருமையாச் சொன்னிங்க. அந்த வார்த்தைக்கு ஈடு உண்டா? சாஸ்திரம் பொய்யா? .செல்வம் இருக்கும் இடத்தில் ராஜ அதிகாரமும் இருக்கும்னு சொன்னது எப்பவும் பொய்யாகாது. பூரண அதிகாரம். அதுக்கு மேல சொல்ல என்ன இருக்குது? இதே எடத்துல பல சுபேதாரர்ங்க வந்தாங்க போனாங்க. ஆனா யாருக்கும் இப்படி ஒரு யோகம் இல்ல."

மாரமணராயர்: "ஜோசியர் சொல்றது கேட்டியா சங்கண்ணா... அவருக்கு ஏதாச்சிம் கொடுப்பா."

சங்கேகௌடா: "ஒண்ணும் கொண்டு வரலியே."

சொல்லிக் கொண்டே தனது சட்டைப் பைக்குள் கையை விட்டுத் துழாவி அரையணாக் காசைக் கண்டுபிடித்து எடுத்து ஜோசியருக்குத் தந்தான். வந்த அளவுக்கு லாபம் என்று அமைதியாய் இருந்தான் கிட்டு. சுபேதாரரின் அனுமதி பெற்று வெளியே வந்து பார்த்தபோது அது தேய்ந்து போன காசாக இருந்தது. சரி, இருக்கட்டும் என மனைசைச் சமாதானப்படுத்திக் கொண்டு பேட்டைக்குப் போகத் திரும்பினான். அதே நேரத்தில் ஆபீஸ் அறையிலிருந்து வெளியே வந்த சங்கேகௌடனைக் கண்ட சுபேதாரரின் மனைவி உள்ளே இருந்தபடி சத்தமிட்டாள். "சுத்தமா பருப்பே இல்ல. பத்து படி பருப்பு எடுத்து வரக் கூடாதா?. ஒரு மாசத்துக்காவது வரும்." சொல்லிக் கொண்டே புருஷனான சுபேதாரரின் முகத்தைப் பார்த்து, "வெறும் கைய வீசிட்டு அவன் வந்து நிக்கும்போது வேடிக்கை பாத்துட்டிருங்க. அப்புறமா வாரத்துக்கு ஒரு நாளாவது சாம்பார் இல்லியான்னு சொல்லுங்க," என்றாள்.

சங்கேகௌடா: "இன்னும் நம்ம பக்கத்துல துவரை பயிரு புடிக்க ஆரம்பிக்கலம்மா"

இதே தருணத்தில் சுபேதாரரின் மகள் ஓடிவந்து சங்கண்ணாவின் பக்கத்தில் நின்று, " என்ன கௌடா, காசு ஏதுவும் கொடுக்க மாட்டியா?" என்று கேட்டாள். உடனே சங்கண்ணனும் தன் இடுப்புப் பட்டியில் உள்ள பையைத்

திறந்து காலணாவை எடுத்து அவளிடம் தந்தான். அதே சமயத்தில் சமையல் அறையில் இருந்து ஒரு நாய் குலைத்தபடி துரத்துவதைப் போல் வந்தது. சூழலின் நெருக்கடிகளில் இருந்து தப்பித்துக் கொள்ள அதுவும் ஒரு நல்ல வாய்ப்பாயிற்று. வெளியே புறப்பட்டு விட காலெடுத்து வைத்தான் சங்கண்ணன். அப்போது சுபேதாரர் தன் ஆபீஸ் அறையில் சன்னலுக்கு அருகில் வந்து நின்று கொண்டார். அவர் முகத்தைப் பார்த்தபடியே அந்த வீட்டுச் சமையல்காரன் சுப்பையன், "சங்கேகௌடா, ஒரு பசு மாட்டுப் பால் லேர்ந்து எடுத்த வெண்ணெய் கொடுத்தனுப்பு. ஐயாவுக்கு வேற நெய் எதுவும் ஒத்துக்காது.".என்றான். "சரி சுப்பையா" என்று சொன்ன சங்கண்ணன் புறப் பட முயற்சி செய்யும்போது தலையாரி, "கௌடா, நூறு, எரநூறுன்னா, ம்ம்னு தலையாட்டிட்டு கொண்டு வந்துடற. ஆனா கொஞ்சம் கேழ்வரகு வேணும்ன்னு கேட்டு எத்தன நாளாவுது " என்றான்.

சங்கேகௌடா: "இப்ப மாரியம்மன் திருவிழா சமயம். எல்லாம் முடி யட்டும். அப்புறமா அனுப்பி வைக்கறன்".

நடக்க ஆரம்பித்தவன், 'ஐயோ, மறந்து போச்சே' என்றபடி திரும்பி சன்னல் அருகே சென்று எல்லாவற்றையும் பார்த்தபடி நின்றிருந்த சுபேதா ரரிடம், "நாளைக் காலைல நம்ம ஊருல மாரியம்மன் திருவிழா. அனுமதி வாங்கணுமா அதுக்கு," என்று கேட்டான்.

மாரமணராயர்: "அனுமதி இல்லாம எந்தத் திருவிழாவாவது நடக்குமா?"

சங்கேகௌடா: "எவ்வளவு தரணும் ஐயா?"

மாரமணராயர்: "ஸ்டாம்ப் எட்டணா. நம்ம ஃபீஸ் அம்பது ரூபாய்."

"சரி ஐயா" என்றபடி புறப்பட்டான் கௌடா.

இவை அனைத்தையும் பார்த்தபடி நின்றிருந்த கிட்டு ஜோசியர் தன் மனசுக்குள் கணக்குப் போட ஆரம்பித்தான். "இந்த சங்கேகௌடா சுபேதா ரரிடம் அதிகம் செல்வாக்கு கொண்டவனாய்த் தெரிகிறான். அரசாங்க மட்டத்தில் இவன் வார்த்தைக்கு மரியாதை இருக்கிறது. இவனோடு நல்ல சிநேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். படேலாக இருக்கிற இவனிடம் நல்ல மாதிரி நடந்து கொள்ளாத பட்சத்தில் நாம் சஞ்சவாடியில் வாழ்வது கஷ்டம். சங்கண்ணா, என்னமோ நம்ம பக்கத்து ஆள்தான். நான் இந்த வீட்டுக்கு குலபுரோகிதன் அல்லவா, இருந்தும் சுபேதாரரின் மகளுக்கு கால ணாவைக் கொடுத்த ஆள் எனக்கு தேஞ்சிபோன காசைத்தான் கொடுத்தான். சரி, இப்போது போகட்டும். இவருடைய அப்பாவின் திவசத்துக்கு நாள் நெருங்குகிறது. அப்போ தர்ப்பணம் விடும்போது நாலு பெயர்களை அதிக மாகச் சொல்லி காசு பிடுங்கலாம். "

இப்படி, பாதி புத்திசாலித்தனத்தோடும், பாதி முட்டாள் தனத்தோடும் யோசித்து தனக்குத் தானே பேசிக் கொண்டபடி மெல்ல நடந்த கிட்டு ஜோசியன், தனக்கு முன்னால் வேகவேகமாக அடியெடுத்து வைத்து போய்க்

கொண்டிருந்த சங்கண்ணனைப் பார்த்து "என்ன சங்கண்ணா, ஒரே ஒட்டமா ஓடற. ஒனக்கு மட்டும்தா கால் இருக்குது. எனக்கு இல்லன்னு நெனப்பா. ஆளப் பாத்துட்டு பேசாம கூட போறியே, என்றான்.

சங்கேகெளடா: "அவசர வேலையிருக்கு கிட்டப்பா."

கிட்டு : "நில்லுடா, நேக்கு தெரியாதா?. கொஞ்சம் பொடி இருந்தா கொடு. பழைய காச கொடுத்துட்டியே."

சங்கேகெளடா: "புதுசா எங்கேயிருந்து கொண்டாற? ஆளு கெடைச் சான்னா உரிச்சி சாப்புடற ஆளுப்பா நீ."

கிட்டு: "ஒஹோ. சுபேதாரர் வீட்டுல அப்படியே ஒன்ன சும்மா அனுப்பிச் சிட்டாங்களாக்கும். வீட்டுல ஒவ்வொர்த்தவங்களும் வந்து மொச்சிக்கிட்டத பாக்கலையாக்கும். அவரு பொண்ணுகூட வந்து பிடிவாதமா ஒங்கிட்ட காசு புடுங்கலாம். எனக்கு கொஞ்சம் பொடி கொடுத்தா அப்பா வீட்டு ஆஸ்தி கரைஞ்சி போய்டுமா?"

சங்கேகெளடா: "இந்த பேச்ச இதோட உட்டுடு. சர்க்கார் விஷயம் ஆயிரம் இருக்கும். அதெல்லாம் ஒனக்கெதுக்கு ?"

கிட்டு : "அப்படின்னா, மூணு காசு இருந்தா கொடு, கடல வாங்கிக்கறன். அவ்வளவு இல்லன்னா ஒரு காசாச்சும் கொடு, உப்புக்கடலைக்கு."

சங்கேகெளடா: "நாளைக்கி வறுத்த கடலை கொடுக்கறன் கிட்டப்பா, சும்மா இரு. போய் ஒங்க மாமாகிட்ட சொல்லிடாத."

"அப்படியே ஆவட்டும்", என்று சொன்னபடி கிட்டு ஜோசியன் கிளம்பிப் போனான். சங்கண்ணன் தன் மனசுக் குள்ளாகவே, "இந்த ஜோசியப் பையன் முன்னால சுபேதாரர பாத்திருக்கக் கூடாது. இவன முன்னால வச்சிட்டு நூறு ரூபாயக் கொடுத்தது மகாதப்பு. அந்த அழகான சுபேதாரர் பொண்ணு கைல காலணா காசு குடுத்ததும் முட்டாள்தனம். யாரிட்டயாவது இந்த விஷயத்த இந்த பைத்தியம் உளறி வைக்குமோ, என்னமோ தெரியல. ஒரு வேளை உளறி வைச்சாலும், நம்ம பேச்சுக்கு மரியாத கொடுத்து சுபேதாரர் கேக்கறாங்கற சங்கதி அப்படியொண்ணும் கெடுதல் செய்யற விஷயம் இல்ல. என்னப் பாத்ததும் மத்தவங்க பயப்படறதுக்கு இதுதான் சரியான வழி என்று யோசித்த படியே வீட்டுக்குச் சென்றான்.

2

மைசூரிலிருந்து வந்து குடியேறிய ஒரு பிராமணக் குடும்பம் சஞ்சவாடியில் இருந்தது. சதாசிவ தீட்சிதர் என்கிற பிராமணன் மைசூரில் வசித்து வந்திருந்தான். இவனுடைய முதல் மனைவி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றுத் தந்துவிட்டு இறந்து போனாள். அப்போது குழந்தைக்கு இரண்டு மாசமாகியிருந்த சமயம். வயசான தாயைத்தவிர வீட்டில் வேறு துணை யாருமில்லை. ரொம்பவும் மூப்படைந்தவள் அவள். காது அவ்வளவாகக் கேட்பதில்லை. வீட்டு வேலை எதையும் எடுத்துப் போட்டுச் செய்ய இயலாத அளவுக்குத் தள்ளாமை. இரண்டு மாசக் குழந்தையையும் பார்த்துக் கொண்டு, வீட்டு வேலைகளையும் ஒப்பேற்றிக் கொண்டு குடும்பத்தைப் பார்த்துக் கொள்வது அவளுக்கு அசாத்திய காரியமாய இருந்தது. குழந்தைக்குக் கூலிப்பால் கொடுக்க மாத்திரம் இன்னொரு ஆள் ஏற்பாடாகியது. மரியு என்கிற அந்தப் பெண்ணால் குழந்தைக்கும், வீட்டில் இருந்த மற்றவர்களுக்கும் ஏதாவது பிரச்சனை இருந்து கொண்டே வந்தது. ஒரு நாள் காலையில் இருந்து இரவு பத்துமணி வரைக்கும் குழந்தைக்குப் பால் கொடுப்பதற்கு மரியு வரவில்லை. குழந்தையின் கதறல் அதிகமாகிவிட்டது. எந்தச் சமாதானமும் அதன்முன் பலிக்கவில்லை. அழுது அழுது குழந்தையின் வயிறு உப்பிக் கொண்டது. யாராலும் அழுகையை நிறுத்த முடியவில்லை. எங்கெங்கு தேடியும் கூட மரியுவைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அப்போது சதாசிவ தீட்சதர் தன் தாயை அழைத்து, "அம்மா, குழந்தை இப்படி தொடர்ந்து அழுது கொண்டே இருப்பதைக் காண எனக்குப் பொறுக்கவில்லை. எங்கேயாவது தேசாந்திரம் புறப்படுகிறேன் நான். குழந்தையை வளர்க்க விருப்பப்படுகிற புண்ணியவானிடம் கொடுத்து விடலாம்" என்று துயரம் பொங்க சொன்னான். தாய் பார்வதியம்மாவும் அழுதபடி இருந்தாள். அத்தருணம் இரவு பத்து மணிக்கும் மேல் மரியு வந்தாள். அவளைப் பார்த்ததும் கோபம் பொங்கிய கிழவி சீறினாள். "ஏண்டி பாவி, எதுக்காக இப்படி எங்க வயிறெரிய செய்யறியோ. இந்த கொழந்தய ஒன் கையாலயே கொன்னாவது போட்டுடி", என்று சொன்னபடியே குழந்தையைத் தூக்கி வந்து அவள் கால்மேல் விழும்படி நின்ற நிலையில் தூக்கி எறிந்தாள். குழந்தை மயங்கி விழுந்தது. எந்த பதில்

பேச்சும் பேசாமல் மரியு குழந்தையை அள்ளி எடுத்து காதுக்குள் ஊதி வாயைத் திறந்து பாலூட்டினாள். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு குழந்தைக்குப் பிரக்ஞை திரும்பியது. இத்தனை சிரமங்களுடன் ஒவ்வொரு நாளும் ஒரு யுகம் போல கழிந்தது வாழ்வு.

மனைவி சாகும்போது சதாசிவ தீட்சிதனுக்கு முப்பது வயது. சிவந்த நிறந்தில் நல்ல தேஜஸுடன் இருந்தான். நல்ல முறையில் ருக்வேதம் கற்றுத் தேர்ந்திருந்தான். பஞ்சாங்கம் பார்க்கவும், ஜாதகம் சொல்லவும், எழுதவும் வருகிற அளவுக்கு ஜோசியத்தில் தேர்ச்சி இருந்தது. ஆனாலும் பஞ்சாங்கம் பார்த்துச் சொல்ல எந்த வீட்டுக்கும் போவதில்லை. எந்தக் காவியத்தையும், புராணத்தையும் கொடுத்தாலும் யாரும் மறுப்பு கூறமுடியாத அளவுக்கு மற்றவருக்குப் புரியவைக்கின்ற அளவுக்கு சமஸ்கிருத மொழியில் புலமை இருந்தது. ஆனாலும் எந்தத் திண்ணையிலும் உட்கார்ந்து வெறும் புராணம் படிக்கப் போவதில்லை. பேசவும், சொற்பொழிவும் நிகழ்த்துகிற அளவுக்கு மந்திரங்களில் முன் பயிற்சி இருந்தும் கூட, கிடைத்த வரை லாபம் என்று எந்த சிராத்தத்துக்கும் சென்றதில்லை. வேதசாஸ்திரங்களில் விற்பன்னனாக இருந்தான். ஆனாலும் வாய்சவடால் வீரனாகி எந்த இடத்திலும் புராண வைராக்கியங்களைப் பற்றிச் சொல்லிக் கொண்டு இருந்ததில்லை, லௌகிகத் திலும் போதுமான அளவு ஈடுபாடுண்டு, எனினும் மோதல்களுக்காக சதா அலைந்து கொண்டிருப்பவர்களிடம் விண்ணப்பங்கள் எழுதிக் கொடுத்து யாருக்கும் நடுவில் சண்டை பிறப்பதற்குக் காரணமாக இருந்ததில்லை, புத்த கங்கள் மீது அளவு கடந்த ஆசை உள்ள சதாசிவ தீட்சிதனுக்கு ராஜயோகத்தில் நல்ல பயிற்சி இருந்தது, இவனுடைய தாய்மாமன் ஒருவர் மைசூர் அரண்மனையில் முக்கிய வித்வான்களில் ஒருவராக இருந்தார், பசுபதி சாம்ப சாஸ்திரி என்பது அவர் பெயர். இவருக்கு அரண்மனையிலிருந்து வித்வாம்ச சம்பளம் என்று மாதத்திற்கு 5 வராகன் வந்து கொண்டிருந்தது. அவர் மூலமாக சதாசிவ தீட்சிதன் அவ்வப்போது அரண்மனைக்குப் போய் தன் மாமாவுடன் சபையில் உட்கார்ந்து கொள்வான். அந்தக் காலத்தில் இது மிகப்பெரிய சம்பள மாகக் கருதப்பட்டது. சாஸ்திர விவாதங்கள் வரும்போது புலமை வேகம் அவனை அமைதியாய் இருக்கவிடுவதில்லை. நடுநடுவில் விவாதத்தில் தானும் பங்கு கொள்வான். ஒருசமயம் அரண்மமைக்குள் சிவபூஜை நடந்து கொண் டிருக்கிற சமயத்தில் ஏதோ சாஸ்திர விவாதம் எழுந்தது. அப்போது சதாசிவ தீட்சிதன் கொடுத்த விளக்கவுரையைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற கிருஷ்ண ராஜப்பிரபு அவர்கள், "இடிமுழக்கம் செய்கின்ற இவன் யார்?", என்று கேட்டு, அன்றைய தினமே மாசத்துக்கு இரண்டு வராகன் சம்பளமென ஏற்பாடு செய்தார். புலமையும் திறமையும் இருக்கிறது என்று தெரிந்தால் போதும், யாருடைய சிபாரிசுமில்லாது வித்தியாசப்படுத்திப் பார்க்கும் குணமற்று பரிசு களை மனமுவந்து வழங்கும் குணமுடையவராய் இருந்தார் பிரபு.

இப்படி சதாசிவதீட்சதன் தனது தகுதியின் மூலம் அரண்மனை மதிப்பைப் பெற்றிருந்தான். வயசான தாயுடனும், பச்சிளங்குழந்தையுடனும் இருந்த காலம் அது. வீட்டில் வேறு எந்தப் பெண்ணின் துணையோ, ஆணின் துணையோ இல்லை. இக்காரணத்துக்காகவும், மாமாவின் வற்புறுத்தலுக்காகவும் தாயின் வார்த்தைக்கு மதிப்பு தரவேண்டியும் சதாசிவ தீட்சிதன் மனமிறங்கினான். பெண்தேடும் படலத்தில் பசுபதிசாம்ப சாஸ்திரி மும்முரமாய் இறங்கித் தேடிக் கொண்டிருக்கும் நேரத்தில் சஞ்சவாடியில் ஜோசியருக்கு கல்யாண வயதில் பெண் ஒருத்தி இருப்பதாகத் தெரிய வந்தது. பெண்ணுக்கு வயது எட்டு. ஆரம்பத்தில் இருந்தே எவர் சொன்னாலும் கேட்டுக் கொள்கிற சுபாவமுடைய அந்த ஜோசியன் மகளுக்கு எட்டாண்டுகள் முடிந்ததும் கல்யாண வயது தாண்டிப் போகிறதே என்று யோசித்தபடி இருந்தான். தகுதியான வரனாய் அமைகிற பட்சத்தில் இரண்டாம் திருமணமாயினும் பரவாயில்லை, பெண் ணைக் கொடுத்து விடலாம் என்று நிச்சயித்துக் கொண்டிருந்தான். சதாசிவ தீட்சிதனின் தகுதிகள் பற்றிக் கேள்விப் பட்ட ஜோசியன் மிகவும் சந்தோஷத் துடன் ஜாதகப் பொருத்தம் பார்த்தான். பதினோரு அம்சங்கள் பொருந்திக் கூடி வந்தன. அந்த மாதத்திலேயே ஒரு நல்ல நாள் பார்த்துத் திருமணத்துக்குத் தேதி குறித்தார்கள் திருமண விஷயம் பற்றி பிரபுவிடம் தகவல் தெரிவித்து வெற்றிலை, பூ, பழத்துடன் திருமண அழைப்பிதழையும் வைத்துத் தந்தான் தீட்சிதன். அப்போதே இருநூறுபடி அரிசி, அதற்குத் தேவையான அளவு மற்ற தானிய வகைகள், ஒரு பட்டுக்கரை வைத்த புடவை, ஒரு கலர்ப்புடவை, இரண்டு ஜோடி வேட்டி மற்றும் பணமாக நூறு ரூபாய் ஆகியவற்றைக் கொடுக்குமாறு ஆணையிட்டார் அவர். ஆனாலும் என்ன பயன்? சாமியே வரம் கொடுத்தாலும் அது வெறும் வாய் வார்த்தை தான். பூசாரியின் வரமே காரியத்துக்கு உதவுவது. அப்போது திம்மண்ண சாஸ்திரி என்பவர் அரசருக்கு நெருக்கமாக இருந்து கொண்டு, விஷயம் அறியாதவர்களிடையில் மந்திரி என்ற பெயரைப் பெற்றிருந்தார். அரண்மனைச் செலவைக் குறைத்து பிரபுவுக்கு சேர்த்து வைக்கிறேன் என்று நடித்துக் கொண்டிருந்த இந்த சாஸ்திரி உத்தரவாகியிருந்த அன்பளிப்பில் பாதியை மாத்திரமே சதாசிவ தீட்சிதனுக்குக் கொடுக்க வைத்தான். சஞ்சவாடியில் திருமணம் நடந்தேறியது.

சஞ்சவாடியில் ஜோசியருக்கு நிறைய சொத்தும் நிலபுலன்களும் இருந்தன. பருவத்துக்கு இருநூறு கோட்டை தானியம் வரக்கூடிய நிலம் இருந்தது. ஆண்டுக்கு ரொக்கமாக ஐந்நூறு ரூபாய் வரக்கூடிய ஒரு சர்வ மானியம் இருந்தது. சீட்டுப் பணம் முதலானவற்றில் இரண்டு மூன்று ஆயிரம் ரூபாய் வருமானமிருந்தது. ஜாதகப் பலன்கள் பார்ப்பதிலும், கேள்விக்குத் தக்க பதில் சொல்வதிலும், அக்கம்பக்கத்துக் கிராமங்களில் இவரை மிஞ்சத்தக்கவர் யாருமில்லை. கிருஷ்ணராஜ உடையார் வரைக்கும் இவர் பெயர் எட்டி இருந்தது. சாமராஜ நகருக்கு வரும் பொழுதெல்லாம் நீலகண்ட ஜோசியனைக்

கூப்பிட்டு தன் ஜாதகத்தைக் காட்டிப் பலன் கேட்பதுண்டு. ஜாதகப்பலன் பார்ப்பதில் உடையார் அவர்களுக்கே நல்ல பயிற்சி இருந்தது. சாதாரண ஜோசியர்கள் அவர் எதிரில் செல்லவே அஞ்சி நடுங்கினர். அடிக்கடி அரசர் அழைத்து ஜோதிட பிரச்சனைகளை விவாதித்துக் கொண்டிருக்க வேண்டு மானால் நீலகண்ட ஜோசியரின் தகுதித்திறனை சாதாரணமானதாக எண்ணி விட முடியாது.

இந்த ஜோசியனுக்குத் திம்மம்மா என்கிற பெண் இருந்தாள். இவளைத் தான் சதாசிவ தீட்சிதன் மணம் செய்து கொண்டிருந்தான். கிருஷ்ணன் என்கிற ஆண்மகனும் இருந்தான். சொல்லிக் கொள்கிற அளவுக்குப் புத்தி சாலியில்லை, இவன். விளையாட்டுப் பிள்ளையாய்த் திரிந்து கொண்டி ருந்தான். கொஞ்ச காலத்துக்குள்ளேயே உடல்நலம் கெட்டுப் போன நீலகண்ட ஜோசியன் வாழ்வின் இறுதிக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். மரு மகனான சதாசிவ தீட்சிதனை அவசியமாய், உடனடியாய்க் கையோடு அழைத்து வரச் சொல்லி மைசூருக்கு ஆள் அனுப்பினான். ஆள் கொடுத்த கடிதத்தில் இவ்விதம் எழுதி இருந்தது.

"சிரஞ்சீவி மருமகனான சதாசிவ தீட்சிதனுக்கு அநேக ஆசீர்வாதங்கள்.

இந்த கிருஷ்ணபட்சம் 11, வெள்ளிக் கிழமை வரை இங்கே அனைவரும் நலம். உங்கள் நலத்தைக் குறித்து எழுதவும். நிற்க,

கடந்த ஒரு மாதமாக உடலில் தெம்பு குறைந்து களைப்பு அதிகமாக உள்ளது. காய்ச்சல் கண்டு படுத்த படுக்கையாகிவிட்டது. இப்போது கொஞ்சம் சீரடைந்து வருகிறது. என் உடல்நிலையைப் பார்க்கும் போது இன்னும் அதிக நாள்கள் நான் வாழக்கூடும் என்கிற நம்பிக்கை எனக்கில்லை. இங்கே வீட்டில் வேறு யாரும் துணையில்லை என்கிற சங்கதி, தெரிந்த விஷயம்தான். என் அக்காவால் முதுமையின்காரணமாக எதுவும் செய்ய முடிவதில்லை. நம் இருவரின் சம்பந்தம் வளர்ந்த இந்த ஒரு வருஷ காலத்தில், சிரஞ்சீவி கிருஷ்ணனைப் பற்றியும் நீங்கள் அறியாததல்ல. பசுபதிசாம்ப சாஸ்திரி அவர் களுக்கும் விஷயத்தைத் தெரிவித்து அனுமதி பெறுவதுடன், என் அன்பான வணக்கங்களையும் தெரிவித்துக் கொண்டு உடனடியாய்ப் புறப்பட்டு வரவும். தங்களுக்கு கடிதம் சீக்கிரம் சேரும் வகையில் ஆள் மூலம் அனுப்பியுள்ளேன். இப்படிக்கு, நீலகண்ட ஜோசியர்.

படித்து முடித்த சதாசிவதீட்சிதன் அரண்மனையில் விஷயத்தைத் தெரி வித்து, எட்டு நாட்களுக்கு விடுப்பு சொல்லி விட்டு அன்றைய தினமே சஞ்ச வாடிக்குப் புறப்பட்டான். மறுநாள் சாயங்காலம் சென்று சேர்ந்தான். இவனைப் பார்த்ததும் எழுந்து உட்கார்ந்த ஜோசியர், அனைவரின் சுகம் குறித்தும் விசாரித்தார். அப்புறம், "முதலில் சாப்பாடு முடியட்டும். அதற்குப் பிறகு நிதானமாக உங்களிடம் பேச, நிறைய விஷயங்கள் உள்ளன." என்று சொன்னபடி அன்றைய இரவு சதாசிவதீட்சிதன் ஓய்வு எடுத்துக் கொண்டான்.

இரவு மூன்று மணி அளவில் மருமகனைக் கூவி எழுப்பிய ஜோசியர், அவனுடன் நிகழ்த்திய உரையாடல் இவ்விதம் இருந்தது.

ஜோசியர்: களைப்புடன் வந்த உங்கள் தூக்கத்தை நான் கெடுக்கும் படியாகிவிட்டது. எனக்கு ஆரோக்கியத் தொந்தரவு அதிகமாகிக் கொண்டு வருகிறது. நீங்கள் வந்து சேரட்டும் என்றுதான் உயிரைக் கையால் பிடித்துத் தடுத்து வைத்திருந்தேன். நல்ல வேளையாய் நீங்கள் வந்தீர்கள். உங்களைப் பார்த்ததும் மனசுக்கு எவ்வளவோ தைரியமாய் உள்ளது. கடைசிக் காலம் நெருங்கிவிட்டது. அதனால் எல்லா விஷயங்களையும் உங்களிடம் சொல்லி விடுகிறேன். சொத்துக்கு எந்தக் குறைச்சலும் இல்லை. நிறைய உள்ளது. இவை அனைத்தையும் வைத்துக் காப்பாற்றி, வீட்டுக் காரியங்களையும் பார்த்துக் கொண்டு முன்னேறிச் செல்கிற சக்தி கிருஷ்ணனுக்கு இல்லை. இந்த சாவிக் கொத்தை வாங்கிக் கொள்ளுங்கள். முக்கிய சொத்துக்களை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். இந்த சொத்துக்களின் மூலம் வேண்டிய அளவு ஆதாயம் அடையவும், செலவு செய்யவும் உங்களுக்கு உரிமை உள்ளது. அதற்காக யாரிடமும் எந்தக் கணக்கு வழக்கையும் நீங்கள் காட்ட வேண்டிய அவசிய மில்லை. கிருஷ்ணனுக்கு ஒரு திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். யாரும் அவனுக்காகப் பெண் கொடுக்கத் தயாராக இல்லை. எதிர் காலத்திலும் அவனுக்கு திருமணமாகுமோ, என்னமோ தெரியவில்லை. அவன் ஜாதகமும் அதற்குத் தகுந்தபடிதான் உள்ளது. என் தலைமுறையோடு இந்தக் குடும்பம் முடிந்துவிட்டது என்றுதான் தோன்றுகிறது. நீங்கள் இங்கேயே தங்கி உங்கள் மனைவி திம்மம்மாவையும், ஏதும் அறியாத கிருஷ்ணனையும் காப்பாற்றி வர வேண்டும். அதிகம் பேசும் அளவுக்கு எனக்குச் சக்தியில்லை. மூச்சு அடைக்கிறது. மணியக்காரனோ சரியான பகல் கள்ளன் கணக்குப் பிள்ளையோ சரியான பொறுக்கி; பிறர் சொத்தைப் பறித்துக் கொள்வதில் நிபுணர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கும் தாலுகா அதிகாரிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. எந்தத் தகராறிலும் ஈடுபடாமல் நல்லபடி வாழ்ந்துகொண்டு அரசரின் கருணைக்கு நான் ஆளாகி யிருப்பதில் இவர்கள் எல்லோருக்கும் என்மீது பொறாமை. நான் சாகும் தருணத்துக்காகக் காத்திருக்கிறார்கள். கடவுள் சித்தம் எப்படியோ, அப்படியே ஆகட்டும். ஆனாலும் மனிதனும் தன்னாலான முயற்சியைச் செய்தே தீர வேண்டும் என்பதால் எல்லா விஷயங்களையும் உங்களிடம் சொல்லி விட்டேன். இன்னும் அதிகமாக என்னால் பேச முடியவில்லை".

சதாசிவதீட்சிதன்: "மாமா, நீங்கள் தெரிவித்த எல்லா விஷயங்களையும் கேட்டேன். ஆனால் அவ்வளவு தூரத்துக்கு யோசிக்கிற சந்தர்ப்பம் எதுவும் தற்சமயம் வரவில்லை. மிகவும் நேரமாகிவிட்டது. தூங்கினால் உடம்பு ஆரோக்கியமாகும். விடிந்த பிறகு பேசிக் கொள்ளலாம்."

ஜோசியன்: "தூக்கமும் கெடையாது, கீக்கமும் கெடையாது. அசதி அதிக

மாகிறது. பேச முடியவில்லை". இப்படி சொல்லிக் கொண்டே படுக்கையில் சாய்ந்தான் ஜோசியன். பிரக்ஞை தப்பிவிட்டவன் போலிருந்தான். விளக் கெடுத்து நெருக்கத்தில் வந்து பார்த்தபோது கண் மேலேறிச் செருகிக் கிடந்தது. பயந்துவிட்டான். வீட்டில் இருக்கிற எல்லாரும் எழுந்து விட்டார்கள். காதுக்குள் எத்தனை முறை ஊதினாலும் பிரக்ஞை வரவில்லை. கொர் கொர் என்று மெல்ல மூச்சு வாங்க ஆரம்பித்தது. பயம் கூடியது. வாசல்கதவுக்குப் பக்கத்தில் உள்ள சிறு கூடத்துக்கு படுக்கையோடு அவனைத் தூக்கி வந்து கிடத்தி னார்கள். பஞ்சாங்கத்தைப் பார்த்த போது த்ரிபாதி நட்சத்திரமாக இருந்தது.

கிட்டு: "அப்பா நல்லா கொறட்டை விட்டுத் தூங்கறார். எனக்கு தூக்கம் வருது. எல்லாரும் தூங்கப் போவலாம் மாமா. திம்மா, எதிர் வீட்லேர்ந்து உண்டை எடுத்தாந்து தந்தாங்க இல்ல, அதுல ஏதாச்சும் மிச்சம் கிச்சம் வச்சி ருக்கியா, எல்லாத்தையும் முழுங்கிட்டியா? கொஞ்சம் கூட எனக்குக் கெடைக் காது. எல்லாத்தையும் உன் வயித்துலேயே போட்டு அடைச்சிக்கோ."

அவனது அப்பாவித்தனத்தைப் பார்த்து மனம் வெதும்பிய சதாசிவ தீட்சிதன், "கிட்டு, கரண்டியினால ரெண்டு தரம் தீர்தத்த எடுத்து அப்பா வாய்ல ஊத்து" என்றான். அப்போதே ஜோசியனின் உயிர் பிரிந்தது.

அடுத்து செய்ய வேண்டிய காரியங்களனைத்தையும் முறைப்படி செய்து முடித்தான் தீட்சிதன். பிறகு உண்டான வரவு செலவுகளையெல்லாம் பார்த்து விட்டு உடனடியாக நீலகண்ட ஜோசியனின் அக்காவான வெங்கம்மாவிடம்—

சதாசிவ தீட்சிதன்: "பெரியம்மா, ஊரில் போட்டது போட்டபடி எல்லா ரையும் விட்டு விட்டுத் தனியாகக் கிளம்பி வந்துவிட்டேன். மைசூருக்குப் போய் என் மாமாவுடனும் விஷயத்தைக் கலந்து பேசி ஒரு முடிவெடுத்துக் கொண்டு இன்னும் எட்டு நாட்களுக்குள் திரும்பி வருகிறேன்".

வெங்கம்மா: "வேற ஆள் கெடையாது. மோசமான ஊர் இது. துஷ்டர்கள் அதிகம். எந்த நேரத்தில் என்ன ஆகும்னு எதுவும் சொல்ல முடியாது."

சதாசிவ தீட்சிதன்: "எது பற்றியும் கவலை வேண்டாம். தகுந்த ஏற்பாடு களை நான் செய்கிறேன். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் திரும்பியும் வருவேன்".

சொல்லிக்கொண்டு புறப்பட்ட சதாசிவ தீட்சிதன் மைசூருக்கு வந்து சஞ்சவாடியில் நடந்த எல்லா விஷயங்களையும் பசுபதிசாம்ப சாஸ்திரியிடம் தெரிவித்தான். அன்றைய தினம் சாயங்காலமே இருவருமாய்ச் சேர்ந்து அரசரைச் சந்தித்தனர்.

அரசர்: "என்னய்யா கோடையிடி! எப்பொழுது வந்தாய்?"

சதாசிவ தீட்சிதன்: "இன்றைய தினம் அதிகாலை வந்தேன். என் மாமனா ரான நீலகண்ட ஜோசியர் இறைவனடி சேர்ந்துவிட்டார். நான் போய்ச் சேர்ந்த போது நன்கு ஆரோக்கியமாகவே இருந்தார். போய்ச் சேர்ந்த அன்றைய தினம் இரவில் நடுநேரத்தில் வந்து எழுப்பி தன் சொத்துக் கணக்கு

களையெல்லாம் சொல்லி "என் குடும்பத்தை நீதான் காப்பாற்ற வேண்டும். சஞ்சவாடியிலேயே இருந்து இந்த வீட்டுக் காரியங்களை பார்த்துக் கொள்ள வேண்டும். உதவி செய்ய வேறு யாரும் எனக்கில்லை," என்று சொன்ன படி என் கையை அவர் பிடித்து வைத்துக் கொண்டார். அப்போதே அவர் உயிர் ஊசலாட ஆரம்பித்தது. அடுத்த ஒரு மணி நேரத்துக்குள் அவர் உயிர் பிரிந்தது."

அரசர்: "என்ன, நீலகண்ட ஜோசியர் இறந்து விட்டாரா?" அநேக விஷயங் களையும், ஜோசியத்தில் சில முக்கிய ரகசியங்களையும் அவரிடமிருந்து நான் தெரிந்து கொண்டேன். நல்ல மனிதர். அரண்மனைப் பண்டிதர்கள் பட்டி யலுள் அவர் பெயரையும் சேர்க்க வேண்டும் என்கிற எண்ணம் நெடு நாளாக மனசிலிருந்தது. சாமராஜ நகருக்குப் போகும் போது ஞாபகம் வரும். மைசூருக்கு வரும்போது மறந்து விடும். இப்படியே பலகாலம் ஆனது. என்னால் அவருக்கு எந்த உபகாரமும் செய்ய முடியாமல் போனது. ஏதோ ஒரு காரிய நிமித்தம் நன்றியுணர்வில் உருவாகும் நட்பு போன்ற தல்ல, எங்கள் நெருக்கம். அதை நீங்கள் இருவரும் புரிந்து கொள்ள வேண்டும். வேறெதுவும் எனக்குச் சொல்லத் தோன்றவில்லை. அவர் குடும்பத்தில் இருக்கிற சிரமங்கள் பற்றி நானும் அறிவேன். மகன் ஒரு மாதிரி அசடு. கோழை, சாமர்த்தியசாலிகள் வேறு யாரும் இல்லை. அவர் குடும்பமே நசிந்தது போல ஆகிவிட்டது. அப்பா, கோடையிடி! நீ அங்கே போய் இருந்து குடும்பம் தலைநிமிர்ந்து நடக்குமாறு செய். அவசியம் என்றால் வா. வேண்டுமென்கிற போது உன் சம்பளப் பணத்தை வாங்கிக் கொள். எனக்கும் ஜோசியருக்கும் இருந்த நட்புக்குப் பெருமை சேர்க்கிற மாதிரி இந்த காரியத்தை நிறைவேற்று. உன்னைப் பற்றி எனக்குத் தெரியும். உன் புலமைக்கு இதனால் எந்த பாதகமும் வராது".

சதாசிவ தீட்சிதன்: "கண்டிப்பாக அதைச் செய்வேன். சந்நிதானத் திலேயே உத்தரவான பிறகு அதன்படியே உறுதியாய் நடப்பேன்".

இவ்விதம் இருவரும் உத்தரவு பெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினர். அப்போது தீட்சிதன் தன் தாயை அழைத்து, "அம்மா, மாமனார் இறந்த பிறகு கண்காணிக்க ஆள் இல்லாமல் சொத்தெல்லாம் பாழாகிப் போகிற சூழ்நிலை உங்களுக்குப் புரிந்திருக்கும். வயசான உன்னைத் தனிமையில் இங்கு தவிக்க வைத்துவிட்டு அங்கே நான் இருப்பதும் முடியாது. பச்சைக் குழந்தை வேறு. அதைப் பராமரிக்கவும் ஆள் வேண்டும். இனிமேல் இருந்து பார்க்கிற அளவுக்கு உனக்குச் சக்தி இல்லை. சஞ்சவாடியிலேயே இருந்து கொள்ளலாம் என்றும், இங்கு கொடுத்து வரும் சம்பளத்துக்கு எந்தக் குறைச்சலும் வராது என்றும் அரசர் உறுதி கூறியுள்ளார். நீ எப்படி சொல்கிறாயோ, அப்படியே ஆகும். மாமனார் வீட்டோடு போய்ச் சேர்ந்து கொண்டான் என்கிற பெயர் மட்டும் வரும்" என்றான். அப்போது,

பசுபதி: "அக்கா, எப்படி சிந்தித்துப் பார்த்தாலும் சஞ்சவாடிக்குப்

போவதே மேல் என்று எனக்குத் தோன்றுகிறது. மனசுக்குள் எதையும் நீ யோசித்து குழம்ப வேண்டாம். உன்னாலும் இனிமேல் ஓடியாடி வேலை செய்கிற அளவுக்குச் சக்தி இல்லை. தாயில்லாத குழந்தையை வளர்ப்பதும் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டு நிர்வாகம் செய்வதும் சாதாரண விஷயமல்ல".

பார்வதி அம்மாள்: "நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படியே ஆகட்டும். எனக்கென்ன தெரியும், சாகப் போகிற கிழவி நான்."

இவ்விதம் பலவாறு ஆலோசித்த பிறகு தன் வீடு, நிலம், முதலானவற்றைச் சதாசிவ தீட்சிதன் தன் தாய் மாமனின் வசம் பார்த்துக் கொள்வதற்காக ஒப்படைத்துவிட்டு அனைவரையும் அழைத்துக் கொண்டு சஞ்சவாடிக்குப் புறப்பட்டான்.

3

அந்த நாட்களில்தான் சாமராஜநகரில் சாமராஜேஸ்வரர் கோயில் கட்டப் பட்டு வந்தது. இதே போலவே நஞ்சன் கூடுவிலும் நஞ்சுண்டேஸ்வரர் கோயிலின் வெளிப் பிரகாரம், உள்கட்டு, வெளிக்கூடம், சிவகூட்டத்து உணவுக் கூடம், வெளியே பெரிய வாசலையொட்டி ஏழு கண் கொண்ட கோபுரம் ஆகிய கட்டட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இதைப் போலவே சாமுண்டி மலையில் சாமுண்டேஸ்வரி அம்மன் ஆலயத்திலும், வெளிப் பிரகாரமும், பெரு நுழைவாயிலின் பெரிய கோபுரமும் கட்டப் பட்டுக் கொண்டிருந்தன. மேல்கோட்டையில் செலுவராயர் கோயிலிலும் பெரும்பத்தான சில வேலைகளும் நடந்து கொண்டிருந்ததாகத் தெரிய வருகிறது. இவை அனைத்து வேலைகளையும் தன் சொந்தப் பொறுப்பிலேயே நடத்திக் கொண்டிருந்தார், கிருஷ்ணராஜ உடையார். மேலும் நடுநடுவில் வேலைகள் நடந்து கொண்டிருக்கும்போதே அவ்வப்போது சென்று பார்வை யிடுதலும் உண்டு. ஈசன் அருளால் தர்ம காரியங்களுக்கு உதவுகிற காரி யஙகளில் அவருக்கு அளவில்லாத நாட்டமிருந்தது. உடல் சிரமங்கள் எதையும் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பணத்தையும் பொருட்படுத்தாமல் செலவு செய்தார். அப்போது அவர் நடத்திவந்த காரியங்கள் லட்சம் ரூபாய் மதிப்புள்ள காரியங்களாகும். சாமராஜேஸ்வரர் நஞ்சுண்டேஸ்வரர் மைசூர் ப்ரசன்னகிருஷ்ணசாமி, மேல்கோட்டை செலுவராயர் ஆகிய ஆலயங் களுக்கு ஸ்வாமிகளுக்கும் மற்றும் அம்மன்களுக்கும் பல லட்ச ரூபாய் மதிப் புடைய ரத்தின நகைகள், பாத்திர பண்டங்கள், தங்கம், வெள்ளியாலான பொருட்கள், நகைகள், பாத்திர பண்டங்கள், ஆகியவற்றை மிக அதிக அளவில் வழங்கினார். இப்படிப்பட்ட தர்ம காரியங்களுக்குக் கொடுப்பதி லிருந்து அவர் என்றும் பின் வாங்கியதில்லை.

இதைப் போலவே அன்னச் சத்திரங்கள் பலவற்றையும் ஏற்படுத்தினார். அநேக அக்ரஹாரங்களையும் உருவாக்கிக் கணக்கற்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அனுகூலங்கள், தானதருமங்களாக வாரி இறைத்து மக்களை வாழ வைத்தார். தான தருமங்களுக்காக அவர் செலவழித்த தொகை, கோடிக்கணக்கில் இருக்கும் சத்திரங்கள், கோயில்கள் மற்றும் கட்டிடங்கள்

ஆகியவற்றைக் கட்டும் பொறுப்பை வேறெந்த கட்டிட ஒப்பந்தக்காரர் களிடமும் அவர் ஒப்படைக்கவில்லை. அந்தக் காலத்தில் கட்டட ஒப்பந்தக் காரர்கள் யாரும் இருந்ததில்லை. கட்டி முடிக்கப்பட்ட சிற்சில நாட்களுக் குள்ளேயே எந்தக் கட்டிடமும் கீழே விழும் அவலமும் இருந்ததில்லை. விழும் பட்சத்தில் செங்கல்லில் கல் இருந்தது. அல்லது வேகாத கல் இது என்றோ, சுண்ணாம்பில் சாம்பல் கலப்பு இருந்தது, அதனால் அது ஒட்டிக் கொள்ள வில்லை என்றோ, மரத்துக்குள் போரல் இருந்தது, அதைக் கவனிக்கவில்லை என்றோ காரணங்கள் சொல்லித் தப்பிக்க நினைக்கிற ஆட்கள் அப்போது இருந்ததில்லை. அதிக லாபத்தைக் குறிவைத்து உத்தேசமாக அதிக பட்சத் தொகையை மதிப்பீடு செய்யும் ஒப்பந்தக்காரர்களுடன் சேர்ந்து, முடிந்த அளவு கொள்ளையடிக்கிற காரியத்துக்கு, சிற்ப விற்பன்னர்களோ மற்றும் எவரோ தயாராய் இருந்ததில்லை. அந்தக் காலத்தில் செய்யப்பட்ட வேலைகள் அனைத்தும் 'ஒருமுறை கட்டுவது, கட்டியவை உறுதியாக நிற்கும்' என்கிற ரீதியிலேயே கட்டப்பட்டவை. இப்போது இடிப்பதற்கு ஆகிற செலவிலிருந்து இன்னொரு கட்டிடத்தையே கட்டிவிட முடியும். உறுதியான கட்டிட வேலை களைத் தினக் கூலி ஒப்பந்தக் கூலிகள் செய்தனர். முன் நின்று வேலை செய்விக்கும் பொருட்டு மேஸ்திரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். வேலைகள் நடக்கும்போதே அவ்வப்போது வந்து கிருஷ்ணராஜ உடையார் அவர்களே பார்வை இட்டார். அதன் பொருட்டு நஞ்சன் கூடுக்கும் சாமராஜ நகருக்கும் அடிக்கடி பயணம் செய்ய வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் இரட்டைக் குதிரைகள் பூட்டிய வண்டியே வேகமானப் பயணத்துக்குப் பொருத்தமாக இருந்தது. அரசபை பரிபாலிக்கிறவர், தாமே இப்படிப்பட்ட காரியங்களிலில் ஈடுபடுவதால் உண்டாகும் சிரமங்கள் கொஞ்சநஞ்சமில்லை. சாதாரண ஆட்களுக்கே இவை மிகுந்த வழிக்களைப்பையும், உடல்களைப்பையும், மனச் சோர்வையும் கொடுப்பவை. சுகமான பதவிகளில் இருப்பவருக்கு உண்டாகும் ஆயாசம்பற்றிச் சொல்லவே தேவையில்லை. ஆனால், இவை எதையும் பொருட்படுத்தாமல், நமது அரசர் இக்காரியங்களில் தானே ஈடுபட்டிருந்தார்.

இத்தகு பிரயாணத்தின் பொழுது ஒரு சமயம், ஒரு விஷயம் நடந்தது. சாமராஜ நகரிலிருந்து திரும்பும்போது மைசூருக்கு ஆறுமைல் தூரத்தில் கடக் கோலுக்குப் பக்கத்தில் வண்டியில் பட்டென்று சத்தம் வந்தது. ஆரம்பத்தி லிருந்தே இந்த வண்டியை ஒட்டிக் கொண்டிருந்த ப்ரௌன் என்கிற சட்டைக் காரன்தான் அன்றைக்கும் வண்டியை ஒட்டிக் கொண்டிருந்தான். "அது என்ன சத்தம்", என்று கேட்டார் அரசர். கவலைப்படும்படி ஒன்றும் இல்லை," என்று சொன்னான், ப்ரௌன். மைசூரின் அரண்மனை வாசல் அருகில் வண்டி வந்து சேர்ந்தது. அது நிற்கப் போகும் தருணத்தில், வண்டியில் இருந்து எகிறிக் குதித்த ப்ரௌன் முன்பக்கச் சக்கரத்தைத் தாவிப் பிடித்துக் கொண்டு நின்றான், அரசர் கீழே இறங்கினார். உடனே ப்ரௌனைப் பார்த்து,

அரசர்: "எதற்காக சக்கரத்தைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாய்?"

ப்ரௌன்: "ஐயா, பட்டி முறிந்து போய் விழும் நிலையில் உள்ளது. வண்டி குடை சாய்ந்து விடும் நிலையைத் தவிர்ப்பதற்காகவே கீழே இறங்கிச் சக்கரத்தை அத்துடன் சேர்த்து உறுதியாய்ப் பிடித்துக் கொண்டேன்".

அரசர்: "எப்போது பட்டி முறிந்தது"?

ப்ரௌன்: "கடக்கோலுக்குப் பக்கத்தில் முறிந்துவிட்டது. வழியிலே சத்தம் கேட்டதல்லவா, அப்போது."

அரசர்: "இவ்வளவு முறிந்த நிலையில் சக்கரம் சுழன்று வண்டி குடை சாயாமல் போனது ஆச்சரியம். குடை சாய்ந்திருக்குமானால் கை கால்தான் முறிந்திருக்குமோ உயிர்தான் போயிருக்குமோ, ஏதோவொரு ஆபத்து ஏற்பட்டிருக்குமல்லவா".

ப்ரௌன்: "அரசே, சக்கரமே கழன்றாலும் எந்த ஆபத்தும் நேராத வகையில் வண்டியை ஓட்டுவது, வண்டியோட்டியின் சாமர்த்தியத்தையும் திறமையையும் பொறுத்தது".

அரசர்; "ரொம்ப சந்தோஷமப்பா, வண்டி சாய்ந்து ஆபத்து ஏற்பட்டிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்? வண்டியை நீ நிறுத்தியிருக்கவேண்டும்."

ப்ரௌன்: "ஐயா, நான் வண்டியை நிறுத்தியிருந்தால் அபாயமே உண்டாகி இருக்கும். மறுபடியும் இன்னொரு வண்டி ஏற்பாடாகி வரும் வரையில் காட்டு வழியில் அரசர் நின்றிருக்க வேண்டியதாயிருக்கும். பொழுது வேறு இறங்கிக் கொண்டிருந்தது. பகல் பொழுது குறைச்சலான சமயம். மேகங்கள் வேறு திரண்டிருந்தன. இவை அனைத்தையும் உத்தேசித்துதான், ஒரு முடிவுக்கு வந்து தங்களுக்கு எந்தவிதமான தொந்தரவும், அபாயமும் ஏற்படாத வண்ணம் வண்டியை ஓட்டிவந்து சேர்த்தேன். மன்னித்துக் கொள்ள வேண்டும்."

அரசர்: "ப்ரௌன், நீ செய்திருக்கிற உதவிக்கு எவ்வளவு கொடுத்தாலும் ஈடு ஆகாது. என் உயிரையே காப்பாற்றி இருக்கிறாய், இன்று. வேறென்ன வேண்டும்?"

சந்தோஷத்துடன் ப்ரௌனைப் பாராட்டிக் கொண்டே மதிப்பு மிக்க பரிசுகளை வழங்கினார் அரசர். "இந்த ப்ரௌன் இன்றுமுதல் வேறு எந்த வேலையையும் செய்யத் தேவையில்லை. நமது சொந்த குதிரைலாயத்தில மேற்பார்வை செய்து கொண்டிருந்தால் போதும். சம்பளம் வாங்கிக் கொள்ளட்டும்," என்றும் உத்தரவிட்டார். இப்படி நடைபெற்றுக் கொண்டிருந்த கோயில் வேலைகள் ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் நடைபெற அந்தந்த இடத்திலிருக்கும் முக்கிய அதிகாரியான தாசில்தாரின் ஆர்வமும், ஒத்துழைப்பும் அவசியமாகும். அதன்படி சாமராஜநகரில் சாமராஜேஸ்வர் கோவில் பணிகளை அக்கறையுடன் பார்த்துக் கொள்ளவும், பிரச்சனைகள் எதுவும் எழாத படி கவனித்துக் கொள்ளவும் வேண்டுமென்று அவ்விடத்துத் தாசில்தாரரான

மாரமணராயனுக்கு அரசர் கட்டளையிட்டிருந்தார். தாசில்தாரனும் வேறு எந்த வேலைகள் இருந்தாலும், அவற்றை விடுத்து கோவில் வேலையில் அதிக அளவு ஆர்வமும் ஈடுபாடும் காட்டி வந்தான். இக் காரணத்தாலேயே அந்த தாசில்தாரனிடம், அரசர் மிகுந்த அபிமானம் கொண்டிருந்தார். சாமராஜ நகருக்குப் போகும் போதெல்லாம், எந்த ஒரு வேலைக்கும், 'மாரமண ராயாவைக் கூப்பிடு' என்று உத்தரவிடுவார் அரசர். அரசர் கூப்பிட்ட பொழுதெல்லாம் தலைப்பாகையை அவசர அடியில் முன் பின்னாகக் கட்டிக் கொண்டு போவது, வேட்டியை கரை மாற்றிக் கட்டிக் கொள்வது, அரையும் குறையுமாய் உடுத்திக் கொண்டு நிற்பது, ஒன்றும் தெரியாத அப்பாவிபோல முகபாவத்தை வைத்துக் கொள்வது, அவசரம் அவசரமாய் நடப்பது, அதிக கள்ளங் கபடங்களை அறியாதவன் போல் கட்டளையைக் கேட்டதும், மிகவும், பிளந்து செயல்படுபவனைப் போல் காட்டிக் கொள்வது, ஊழைக்குப் கும்பிடு போட்டு வணங்குவது அரசரின் வாயிலிருந்து எந்த வார்த்தை வந்தாலும் கள்ளங் கபடங்களை அறியாதவன் போல் நடிப்பது, உத்தரவிட்டதுமே சிரமேற்கொண்டவன் போல தலை வணங்கி எழுவது, அரசர் எதைச் சொல்ல முன் வந்தாலும், "ஐயா உத்தரவிட்டபடியே தயார் செய்திருக்கிறேன், எந்த வேலையாய் இருந்தாலும் ஒரு நிமிஷத்துக்குள் செய்து முடிப்பேன், ஆஹா, அதிலென்ன ஆட்சேபனை உள்ளது? சரிசரி, அப்படியே, நல்ல உத்தரவு" என்று சந்தர்ப்பம் வாய்த்த போதெல்லாம் புகழ்ந்து கொண்டே இருப்பது, என்றே நாளெல்லாம் நடித்தான் அவன். தொடர்ந்து இப்படியே நடித்துக் கொண்டிருந்ததன் காரணமாக, 'இவன் ரொம்ப நல்லவன், எந்தத் தவறான விஷயத்துக்கும் போகாதவன், அரசாங்க வேலையை வெகு சிரத்தை யோடும் சிறப்பாகவும் செய்யக் கூடியவன் என்று அரசரும் அவன்மேல் நல்ல அபிப் பிராயம் கொண்டு நீண்ட காலம் அதே தாலுகாவில் இருக்கிற மாதிரி உத்தரவைப் பிறப்பித்தார்.

தனக்குக் கிட்டி இருக்கிற ராஜகௌரவத்தின் மறைவில் தான் எதைச் செய்தாலும் அது செல்லுபடியாகும் என்று நினைத்தான், அந்த அதிகாரி. இவன் சரித்திரம் இதுமட்டுமே இல்லை; எப்போதும் நாலைந்து மத்யஸ்தர்கள் இவனிடத்தில் வருவதும் போவதுமாய் இருந்தார்கள். இவர்களின் மூலம் ஒவ்வொரு வழக்கிலும் மறைமுக லஞ்சம் ஏராளமாக புரண்டு கொண்டிருந்தது. பணக்காரர்கள் கட்சிக்காரர்களாகி வழக்கிற்கு வரும்போது சுபேதாரரின் பை நூறாறு காணிக்கைகளால் நிரம்பியது. நாளுக்குநாள் பணவரவு அதிக மாகிக் கொண்டே இருந்தது. அறுவடை நாட்களில் ஊழியர்கள் கிராமங் களுக்குச் சென்று படேலின் மூலம் விவசாயிகளிடமிருந்து தேவைப்பட்ட அளவு தானியம், புல் ஆகியவற்றை இலவசமாக வாங்கிக் கொண்டு வந்தனர். இவை அனைத்தும் சுபேதாரரின் வீட்டில் சேர்ந்து விற்பனையாகி வந்த பணம் அவரது பொக்கிஷத்தில் குவிந்து கொண்டே இருந்தது. யாரையாவது

வழியில் பார்த்தால் போதும், உடனே அவர்களை நிறுத்தி, "என்னய்யா கௌடா, நாளைக்கு நம்ம வீட்டில் திதி, காய்கறி, வாழை இலை, எவ்வளவு கிடைத்தாலும் கொண்டு வந்து கொடு", என்று சொல்வார். இப்படி வந்த காய்கறிகளெல்லாம் வீட்டில் எப்போதும் நிரம்பியிருக்கும். அவன் கிராமங் களுக்குப் போகும் போதெல்லாம் ஒன்றுக்குப் பத்து மடங்காய் தானியத்தை விவசாயிகளிடமிருந்து பெற்று வண்டியில் ஏற்றி வீட்டுக்கு அனுப்பினார். ஜவுளிக் கடையிலிருந்து தேவைப்பட்ட துணிகளை வரவழைத்து உப யோகித்தார். பணத்தைக் கேட்க அஞ்சிய வியாபாரிகள் வாய்மூடிக் கிடந தனர். கிராமங்களுக்குத் தனிமையில் செல்லும் போது பெண்கள் விவகா ரத்தில் நடந்து கொண்ட முறையானது சொல்லவும் கூச்சம் தருவது. தாலுகா ஆபீஸில் வேலை செய்கிற உத்தியோகஸ்தர்கள் பொது மக்களை மிரட்டிப் பறிக்கிற லஞ்சப்பணத்தை விட அவனுக்குக் கிடைக்கிற மேல் வருமானம் அதிகம் என்கிற காரணத்தால் அவனைப் பார்க்கும் போதெல்லாம் அரசு உத்தியோகஸ்தர்களுக்கு மனசுக்குள் துவேஷம் பெருகியது. இவ்வள வெல்லாம் நடந்திருந்த போதும் அரசரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன் அவன் என்கிற காரணத்தால் அவனை எதுவும் செய்ய இயலவில்லை. சகித்துக் கொள்ள முடியாத அளவுக்கு அவர்கள் மனசில் துக்கமும் எரிச்சலும் சாம்பல் பூத்த நெருப்பாக இருந்தது.

இப்பொறி பற்றி எழுந்து பெரு நெருப்பாக மாறும் ஒரு சமயமும் வாய்த்தது. அந்த பகுதியில் ஒக்கலிக சாதியில் உப்பலிகர் அல்லது மேல் சக்கரையர்கள் என்கிற ஒரு பிரிவும், தொறையா அல்லது பரிவாசத்தவர் என்கிற இன்னொரு பிரிவும் இருந்தன. இச்சாதியர்களின் திருமண முதலான சமயத்தில் நடைபெறும் தெரு, ஊர்வல முறைகளைக் குறித்து இவ்விரண்டு வகை ஆட்களிடமும் நிறைய கருத்து வேறுபாடுகளும் வாதவிவாதங்களும் வெகு நாள்களாகவே நடைபெற்றுகொண்டே இருந்தன. இப்படி இருக்கும் சந்தர்ப்பத்தில் பணவசதி மிக்க 'தொறையர்' பிரிவைச் சேர்ந்த ஒருவனின் குடும்பத்தில் அவனது மகனுக்குத் திருமணம் நடந்தது. அக்கம்பக்கத்தில் இருக்கிற எல்லா கிராமங்களில் இருந்தும் தொறையர்கள் அனைவரும் திருமணத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தனர். சிறிய மற்றும் பெரிய கிராமத்து அதிகாரிகளுக்கும் தனியேவிருந்து, வெகுமானம் முதலானவை வேண்டிய அளவு நடை பெற்றன. மணமக்கள் ஊர்வலத்துக்காக உத்தரவு கேட்டு அதிகாரியிடம் விண்ணப்பம் ஒன்று தரப்பட்டது. அன்றைய தினம் இரவே மத்தியஸ்தர்கள் அதிகாரியின் வீட்டில் ஒன்று கூடி அவர் மனைவி யிடம் நூறு வராகன்களை எண்ணிக் கொடுத்தார்கள். இதற்கு நடுவில் உப்பலிகர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு விஷயம் எட்டி விட்டது. அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்தார்கள். தொறையர்கள் ஒன்பதாம் பிரிவுக்காரர்கள், பல்லக்கு ஊர்வலம் எடுத்துக்

கொண்டு உப்பலிகர் பெரும்பான்மையாக இருக்கும் பதினெட்டாம் பிரிவைச் சேர்ந்தவர்கள். வசிக்கும் தெருவுக்குள் நுழைவது பழக்கத்தில் இல்லை. தொறையருக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று அந்த விண்ணப்பத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். ஊர்த்தகராறைப் பார்த்ததும் அதிகாரிக்கு ஏக சந்தோஷமாகியது. அன்று இரவு ஊர் மத்தியஸ்தர்கள் அதிகாரியின் வீட்டுக்கு வந்து சந்தித்தனர். மாடியில் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. அதிகாரியின் மனைவி பேச்சு வார்த்தையைக் கேட்டு மேலேறி வந்தாள். நூறு வராகன் கொடுப்பதாக உப்பலிகர் சமூகத்தினர் ஒப்புக் கொண்டார்கள்.

அதிகாரி: "அது எப்படி முடியும்? தொறையர் ஊர்வலம் போவது வழக்கமில்லை என்பதாலேயே உப்பலிகர் சேர்ந்து ஊர்வலத்தைத் தடுக்கிற காரியத்தைச் செய்வது சரியாகுமா?"

உப்பலிகர்: "அப்படியில்லை ஐயா, எப்போதெல்லாம் தொறையா ஊர்வலம் நடத்தினாலும் நாங்கள் தகராறு செய்துகொண்டே வந்திருக் கிறோம். தடுக்கிற விஷயமும் காலம் காலமாக நடந்து வருகிற ஒன்றுதான்".

அதிகாரி; "நீங்கள் தகராறு செய்வீர்கள் என்கிற சங்கதி தொறையருக்குத் தெரிந்திருந்தால் அவர்களும் கொடுத்திருக்கக்கூடும். உங்கள் தகராறு பற்றி அவர்கள் அறியமாட்டார்கள், அல்லவா. அதனால்தான் இன்னும் விண் ணப்பம் தரவில்லை. விண்ணப்பங்கள் கொடுக்கிற பழக்கம் இன்னும் உரு வாகவில்லை.

உப்பலிகர்: "தொறையர்களுக்கு விண்ணப்பம் கொடுக்கிற பழக்கம் உண்டா, இல்லையா என்பதல்ல பிரச்சனை, ஊர்வலம் எங்கள் தெருவில் போனதில்லை என்பதுதான் பிரச்சனை."

அதிகாரி: "இது சர்க்கார் விஷயம். சட்டம் என்ன சொல்கிறது தெரியுமா உங்களுக்கு?"

உப்பலிகா; "அதெல்லாம் எங்களுக்குத் தெரியாது ஐயா, அது எப்படியோ இருக்கட்டும், ஐயாதான் எங்கள் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். நூறு வராகன் தர நாங்கள் தயாராய் இருக்கிறோம்."

அதிகாரியின் மனைவி: "தொறையர்கள் நூற்றி இருபது வராகன் தர ஒத்துக் கொண்டுள்ளார்கள். நீங்கள் நூற்றி ஐம்பது வராகன் கொடுக்கிற பட்சத்தில் உங்களுக்கு அனுமதி கிடைத்துவிடும்."

உப்பலிகர்: "எங்களுக்கு அனுமதி தேவையில்லை தாயே, தொறையர் களுக்கு அனுமதி தரக்கூடாது. அதைத் தான் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். அதே நூற்றி இருபது வராகனை நாங்கள் தருகிறோம்."

அதிகாரி: "ஒரு அனுமதியின் மதிப்பைப் பற்றி எப்படித் தெரியும் உங்களுக்கு? சரி, உங்கள் விருப்பப்படியே ஆகட்டும்."

இப்படி பேச்சுவார்த்தை முடித்துக்கொண்டு உப்பலிகர்கள் எழுந்து

வெளியேறினர். அதற்குப் பிறகு புருஷனிடம் மனைவி, "நான் கேட்டது போலவே நூற்றி ஐம்பது வராகன் கொடுத்திருக்கக் கூடும். நடுவில் புகுந்து நீங்கள் சட்டென நூற்றி இருபதுக்கு ஒப்புக் கொண்டு விட்டீர்கள். ஒவ்வொரு விஷயமும் இப்படியே ஆனால், நான் அதுபற்றி என்ன சொல்ல?" என்று கோபத்துடன் சொல்லிவிட்டு சட்டென எழுந்து கொண்டாள்! அப்பொழுது புருஷன், "சரி, இருக்கட்டும் விடு. இன்னொரு முறை வரும்போது கறந்து விடலாம்," என்று மனைவியைச் சமாதானப்படுத்தினான்.

"வழக்கத்துக்கு விரோதமாகாத வகையில் நீங்கள் ஊர்வலத்தை நடத்திக் கொள்ளலாம்" என்று எழுதி அனுமதிக் கடிதத்தை தொறையர்களிடம் தரப் பட்டது. வருகிற பணத்தை எல்லாம் சுருட்டிக் கொள்வதில் மாரமண ராயருக்கிருந்த அளவு பிரக்ஞையும், புத்தி சாலித்தனமும் எழுத்து விவ காரத்தில் இல்லை என்பதால், மேற்கண்ட அனுமதிக் கடிதத்தை வடிவமைப் பதில் குமாஸ்தாக்களின் பங்கே அதிகமிருந்தது. இதன்பொருட்டு தொறைர் களைக் கரைத்து அவர்களிடம் தம்பால் நன்றியுணர்வைப் பெருக்க வைத்து, ஒவ்வொன்றுக்கும் பணமாகக் கறந்து கொண்டனர். குமாஸ்தாக்களின் தரத் துக்குத் தகுந்தபடியும், மற்ற அலுவலர்களுக்கும் தங்கக்காசுகளும், வெள்ளி நாணயங்களும் தரப் பட்டன.

ஒற்றர்கள் மூலமாக நடந்த உள்விவகாரத்தையெல்லாம் அறிந்து கொண் டார்கள், உப்பலிகர்கள். தொறையர்கள் ஊர்வலம் புறப்படுகிற பட்சத்தில் அதைத் தடுத்து நிறுத்தும் வகையில் முன் ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து கொண்டனர். இரவு கவிந்த பிற்பாடு யாரும் அறியாத வகையில் காட்டில் சேர்ந்து அடுத்து என்னென்ன செய்ய வேண்டும் என்று காரியங்களைத் திட்டமிட்டனர்.

சுபேதாரரின் செல்வாக்கினால் தன் விருப்பம் நிறைவேறியது என்கிற மன நிறைவோடு திருமண ஊர்வலத் திற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர் தொறை யர்கள். சாமராஜநகரத்திலிருக்கும் எல்லாக் கோயில் களுக்கும் சென்று பழம், பூ, காய் வைத்துப் படைத்தபிறகு முக்கிய ராஜவீதி களில் எல்லாம் ஊர்வலத்தை முடிததுக் கொண்டு இரவு பன்னிரண்டு மணியளவில் வீட்டை அடைந்து மணமக்களுக்கு திருஷ்டி கழித்தபிறகு ஆரத்தி எடுக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள். இவர்களுக்கு எதுதான் அசாத்தியம்? சுபேதாரர் பக்க பலமாக உள்ளார், மற்ற உத்தி யோகஸ்தர்களும் கைக்குள் இருக்கிறார்கள், என்னும் போது எதுதான் அசாத்தியம்?

சுபேதாரர் வீட்டில்தான் இருந்தார். ஊர்வலத்தை எந்த அசம்பாவிதமு மின்றி நடத்திச் செல்லும் பொருட்டு காவலதிகாரி தம் துணை ஆட்களுடன் குதிரையேறிச் சென்றார். அக்கம்பக்கத்தில் உள்ள தொறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் அன்றைய தினம் சாமராஜ நகரில் நிறைந்து வழிந்தனர். முதலில் கொம்பு ஊதிச் செல்பவர்கள், அதற்குபின் வரிசையில்

தப்பட்டையுடன் பேரிகை முழக்குகிறவர்கள், அதற்குப் பின் விதம்விதமாக விலைமதிப்பற்ற ஆடைகளை உடுத்தி நடக்கிற ஆண்கள், அதற்குப் பின்பு காவல் படை சூழ குதிரைமேல் உட்கார்ந்து வருகிற காவல் தலைவன் காலார்கான்சாப், அதற்குப்பின் மணமக்கள் உட்கார்ந்திருக்கும் பூப்பல்லக்கு, அதற்குப்பின் வகைவகை யான ஆபரணங்களுடனும் அலங்காரத்துடனும், விதம்விதமான புடவையணிந்து பழங்கள், தேங்காய்கள் ஆகிய வரிசைத் தட்டுகளை எடுத்துக் கொண்டு நடக்கிற தொறையர் சமூகப் பெண்கள், அதற்குப் பின் சாதாரண ஆடைகளுடனும் கம்பளிப் போர்வைகளுடனும் நடந்து வரும் ஆண்கள் நிறைந்த வரிசை. அனைத்தும் ஒன்று சேர்ந்து புறப் பட்டபோது பூவின் மணம், விளக்கெண்ணெய், மணம், வெங்காயமும் பூண்டும் கலந்தது போன்று குமட்டும் மணம் அனைத்தையும் மூடி மறைத்து விடும் வேர்வை மணம், எல்லாம் சேர்ந்து கலவையாய் வீச மெல்ல மெல்ல நகர்ந்தது ஊர்வலம்.

சுபேதாரரின் வீட்டைத் தாண்டி ஊர்வலம் ஊருக்குள் போகத் தொடங் கியது. அப்போது கூட்டத்தில் பத்து இருபது கற்கள் வந்து விழுந்தன. அனை வரையும் அச்சம் கவ்வியது. கல் வந்த திசையைக் கண்டுபிடிக்கும் பொருட்டு காவல்காரர்கள் ஓடினார்கள். அதே தருணத்தில் கல் மழையே பெய்யத் தொடங்கிய மாதிரி சரமாரியாய் கற்கள் பறந்து வந்து விழுந்தன. நடுநடுவே செருப்புகளும் வந்து விழுந்தன. திடீரென்று நான்கு திசைகளில் இருந்தும் தடிகள் தூக்கிய கும்பல் நுழைந்தது. படைத்தலைவனின் குதிரைக்கு பலமான அடிகள் விழுந்து கால் முறிந்தது. காலார்கான்சாப் கீழே விழுந்து விட்டார். உடனடியாய் நடந்த அடியாட்களின் தாக்குதலால் அவர் கால் முறிந்தது. கும்பலில் யாரோ ஒருவன் இவரைக் காலைப்பிடித்து இழுத்து சாக்கடை யோரம் தள்ளினான். அவர் நினைவிழந்து போனார். காவலுக்கு வந்த ஆள்களில் பாதிப்பேர் தொறையர், பாதிப்பேர் உப்பலிகர். கலவரம் ஆரம் பித்ததும் இவர்கள் தத்தம் சமூகத்தைச் சேர்ந்த கும்பலுடன் சேர்ந்து கொண் டனர். காவல்காக்க வந்தவர்களே கொல்கிறவர்களானார்கள். தொறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு பலத்த அடிகள் விழுந்தன. சிலர் இறந்தனர். மேலும் சிலர் பிரக்ஞை தப்பி விழுந்தனர். மணமக்கள் என்ன ஆனார்கள் என்று தெரிய வில்லை. சிறிது நேரத்துக்குள் கடை வாசல்களை அடைத்தனர். மக்கள் அனைவரும் வீட்டுக்குள் சேர்ந்து கத வுகளை மூடிக் கொண்டனர். இந்த கலவரத்தைக் கேட்டு வீட்டிலேயே இருந்த சுபேதார் தெருக்கதவைத் தாண்டித் திண் ணைக்கு வந்தார். பலம் பொருந்திய உப்பலிகரின் குழு ஒன்று வீட்டுக்கு முன் நின்று, "ஏன் ஐயா, தொறையர்களுக்கு எப்படி நீங்கள் அனுமதிக் கடிதத்தைக் கொடுத்தீர்கள்?" என்று கூச்சலிட்டனர். அப்போது அழுத்தமான குரலில், "அரசாங்கம் போட்ட பாதை, விருப்பப்பட்டவர்கள் போகலாம், விருப்பப்பட்டவர்கள் வரலாம், நீங்கள் யார் தடை சொல்ல என்று அவர்

அவர்களைப் பிடித்து இருட்டறைக்குள் அடைக்கும்படி உத்தரவிட்டார்." அப்போது உப்பலிகர், "நாங்களே செல்கிறோம். எங்களை யாரும் பிடித்திழுத்துச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை? நடப்பது நடக்கட்டும் என்று ரோஷத்துடன் பேசியபிறகு எல்லாரும் இருட்டறைக்குள் நுழைந்தனர். இருட்டறை, கொசுக்கள் மண்டிய சிறை, நிலவறை எல்லா இடங்களுக்கும் தாமாகவே முன் வந்து உப்பலிகர்கள் நுழைந்தனர். தாலுக்கா ஆபீஸ்கள் நிரம்பி வழிந்தன. மேலும் மேலும் ஜனங்கள் அடைபட்டுக் கொண்டே இருந்தனர். ஆபீஸ் முன் வாசலை மூடிப் பூட்டினர். இன்னும் எஞ்சியிருந்த உப்பலிகர்கள் சுபேதாரர் வீட்டை மீண்டும் முற்றுகை யிட்டனர். பயந்து நடுங்கிய சுபேதாரர் வீட்டின் கதவு, ஜன்னல்கள் அனைத்தையும் மூடிக்கொண்டு மாடியின்மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார். வெளியே நின்ற கூட்டம் வெளியே நின்ற வண்ணம் கல், செங்கல் துண்டுகள், பழைய செருப்புகள் ஆகியவற்றை மாடியை நோக்கி எறிந் தனர். கூட்டை விட்டு வெளியேறிய பறவைகள் அங்குமிங்கும் பறந்து தவிக்கிற மாதிரி செருப்புகள் மாறிமாறிப் பறந்தன. மாடிச் சன்னல் உடைந்து, அதன் வழியாக கற்கள், சாணி உருண்டைகள், அழுகிய பதார்த்தங்கள் ஆகியவை அதிகாரியின் அருகில் வந்து விழுந்தன. உப்பலிகர் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் வாசலுக்கு வந்து நின்று வாய்க்கு வந்தபடி ஏசினர். உடுத்துக் கொண்டிருந்த புடவைக் கரையைக் கையில் பிடித்து கையை மேலும் கீழுமாக ஆட்டியசைத்து மிகவும் ஆபாசமாக நடந்து கொண்டனர். ஊரே நடுங்கியது. மூன்று நாட்களுக்கு இந்த பதட்டம் நீடித்தது. யாரும் கதவைத் திறக்கவில்லை. கடைசியில் மைசூரிலிருந்து சிறப்புக் காவலர்கள் வந்து கலவரத்தை ஒரு வழியாய்க் கட்டுப்படுத்தினர். அரசாங்க உத்யோகஸ்தர்களின் அவிவேகத்தாலும், பேராசையாலும், இப்படிப் பட்ட கலவரம் நடந்ததென்றும் முகத்திற்கு நேராகவே பார்க்கிற ஆட்களெல்லாம் பேசிக் கொள்கிற அளவுக்கு அதிகாரிகளின் நிலமை தாழ்ந்து போயிற்று. எப்படியும், தாலுகா அதிகாரியின் தலை உருளக்கூடும் என்று பேசிக் கொண்டார்கள்.

இந்தக் கலவரத்தைப் பற்றிய விவரங்கள் கிருஷ்ணராஜ உடையார் அவர்களுக்கும் தெரிந்தது. ஏற்கனவெ அரசனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஆள் என்கிற காரணத்தால் அருகில் இருந்த மற்ற அதிகாரிகள், சுபேதாரரின் மேல் எந்தத் தவறுமில்லை என்று அறிவித்தார்கள். "ரமணய்யா எதுவும் அறியாத அப்பாவி அல்லவா. இந்தக் கலவரத்துக்கு அவன் காரணமாக இருக்க முடியாது. யாரோ சில போக்கிரிகளின் காரியமாகத் தான் இது இருக்க வேண்டும்," என்று விஷயம் பேசி முடிக்கப்பட்டது. அரண்மனைக்குள் வேலை செய்கிற ஆட்கள் சிலர் மூலம் இவ்விஷயம் காதுக்கு எட்டியது. அப்போதிருந்து மாரமணமராயரின் குறுக்குப் புத்தி அதிகரித்துக் கொண்டே இருந்தது. இன்னும் வேறு வேறு செயல்களில் அவரின் கோணல் நடத்தை வெளிப்பட்டது. இதன் பலன் போகப் போகத் தெரியும்.

4

தாயார் பார்வதம்மாவோடும், மகன் மகாதேவனோடும், சஞ்ச வாடியில் குடி யேறினான். சதாசிவதீட்சிதன். அங்கே மாமனார் நீலகண்ட ஜோசியனின் சொத்துக்களை நல்ல முறையில் நிர்வாகம் செய்து கொண்டு கௌரவமாய் வாழ்ந் தான். பொதுவாக உலகில் காணப்படும் மாற்றாந்தாய் மனப்பான்மை எதுவும் தீட்சிதனின் மனைவியிடத்தில் இல்லை. சிறுவன் மகாதேவனும் சிவந்த நிறத்தில் மிக அழகானவன். அங்கலட்சணம் மிக்கவன். முக அழகு கொண்டவன். நீளமான குடுமி வளர்த்திருந்தான். எப்போதும் அமைதியுடன் காணப்பட்டான். பார்ப்பவர்கள் எல்லாம் புத்திசாலி என்றும் எதிர்காலத்தில் சீரும் சிறப்புமாய் வாழும் வாய்ப்புள்ளவன் என்றும் சொன்னார்கள். பார்க் கிறவர் யாரையும் இன்னொருதரம் பார்க்கத் தூண்டும் முக தேஜஸ் கொண்ட வனாய் இருந்தான் மகாதேவன். குண நலன்களும் அவ்வண்ணமே இருந்தன. பெரியவர்கள் வார்த்தைகளுக்குப் பணிதல், சாப்பாட்டு விஷயத்தில் கொடுக் கப்படும் அளவோடு திருப்தி கொள்ளுதல், அழுது அடம்பிடிக்காமை, வேண்டாம் என்கிற விஷயத்தை விட்டுவிடுவது ஆகிய குணங்கள் இளமை யிலேயே மகாதேவனிடத்தில் இருந்தன. அவனைத் தூக்குவதும் கொஞ்சு வதும் அவனோடு விளையாடுவதும், உணவு கொடுப்பதும் தன் தினசரிக் கடமைகளாகும் என்று எண்ணி, அதன் படியே செய்து வந்தாள் திம்மம்மா. அவன் அழ நேரும் தருணங்களில், சமாதானப்படுத்தி, அழுகையை நிறுத்தும் வரைக்கும் அவள் நெஞ்சில் ஒரே பதட்டமிருக்கும். சிறுவர்கள் ஒருவரை யொருவர் கண்டு வளர்த்துக் கொள்ளும் பிரியத்துக்கும் அழகும், குண நலன்களும் கொண்டுள்ள குழந்தைகள் மேல் உருவாகும் அபிமானத்துக்கும் உறவின் மூலம் பிறக்கும் பாசத்துக்கும் காரணங்கள் உண்டு. குழந்தைக்குக் கொடுக்காமல் எதையும் தின்பதில்லை, திம்மம்மா. குழந்தை சாப்பிட்டு முடிக்கும் வரைக்கும் அவளும் எதுவும் சாப்பிடுவதில்லை. 'கொஞ்சுவதற்கு பிள்ளைகள், பூஜிப்பதற்கு கடவுள், சந்தோஷமாய் இருப்பதற்கு புருஷன், நல்ல படி நடத்திச் செல்ல குடும்பம் என்ற வார்த்தைக்குத் தகுந்தபடி அந்த சிறு வனின் மேல் திம்மம்மாவுக்கு அளவு கடந்த பிரியம் இருந்தது. "சின்னம்மா, சின்னம்மா" என்று எந்த நேரமும் அவள் இடுப்பைவிட்டு இறங்காமல் பிரியத் துடன் ஒட்டிக் கொண்டான் சிறுவன்.

கல்வி கற்க ஆரம்பித்தான், மகாதேவன். அந்த ஊரிலேயே நாரப்பய்யா என்கிற பிராமணரொருவர் ஒரு மடம் வைத்திருந்தார். அந்த மடத்தில்தான் மகாதேவன் சேர்ந்தான். நாரப்பய்யா மகாராஷ்டிர மொழியையும் அறிந் தவர். இப்போது ஆங்கில மொழி எப்படியோ, அந்த அளவுக்கு மகாராஷ்டிர மொழியும், ஹிந்தி என்கிற மொழியும் அரசாங்க மொழிகளாகக் கருதப்பட்டு வந்தன. அரசாங்க மட்டத்தில் நடைபெற்று வந்த கடிதப் போக்குவரத்து எல்லாம் ஹிந்தி மொழியிலேயே நடந்தன. ஹிந்தி மொழி அறிவு மிக்க வர்களுக்கு மட்டுமே பெருமளவில் அரசாங்க வேலைகள் கிடைத்து வந்தன. பூனா சமஸ்தானத்தில் நிலையான ஆட்சி செய்த பாஜிராயர் அவர்கள் அநேக பகுதிகளை வென்று கைவசப்படுத்தி அங்கெல்லாம் தன் படைகளை நிறுத்தி தமது அரசாங்கத்தை நிலைநாட்டிக் கொண்டிருந்தார். பெரிய நவாப் என்று பெயர் பெற்ற ஹைதர் அலி மராத்திய தேசத்தின் சில எல்லைப் பகுதிகளை வென்று மைசூர் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டான். மராத்தியர் களிடையே அறிவுத்திறம் மிக்கவர்களையே அப்பகுதியில் குமாஸ்தாக்களாய் பணியாற்றத் தேர்ந்தெடுத்தான். அவர்கள் அரசாங்கக் கடிதப் போக்குவரத்து மற்றும் கோப்புகளில் ஹிந்தி மொழியையே பயன்படுத்தினர். திப்பு சுல்தான் காலத்திலும், கிருஷ்ணராஜ உடையாரின் காலத்திலும் இம்மொழியின் பயன் பாடு மேலும் மேலும் வளர்ந்தது. இதனாலேயே இது அரசாங்கமொழி என்னும் பெருமையை அடைந்தது. இம்மொழியைக் கற்பிப்பவர்கள் 'பந்தோஜி' என்று அழைக்கப்பட்டார்கள். கன்னட மொழி ஆசிரியர்களைக் காட்டிலும் இம்மொழி ஆசிரியர்களுக்கு கௌரவம் அதிகம். கற்றுக்கொள்ள விரும்பும் மாணவர்களும் இத்தகு ஆசிரியர்களையே பெரும்பாலும் நாடிச் சென்றார்கள். பந்தோஜிகளின் வருமானமும் மிக அதிகம். அவர்கள் சொல்லிக் கொடுத்த மடங்களே பாடசாலையாயிற்று. அங்கேயே பிராமண சிறுவர்களுக்கும், மற்றவர்களுக்கும், நண்பகல் உணவு ஒன்றாகப் பரிமாறப் பட்டது. இரவில் பூசைக்குப் பிறகு உண்டை, முறுக்கு ஆகிய பலகாரங்கள் கொடுக்கப்பட்டன. காலை, மாலை இரண்டு வேளைகளிலும் தவறாமல் மடத் துக்குச் சென்று ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களைக் கற்று வந்தான், மகா தேவன். முதலில் உதை, அப்புறம் பாடம் என்கிற எண்ணத்துடன் எந்த நேரமும் மாணவர்களை அடித்துப் பயமுறுத்திப் பாடங்களைச் சொல்லித் தந்த அவரிடம் மகாதேவனும் எப்போதாவது அடிபடுவதுண்டு.

அடிபடும் போது மகாதேவனின் கண்களில் கண்ணீர் தளும்பும். பிற மாணவர்கள் அடிபடும்போது அவர்களின் வேதனையைக் காணச் சகிக் காமல் அழுதே விடுவான். அப்போது அவனைச் சமாதானம் செய்வது ரொம்பக் கஷ்டம். ஒருமுறை சதாசிவ தீட்சிதன், மகனை அழைத்துக் கேட்டான்.

சதாசிவ தீட்சிதன்: "மடத்துக்குப் போலையா மகாதேவா?"

மகாதேவன்: "அவர் அடிக்கிறார், அப்பா"

சதாசிவ தீட்சிதன்: "உன்னை அடித்தாரா? எப்பொழுது, ஏன்?"

மகாதேவன்: "என்னை அடித்தாலும் பரவாயில்லை அப்பா, எல்லாரையும் அடிக்கிறார். அவர்கள் அழுவதைப் பார்க்கும்போது மனசு சங்கடமாயிருக்கிறது. எனக்கும் கண்களில் அழுகைவருகிறது.

சதாசிவதீட்சிதன்: "தப்பு செய்தா அடிக்கத்தானே செய்வாங்க"?

மகாதேவன்: "பாடம் சொன்னாலும் அடி, சொல்லாம போனாலும் அடி. ஏதாச்சும் துஷ்டத்தனம் செஞ்சாலும் அடி, செய்யாதவனுக்கும் அடி".

சதாசிவதீட்சிதன்: "அது எப்படி?"

மகாதேவன்: எப்படின்னு சொல்றேன் கேளுங்கப்பா. ஏதாச்சிம் பாடம் புரியலைன்னு போய்க் கேட்டால் போதும், கேட்ட பையன்களைச் சக்கையாய் அடிச்சிடுவார். கேட்கிற பாடத்தைச் சொல்லித்தரமாட்டார். வகுப்புல யாரோ ஒருவன் சத்தம் போட்டா, ஒடனே எழுந்து வந்து எவன் கைக்கு கிடைக்கறானோ அவன வசமா இழுத்து அடி அடின்னு அடிச்சிடுவார். அவன்மேல எந்தத் தப்பும் இல்லாம இருந்தாலும் சரி, அடிச்சிடுவார்."

சதாசிவதீட்சிதன்: "நான் இல்லைன்னு அந்த பையன் சொல்லணும்"

மகாதேவன்: "அப்படி ஏதாச்சும் சொல்லிட்டா அவன் கத அதோட முடிஞ்சிடும். பிரம்பு முறிஞ்சி போகற மாதிரி அடிச்சிடுவார். அது போதாதுன்னு கைமுட்டியாலியே தலையிலே ஓங்கி ஓங்கி அடிப்பார். ரோஷம் தாங்காதவர் மாதிரி போய் போய் வந்து தலையிலேயும் முதுகிலேயும் சாத்து சாத்துன்னு சாத்துவார். இரண்டு காதயும் புடிச்சி அப்படியே அந்தரத்துல தூக்குவார். சுவர்ல சாய்ச்சி நாற்காலி போடறது வேற. ஐயோ, அந்தக் கொடுமைய கண்ணால பாக்க முடியாது அப்பா."

சதாசிவதீட்சிதன்: "இவ்வளவுதானே."

மகாதேவன்: இன்னும் சொல்றேன். கேளுங்க அப்பா. மத்தியானம் நேரா வருவார். அவர் உட்காருகிற மேடை மேல சின்ன பாய் இருக்கும். அதன்மேல உட்காருவார். உட்கார்ந்த உடனே தூங்கித் தூங்கி விழுவார். தலை ஆடும். அப்பறம் கொர் கொர்ன்னு குறட்டை சத்தம். அப்போ பையன்ங்க எல்லாம் குசுகுசுன்னு பேசிட்டிருப்பாங்க, எங்க கூட சித்தன்னு ஒரு பையன் இருக்கான். காலையில ஒரு காசுக்கு மூக்குப் பொடி, மத்தியானமா வெத்தல பாக்குன்னு தெனமும் கொண்டு வந்து அவருக்குக் கொடுப்பான். அதனால அந்தப் பையன் எந்தக் குறும்பு செஞ்சாலும் அடிக்க மாட்டார். மத்தப் பையனுங்க எல்லாம் அவனுக்கு தின்ன ஏதாச்சிம் கொண்டு வந்து கொடுத்துட்டே இருக்கணும். இல்லன்னா அவனுங்க மேல ஏதாச்சிம் கோள் சொல்லிடுவான். எந்தப் பையனயாவது புடிச்சி இவனே அடிச்சிருவான். அப்பறமா அவன் தான் இவன அடிச்ச மாதிரி பெரிசா புகார் சொல்வான். இந்த மாதிரி நெறய துஷ்டத்தனம் செய்வான் அவன். 'அவன் என்ன திட்டறான்', அவன் என்மேல

துப்பறான்'னு சும்மாவாச்சும் சத்தம் போட்டு கூவுவான். சத்தத்துல அவருக்குத் தூக்கம் கலைஞ்சிடும். தூக்கக் கலக்கத்திலேயே எழுந்து பிரம்பு எடுத்து எல்லாரயும் சாத்து சாத்துன்னு சாத்திடுவார். ஆனா சித்தன மட்டும் அடிக்க 'மாட்டார். எவன் கோள் சொல் றானோ அவனுக்கு அடி கெடையாது. ஆனா மத்தவங்களுக்கு அடி, உதை".

சதாசிவதீட்சிதன்: "ஒன்னயும் அப்படித்தான் அடிச்சாரா?"

மகாதேவன்: "தெனமும் அடிப்பார். 'காலையில எழுந்ததும் பூனை மொகத்துல முழிக்காதே. வாத்தியார் அடிப் பார்'ன்னு பாட்டிதான் சொல்லும். பூனை மொகத்துல நான் முழிக்கறதே கெடையாது. ஆனாலும் தெனமும் அங்க அடி வாங்கறன். முந்தாநாள் காலையிலே நான்தான் முதல்ல மடத்துக்குப் போனேன். அதுக்கப்பறம்தான் எல்லா பையன்களும் வந்தாங்க. நான் அவல் கடலை கொடுக்கலைன்னு சித்தனுக்கு கோபம். அதனால 'மகாதேவனுக்கு பதினஞ்சி'ன்னு சத்தம் போட்டான். ஒடனே வாத்தியார் எழுந்து வந்து என்ன ஏதுன்னு எதுவுமே கேக்காம செமத்தியா பதினஞ்சி அடி அடிச்சார். கையால அள்ளி சாப்படக் கூட முடியல. அப்படி வீங்கிப் போச்சு".

சதாசிவதீட்சிதன்: "சரிசரி. அப்படியெல்லாம அடிக்க வேணாம்ன்னு நான் சொல்லி வைக்கிறேன். சும்மா இரு"

மகாதேவன்: "நாளையிலேர்ந்து வீட்டிலயே நான் படிக்கிறேன். பாடங்களெல்லாம் படிச்சி ஒங்கிட்டயே ஒப்பிக்கறேன்"

சதாசிவதீட்சிதன்: "அப்படியெல்லாம் செய்யக் கூடாது. மடத்துக்குப் போகணும், மகாதேவா"

மகாதேவன்: "அங்க போனா எனக்கு அழுகை அழுகையா வருது. என்ன அடிச்சாலும் அடிச்சிட்டு போவட்டும். என்னவிட சின்ன புள்ளைங்கள யெல்லாம் அடிச்சி இம்சைப்படுத்தறார். தப்பு இருந்தாலும் சரி, இல்லாமப் போனாலும் சரி, அப்படியே கழுத்த புடிச்சி மேல தூக்கி கால் மேல அடிக் கறார். தொடையில புடிச்சி கிள்ளுற கிள்ளுல சதையே கைல வந்துடும். சுவர்ல சாய வச்சி நாற்காலி போடச் சொல்லுவார். உட்கார்ந்ததும் மடியில பலகை, கருங்கல், செங்கல் எது கெடைச்சாலும் அத எடுத்து வந்து வச்சிருவார். ஐயோ, அந்த பையனுங்க அழுவறத பாத்ததும் எனக்கும் கண் கலங்கி அழுகை வந்துடுது. நான் அழுவறத பாத்ததும்; 'நீ எதுக்குடா அழுவற'ன்னு வாத்தியார் என்னயும் பெறம்பால ரெண்டு அடி செமத்தியா அடிச்சிருவார். வாய்க்கு வந்த மாதிரி கன்னாபின்னான்னு ஏசுவார்."

சதாசிவதீட்சிதன்: 'நானே அவர நேர்ல பாத்து அடிக்க வேண்டாம்ன்னு சொல்லி வைக்கறன். இன்னைக்கு நீ மடத்துக்குப் போய்வா."

இவ்விதமாகத் தந்தையும், மகனும் பேசிக் கொண்டிருக்கும் போது மடத்திலிருந்து இரண்டு சிறுவர்கள் வந்தார் கள். "மகாதேவா, மடத்துக்கு ஏன் வரலை? போய்க் கூப்பிட்டுட்டுவான்னு சொல்லி அனுப்பினார் வாத்தியார்.

உனக்கு இருக்கு வா" என்றார்கள். அழுகையும் தேம்பலும் பெருகியவனாகத் தந்தையின் முகத்தையே பார்த்தபடி நின்றிருந்தான் மகாதேவன். அதைக் கண்ட சதாசிவ தீட்சிதன், "ஐயோ, இந்த வாத்தியார் ஏன் புள்ளைங்களை இப்படி அடிச்சி மெரட்டரார்ன்னே புரியலை. அடிச்சிட்டா படிப்பு வந்துடுமா? கொஞ்சநஞ்சம் மனசுல இருக்கறதும் மறந்து போகும்' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டான். மடத்திலிருந்து வந்திருந்த சிறுவர்களைப் பார்த்து, "நம்ம மகாதேவன் அடிக்க வேணாம்ன்னு வாத்தியார்ட்ட சொல்லுங்க. நான் சொன்னன்னு சொல்லுங்க" என்று சொல்லிவிட்டு மகாதேவனை அவர்களுடன் அனுப்பி வைத்தார்.

நீளமான பிரம்பொன்றைக் கையில் பிடித்தபடி மடத்தின் வாசலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தார் பந்தோஜி. சிறுவர்களுடன் மகாதேவன் வருவதைப் பார்த்துவிட்டு, இழுத்துட்டு வாங்கடா அவன. இத்தன நேரம் கழிச்சா வர்றது?" என்று சீறினார். மனசுக்கு வந்தபடி பிரம்பால மகாதேவனை அடித்தார். "சாவடிச்சி மடத்துலேயே பொதைச்சிடுவன். உஷார்" என்றார். அப்போது மகாதேவனை அழைத்து வந்த சிறுவர்கள். "மகாதேவனுடைய அப்பா ஒங்ககிட்ட சொல்லணும்ன்னு ஒரு விஷயம் சொன்னார். அடிக்க வேணாம்ன்னு சொல்லச் சொன்னார்," என்றார்கள். அதைக் கேட்ட ஆசிரியருக்கு இன்னும் கொஞ்சம் கோபம் கூடியது. "சிபாரிசு புடிச்சாந்திருக்கியா சிபாரிசு," என்று சொன்னபடி மகாதேவனுக்கு இன்னும் இரண்டு அடிகள் கொடுத்தார். அடி தாளாமல் வலியில் துடிக்கும் மகாதேவனைப் பார்த்த மற்ற சிறுவர்கள், "ஒரு நல்ல பையனை அநியாயமா போட்டு அடிக்கறாரே" என்று நினைத்தார்கள். அழும் அவன் முகத்தைக் காணப் பொறுக்கவில்லை அவர்களுக்கு. தமக்கு அழுகை முட்டிக் கொண்டு வர வருத்தப்பட்டார்கள். பரிதாபத்துடன் தமக்குள்ளேயே எதையோ ரகசியமாய்ப் பேசிக் கொண்டனர்.

அன்றைய தினம் முழுவதும் ஆசிரியரின் கோபம் குறையவே இல்லை மாலையில் பலகையில் எழுதும் சிறுவர்களுக்கு கை விரல் கணுக்களின் மேலேயே அடிகள் விழுந்தன. தாளில் எழுதிப்பழகும் சற்றே பெரிய சிறுவர்களுக்கு எண்ணியெண்ணிப் பிரம்படிகள் விழுந்தன. மண்ணில் எழுதிப் பழகும் இளஞ்சிறுவர்களுக்கும் முதுகில் அடிகள் விழுந்தன. எல்லா தரப்புச் சிறுவர்களும் அன்றைய தினம் அடி வாங்க நேர்ந்தது. அடிபட்ட இடங்கள் உடம்பெங்கும் தடித்து வீங்கின.

மாலை வகுப்புகள் முடியும் நேரம். வழக்கம்போல புத்தகம் வாசிக்கும் சிறுவர்கள் ஒவ்வொருவரும் தலைக்கு ஒரு துட்டு என்கிற அளவிலும், பலகையில் எழுதிப் பழகுபவர்கள் தலைக்கு மூன்று காசு என்கிற அளவிலும், மண்ணில் எழுதிப் பழகுகிற சிறுவர்கள் இரண்டு காசு என்கிற அளவிலும் ஆசிரியரிடம் கொடுத்துவிட்டு சாரதா பூஜை செய்தார்கள். பணத்தைப்

பார்த்ததும் குளிர்ந்து சந்தோஷம் கொண்டார் ஆசிரியர். அச்சமயத்தில் சிறுவர்கள் எல்லாரும் சேர்ந்து, "நாளையிலிருந்து மூன்று நாட்கள் விடுப்பு வருகிறது. மடத்தில் குப்பை கூளங்கள் அதிகமாய் உள்ளது. எல்லாவற்றையும் சுத்தப்படுத்தித் துப்புரவாக்கி வைக்கிறோம்" என்று சொன்னார்கள். "அப்படியே ஆகட்டும்" என்று ஒப்புதல் கொடுத்துவிட்டு வீட்டுக்குச் சென்றார் ஆசிரியர்.

அழகான உருவம் கொண்டவனும், நல்ல புத்திமானும் குணத்தில் சாத்வீக மானவனும், பழக இனிமையானவனுமான மகாதேவன் அடிபட்ட சம்பவமே மடத்துக்கு வெளியேயும், சிறுவர்களின் வீட்டிலேயும், பேச்சாய் இருந்தது. மற்ற சிறுவர்களுக்கு வேறு வேறு சந்தர்ப்பங்களில் விழுந்த அடிகளும் அவர்கள் அழுது துடித்ததும் கூட இத்தருணத்தில் ஞாபகம் வந்தது. அவர்களில் ஏறத்தாழ பதினெட்டு வயது மதிக்கத்தக்க பசவன் என்கிற பையன் இருந்தான். மடத் துக்கே வராமல் அடிக்கடி தப்பிச் சென்று விடுகிற காரணத்தால் அவனது காலில் பெரிய சங்கிலியொன்றைக் கட்டி அதன் இன்னொரு முனையை நடப்பட்டிருந்த முளைக் குச்சியில் இழுத்துக் கட்டி இருப்பார்கள். அவனைப் பார்த்ததும் மற்ற சிறுவர்கள் அஞ்சினார்கள். ஆசிரியர் வழங்கும் விதம் விதமான தண்டனைகளை அனுபவித்து, அனுபவித்து அவன் உடம்பே மரத்துப்போயிருந்தது. அவன் மற்ற சிறுவர்களைப் பார்த்து, "இந்த சங்கி லியை உடைத்து எப்படியாவது என்னை விடுவியுங்கள். பாழாய்ப் போன அந்த வாத்தியாரால் யாருக்கும் எந்தத் துன்பமும் நேராதபடிக்கு ஒரு வழி சொல்கிறேன்", என்றான். உடனே மூத்த சிறுவர் கள் இதற்கு ஒத்துக் கொண்டார்கள். பந்தாடுகிற மாதிரி தந்திரமாய் வெளியேறி ஏகப்பட்ட முயற்சிகள் செய்து பசவனின் காலில் கட்டப்பட்டிருந்த சங்கிலியை முறித் தார்கள். சங்கிலி உடைபட விடுபட்டெழுந்தான் பசவன். அவனையே தலை வனாய் வரித்துக் கொண்டார்கள். எல்லாரும் மடத்தில் சேர்ந்திருந்த குப்பை, கூளங்களை அகற்றி ஒட்டடை அடித்து சுத்தப்படுத்தினர். கோலம் போட்டனர். ஆசிரியர் உட்கார் வதற்காக சற்றே உயரமான ஒரு மேடை இருந்தது. அகல மாகவும், சதுர வடிவத்திலும் இருந்தது அது. மூக்குப் பொடிக்கறையைத் தடவித் தடவி பக்கதிலிருந்த சுவர் கருப்பாகியிருந்தது. ஆசிரியர் உட்காரும் பாய்க்குப் பக்கத்திலும் சளி சிந்திப் போட்ட கறைகள். பழைய பாய்க்கு பதிலாக புதிய பாயை விரித்தனர் சிறுவர்கள். கறைபட்ட சுவருக்கு வெள்ளையடித்துத் தூய்மையாக்கினர்.

அடிபட்டதில் உடம்பெல்லாம் வீங்கி ரத்தம் கட்டிக் கொண்டது. மகா தேவனுக்கு. தேம்பித் தேம்பி அழுதபடியே அன்றைய தினம் வீட்டுக்குத் திரும் பினான் அவன். அவனது நிலைமையைக் கண்டு பாட்டியான பார்வத்தம் மாளுக்கும் அழுகை முட்டிக் கொண்டு வந்தது. சின்னஞ் சிறு வயதிலிருந்தே அவனைத் தூக்கி வைத்துக் கொண்டும், சீராட்டித் தாலாட்டிக் கொண்டிருந்த

வளுமான திம்மம்மாவுக்கும் துக்கம் பெருகியது. தாயற்ற குழந்தையை வளர்த்து சீராட்டிப் பெரியவர்களாக்கியவர்களுக்கு அழகும் குணமுமுள்ள அவன்மீது அதிகமான வாத்ஸல்யம் ஏற்படுவது என்பது உலக அனுபவ வார்த்தையாகும். அத்தருணத்தில் வெளியே சென்றிருந்த சதாசிவதீட்சிதன் வீட்டுக்கு வந்தான். மகாதேவனின் அழுத கோலத்தையும், இடிந்து போய் துக்கமுடன் உட்கார்ந் திருக்கும தாயையும் மனைவியையும் பார்த்துக் கலங்கினான். மெல்ல மகா தேவனின் அருகில் சென்று அவன் காயங்களைப் பார்வையிட்டான். அவ னுக்கும் வருத்தமாயிருந்தது. மகனை முன்வைத்துக் கொண்டு எதைப் பேசி னாலும் அது ஆசிரியரின் கௌரவத்துக்கு இழுக்காகும் என்றும், அது சிறுவனின் மனசில் அலட்சியம் உண்டாகக் காரணமாகக் கூடும் என்றும், அதற்கப்புறம் ஆசிரியர் சொல்லித் தரும் பாடங்களைக் கேட்கிற பொறு மையும் கவனமும் பாழாகக் கூடும் என்றும் மனசுக்குள் யோசித்து தன் பேச்சில் மகன் பக்கமும் சாயாமல், ஆசிரியர் பக்கமும் சாயாமல் இருக்க முடிவு செய்தான். மகனின் நிலைமை ஆசிரியர்பால் கோபமான வார்த்தைகளை இறைக்கத் தூண்டத் தக்கதாய் இருந்தது. கட்டுப் படுத்திக் கொண்டான். இவ்வளவு செல்லமாய் வளர்த்த மகன் இப்படியாகிவிட்டானே என்று நெஞ்சில் சங்கட மெழுந்தது. ஆதரவுடன் மகனை அணைத்துக் கொண்டான்.

அடிபட்ட காயத்தின் வலியால் வேதனைப்பட்ட மகா தேவன் மூன்று நாள் விடுப்பிலும் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தான். வீட்டில் மற்ற வர்களும் அவனை நல்லபடி பார்த்துக் கொண்டார்கள். கிறுக்கனான கிட்டன் கூட மகாதேவனின் நிலையைக் கண்டு கோபம் கொண்டான். தன் சகோ தரியைப் பார்த்து, திம்மு "அந்த பாழாப் போன மடத்துக்கு அவன அனுப்பா திங்க. மாமா என்ன வேணும்னாலும் சொல்லட்டும் அந்த நொண்டி வாத்தி யாருக்கு சரியான புத்தி புகட்டாம விடமாட்டேன். என்னயும் இப்படித்தா போட்டுப் போட்டு அடிச்சிட்டே இருந்தான். சரியான பாடம் கத்துக் குடுத் துட்டுதான் வந்தேன். பின்னே சும்மா விடுவாங்களா. நம்ம வீட்டுப் புள்ளை மேல எதுக்கு இவன் கைய வைக்கணும்? இவன் புள்ளைய் நாம ஏதாவது செஞ்சமா? எதுவா இருந்தாலும் அவன் பெருமை யாருக்கும் தெரியாதாக்கும்? அவன் தாராள புத்திய பத்தி எனக்கு தெரியாதாக்கும். அன்னைக்கி ஒரு சிட்டிகை பொடி இருந்தா கொடுன்னு கேட்டேன். கொடுக்கமாட்டன்னு சொல்லிட்டான். கொடுத்தா இவுங்க அப்பன்வீட்டு ஆஸ்தி கொறைஞ்சிடு மாக்கும். மாமா, இந்த தொந்தரவு புடிச்ச மடத்துக்கு மகாதேவன அனுப்ப வேணாம். இனிமே நானே எல்லா பாடத்தயும் சொல்லிக் குடுத்துடறேன்," என்று சொன்னான். அவனை அமைதிப்படுத்திய சதாசிவதீட்சிதன் மக னையும் சமாதானப்படுத்தினான். அவன் மனசில் ஆசிரியர்பால் எந்த கௌர வக் குறைச்சல் உண்டாகாத படியும், அவனுக்கும் மன ஆறுதல் கிடைக்கும் படியும் தக்க வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துப் பேசினான்.

விடுப்பு முடிந்தது. காலையில் மகாதேவனின் முகம் கழுவி, தலைவாரி

சிற்றுண்டி கொடுத்து, "நீ மடத்துக்குப் போ, மகாதேவா. நான் உன் பின்னாலேயே வந்துடறேன். அடிக்கக் கூடாதுன்னு நானே நேர்ல பாத்து சொல்லறேன். போ" என்று சொன்னான் சதாசிவதீட்சிதன். உடுப்பு மாற்றி புத்தகப் பையைக் கொடுத்தனுப்பினான். தினசரி தாமதமாய் வருவதையே பழக்கமாய்க் கொண்ட சிறுவர்கள் கூட அன்றைய தினம் மகாதேவன் வருவதற்கு முன்னாலேயே மடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார்கள். அவர் களுடன் சேர்ந்து உட்கார்ந்தான் மகாதேவன். மிக்க அன்போடும், ஆதர வோடும் அவனிடம் பேச்சுக் கொடுத்தார்கள் மற்றவர்கள். இன்னும் உட் காராத பலர் அங்கங்கே நின்று கொண்டிருந்தார்கள். பசவன் உள்ளிட்ட பெரிய சிறுவர்கள் தமக்குள் ரகசியமாய் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

அப்போது ஆசிரியர் வந்து சேர்ந்தார். புதிய பிரம்பு ஆடியவண்ணம் அவர் கையில் இருந்தது. "ஏண்டா பாடம் படிக்காம சும்மா இருக்கிங்க?" என்று சத்தமிட்டபடி கைக்குக் கிடைத்த ஒரு பையனுக்கு இரண்டு அடிகள் கொடுத்தார். அப்புறம் வழக்கமாய் உட்காரும் மேடையை நெருங்கினார். சுற்றுப்புறமெங்கும் சுண்ணாம்பு அடிக்கப்பட்டு, புதுப்பாய் விரிக்கப்பட்டு தூய்மையாய் இருந்தது. அதைப் பார்த்ததும் அவருக்குச் சந்தோஷம் பெரு கியது. "இவ்வளவு அழகா செஞ்சி வச்சிருக்கிங்களே, என்னாச்சிடா ஒங்களுக்கு?" என்று சொல்லிக் கொண்டே வழக்கமாய் உட்காரும் இடத்தில் உட்கார்ந்தார். ஐயோ, அப்போது அவருக்கு நேர்ந்த கதியை எந்த வார்த்தை களில் விவரிக்க முடியும்? அவர் உட்கார்ந்த மறுகணமே புதிய பாய் உள்ளே சுருங்கி மடங்கியது. 'ஐயோ' என்று அலறினார் அவர். சற்றே தள்ளி தொலைவில் நின்றிருந்த பெரிய சிறுவர்களெல்லாரும் உடனடியாக ஓடிப் போனார்கள். ஆசிரியரிடம் அஞ்சிக் கொண்டு மடத்துக்கு வந்ததிலிருந்து படித்தபடி உட்கார்ந்திருந்த மகாதேவன் உள்ளிட்ட நாலைந்து சிறுவர்கள் அலறலைக் கேட்டு பயம் கொண்டனர். மெல்ல எழுந்து ஆசிரியர் உட்காரும் மேடைப்பக்கம் சென்றனர். கண்கள் மேலேறிச் செருகிக் கொள்ள, வாயைத் திறந்தபடி பள்ளத்தில் விழுந்திருந்த அவரைப் பார்த்ததும், அவர்களுக்கு மேலும் பயம் கூடியது. அடுத்த கணமே அங்கிருந்து கிளம்பித் தத்தம் வீட்டுக்கு ஓடினார்கள். மடம் யாருமின்றி வெறுமையானது. வீட்டுக்கு ஓடோடி வந்த மகாதேவன் காலைப் பூசைகளை முடித்துவிட்டு சாமி அர்ச்சனைக்குத் தேவை யான சந்தனத்தை இழைத்து அறைத்தபடி இருந்த தந்தையின் முன்னால் அழுதபடி நின்றான். மீண்டும் ஆசிரியர் அடித்துவிட்டாரோ என்றும், அடிதாளாமல் தான் இப்படி நடுங்கிக் கொண்டு ஓடோடி வந்து நிற்கிறா னென்றும் நினைத்தான் தீட்சிதன். "என்னாச்சி மகாதேவா, மறுபடியும் அந்த ஆள் அடிச்சிட்டாரா" என்று கேட்டபடி பதட்டத்துடன் ஓடி வந்தனர் வீட்டில் இருந்தவர்கள். சிறுவன் யாரோடும் பேசவில்லை. அழுதபடியே நின்றிருந் தான். "என்ன நடந்தது மகாதேவா? எதுக்காக அழுவறே? மறு படியும் அவர்

உன்னை அடிச்சாரா? எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் அவர் பழக்கம் அவர விட்டு போய்டுமா? என்றான் சதாசிவதீட்சிதன். "அடிக்கலைப்பா. மடத்துல பள்ளத்தல விழுந்து கெடக்கறாரு. ஐயோன்னு ஒரே சத்தமா அலறினாரு. பையன்ங்க எல்லாம் மடத்திலேர்ந்து ஓடிப் போய்ட்டாங்க. நானும் இன்னும் ரெண்டு மூணு பேரு மாத்திரம் பள்ளத்துகிட்ட போய் பார்த்தோம். ரொம்ப பயமாய்டுத்து. ஓடி வந்துட்டோம். ஐயோ, பாவம். அம்போன்னு கெடக்கறார். நீ வந்து பாரு. இப்பவே என் கூட வரணும்" என்று அழுகையூடே தேம்பித் தேம்பிச் சொன்னான் மகாதேவன். "ஐயோ, பாவமே. என்னாச்சோ தெரியலியே. அந்த பிராமணனுக்கு இந்த ஊர்ல யாருமே கெடையாதே' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டபடியே எல்லா வேலைகளையும் அப்படியே விட்டு விட்டு மடத்துக்கு ஓடினான் தீட்சிதன். இதற்குள் செய்தி தெரிந்து மடத்துக்கு வந்திருந்த அக்கம் பக்கத்து ஜனங்கள், "சும்மா இருக்கற புள்ளைங்கள எல்லாம் போட்டு அடிஅடின்னு அடிச்சான். அந்த பாவமல்லாம் அவன சும்மா விடுமா, அவனயே சுத்திக் கிச்சி", என்று தமக்குள் பேசிக் கொண்டனர். சதாசிவ தீட்சிதன் மடத்துக்குள் செல்லவும், அவர்கள் வெளியே வரவும் சரியாய் இருந்தது.

நாரப்பய்யாவின் கண்கள் மேலேறிச் செருகிக் கிடந்தன. பிரக்ஞை தப்பி விட்டது. உட்கார்ந்திருந்த ஈச்சம் பாய் கூடக் குழியில் சுருண்டு கிடந்தது. கழுத்து, தோள் பட்டை, முதுகு, இடுப்பு, கைகள், தொடைகள், பிருஷ்டம், முழங் கால்கள் எல்லாம் அடித்தரையைத் தொட்டுக் கிடந்தன. ஒரு மூலையில் சற்றே தலை உயர்ந்து கிடந்தது. இன்னொரு மூலையில் பாதங்கள் இரண்டும் உயர்ந் திருந்தன. முகத்தின் மேலும் உடம்பின் பல பாகங்களிலும் ஏதோ பொடி விழுந்து சிதறிக் கிடந்தது. மேலிருந்தவாறு கொஞ்சம் கொஞ்சமாய் இன்னும் சிதறிக் கொண்டிருந்தது, பொடி. ஈச்சம் பாயின் மத்தியில் ஒரு நுனியும், துணிச் சுருணைக்குள் இன்னொரு நுனியுமாய் ஒரு நூலைக் கட்டியிருந்தார்கள். துணிச்சுருணை ஆசிரியரின் தலைக்கு மேல் சரியாக இருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பாய் குழிக்குள் வாங்கிக் கொண்டதுமே நூல் அறுந்து விட்டது. மேலிருந்த துணிச்சுருணை திறந்து கொண்டது. சுருணைக்குள் வைக்கப்பட்டிருந்த பொடி சிதறியது. நெருக்கத்தில் பார்க்கும்போதுதான் நாரப்பய்யாவின் உடம்பெங்கும் முட்கள் குத்தியிருப்பது தெரிந்தது. பாயின் அடியில் நெருஞ்சி முட்கள். இதனால் குழிக்கு வெளியே நின்றபடி அவரைத் தூக்குவதும் சிரமமாகயிருந்தது. ஊர் மக்களுக்கு தீட்சிதனின்மேல் மதிப்பிருந்த காரணத்தால், சொன்னதும் ஏறத்தாழ இருபது பேர் அங்கே வந்து சேர்ந் தார்கள். எல்லாரும் சேர்ந்து உபாயமாக நாரப்பய்யாவை மேலே தூக்கி னார்கள். அப்போதும் அவருக்கு பிரக்ஞை திரும்பவில்லை. பாயின் வழியாக பல முள்கள் அவரது உடம்பில் குத்திக் கிடந்தன. முள்கள் இருந்ததாலேயே அவரது உடம்பிலிருந்து பாயை விடுவிப்பதும் கஷ்டமாய் இருந்தது. பாயை இழுக்க முயற்சித்தால் சதையே பிய்ந்து கொண்டு வந்துவிடும் போல இருந்தது.

ஒவ்வொரு முள்ளாகப் பிய்த்தெடுப்பதும் கஷ்டமாயிருந்தது. தரையில் படுக்க வைக்கவும் முடியவில்லை. உட்கார வைப்பதற்கும் இயலவில்லை. முன் பக்கத்தில் அவ்வளவாய் முள் தைத்திருக்கவில்லை. அதனால் கவிழ்ந்தவாகில் அவரைத் தரையில் கிடத்திவிட்டு முள் வாங்கியின் உதவியால் முள்களைப் பிடுங்கத் தொடங்கினர். வாயில் கொஞ்சமாய்த் தண்ணீர் ஊற்றிவிட்டு காதுக்குள் ஊதினால் நீட்சிதன் கொஞ்சம் கொஞ்சமாய் பிரக்ஞை மீண்டது. கண் திறந்தார். முள்கள் பிடுங்கப்பட்ட இடத்தில் ரத்தம் சிந்தியது. பிருஷ்ட பாகம் ஒரே ரத்தக் காடாகிக் கிடந்தது. ஊசி வாய்க்குள் நீள்மான டாபாசுக் கள்ளிமுள் செருகிக் கிடந்தது. அசைத்துப் பிடுங்கவும் வாய்ப்பில்லாம லிருந்தது. வேறு வழியின்றி வேகமாய் இழுத்துப் பிடுங்கினர். ரத்தம் பெருகிப் பாய்ந்தது. உடம்பெங்கும் படிந்திருந்த பொடி ரத்தத்தில் ஊறி எரிச்சலைக் கொடுத்தது. பொடியைச் சுரண்டி எடுத்தனர். சுரண்டப்பட்ட இடம் மேலும் மேலும் சிவந்தது. தலைக்குமேல் தொங்க வைக்கப் பட்டிருந்த பொடி உடம் பெரிச்சலைக் கொடுக்கும் இலைகளை நசுக்கிச் செய்யப்பட்டுள்ளதைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் ஆன மட்டிலும் அப்பொடியைச் சுரண்டிச் சுரண்டி எடுத்தனர். ஆனாலும் கூட அப்பொடி தன்வேலையைக் காட்டவே செய்தது. உடம்பெங்கும் தண்ணீர் ஊற்றிக் கழுவினார்கள். நாரப்பய்யாவின் மனைவி பிரசவத்துக்காக ஊருக்குப் போயிருந்தாள். வேறு வழியின்றி தனியே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஏதாவது பண்டிகை மற்றும் விசேஷ தினங்களில் உறவுக்கள் யாராவது அவரை விருந்துக்கு அழைத்தனர். தனியே கஷ்டப்பட்டுக் கிடந்த இந்த நேரத்தில்தான் இந்த சம்பவமும் நடந்து விட்டது. ஜமுக்காளத்தை விரித்து அதில் நாரப்பய்யாவைப் படுக்க வைத்தனர். இருவர் தூக்கிக் கொள்ள தன் வீட்டுக்கு நாரப்பய்யாவை அழைத்துச் சென்றான் தீட்சிதன்.

நாரப்பய்யா உட்கார்ந்த மேடைக்குக் கீழே மாணவர்கள் தான் பெரிய பள்ளம் ஒன்றைத் தோண்டினர். பக்கத்தில் கிடைத்த எல்லாவகை முட்களையும் பிடுங்கிவந்து நிரப்பினர். அந்த வட்டாரத்திலேயே கிடைக்காத அபூர்வமான கள்ளிமுட்கள் கண்ணாடியும் கூட இருந்தன. குழியிலிருந்து அப்புறப்படுத்திப் பார்க்கும் போதுதான் இரும்பு ஆணிகளும், துண்டுசிகளும் இருப்பது புரிந்தது. கண்ணாடிச் சாமான்களோ, பீங்கான் சாமான்களோ இக்காலத்தில் பிர பலமாக இருப்பதைப் போல அக்காலத்தில் பிரபலமாக இருக்கவில்லை. அப்படி இருந்தும் கூட கண்ணாடித் துண்டுகள் எங்கு கிடைத்தனவோ தெரிய வில்லை. எது எப்படியோ, தினந்தோறும் படிக்க வருகிற பிள்ளைகளை யெல்லாம் அடி அடி என்று அடித்ததற்குத் தக்க தண்டனை தான் இது என்று சிலர் பேசிக் கொண்டனர். யாரும் ஆதரவு இல்லாத ஒரு பிராமணனை இப்படி ஒரு சிரமத்துக்கு உள்ளாக்கிய மாணவர்கள் யாரேனும் கைக்குக் கிடைத்தால் சரியாகத் தண்டிக்க வேண்டும் என்று சிலர், பேசிக் கொண்

டனர். இப்படியே கிராமத்தில் பலர் பலவிதமாய்ப் பேசிக் கொண்டனர். குழியிலிருந்த முள்களையெல்லாம் முழுமையாக அப்புறப் படுத்துவது சிரமமாக இருந்த காரணத்தால், அங்கேயே நெருப்பிட்டுச் சுட்டனர். அதன் பின் பள்ளத்தை மூடினார்கள்.

ஆசிரியர் பள்ளத்தில் சரிந்து விழுந்த மறுகணமே திசைக் கொருவராய் ஓடிப் போன சிறுவர்களில் பலர் இரண்டு மூன்று நாட்களான பிறகு கூட தத்தம் வீட்டுக்கு வந்து சேரவில்லை. சிலர் மாத்திரம் அன்றைய தினம் மாலையிலேயும், சிலர் மறுநாள் காலையிலும் திரும்பி விட்டார்கள். அந்தந்த பெற்றோர்களின் யோக்கியதைக் கேற்றபடியே அந்தப் பிள்ளைகளும் இப்படி ஒரு ராட்சதத் தனமான காரியத்தைச் செய்துள்ளதாய் ஊரில் பேசிக் கொண்டனர்.

ஆசிரியரை வீட்டுக்கு அழைத்துச் சென்ற தீட்சிதன் அவருக்குத் தேவையான எல்லா மருததுவச் சேவைகளையும் செய்தான். புண்ணுக்குத் தடவும் எண்ணெய், களிம்பு முதலியவற்றை வாங்கித் தடவி, தேவைபட்ட போது புண்களைக் கழுவுவதும் மீண்டும் அப்புண்களில் மருந்துகளைத் தடவுவதுமாக அவ்வுபாத்தியாயனுக்கு பணிவிடைகள் செய்து வந்தான். பத்தியச சாப்பாடே தரப்பட்டது. வீட்டில் இருந்தவர்கள் சற்றும் மனம் கோணாமல் பக்கத்திலேயே இருந்து அவனை உபசரித்தார்கள். ஆனாலும் ஆசிரியர் முழுக்கக் குணமடைந்து நடமாட நான்கு மாதங்கள் பிடித்தன.

5

சாமராஜ்நகரில் உப்பலிகருக்கும், தொறையருக்கும் நடுவில் உண்டான மோதலைப் பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது. இந்த இரண்டு பிரிவின ருக்கும் மத்தியில் இருக்கிற பகை, திடுமென தோன்றிய ஒன்றல்ல. பல தலை முறைகளாகவே இது தொடர்ந்து நடந்து வந்துள்ளது. இரண்டு பிரிவினர் களுக்கு நடுவில் உண்டான கலவரம் சாமராஜ நகரோடு நிற்கவில்லை. சுற்று வட்டாரத்தில் இருக்கக் கூடிய கிராமங்களுக்கும் பரவத் தொடங்கியது. சஞ்சவாடியில் உப்பலிகரின் எண்ணிக்கை அதிகமாகவும், தொறையரின் எண்ணிக்கை குறைவாகவுமிருந்தது. அதிகமாக இருந்தாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி, சாதித் துவேஷம் ஒரே அளவிலேயே இருந்தது. குறிப்பிட்ட விசேஷக் காலங்களில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மட்டுமே இந்த துவேஷம் வெடித்து வெளிப்படையாய்த் தெரிந்ததே தவிர, பிற சமயங்களில் உப்பலிகரும், தொறையரும் ஒருவருக்கொருவர் மிகுந்த நட்புணர்வுடன் பழகினர்.

உப்பலிகரும், தொறையரும், சமயம் வரும்போது இவர்களுடன் சேர்ந்து கொள்ளும் தாழ்த்தப்பட்டவர்களும், அந்த ஊரில் சுகஜீவிகளாகவே இருந் தார்கள். வீட்டுக்கு எத்தனை விருந்தினர்கள் வந்தாலும் அன்போடு உபசரித்துப் போற்றினர். செல்வந்தர்கள் வீட்டு விருந்துச் சாப்பாடு போலவே செய்து உண்டனர். இவர்களது ஆடை, தான் இருக்கும் நிலைக்கு நான்கு மடங்கு அதிகமாய் இருந்தது. ஆண்களும், பெண்களும் எல்லாக் காலங்களிலும் தங்க ஆபரணங்களையே அணிந்து வந்தனர். திருமணம் முதலிய சுபகாரியங்களில் அணிந்து கொள்வதற்காக மற்றவர்கள் சஞ்ச வாடிக்கு வந்து, தங்க நகைகளை இரவலாக வாங்கிச் செல்வார்கள். சுற்று வட்டாரத்தில் உள்ள பத்து இருபது கிராமங்களில் முக்கிய விசேஷ காரியங்கள் விருந்து வைபவங்கள் நடக்கும் போது, சஞ்சவாடியில் இருப்பவர்கள் வீட்டிலிருக்கும் வாய் அகன்ற பாத்தி ரங்கள் முதலியவை போய்ச் சேராமல் எதுவும் நடப்பதில்லை. இவர்கள் வீடு களில் உறுதியான தொட்டிகள் கட்டப்பட்டிருந்தன. சில வீடுகளில் அவர வர்கள் உத்தேசத்துக்கும் அவசியத்துக்கும் தகுந்தபடி இரண்டு அல்லது மூன்று தொட்டிகள் கட்டப்பட்டிருந்தன. பால் ஊற்றி வைககிற அளவுக்கு அவை சுத்தமாயும், கச்சிதமாயும் இருந்தன.

யட்சகான ஆட்டக்காரர்கள், சங்கீதக்காரர்கள், நாட்டிய மாடும் மாதர்கள் நகைச்சுவை ஆட்டக்காரர்கள், மோகினி ஆட்டக்காரர்கள், மல்யுத்த வீரர்கள், என பலவிதமான மக்கள் அவ்வப்போது இந்த ஊருக்கு வந்து போய்க் கொண்டு இருந்தார்கள். பத்து ஊர்கள் சுற்றினாலும் கிடைக்காத பலன், இந்த ஒரு ஊரிலேயே அவர்களுக்குக் கிடைத்தது. ஆட்டமெல்லாம் முடிந்ததும் ஊர் முக்யஸ்தரோ அல்லது சபை முக்யஸ்தரோ ஆடை ஆபரணங்களை ஆட்டக் குழுவினருக்குப் பரிசாகத் தருவதும், அதை வாங்கிக் கொண்ட ஆட்டக் காரர்கள் பரிசுப் பொருளைத் தூக்கிப் பிடித்து எல்லாரும் கேட்கும் படியான உரத்த குரலில், பரிசு கொடுத்தவர் பெயர், புகழைப் பாடும் பழக்கம், இன்னும் கூட கிராமப்புறங்களில் முற்றாக விடுபடாமல் உள்ளது. அந்தக் காலத்தில் கிராமங்களில் மட்டுமன்றி பட்டணங்களிலும் இப்படிப்பட்ட பழக்கங்கள் ஏராளமாய் இருந்தன. அதிக அளவில் பரிசு கொடுத்தவர்களை அதிக அளவிலும், குறைவான அளவில் பரிசு கொடுத்தவர்களை குறைவான அள விலும் புகழ்ந்து பாடினார்கள், ஆட்டக்காரர்கள். இச்சூழலில் நம்மால் முடிந்த மட்டும் அதிக அளவில் பரிசுப் பொருள்களைத் தந்து அதிக அளவில் தம்மைப் பற்றிய புகழ் வார்த்தைகளைக் கேட்டு ஆனந்தப்படுவதில் சஞ்சவாடிக்காரர் களுக்கு விருப்பமிருந்தது. ஆட்டக்காரர்களின் சம்பாத்தியம் அதிக அளவில் இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம். இப்படிபட்ட ஆட்டங்களை முக்கிய நாட்களில் நகர சுபேதாரரே ஏற்பாடு செய்தார். இதையெல்லாம் பார்ப்ப வர்களுக்கு விசித்திரமாய்த் தோன்றும்.

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் கூட இந்த ஊரின் மக்களுடைய வார்த்தைகளுக்குத் தகுந்தபடி செயல் பட்டார்கள். இப்படியாக வளர்த்துக் கொண்ட அவர்களின் சக்தி எத்தகையது? இவர்களுக்கு மட்டும் ஆகாயத்தி லிருந்து செல்வம் குதித்து விட்டதா? அல்லது யாருக்காவது எங்கிருந்தாவது புதையல் கிடைத்ததா?

சஞ்சவாடி ஊர் எல்லையில் ஒரு மாரியம்மன் கோயில் இருந்தது. பக்கத்திலேயே ஒரு விநாயகர் கோயிலும் பின் புறத்தில் ஒரு உடற்பயிற்சிக் கூடமும் (உட்கார வசதியான பெரிய கட்டையுமிருந்தன. ஊர் இளைஞர்க ளெல்லாம் சதா காலமும் அந்த கோயிலின் முற்றத்திலோ, பயிற்சி கூடத் திலோ கூடியிருப்பார்கள். அங்கேயே காலையில் இருந்து பொழுது சாயும் வரைக்கும் தண்டால் எடுப்பது, குஸ்தி, கழி சுற்றுவது சிலம்பம் ஆகிய பயிற்சிகளையும் செய்து கொண்டிருந்தனர். நடுநடுவே பகடை, ஆடுபுலி ஆட்டங்களும் நடத்தினர். வெள்ளிப் பணங்களை பந்தயம் கட்டி ஆடினர். சண்டைகளும் அவ்வப்போது நடந்தன. ஆத்திரத்தில் அடுத்தவன் தலை முடியை எட்டிப் பிடித்து உதைத்தனர். எந்த சண்டையாயிருந்தாலும் தமக் குள்ளேயே பேசித் தீர்த்துக் கொண்டார்களே தவிர, கச்சேரி வரைக்கும் செல்ல இடம் தருவதில்லை. ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட ஒரு நாளில் அதி காலையிலிருந்து பொழுது சாயும் வரை பலர் ஊரில் இருப்பதில்லை.

ஊரைவிட்டு வேறெங்கோ புறப்பட்டுச் செல்லலானார்கள். எந்த ஊருக்குச் செல்கிறார்கள் என்கிற சங்கதி அவர்களின் மனைவி மக்களுக்கும் தெரிவ தில்லை. "இன்னைக்கு காலைல எங்கயோ எழுந்து போனாரு. சாயங்காலமாத் தான் வருவாரு", என்கிற ஒரே பதிலைத்தான் சொல்வார்கள்.

இவர்கள் இவ்வாறு தலைமறைவாகப் போவதற்கு சில நாள்களே இருக்கும் சந்தர்ப்பத்தில் இவர்கள் அனைவரும் இன்னொரு காரியத்தையும் செய்வார்கள். மிகப்பழைய கிராம தேவதைக் கோயில் ஒன்று அவ்வூரில் இருந்தது. அக் கோயிலின் பூசை விவகாரங்களை ஒருவன் கவனித்துக் கொண் டிருந்தான். அந்தக் கோயிலுக்காக அரசாங்கம் ஒதுக்கிய மானிய நிலத்தை அவனே அனுபவித்து வந்தான். கோயில் அர்ச்சனை எப்போதும் தவறிய தில்லை

மைசூர் அரசாங்கப் படைவீரர்கள் வீரத்துக்கும் வெற்றிக்கும் பேர் போன வர்கள். இப்படிப்பட்ட ஒரு படையின் பிரிவுக்கு அந்தரங்கத் துணையாய் இருந்தவர், ராமராயர். இவரது சகோதரனின் மகன் பீமராயர், முக்கிய சேனை ஒன்றின் தலைவராக இருந்தார் அவர். இவர் புகழ் அனந்தசயனத்திலிருந்து டில்லி வரைக்கும் பரவி இருந்தது. இவ்விருவருமே மைசூர் மகாராஜருக்கும் ஆங்கில அரசாங்கத்துக்கும் நம்பிக்கைக்குரிய ஊழியர்களாகப் பக்தி சிரத் தையுடன் நடந்துகொண்டனர். இவர்களின் வீரதீரச் செய்திகளாலும் சாகசங் களாலும எல்லைப் படைக்குக் கிடைத்த பேரும் புகழும் இந்துஸ்தானத்திலும். ஐரோப்பியப் பகுதிகளிலும் பிரசித்தமாகி இருந்தது. ஒருமுறை கொல்லாப்பூர் ராஜ்யத்தை இவர்கள் இருவரும் பிடிக்க நேர்ந்தது. பிடிபட்டதும். சேனை. வீரர்கள் ஊரைக் கொள்ளையடிக்க ஆரம் பித்தார்கள் அங்கே மகாலட்சுமி கோயில் ஒன்று இருந்தது. அக்கோயிலைத் தேடிவந்து வணங்கும் பக்தர்கள் லட்சக் கணக்கில் இருந்தார்கள். இதன் மகத்துவம் ஊரெங்கும் பரவி இருந்தது. 'சாக்தேயர்கள்' என்னும் ஒரு குழுவினருக்கு இது முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். வெற்றியடைந்த வீர ஆவேசத்திலும், பேராசையிலும் வெறி பிடித்த சேனை வீரர்கள் ஊரைக் கொள்ளையடிக்க ஆரம்பித்ததும் அவா களின் வரைமுறை மீறியது வெகுகாலமாகப் புகழ் வாய்ந்திருந்த இக் கோயிலின் தெய்வத்துக்கு காணிக் கையாக பல அரசர்கள் ஏராளமான செல் வத்தை வழங்கி இருந்தார்கள். ஏராளமான பக்தர்கள் வேண்டுதல் காணிக் கையாக அளித்த செல்வமும் அதிகமிருந்தது. எல்லாம் கோயிலிலேயே இருந்தது. இப்படிப்பட்ட செல்வக் குவியலை சும்மா விடுவார்களா? கடவுளை மட்டும் வணங்கி விட்டு கோயிலுக்குள் நுழையாமல் போகிற அளவுக்கு படைவீரர்கள் புண்ணிய பக்தர்களா என்ன? இப்படி ஒரு சந்தர்ப்பம் வாய்த் திருக்கும் போது நழுவ விட்டுவிடுவார்களா? கோயிலுக்குள் நுழைந்தார்கள். சேனைவீரர்கள். கிடைத்தவற்றையெல்லாம் அள்ளிச் சுருட்டிக் கொண்டு போகும் தறுவாயில் அம்மனின் மூக்கில் பளீரென மின்னிக் கொண்டிருந்த

விலை மதிப்பற்ற மூக்குத்தியையும் கழற்றிக் கொண்டு போனார்களாம். அப்பொழுது உண்டான அம்மனின் ஆத்திரத்தால் அந்த முத்து எந்தெந்த தேசங்களுக்கெல்லாம் எடுத்துச் செல்லப்பட்டதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் வாந்தி, பேதி, அம்மை, கொள்ளை நோய் வந்து அனைவரும் மடியத் தொடங்கினார்கள். சாதாரணப் பொது மக்கள் அப்படித்தான் நம்பத் தொடங்கினார்கள். அநேக வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட்ட வைத்திய சாஸ்திர நூல் ஒன்றில் இந்நோயைப் பற்றியும் இந்நோய்க்கான சிகிச் சையைப் பற்றியும் கூறி உள்ளார்கள். இப்படிப்பட்ட நோய் முதல் முறையாகப் பரவத் தொடங்கி இருந்ததால், கொல்லாப்பூர் அம்மனின் மூக்குத்தி முத்தை மைசூர்ச் சேனை எடுத்து வந்ததால் தான் இந்நோய்கள் பிறந்தன என எப்படிச் சொல்ல முடியும்? காரணம் எதுவோ, இந்த விஷ நோய் ஊரெங்கும் பரவத் தொடங்கியது மட்டும் உண்மை.

அன்று முதல் ஒவ்வொரு வருஷமும் ஒரு முறையாகிலும், இருமுறை யாகிலும் சஞ்சவாடிக்குள் இந்நோய் வந்து தாக்கி விட்டுச் செல்வது வழக்கமானது. அச்சமயங்களில் மிகவும் பயந்து கொள்கிற ஊர்மக்கள் ஊர்த் தேவதைக்கு விசேஷ பூஜைகளை ஏற்பாடு செய்து பயபக்தியுடன் வணங் கினர். மக்கள் செலுத்திய காணிக்கை பெருகப் பெருக கோயிலின் வரு மானமும் அதிகரித்தது. அப்போது கோயிலில் இருந்த பழைய பூசாரி இறந்து விட்டான். அவனது பரம்பரை என்று பெயர் சொல்லும்படியாக யாரும் இல்லை. ஒருவேளை கூழுக்கும் வழியின்றி ஊரூராய் அலைந்து கொண்டு வந்த சித்தன் என்பவன் இறந்து போன பூசாரிக்கு மிக நெருக்கமான சொந்தம் என்று சொல்லிக் கொண்டு வந்தான். கோயில் பூசைகளைச் சரியான முறையில் கவனித்துக் கொள்வதாய் வாக்களித்தான். அவன் வந்து சேரும் வரையிலும் கூட கோயிலில் முறையாகப் பூசை செய்ய யாரும் ஆள் கிடைத் திருக்கவில்லை. தற்சமயத்துக்கு சித்தனே பூசை வேலைகளைக் கவனித்துக் கொள்ளட்டும் என்றும், ஊரெங்கும் நோய் பரவி இருக்கும் கெட்ட வேளையில் பூசைகள் நின்று போய் அம்மனின் கோபத்துக்கு ஆளாக வேண்டாம் என்றும் கிராமத்தவர்கள் எல்லாரும் கூடி முடிவு எடுத்தார்கள். அதன்படி பழைய பூசாரியின் வீட்டிலேயே தங்கிக் கொண்டும், மானியமாய் இருந்த பூமியின் பலா பலன்களை அனுபவித்துக் கொண்டும், நித்தமும் கோயில் பூசைகளைச் செய்து கொண்டும் வரத் தொடங்கினான். தினசரிப் பூசைகளில் சில புதிய ஏற்பாடுகளைச் செய்தான் சித்தன். செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் நடந்து வந்த பூசைகள் தினந்தோறும் நடைபெற ஆரம்பித்தன. பகல் வேளை யில் மட்டுமே நடந்து வந்த ஆராதனை பகல், இரவு, இரண்டு வேளைகளிலும் நடக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் கடவுளுக்கு ஒவ்வொரு விதமான அலங்காரம் நடந்தது. காணிக்கைப் பணத்தை வேண்டிய அளவுக்கு பூசைச் செலவுக்கே பயன்படுத்தி 'ஆசையற்றவன்' என ஊரார் தன்னை மெச்சிக் கொள்ளும்படி நடந்தான். அவ்வப் பொழுது ஏராளமாய்ச் செலவு செய்து ஜோசியர் வீட்டார் மூலம் படையலைச் செய்வித்து ஊராருக்கெல்லாம்

நைவேத்தியம் தந்தான். ஊரின் முக்கியஸ்தர்கள் வீட்டுக்கும் அனுப்பி வைத்தான்.

அது மட்டுமல்ல. மழிப்பதை விட்டொழித்த புதிய பூசாரி தாடி வளர்த் திருந்தான். அதிகாலையிலேயே குளித்தான். ஈரத் துணியையே இடுப்பில் சுற்றிக் கொண்டான். மிகவும் மடியாக பயபக்தியுடன் பூஜை விஷயங்களில் ஈடுபட்டான். நெற்றியில் சதாகாலமும் குங்குமம் பொலிந்தது. செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் ஆராதனை முடிந்த பிறகு கருவரையிலேயே கடவுளின் முன்னாலேயே எந்தப் பேச்சும் இல்லாமல் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந் திருந்தான். திடுமென விழிப்பு தட்டியவன் போல எழுந்து நின்று ஒரு பிடி குங்குமத்தை வாரி இறைத்தபடி, 'கருணை காட்டு தாயே, கொல்லாபூர் தாயே, பக்தர்களைக் காப்பாற்றம்மா தாயே' என்று சொல்லிய வண்ணம் விழுந்து வணங்கி ஆராதனை செய்தான். அப்பாவி மக்கள் இதற் கெல்லாம் அர்த்தம் கற்பித்துக் கொண்டு பேசத் தொடங்கு வதற்கு சொல்லிக் கொடுக்க வேண்டுமா, என்ன? கொல்லாப்பூர் மகாலட்சுமியே இந்த ஆல யத்தில் வந்து குடி யேறி விட்டாள் என்று சிலரும் தத்தமக்குள் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். மௌனமாய் அவன் கடவுள் முன் கண்மூடி அமர்ந்திருக்கும தருணத்தில், அவனுக்கு முன்னால் வந்து கைகூப்பி தம் கோரிக்கைகளை முன் வைத்தனர், பக்தர்கள். சிலரது கோரிக்கைகளைக் கேட்டும் அமைதியாகவே உட்கார்ந்திருந்தான் சித்தன். சிலரிடம் 'ஆகட்டும்' என்றான். சிலரிடம் 'வெற்றி' என்றான். இன்னும் சிலருக்கு 'இல்லை' என்றான். மேலும் சிலருக்கு 'போ' என்றான். இது மட்டுமன்றி சிற்சில சமயங்களில் அவன் குறி சொல்வதும் உண்டு. இதனால் 'சித்தன்' என்கிற பெயர் 'சித்தப்பா' என்று மாறியது. 'சித்தப்பா' என்கிற பெயரும் 'சித்தப்பாஜி' என்று மரியாதையின் பொருட்டு மாறியது. அதுவும் வழக்கொழிந்து 'அப்பாஜி' என்று அழைக்கத் தொடங் கினர். கொல்லாப்பூர் அம்மனே வந்து குடியேறியுள்ளாள். அப்பாஜியவர் களுக்கு தரிசனம் தருகிறாள். அவர் சொல்வது பொய்யாகிவிடுமா? கடவுளின் மகிமையைக் காட்டிலும் பூசாரியின் மகிமை பெருமையுடன் பேசத்தக்க தாகியது. இவனைப் பார்ப்பதற்கென்றே தினமும் பல ஊர்களில் இருந்து மக்கள் வந்து செல்ல ஆரம்பித்தார்கள். பிசாசு பிடித்தவர்கள், பேய்ப் பிணி யால் வருந்துபவர்கள், மோகினியால் தாக்கப்பட்டு இளைத்தவர்கள், நோயா ளிகள், தொழு நோயாளிகள், குருடர்கள், செவிடர்கள் ஆகியோர் ஒரு பக்கத் திலும், பெண் கொடுத்து பெண் எடுக்கச் சம்பந்தம் பேசி தயாராய் இருப்ப வர்கள் மற்றும் வேறு சில கோரிக்கைகளுடன் வந்தவர்கள், இன்னொரு பக்கமும் நின்று வணங்கிச் சென்றார்கள். கோயிலின் முற்றம் மேலும் விரிவு படுத்தப்பட்டது. அப்பாஜி முற்றம் என்கிற பெயரும் அதற்கு இடப்பட்டது. அப்பாஜிக்கென்றே விசேஷமாக அவர் உட்காரும் பொருட்டு ஒரு மேடை கட்டப்பட்டது.

அப்பாஜியின் பெருமை வளர்ந்து கொண்டே வந்தது ஒரு புறமிருக்க, சஞ்சவாடி கிராம மக்கள் அவ்வப்பொழுது விஜயயாத்திரை மேற்கொண்

டனர். புறப்படும் முன்பு கோயிலுக்கு வந்து வணங்கி அப்பாஜியிடம் குறி கேட்டனர். 'வெற்றியுண்டாகட்டும்' என்கிற அவர் வாழ்த்துக்களைப் பெற்றுக் கொண்டு கோலாப்பூர் அம்மனைப் பக்தியுடன் தொழுதனர். அதன் பின் அப்பாஜியிடம் சொல்லிக் கொண்டு புறப்பட்டனர். இவர்கள் பொதுவாய் தென்தேசங்களை நோக்கியே சென்று கொண்டிருந்தனர். எல்லாரும் நடமாடுகிற பொது வழிகளில் இவர்கள் செல்வதில்லை. ஜன சந்தடி யேயற்ற காட்டு வழிகளிலும், மலைப் பாதைகளிலும், இவர்கள் சென்றார்கள். வழிகளில் இவர்களை யாரும் அடையாளம் காண முடிவதில்லை. ஊர் எல்லை யைத் தாண்டியதுமே இவர்கள் பேர் வேஷம் எல்லாமே மாறிவிடும். பெட்டி வண்டி, குதிரை வண்டி , மான், கரடி, பன்றி, நாகப் பாம்பு என்று வேறு வேறு வகையான பெயர்களை வைத்துக் கொண்டனர். பெற்றெடுத்த தாயே வந் தாலும் "தன் மகன் இவன்" என அடையாளம் கண்டு சொல்ல முடியாத வகை யில் அவர்கள் உருமாறி இருந்தார்கள். கன்னடம், தெலுங்கு, தமிழ், மலை யாளம், இந்துஸ்தானி, ஆகிய மொழிகள் மட்டுமன்றி நாடோடிக் கூட்டத் தினரின் மொழிகளும் இவர்கள் அறிந் திருந்தார்கள். ஒவ்வொருவரும் கையில் தடி வைத்திருந்தார்கள். தமக்குத் தேவையான வேறு வேஷப் பொருள் களையும் சுமந்து சென்றார்கள். தாம் செல்ல விரும்பும ஊர்களுக்குள் குறவர், சாமியார்கள், கூலிக்காரர்கள், பண்டாரங்கள், குடுகுடுப்பைக்காரர்கள் போல வேஷங்களிட்டுக் கொண்டு சென் றனர். சிலர் கிழவர்கள் போலவும், மேலும் சிலர் பிராமண வேஷத்தையும் அணிந்து கொண்டனர். அவர்கள் அனைவ ரும் ஊருக்கு வெளியே ரகசியமான ஓர் இடத்தில் நள்ளிரவில் கூடிப் பேசிக் கொண்டார்கள். இருள் கரையும் நேரத்தில் ஒவ்வொருவராய் ஊருக்குத் திரும்பிச் சேர்ந்தனர். போன சுவடு யாரும் அறியாததைப் போலவே வந்த சுவடும் யாருக்கும் தெரியாது. ஒவ்வொரு முறையும் இப்படிச் சென்று வந்ததும், ஒவ்வொருவர் கையிலும் குறைந்தபட்சம் ஐந்நூறு ரூபாய் சேர்ந்திருந்தது.

அப்பாஜியின் வாழ்த்துதலாலும் நல்லபடி குறி சொன்னதாலும் அம்ம னின் பிரசாதத்தாலும் தானே இந்தத் தொகையை சம்பாதிக்க முடிந்தது. அப்படிப்பட்ட அம்மனின் சேவைக்கும் அப்பாஜியின் படையலுக்கும் காணிக்கை தராமல் போனால் சம்பாத்தியம் நிலைத்து நிற்குமா? ஆதலால் ஊருக்குத் திரும்பிய வீரர்கள் எல்லாரும் தாம் சேர்த்து வந்த சம்பாத்தியத்தில் பத்தில் ஒரு பங்கு கடவுளுக்கும் கோயிலுக்கும் என ஒப்படைத்தனர். சிறுதுளி பெருவெள்ளம் என்பது போல அப்பாஜியிடமும் கொஞ்சம் கொஞ்சமாய் பணம் சேர்ந்தது. இப்படி வந்த பணத்தை அம்மனுக்குத் தேவையான ஆபர ணங்களைச் செய்வதிலும், ஏழை, எளியவர்கள், பிராமணர்களுக்கு தான தருமங்கள் செய்வதிலும், செலவழித்தான் அப்பாஜி. திருமணம், உபநயனம் ஆகிய சந்தர்ப்பங்களில் அவரவர்கள் தகுதிக் கேற்ப பணம் கொடுத்து உதவி னான். அவனைச் சுற்றி சதா காலமும் ஊர்மக்கள் இருந்தார்கள். மிகுந்த கௌரவத்துடன் அவனை நடத்தினார்கள்.

6

மடத்தில் மாணவர்கள் செய்த தந்திரத்தின் விளைவாக உடம்பெங்கும் முள்காயம் ஏற்பட்டு உயிர் இருக்குமா, பிழைக்குமா என்ற நிலையில் இருந்த ஆசிரியர் நாரப்பய்யாவை வீட்டுக்கு அழைத்துச் சென்ற சதாசிவ தீட்சிதன் பலவிதமான மருத்துவங்களுக்கும் ஏற்பாடு செய்து உபசரித்து புண்கள் ஆற உதவினான். அந்த பிராமணன் படும் அவஸ்தைகளைக் காணச் சகிக்காமல் ஜோஸியர் குடும்பமே அவருக்கு சிசுருஷை செய்தது. சிறுவன் மகாதேவன் கூட அவரிடம் மடத்தில் அடிபட்ட பழைய சம்பவங்களை யெல்லாம் மறந்து தன்னாலான உதவியைச் செய்தான். சிறுவனின் பெருந்தன்மையானக் குணத்தைப் பார்த்த அவருக்கு வெட்கம் உண்டானது. புண்கள் ஆறி முற்றும் குணமாக நாலைந்து மாதங்கள் பிடித்தன. பிரசவத்துக் கென்று தாய் வீட்டுக்குச் சென்ற நாரப்பய்யாவின் மனைவி உடல்நலம் குன்றி, அங்கேயே அதற்குத் தகுந்த மருந்துகளைச் சாப்பிட்டுக் கொண்டு வந்தாள். இக்கார ணத்தால் ஜோஸியர் குடும்பத்துடனேயே நாரப்பய்யாவும் இருக்க வேண்டிய தாயிற்று.

மகாதேவனின் படிப்பு தடைப்பட்டது. அதனால் மகனுக்குத் தானே படிப்பு சொல்லித் தர ஆரம்பித்தான் சதாசிவதீட்சிதன். அதிகாலையில் அமர சப்த ஸ்தோத்திரங்களை சொல்லித் தந்தான். அதன்பின் சிறுவன் குளித்து முடித்து சந்தியாவந்தனம் செய்தான். அப்புறம் ரகுவம்சம் புத்தகத்தை எடுத்துப் பாடங்களைப் படிக்கத் தொடங்கினான். நண்பகல் உணவுக்குப் பிறகு ஒரே எழுத்தின்மேல் திரும்பத் திரும்ப எழுதிப் பயிற்சி செய்தான். கணக்குப் பாடங்களை செய்தான். எழுதிய பாடங்களை மீண்டும் வாசித்தான். மடியான துணியை உடுத்திக் கொண்ட தீட்சிதன் பிள்ளைக்குக் கவனமாய்ச் சொல்லித் தந்தான். சுபாவத்திலேயே மகாதேவன் வெகு வேகமாய் விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் புத்திசாலி. குழந்தையின் மனத்தில் பதியும்படி மிக எளிமையாகவும் தெளிவாகவும் தீட்சிதன் போதிக்கும் முறையும் பாராட்டும் வண்ணம் இருந்தது. அந்தப் பாடம் படிக்கவில்லை, இந்தப் பாடம் எழுத வில்லை என்று ஒரு நாளும் தீட்சிதன் குழந்தையைத் தண்டித்ததில்லை. அப்படி தண்டிக்க வேண்டிய சந்தர்ப்பமும் ஒரு நாளும் உருவாகியதில்லை. இப்படி

யாக கல்விப் பயிற்சி நடந்து கொண்டு வந்த ஒரு சந்தர்ப்பத்தில் தீட்சிதன் சொல்லித் தந்திருந்த கணிதப் பாடத்தில் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று தரம் சந்தேகம் எழுப்பினான் மகாதேவன். ஒரு விஷயத்தைப் பற்றிய சந்தேக மாகவே அவை இருந்தன. இரண்டு மூன்று முறையும் பொறுமையாய் விளக்கிச் சொல்லித் தந்தான் தீட்சிதன். இறுதியில் சலிப்புண்டாகி "மகா தேவா, உனக்கு எத்தனை முறை சொல்லித் தந்தாலும் புரியறதில்ல. ரொம்ப மந்தமான பையன் நீ", என்றான். அப்போது அவன் குரலில் சற்றே கடுமை ஏறி இருந்தது. எப்போதும் அன்பான குரலில் மென்மையாய்ப் பாடம் சொல்லித் தரும் தந்தையே இப்படிக் குற்றம் சாட்டி கடுமையாய்ப் பேசியதைக் கேட்டு மகாதேவனுக்கு பொறுக்க முடியாத அவமானம் உண்டானது. இதே யோசனையில் ஆழ்ந்திருந்த காரணத்தால் அன்றைய இரவு உணவும் சரியாய் உட் கொள்ளாமல், படுக்கையில் உறக்கமிழந்து கிடந்தான் மகாதேவன்.

பாடங்கள் எல்லாம் முடிந்த பிறகு சந்தியா வந்தனத்துக்கென வெளியே புறப்பட்டான் தீட்சிதன். அவன் படிப்பிக்கும் முறையையெல்லாம் உட்கார்ந்து பார்த்துக் கொண் டிருந்த நாரப்பய்யாவும் அவனுடன் எழுந்து வெளியே வந்தார். இருவரும் உரையாடியபடி நடக்க ஆரம்பித்தனர்.

நாரப்பய்யா: "முன்பு இருந்ததை விட இப்போ ரொம்ப புத்திசாலியாகி இருக்கறான் மகாதேவன். மடத்தில் படிக்கும் போது மாத்திரம் எப்படியோ மந்தமாய்டறான். எல்லாம் சகவாச தோஷம்ன்னுதான் சொல்லணும். எத்தனை தரம் திருப்பித் திருப்பிச் சொன்னாலும் அவன் தலையில ஏறவே ஏறாது."

சதாசிவதீட்சிதன்: "பக்குவமா சொல்லித்தான் சின்னப் புள்ளைங்களை ஒரு வழிக்குக் கொண்டு வரணும்"

நாரப்பய்யா: "எவ்வளவோ பக்குவமா எடுத்துச் சொன்னாலும் கூட புள்ளைங்க மனசு வச்சி படிக்கலன்னா என்ன பிரயோஜனம்?"

சதாசிவதீட்சிதன்: "பாடத்தில ஒரு ஈடுபாடு பிறக்கற மாதிரி சொல்லித் தர வேண்டியது ஒரு ஆசிரியரோட கடமை"

நாரப்பய்யா: "அப்படியெல்லாம் சொல்ல முடியாது. உங்களயே எடுத்துக் கோங்க. உங்கள மாதிரி பக்குவமா, தெளிவா சொல்லித் தர்றவங்களை நான் எங்கயும் பாத்ததில்ல. ஆனாலும் கூட ஒரு கணக்குப் பாடத்தை மகாதேவனால புரிஞ்சிக்க முடியல; மனசு வச்சி புள்ளைங்க படிக்கறதில்ல".

சதாசிவதீட்சிதன்: "நான் சொல்லித் தந்த கணக்கு கொஞ்சம் கஷ்டமான கணக்கு. பெரியவங்களால கூட போட முடியாத கணக்கு அது. அதனாலதான் இன்னொரு தரம் அப்புறமா சொல்லித் தரலாம்ன்னு விட்டுட்டேன்".

நாரப்பய்யா : "ரெண்டு மூணு தரம் திருப்பித் திருப்பிச் சொல்லியும்கூட அவனால புரிஞ்சிக்க முடியலைன்னா, வேற என்ன சொல்ல முடியும்?"

சதாசிவதீட்சிதன்: "மதியத்திலேர்ந்தே அவன் படிச்சிட்டே இருந்தான். மனப்பாடம், எழுத்து வேலன்னு செய்தப்பறம் மூளயும் மனசும் சோர்ந்து போயிருக்கும். அந்த நேரத்துல எந்தப் புது விஷயமும் மனசுல படியாது."

நாரப்பய்யா: "நீங்க சொல்லிக் கொடுக்கற முறை சாதாரண சின்னக் குழந்தைக்குக் கூடப் புரியும். பழத்த உரிச்சிக் கொடுக்கற மாதிரி சொல்லித் தந்தீங்க"

சதாசிவதீட்சிதன்: "அந்த நேரத்தில அவன் மூளை எந்த அளவுக் களைச்சிப் போச்சோ, அந்த அளவுக்கு நம்ம மூளை களைச்சிருக்காது. ஒரு வேளை களைச்சிருந்தாக் கூட பெரியவங்களா இருக்கறதால நாம தாங்கிக் கறம். சின்ன புள்ளையா இருக்கறதால அவனால தாங்கிக்க முடியலை".

நாரப்பய்யா: "மூளை இருந்தா போதும். அதில சின்னவங்க என்ன, பெரியவங்க என்ன? மூளைக்கு ஆயாசமுன்னு ஒன்னு இருக்குதா என்ன? சின்னப் புள்ளைங்களுக்கு விளையாட்டுத்தனம் அதிகம். அதனால அடிக்கடி கவனம் தப்பி அங்க இங்க பார்க்க ஆரம்பிச்சிடுவாங்க. சொல்லிக் கொடுக்கற பாடங்கள சரியா கேட்டுக்கறதில்ல. சுடச்சுட முதுகுல நாலு அடி கொடுத்தால் தானா கவனமெல்லாம் பாடத்துக்குத் திரும்பும்.

சதாசிவ தீட்சிதன்: "அது தப்பு ஆசிரியரே, சொல்லிக் கொடுக்கறதப் பற்றி உங்களுக்கும் எனக்கும் இருக்கற அபிப்பிராய வித்தியாசம் இந்த இடத்தில தான். சின்ன குழந்தைங்க கேக்கறவங்களுக்கு எதுவும் புரியாம கொழறிக் கொழறிப் பேசும். இரண்டு மூணு வயது ஆகும் போது இன்னும் கொஞ்சம் அதிகமாகும் பேச்சு. ஆனா அவுங்களுக்கு எழுத்துக் கூட்டிப் பார்க்கத் தெரியுமா? கணக்கு போட முடியுமா? முடியாது. அதுக்கு இன்னும் கொஞ்ச காலம் போக வேணும். உடம்பு வளர வளர மூளையும் கொஞ்சம் கொஞ்சமா வளரும். தன்னுடைய கடமைகள், எது செய்யலாம், எது கூடா துங்கற தெளிவு எல்லாத்தயும் தெரிஞ்சிக்குவாங்க. வயது அதிகமாக அதிகமாக இந்தத் தெளிவும் அதிகமாகும். உடம்பு பலம் அதிகமாக இருக்கறவங்க அதிக நேரம் வேலை செய்வாங்க. சக்தி கொறைச்சலா இருக்கற சின்ன புள்ளைங் களால கொஞ்ச நேரம்தான் செய்ய முடியும். அவுங்ககிட்டேர்ந்து அதிக நேரம் வேலை வாங்கினால் ஆயாசம்தான் அதிகமாகும். பெரியவங்களுக்கு அந்த அளவு ஆயாசம் தெரியாது. உடம்புக்கு எப்படி இந்த சக்தி, ஆயாசம் எல்லாம் இருக்கிறதோ, அப்படியே மூளைக்கும் உண்டு. அனுபவத்திலேயே இது பார்க்கக் கூடிய விஷயம்தான். இதனாலதான் சின்ன புள்ளைங்களுக்கு மூளைச்சக்தி கொறைச்சலாகவும், பெரியவங்களுக்கு அதிகமாகவும் இருக் கிறது. மூளைக்கும் ஆயாசம் உண்டு. எல்லா விஷயங்களிலேயும் பெரியவங் களும் சின்னவங்களும் சமம்ன்னு நீங்கள் நினைக்கக் கூடாது."

நாரப்பய்யா: "ஒரு கேள்வி கேட்டா சில புள்ளைங்க சட்டென்று பதில் சொல்லிடும். மத்த புள்ளைங்களும் ஏன் அப்படி பதில் சொல்ல முடியாம இருக் கறாங்க? ஒரே வயது, ஒரே வகுப்பு. ஒரே பாடம். படிக்கும்போது ஒருத் தனுக்குப் புரியும்போது மற்றவனுக்கு புரியாம போவது எப்படி?"

சதாசிவதீட்சிதன்: "கொஞ்சம் ஆழமா யோசிச்சா இது புரியும். ஒருவ ரோட மூளை அமைப்புக்கும் இன்னொருவரோட மூளை அமைப்புக்கும்

வித்தியாசம் இருக்கிறது. அதனோட வேலைப்பாடு அதிகமாகவும் கொறைச் சலாகவும் இருப்பது எல்லாமே போன ஜென்மத்துப் பலன். ஆனாலும் கூட, சொல்லிக் கொடுக்கற பாடத்தத் தெரிந்து கொள்ளும் சூழலில் அந்தப் பையனுடைய ஆரோக்கியம், சாப்பாடு முறை, பாடம் கேட்கும்போது அவன் மனசில் ஓடும் எண்ணங்கள்? கவனிக்கும் முறை, மனசில் இருப்பதை அப்படியே பேசத் தெரிகிற சாமர்த்தியம், அது பற்றிய தெளிவு, சொல்ல ஆரம்பிக்கும் போது மனசில் உண்டாகக் கூடிய பயத்தின் அளவு, இது எல்லாம்தான், புரிந்து கொள்கிற சக்தியின் அளவு ஒரு பிள்ளைக்கும் இன்னொரு பிள்ளைக்கும் வித்தியாசமாக இருப்பதற்கு காரணம். கொஞ்சம் ஆழமா, இதனுடைய சூட்சுமம் என்னன்னு பார்த்தா புரியும்'.

நாரப்பய்யா: "இப்படியெல்லாம் யோசித்துப்பாடம் சொல்லித் தருவது சாத்தியம் தானா?"

சதாசிவதீட்சிதன்: "சாத்தியம் ஆசிரியரே. எல்லாவற்றையும் யோசித்து விட்டு பிள்ளைகளின் புத்தியுடைய பலம், பலவீனம் எல்லாம் தெரிந்து நடப்ப வனும், அதற்குத் தகுந்த மாதிரி பாடம் சொல்லித் தருபவனும் நல்ல ஆசிரியன். பாடம் சொல்லிக் கொடுக்கிற வித்தை, இன்னொரு உடம்புக்குள் கூடுவிட்டு கூடுபாய்கிற வித்தை இரண்டும் ஒன்றே. நான் சொல்லிக் கொடுப்பதை எந்த மட்டத்தில் ஒரு பையன் புரிந்து கொள்கிறானோ, அந்த மட்டத்தின் அளவு எது என்று ஒரு ஆசிரியர் கண்டுபிடித்து விட்டால் போதும், ஒரு பையனுக்குப் புரியும் பாடம் எது, புரியாத பாடம் எது என்கிற விஷயம் எல்லாம் புரிந்து விடும். நமக்குத் தெரியாத ஒரு பாடத்தை நமக்கு இன்னொருவர் சொல்லித் தரும்போது நம் தேக ஆரோக்கியம் எப்படி இருக்கிறது என்பது நம் ஞாபகத்தில் இருக்க வேண்டும். பாடம் சொல்லிக் கொடுக்கறவங்களுக்கு இந்த சகிப்புத் தன்மையும், பொறுமையும் அவசியம் இருக்க வேண்டும். ஆனால் இந்த வழியைவிட்டு சில ஆசிரியர்கள் வேறு வழி நடக்கிறார்கள். குறும்புக் கார பிள்ளைகளுக்குத் தன்னைக் கண்டதும் பயமுண்டாகச் செய்வதே ஆசிரியர் என்கிற பதவிக்கும் வார்த்தைக்கும் அர்த்தம் என்று சிலர் தவறாக எண்ணிக் கொண்டுள்ளார்கள். பாடங்களைக் கேட்டுக் கொள்ளும் போதும், சொல்லும்போதும் பிள்ளைகள் மனத்தில் தெளிவும் அமைதியும் இருக்க வேண்டியது அவசியம். அதற்கு ஒரு வாய்ப்பு தராமல் அடி உதையின் பயத்தை அவர்களின் மனசில் உருவாக்கக் கூடாது. உட்கார்ந்தால் அடி, நின்றால் அடி, ஏதாவது ஒரு கேள்விக்குச் சரியாக யாராவது பதில் சொல்லிவிட்டால் 'உன்னைக் கேட்டது யார்' என்று அடி, யாராவது சொல்லாமல் விட்டால் 'இது கூடவா தெரியலை?' என்று அடி, இப்படி அடி கொடுப்பதே முக்கால்வாசிப் பாடமாகி விடுகிறது. ஒரு பாடத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டு "ஒழுங்காகத் திருத்தமாகத் திரும்பித் திரும்பிப் பத்து தரம் படியுங்க" என்று சொல்ல வேண்டியது. ஏற்கனவே பயமே நிறைந்து கொண்டிருக்கிற காரணத்தால் சரியாகப் படிக்கத் தெரிந்திருந்தும் கூட நாக்கு குழறி தப்பும் தவறுமாக

பையன்கள் படிக்கும் போது 'ஏன் தப்பாகப் படிக்கிறாய்?' என்று மீண்டும் அடிப்பது. இதுவே வாடிக்கையாகி விட்டது".

நாரப்பய்யா: "அப்படி என்றால் சிரமப்பட்டு பாடம் சொல்லித் தந்து அவர்களைத் தயார் செய்கிற என் முயற்சி கடலில் பெருங்காயம் கரைத்த மாதிரி என்கிறீர்களா?"

சதாசிவதீட்சிதன்: "கோபித்துக் கொள்ள வேண்டாம். உலக நடப்பில் இருக்கிற விஷயங்களைச் சொன்னேன்".

நாரப்பய்யா: "அடிவிழும் என்கிற பயம் இருந்தால் தான் ஞாபகப் படுத்தியாவது கேள்விக்குப் பதில் சொல்வார்கள்".

சதாசிவதீட்சிதன்: "பயம் அதிகமாக அதிகமாக ஞாபக சக்தி குறையக் கூடும். அடிவிழும் என்பதால் சிறுவர்கள் மனசில் உருவாகும் பயத்துக்கும், அவர்கள் ஒப்பிக்கிற பாடத்துக்கும் இருக்கிற சம்பந்தம் ஒரு கற்பனைதான். ஒப்பிக்கும் போது அடிகளின் ஞாபகம் வருகிற காரணத்தால் இரண்டு விஷயங்களுக்கும் ஏதோ ஒரு சம்பந்தம் இருப்பது போல தோன்றுகிறது. பயத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் மனம் கசப்பாகவே பார்க்கிறது. கசப்பான விஷயங்கள் எதுவும் ஞாபகத்தில் நிலைப்பதில்லை. அடிவிழும் என்கிற பயத்தின் காரணத்தால் தெரிந்து கொள்ள நேர்கிற விஷயம் மனசில நிற்காமல் கண்டிப்பாக மறந்து போகும். விருப்பத்துக்கு மாறாக நிர்ப்பந்தத்தின் காரணமாக மனப்பாடம் செய்து கொள்கிற ஒரு விஷயம் தற்காலிகமாக ஞாபகத்தில் படிந்தாலும் அப்புறம் மறந்து போகும். சொல்லிக் கொடுக்கிற பாடம் மறந்து போகிற அளவுக்கு நானே ஒரு வழியை உருவாக்கி விட்டுவிட்டு, அதற்கப்புறம் 'மறந்து போச்சு' என்று சொல்கிற பிள்ளைகளை தண்டிப்பது எவ்வகையில் நியாயமாகும்?"

நாரப்பய்யா. "சொல்லிக் கொடுக்கிறதையெல்லாம் 'மறந்து போகட்டும்' என நினைத்துக் கொண்டு சொல்லித் தருகிறேன் என்கிற மாதிரியல்லவா இருக்கிறது உங்கள் பேச்சு?"

சதாசிவதீட்சிதன்: ஆழமாகப் பேசிக் கொண்டிருக்கும்போது நாரப் பய்யாவின் சுபாவங்களும், பழைய அனுபவங்களும் ஞாபகத்துக்கு வந்தன. சற்றே கோபமேறிய குரலில் பேச ஆரம்பித்தான் பாடத்தை மறந்தாலும் பரவாயில்லை. நீங்க கொடுக்கிற அடி முதலில் பாடத்தின் மேலே ஒரு வெறுப்பைக் கொடுக்கும். அப்புறம் அதைச் சொல்லிக் கொடுக்கிற உங்கள் மேலேயே திரும்பும். இது எந்த அளவுக்கு பொய் அல்லது எந்த அளவுக்கு உண்மை என்பது உங்களுக்கே தெரியும். இத்தனை நாட்கள் நீங்கள் அனுப வித்து வருகிற வலியும் வேதனையுமே இதற்குச் சாட்சி. பிள்ளைகள் எல்லாம் ஊரைவிட்டுப்போய் மடமே இல்லை என்கிற நிலையாகிவிட்டது. மாதத்துக்கு ஐந்து வராகன் அல்லது ஆறு வராகன் என வந்து கொண்டிருந்த நிலையும் போய்விட்டது. இதுவும் ஒரு சாட்சி. ஆசிரியருக்கு இருக்கிற தகுதிக்குத் தகுந்தபடியே மாணவர்கள் உருவாகுகிறார்கள்"

நாரப்பய்யா: "நல்ல மாணவர்கள் என் மடத்தில் உருவாகவில்லையா?"

சதாசிவதீட்சிதன்: "எத்தனை பேர் எந்த அளவுக்கு உருவாக வேண்டுமோ, அந்த அளவுக்கு உருவாகவில்லை"

நாரப்பய்யா: "கொஞ்ச எண்ணிக்கையிலாவது உருவானார்கள் அல்லவா?"

சதாசிவதீட்சிதன்: "அடித்துச் சொல்லித் தருகிற எந்தப் பாடமும் யாருக்கும் வராது. பயம் காட்டாமல் பொறுமையாக கற்பிக்கிற பாடத்தைக் கற்றுக் கொள்கிறவர்கள் மட்டுமே அதனைப் புரிந்து கொள்கிறார்கள். நானும் மடத்தில் அடி வாங்கி இருக்கிறேன். அடிவாங்கிய பயத்தாலும் கலவரத்தாலும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் எல்லாம் எனக்குச் சொல்லித் தரப்பட்ட பாடங்கள் எதுவும் என் ஞாபகத்தில் இல்லை".

நாரப்பய்யா : "நீங்கள் சொல்கிறபடி பார்த்தால் நான் எந்த வேலைக்கும் உபயோகமில்லாதவன், அல்லவா?"

சதாசிவதீட்சிதன்: "உபயோகமில்லாத எந்தப் பொருளும் இல்லை, மனிதனும் இல்லை"

நாரப்பய்யா: "உங்கள் வார்த்தைகளின்படி பார்த்தால் நான் உபயோக மற்றவன்"

சதாசிவதீட்சிதன்: "என் பேச்சு உங்களுக்குக் கோபத்தை மூட்டிவிட்டது என்று எண்ணுகிறேன். ஆசிரியரே, தயவு செய்து கோபம் கொள்ள வேண்டாம். இந்த சந்தர்ப்பத்திலேயே இன்னும் சில ரகசியங்களையும் சொல்கிறேன், கேட்டுக் கொள்ளுங்கள். கோபித்துக் கொண்டுதான் தீருவேன் என்று நீங்கள் முடிவு கட்டி இருந்தால் நான் மட்டுமல்ல, யார் சொன்னாலும் உங்களுக்கு கோபம் உண்டாகத் தான் செய்யும். இது தொடர்பாக இன்னும் சில விஷயங்களையும் சொல்ல வேண்டும். அதையும் சொல்லி விடுகிறேன், கேளுங்கள்".

நாரப்பய்யா: "சரி, சொல்லுங்கள்"

சதாசிவதீட்சிதன்: "சொல்கிறேன். குழந்தைகள் அழும் போது அதைக் கேட்டு உருகாத நெஞ்சை கல்மனசு என்று சொல்கிறோம். கல்மனசுக்காரர் களுக்கு குழந்தை பிறப்பது அபூர்வம். இருந்தாலும் அது உயிர் தரிப்பது அபூர்வம். இன்னொரு கோணத்தில் குழந்தைகள் யாரும் இல்லாத கார ணத்தால்தான் மனசு கல்லாகி விடுகிறது என்று சொல்லலாம். இளகின மனம் இருக்கிறவர்களுக்குத் தான் குழந்தை பிறக்கும். குழந்தைகள் பிறக்கப் பிறக்க மனம் மேலும் இளகும். பலவீனமானவர்கள், வயதானவர்கள், ஏழைகள் மூவருமே அந்த பரமாத்மனுக்கு நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள். வெள்ளை மனசுடைய குழந்தைகள் கடவுளுக்கு வெகுசமீபத்தில் இருக் கிறார்கள். சனகன், சனந்தன், சநத்குமாரர், சனத்ஸுஜாதர், ஆகிய நான்கு பெரிய யோகிகளைக் கடவுள் தன் மனத்திலிருந்து உருவாக்கி அவர்கள் என்றென்றும் பால்ய வயதுடையவர்களாகவே இருக்கிற மாதிரி, கருணை

காட்டினான். அத்துடன் என்றென்றும் அவர்களைத் தன் பக்கத்திலேயே வைத்துக் கொண்டு ஆனந்தத்தில் மிதந்தான். அது மட்டுமில்லை, துருவராஜன் வாழ்ந்த கதை தெரியும் அல்லவா? பிரகலாதனைக் காப்பாற்றியவர் யார்? கோலூரில் ஒரு சின்னச்சிறு குழந்தையின் பிரார்த்தனையை மதித்து வாய் திறந்து குழந்தை இட்டதைக் குடித்து கடைசியில் அந்தக் குழந்தையையும் காப்பாற்றியது அந்த பரமேஸ்வரன்தானே? முக்கியமான மகரிஷிகள் எப்போதும் இறைவனுக்குப் பக்கத்திலேயே கொஞ்சம் கூட அகலாமல் நிற்கி றார்கள். அதனாலேயே 'பக்தபராதீனன்' என்கிற பெயர் அவனுக்கு இருப்ப தாய்ச் சொல்வார்கள். பகவான் சந்தியாவந்தனம் செய்வதற்காக அஸ்தினா புரம் சென்றாராம் ஒருமுறை. அவரைக் கையோடு அழைத்துச் சென்று உபசரிக்க நான் நீ என்று சக்ரவர்த்திகளுக்குள் ஒரு போட்டி. பகவானோ அதைப்பற்றி எல்லாம் கவலைப் படவில்லை. 'உனக்குக் கொடுப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை' என்று சொன்ன ஏழை எளியவன் வீட்டுக்குச் சென்றார். உள்ளங்கையில் அவன் ஊற்றிய ஒரு சொட்டுப் பாலைச் சந்தோஷ மாய்ச் சாப்பிட்டுவிட்டு அவனது குடிசை வாசலில் பால் வெள்ளமே ஓடச் செய்த அந்த 'பக்த பராதீனனு'க்குப் பக்தர்களைக் காப்பாற்றும் பொருட்டு உருவாகும் அக்கறையைப் பற்றிச் சொல்ல வார்த்தைகள் போதா!.

நாரப்பய்யா: 'அது சரி, அந்தப் புராணங்களை எல்லாம் எதற்கு என்னிடம் சொல்கிறீர்கள். நீங்கள் பெரிய பண்டிதர். நீங்கள் சொல்வதைக் கேட்ட பிறகு ஞானோதயம் உண்டானமாதிரி இருக்கிறது. இனியும் பேச என்ன இருக்கிறது?"

சதாசிவதீட்சிதன்: "இன்னும் ஒரு விஷயம் சொல்கிறேன் கேளுங்கள். மாணவர்களுக்குத் தண்டனை கொடுத்தே தீர வேண்டும் என்கிற சந்தர்ப் பங்கள் கண்டிப்பாக வருவதுண்டு. அப்போது உடம்பைத் துன்புறுத்துகிற மாதிரி ஏதாவது செய்தால்தான் தண்டனை, வேறு வழியில் தண்டிக்க முடியாது என்று எண்ணிக் கொள்ளக் கூடாது. பிள்ளைகளிடம் மிகவும் அன்பாக இருந்துதான் அவர்கள் மூலம் ஆகவேண்டிய காரியங்களைச் சாதித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தப்பு செய்யும் தருணங்களில் நம் அன்பில் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் போதும், நூறு மடங்கு அளவு தண்டித்துவிட்டதைப் போல அவர்கள் உணர்வார்கள்".

இவ்விதமே பேசிக் கொண்டே சென்ற சதாசிவ தீட்சிதனும், நாரப் பய்யாவும் சுனையில் சந்தியாவந்தனத்தை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். தீட்சிதன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நாரப்பய்யா வின் மனத்தில் நன்றாகப் பதிந்தது. அதைப் பற்றியே முன்னும் பின்னும் ஆழமாய் ஆலோசித்த படியிருந்தார் ஆசிரியர். அதனால் திரும்பும் வழியில் மௌனமாகவே நடந்தார்கள். மௌனத்தைக் கலைத்தபடி சதாசிவதீட்சிதன் மீண்டும் ஆசிரியரைப் பார்த்துச் சொல்லத் தொடங்கினான்.

"மேலோட்டமான சில விஷயங்களைப் பற்றி மட்டும் தான் சொன்னேன். இன்னம் சில நுணுக்கமான விஷயங்களும் உண்டு. தந்தையாக இருந்தாலும் சரி, தாயாக இருந் தாலும் சரி அல்லது ஆசிரியராக இருந்தாலும் சரி, பிள்ளை களுக்கு பயமுண்டாக்கித் தண்டித்துக் கொண்டே வரும் பட்சத்தில் பெரிய வர்கள் சொல்கிற விஷயங்கள் மேல் நாட்டமோ, ஆர்வமோ பிறப்பதற்குப் பதிலாக, அவர்கள் எது சொன்னாலும் அடி, உதைதான் என்கிற எண்ணம் உண்டாகி விடுகிறது. பெரியவர்கள் மேலும், ஆசிரியர்கள் மேலும் ஒரு விதமான வெறுப்பே உருவாகிறது. தாய் தந்தைமேல் பிள்ளைகளுக்கு வெறுப்பு பிறப்பது இதனால்தான். ஆசிரியர்கள்மேல் மாணவர்களுக்கு வெறுப்பு பிறப்பது இதனால்தான். இவ் விஷயத்தைக் குறித்து ஆழமாக யோசிக்க யோசிக்க, இன்னும் பல நுணுக்கமான விஷயங்கள் புலப்படும்".

பேசிக் கொண்டே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த இருவரும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு உறங்கச் சென்றார்கள். நாரப்பய்யாவுக்கத் தூக்கம் வர வில்லை. சதாசிவ தீட்சிதன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் மீண்டும் அசை போட்டான். இரவெல்லாம் இதே ஆலோசனை. ஒரு சொற் பொழிவைப் போல சதாசிவ தீட்சிதன் முன் வைத்த விவாதங்கள் எல்லாம் ஆசிரியரின் மனத்தைக் கலக்கி விட்டன. யாராய் இருந்தாலும் தன் தவறு சுட்டிக் காட்டப் படும் போது கோபம் வருவது உலக இயற்கை அந்தக் கோபம் நாரப்பய்யாவின் மனத்தைக் கெடுத்தது. தன்னை அவமானப்படுத்த வேண்டும் என்கிற எண்ணத்திலேயே இப்படியெல்லாம் சதாசிவதீட்சிதன் பேசினான் என்று தவறாகப் புரிந்து கொண்ட நாரப்பய்யாவின் மனத்தில் கல்மிஷம் பிறந்தது.

இதற்கிடையில் மாணவர்கள் யாரும் வராமல் மடம் குறைந்தது. வேதனையில் நாள்களைக் கழித்தார் நாரப்பய்யா. ஐந்தாறு மாதங்கள் கடந்தன. நடுவில் உடல் காயங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் ஆறிக் கொண்டு வந்தன. வேளாவேளைக்கு வீட்டில் அரிசிச் சோறு, மணமான சாறு, நெய் கலந்த சாப்பாடு கிடைத்தது. சாப்பிட்டு முடித்ததும் செய்வதற்கு எந்த வேலையும் இல்லாமல் கோலாப்பூர் அம்மன் கோயில் பக்கம்போய் உட்கார ஆரம்பித்தார். அங்கே அப்பாஜியுடன் நட்பாகி பேசிப் பொழுதைக் கழித் தார். இருவருக்குமிடையில் நட்பு நாளடைவில் வளர்ந்து நெருக்கம் மிகுந்தது. வழக்கமாய்ச் செல்லும் நேரத்தில் நாரப்பய்யா செல்வதற்குக் கொஞ்சம் தாமதமானாலும் பொறுத்துக் கொள்ள இயலாதவனாக அப்பாஜி ஆள்விட்டு அனுப்பினான். இதனால் அப்பாஜி வழியாக ஊரின் வேறு வேறு முக்கி யஸ்தர்களும் நாரப்பய்யாவுக்கு அறிமுகமானார்கள். விஜய யாத்திரைக்குப் புறப்படும் தருணங்களில் அவர்கள் நாரப்பய்யாவுடனும் கலந்தாலோசித்துச் செல்லத் தொடங்கினர். நாளடைவில் கிராமத்து மக்கள் அனைவரும் நாரப் பய்யாவிடம் மிக அதிக அளவு பக்தியும் நம்பிக்கையும் கொள்ளலானார்கள்.

நாரப்பய்யாவும் தன்னால் முடிந்த அளவுக்கு அவர் களுக்குப் பலவிதங்களில் உதவி செய்தார். இதற்கிடையில தான் மேற்சொன்னபடி சதாசிவதீட்சிதன் விஷயத்தில் அவருக்கு சற்றே மனக்கசப்பு உண்டானது. நீறுபூத்த நெருப்பு போல இக்கசப்பு அவர் மனசின் அடியில் இருந்தாலும் மேலுக்குச் சாதாரணமாகவே காட்டிக் கொண்டார். "என்னை உபயோக மில்லாதவன் என்று சொல்லிவிட்டான் அல்லவா இந்த தீட்சிதன்," என்று அடிக்கடி நினைத்து மனம் குமுறினார். ஏதாவது ஒரு வழியில் எப்படியாவது பதிலுக்குப்பதில் அவனைச் சிறுமைப்படுத்த வேண்டும் என்று மனத்துக் குள்ளேயே திட்டமிட்டிருந்தார். தனக்கு மிகவும் நெருங்கிய அப்பாஜியிடம் அடிக்கடி இதைப் பற்றிக் கலந்தாலோசிக்கவும் செய்தார். இந்த எண்ணத்தின் வேகம் வளர வளர, மனசுக்குள் இருந்த கசப்புணர்வு வெறுப்பாக மாறியது. நன்மையின் பொருட்டு தீட்சிதன் சொன்ன வார்த்தைகள் இப்படி ஒரு வெறுப்பையுண்டாக்கியதும், அவன் செய்த உதவிகள் எல்லாம் குரோதத்தின் புகையில் மறைந்து அடங்கின. இவ்வளவுக்குப் பிறகும் தீட்சிதன் வீட்டிலேயே அவர் தொடர்ந்து சாப்பிட்டுக் கொண்டு வந்தார். அங்கேயே படுக்கவும் செய்தார். எந்தக் காரணத்தாலும் அது மாறவில்லை. அதை விட்டால் ஒரு வேளை சோறு போடக் கூட அந்த ஊரில் யாரும் இல்லை. எல்லாரும் வாய்ப் பேச்சாக ஆயிரம் பேசுவார்கள். வேண்டிய அளவு நெருங்கி நட்பு பாராட்டுவார்கள். ஆனால் செயல் பூர்வமாய் ஒரு உதவி என்று வந்ததும் எல்லாரும் பின் வாங்குவார்கள். ஆயிரம் முறைகள் 'கடவுளே கடவுளே' என்று சொல்லக்கூடும். ஆனால் 'அம்மா பிச்சை' என்று வருகிறவனுக்கு ஒரு வாய்ச் சோறு போட மனம் வருவது கஷ்டம். நாரப்பய்யாவின் வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது.

7

இதற்கிடையில் மகாதேவனின் படிப்பு தடையின்றி நடந்து வந்தது. 'நன்றாக படிக்கிற பையன்' என பார்க்கிறவர்கள் புகழும்படி அவன் படித்தான். இவன் அழகு, கல்வி, தகுதியையும் இவனுடைய தந்தையின் செல்வத்தையும் பார்த்த வர்கள், இவனுக்கென பெண் கொடுக்க 'நான் நான்' என முன்வந்தார்கள். தன் மாமனாகிய பசுபதி சாம்ப சாஸ்திரியுடன் கலந்தாலோசிக்காமல் எந்த விஷயத்திலும் சதாசிவ தீட்சிதன் முடிவெடுக்கிற வழக்கமில்லை. கடைசியில் சாம்ப சாஸ்திரியின் மகனுடைய மகளை மருமகளாக்கிக் கொள்வது என்று முடிவானது. பன்னிரண்டு பொருத்தங்களும் சரியாக இருந்தன. மைசூரி லேயே திருமணம் நடந்தது. அவள் அழகைப் பற்றியும், குண நலன்களைப் பற்றியும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. போகப் போக எல்லாம் தெரியும். சாம்பசாஸ்திரியின் மேல் தனக்கிருக்கும் கௌரவத்தையும், மரியாதையையும் புலப்படுத்தும் தருணம் இதுவே என நினைத்து விட்டதைப் போல கிருஷ்ணராஜ உடையார் திருமணத்துக்குத் தேவையான சகல பொருட் களையும் அரண்மனையிலிருந்து கொடுத்தனுப்ப ஏற்பாடு செய்தார். மிகவும் விமரிசையாய் திருமணம் நடந்தது. திருமணத்தின் இறுதி நாள் வரைக்கும், ஊர்வலத்துக்குத் தேவையான ஆனை, அம்பாரி, கொம்பு ஊதுபவர்கள், குழல் ஊதுபவர்கள், இசைக் கலைஞர்கள், விளக்கு சுமப்பவர்கள், அவற்றிற்கு எண்ணெயும், திரியும் மாற்றுகிறவர்கள், உதவி ஆட்கள் எனப் பலரையும் அரண்மனையிலிருந்து அனுப்பி வைத்திருந்தார். அரண்மனை அதிகாரிகள், அறிஞர்கள், கலைஞர்கள் மற்ற பணி ஆட்கள் எல்லாருக்கும் விருந்துபசாரம் நடந்தது. ஒவ்வொரு நாளும் வகை வகையான பணியாரங்கள் செய்து படைத்தனர். தினமும் மண்டபத்தில் நடனம் ஏற்பாடானது. கூடவே சங்கீதக் காரர்களின் கச்சேரி நடுநடுவில் விதூஷகனின் சிரிப்பு வெடிகள் அனைத் தையும் மீறி எழும் வேத கோஷங்கள் . எல்லாம் சாஸ்திரப்படியும் சம்பிரதாயப் படியும் நடந்தேறின.

இந்த அளவு சந்தோஷமாகவும், ஆடம்பரமாகவும், சீரும் சிறப்புமாகவும் திருமணம் நடைபெற அரசரும், அரசர் செய்து தந்த எற்பாடுகளும்தான் முக்கிய காரணங்கள் என சாம்பசாஸ்திரிக்கும், மற்றவர்களுக்கும் தெரிந்தே

இருந்தது. அதற்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு அரசரைப் பார்க்க விரும்பினர். ஒரு நாள் காலையில் ஒய்வாக அவரைக் கண்டுவரச் சென்றார்கள். சிவபூஜையில் அரசர் ஈடுபட்டிருக்கிறார் எனத் தெரிந்ததும் அரண்மனையிலேயே காத்திருந்தார்கள். அவர்கள் கொண்டு வந்திருந்த பழத்தட்டுகள், பூத்தட்டுகள், இனிப்புத் தட்டுகள் ஆகிய வரிசைத் தட்டுகளை எல்லாம் முன் வைத்துக் காத்திருந்தார்கள். சாஸ்திரியின் பக்கத்திலேயே சற்று தூரத்தில் சாம்பசிவ தீட்சிதனின் நின்றிருந்தான். அப்போது அரசர் உள்ளே நுழைந்தார்.

அரசர்: "என்ன சாஸ்திரிகளே, திருமணம் எப்படி நடந்தது?"

சாம்பசாஸ்திரி : "உங்கள் கருணையாலும், தயவாலும் நல்லபடி நடந்தது, அரசே".

அரசர்: "என்னப்பா சதாசிவா...! நல்ல சம்பந்தம் கிடைத்துவிட்டது என்கிற சந்தோஷத்தில் நம்மோடு பேசக்கூட இல்லாமல் தூரத்திலேயே நின்று கொண்டிருக்கிறாயா? (சிரித்தபடியே கேட்டார்)

சதாசிவதீட்சிதன்: "மகாராஜா, நீங்கள் சொன்னபடி நான் சந்தோஷப் படுவதற்குக் காரணம் நீங்களேதான்"

அரசர்: "என்னப்பா, பேச்சை என் பக்கமே திருப்பி விட்டாயே"

சதாசிவதீட்சிதன்: என் மாமாவோ அரண்மனையின் பெரிய பண்டிதர். நானோ கிராமப்புறத்து ஆள். அரண்மனைக்கும் கிராமப்புறத்துக்கும் என்ன சம்பந்தம்? ஆனாலும் உங்கள் புண்ணியத்தில் சம்பந்தம் உருவாகி இருக்கிறது. என் மேல் நீங்கள் இந்த அளவு கருணையுடன் இருக்கும் போது நான் ஏன் பெருமை கொள்ளக் கூடாது?"

அரசர்: லட்சலட்சமாகக் கிராமப்புறங்கள் சேர்ந்துதானே பட்டணமும் அரண்மனையும் உருவாகிறது?"

சதாசிவதீட்சிதன்: "அரண்மனையின் அருளும் ரட்சிப்பும் இருப்பதால் தானே கிராமப்புறங்கள் இருக்க முடிகின்றன?"

அரசர்: "பேசி உன்னை வெல்ல முடியுமா. சாதாரணமாகவே இடி இடிக்கிற மாதிரி பேசுகிற ஆள் அல்லவா நீ?"

சதாசிவதீட்சிதன் : "எல்லாம் நீங்கள் தந்தது"

அரசர்: "உங்கள் இருவரையும் பார்த்தால் எதையோ சொல்ல வந்து, சொல்வதற்குத் தயங்குகிற மாதிரி தெரிகிறது. அது என்ன சொல்லுங்கள். ஏதாவது குறை உண்டா?"

பசுபதிசாம்பசாஸ்திரி: "எல்லா சந்தோஷங்களுக்கும், பெருமைகளுக்கும் காரணமான உங்களின் பாதங்கள் எங்கள் வீட்டு வாசலில் படவில்லை என்பது குறையல்லவா அரசரே."

அரசர்: "நான் உங்கள் வீட்டுக்கு வர வேண்டும் என்கிற உங்கள் அபிமானம் புரிகிறது. உங்களைப் போன்ற அறிவாளிகள் வீட்டு வாசலை மிதிப்பது மூலம் என் ஜன்மமே புனிதமாகும்".

பசுபதிசாம்பசாஸ்திரி: "போன ஜன்மத்தில் தவம் செய்து கொண்டிருக்கும்

போது தவத்துக்கு ஏதோ பங்கம் நேர்ந்து மறு ஜன்மம் உண்டாகி, அப்புறம் உயர்பதவி கிடைக்கிறது. அப்படிபட்ட தவவலிமை உள்ளவர்களின் ஸ்பரி சத்தால் மற்றவர்களும் புனிதமாவார்கள் அல்லவா?"

அரசர் : "உங்கள் பேச்சுக்கு மறுபேச்சு பேச எனக்குத் தோன்றுவதில்லை. உங்கள் விருப்பம் எப்படியோ, அப்படியே ஆகட்டும்"

இவ்விதம் உத்தரவானது. அதற்குத் தகுந்தபடி எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. குறிப்பிட்ட தினம் சாயங்காலம் சிவப்பூஜையையெல்லாம் முடித்துக் கொண்டு அரசர் தயாரானார். ரோஜா வர்ணச் சால்வையால் சுற்றின தலைப் பாகை, வெள்ளை அங்கி இடுப்பில் செருகின உடைவாள், மடிப்பு வேட்டி ரத்தினமாலைகள். பாதுகையணிந்து பல்லக்கில் அமர்ந்ததும் சவாரி புறப் பட்டது. பிராமணர்கள் ஆசி வழங்க சுமங்கலிகள் ஆரத்தி எடுக்க, இன்னொரு புறம் மந்திரம் ஒலிக்க, குழல்வாத்தியங்கள் இசைக்க சகல மரியாதைகளுடனும் திருமண வீட்டு வாசலில் பசுபதிசாம்ப சாஸ்திரியும், மற்றவர்களும் அரசரை எதிர் கொண்டு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். அங்கே சகல அலங்காரங்களும் செய்யப்பட்டு தயாராயிருந்த பீடத்தில் உட்கார வைத்தனர். உட்கார்ந்த அரசர் சகலரையும் நலம் விசாரித்தார். அங்கிருந்த வைதிகர்கள் வேத மந்திரங்களை ஒலித்து அரசனுக்கு ஆசி வழங்கினர். மற்றவர்கள் கை கூப்பி வணங்கினர். ஒரு புறத்தில் மணமக்கள் மேடையில் உட்கார்ந்திருந் தார்கள். சமயம் நெருங்கியது. பெண்கள் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தனர். அன்றைய தினத்துக்கும், அத்தருணத்துக்கும் பொருந்துகிறமாதிரி புதிய கீர்த் தனையொன்றைப் புனைந்திருந்தான் சதாசிவதீட்சிதன். நல்ல குரல்வளம் மிக்க ஒரு சங்கீதக்காரன் அதைப் பாடினான். மணமேடை முழுக்க ஒரே குதூகலம். ஆனந்தம். அப்போது திடுமென "யா இலாஹா இல்லில்லா மொஹம் மத் ரசூலில்லா அல்லா ஹோ அக்பர் என்று சபைக்கு நடுவில் ஒரு குரல் எழுந்தது. வைதிகர்கள் கூடியிருந்த பக்கத்திலிருந்து இக்குரல் வந்தது. மேள தாள வாத்தியங்கள் எல்லாம் நின்றுவிட்டன. எல்லாருக்கும் அச்சம் பிறந்தது. எங்கிருந்துதான் அக்குரல் வந்ததெனத் தெரியவில்லை. சத்தமிட்டது தாமில்லை என்று சொன்னார்கள் அவர்கள். மனசுக்குள் வருத்தமிருந்தாலும் அதிகநேரம் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் தத்தம் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது பெண்கள் பக்கமிருந்து முந்தானையை இழுத்து தலையை மூடியபடி இருந்த ஒருத்தி சட்டென வெளிப்பட்டாள். மணப்பலகையில் உட்கார்ந்திருந்த மண மக்களுக்கு ஆரத்தி எடுத்துவிட்டு வைத்திருந்த ஆரத்தித் தட்டை எடுததுக் கொண்டு, "யாராவது வாங்க. யக்கா தொட்டச்சி யாராவது வாங்க, அடியே நீ வாடி. வா வந்து இதைப் பிடிச்சுக்கோ. ஆரத்தி எடுத்தாச் சின்னு சொல்லு. போதும்டி. ஒரு பாட்டு பாடுடி. ம். சீக்கிரம் பாடுடி. எத்தன நாழியா பல்லக்கு நிக்கறது? சரி, உங்களுக்குப் பாடத் தெரியலைன்னா விடுங்க. நல்லதா போச்சி. நானே பாடறேன். கேளுங்க..."

"மணைமேலே மாப்பிள்ளை
மகாலட்சுமி பக்கத்தில்
இளவயசுப் பிள்ளைகளுக்கு
ஏராளமா சந்தோஷம்
சுந்தர ராயர்க்கும்
சொர்ண மகாலட்சுமிக்கும்
அழகான பெண்டுகளா
ஆரத்தி எடுங்கடி"

பின்பாட்டு பாடக்கூட உங்களால முடியலியா? இந்த மாதிரி எங்கேயும் பார்க்கலடி தாயே, முடியலைன்னா விடுங்க. ஆரத்தித்தட்டுல விழற பணம் உங்களுக்குக் கிடையாது. உங்களால எனக்கும் கிடைக்காம போச்சு. வீட்டுக்குப் போனா பேச்சு வாங்கணும். ராத்திரி இத்தன நேரம் கழிச்சி வந்திருக்க வெறும் கையாகவா வந்தாய்ன்னு திட்டப் போறாங்க. என்ன பதில் சொல்ல முடியும் நான்" என்று அப்பாவிக் குரலில் கேட்டபடி முகத்தை முழுசும் மூடிக்கொள்ளும் பொருட்டு முந்தானையை மேலும் இழுத்துப் போர்த்திக் கொள்ள முயற்சித்தாள். சட்டென புடவை முந்தானை நழுவி விழ, இத்தனை நேரமும் புடவை உடுத்திக் கொண்டு பேசியது உண்மையான பெண் அல்ல என்று புரிந்தது. அது 'ரெண்டுங்கெட்டான்' நாரணப்பா என்கிற விஷயம் கணத்தில் புரிந்துவிட்டது. வயிறு புண்ணாகும்படி விழுந்து விழுந்து எல்லாரும் சிரித்தார்கள். ஆண்களும், பெண்களும் அந்த நகைச்சுவை விருந்தில் தம்மை மறந்து சிரித்தனர். அரசரும் அதைக் கண்டு சிரித்தார். "எங்கே போனாலும் இவன் ஆட்டம் விடுவதில்லை" என்று சொன்னபடி மேலும் சிரித்தார்.

அப்போது அந்த நாரணப்பா அரசரை வணங்கிச் சொன்னான்.

"மகாராஜா, நாராயணனுடைய ஆட்டம் எப்பொழுது நிற்கும்? காலையில் எழுந்திருக்கும்போதும் நாராயணா, ராத்திரி படுக்கப் போகும்போதும் சாம்ப சாஸ்திரி வீட்டுச் சாப்பாடு, இப்பொழுது ஒரு பத்து நாளைக்கு கிடைத்தமாதிரி எப்பவும் கிடைத்தால் நாராயணா, கடன் வாங்கும்போது சந்தோஷமாக நாராயணா, கடன அடைக்கும்போது அழுதபடியே நாராயணா, எங்கே போனாலும் அந்த நாராயணனுடைய லீலையே மகாராஜா, கோயிலுக்குப் போனாலும் நாராயண லீலை. அதை விட்டு மண்டபத்துக்கு வரலாம்னு நினைத்தாலும் நாராயண லீலை. உண்மையா, இல்லையா என்று நீங்கள் தான் சொல்ல வேண்டும்".

பல்லக்கின் பக்கத்திலேயே நின்றிருக்கும் ஒரு பல்லக்குத் தூக்கிக்கு எப்போது பேச்சைத் தொடங்கினாலும் 'நாராயணன் மகிமை' என்று சொல்லிவிட்டுத் தொடங்கும் பழக்கம் இருந்தது. இவனுக்கு நாராயணன் மகிமை என்பதே பட்டப் பெயராகி எல்லாரும் அந்தப் பெயரையிட்டே அழைத்தார்கள். ரெண்டுங்கெட்டானான நாரணப்பா கேட்ட கேள்விக்குப்

பதில் சொல்லும் முகமாக "நாராயணன் மகிமை" என்று பேச்சைத் தொடங்கினான் "உண்மையா இல்லையூா, அதைச் சொல்லய்யா என்று அவன் முதுகில் செல்லமாக குத்தத் தொடங்கினான் இவன். "நாராயணன் மகிமை, நாராயணன் மகிமை" என்று கூவிக் கொண்டே ஓடினான் அவன். இதைப் பார்த்து விழுந்து விழுந்து சிரித்தார்கள் சபையில் இருந்தவர்கள். அப்புறம் ஆரத்தி எடுக்க வேண்டிய நேரத்தில், பெண்களும் வயதானவர்களும் வெட்கத்தால் முன்வரத் தயங்கி ஒதுங்கிக் கொண்டனர்.

அரசர் புறப்படும் சமயம் நெருங்கியது. அப்போது ரெண்டுங்கெட்டான் நாரணப்பா மீண்டும் பேசத் தொடங்கினான்.

"அரசே, உங்கள் முன் வைக்க இன்னொரு செய்தியும் உள்ளது. பசுபதி சாம்பசாஸ்திரிகள் மிகப்பெரிய சாஸ்திரியாக இருக்கிறார். இவர் செய்திருக்கிற ஒரு காரியத்தைப் பற்றி அவசியம் தெரிவிக்க வேண்டும். வெங்கட சுப்பையா என்று ஒரு பெரிய மனிதர் இருந்தார். நம் அப்பா, அவர், பிராமணர்களுக்கு விருந்து வைக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். தானே இருந்து எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பதும் அவர் ஆசை. சரி என்று ஆரம்பித்து விட்டார். அதை விவரிக்க வேண்டுமென்றால் பத்து வாய் போதாது. 'அறுபது வகைச் சோறு, ஆயிரம் வகைக் குழம்பு கோடி வகை கூட்டும் பொறியலும் என்று சொல்கிற மாதிரி ஒரு விருந்து நடந்தது. அதைப்பற்றி எப்படிச் சொல்ல. ஆனால் அதைப் போல ஒன்று வேறு எங்கும் நடக்கவில்லை. புழுங்கலரிசிச் சோறு, மிளகாய்ச் சாறு, தண்ணீர் மோர் இதையே படைத்து எல்லாருடைய அஜீரணத்தையும் போக்கிவிட்டார்."

"அன்னம் பாடலிபுஷ்வவர்ண சத்ருஷ்யம்
கிஞ்சித்து ஷாரான்விதம்
பக்னாச்ச தந்தாவளே ஆஜ்யம் தூரதரம்
நவாப்பிலவணம்
ஷாகாசுவஸ்தானஹி நித்யம்
சித்ரவிசித்ர போஜன மீதம் ப்ரத்யட்ச சாந்த்ராயனம்"

என்கிற சுலோகப்படியே எல்லாம் இருந்தது. ஆனால் இந்த சாஸ்திரியோ ஏராளமான வகைவகையான பணியாரங்களை உண்மையாகவே படைத்து வயிறு நிரம்பச் செய்துவிட்டார்".

அவன் சொன்னதைக் கேட்டு சிரித்தபடியே இருக்கையைவிட்டு எழுந்தார் அரசர். அவரிடம் தாம்பூலத் தட்டை நீட்டினார், சாஸ்திரிகள். சம்பிரதாயப்படி அதைத் தொட்டு ஆசீர்வதித்து மணமக்களிடம் கொடுத்தார் அரசர். "சாஸ்திரிகளே, ஒரு பத்தினிக்குத் தேவையான (மணமகளைச் சுட்டிக்காட்டி) எல்லா குணங்களும் இந்தப் பெண்ணிடம் இருக்கக் காரணம், இவளுக்கு சீத்தம்மா என்று நீங்கள் பெயரிட்டது பொருந்திப் பலித்துவிட்டது என்பதால் தான்" என்று சொல்லி வாழ்த்திவிட்டு எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு கூட வந்திருந்த அரண்மனை ஆட்களுடன் பேசினபடியே அரண்மனைக்குப் புறப்பட்டார். அப்போது சாஸ்திரிகள் குறுக்கிட்டு, "அரசே, இந்த

கணத்தில் நான் உணரும் ஆனந்தத்தைப் போல என் ஜன்மத்தில் எப்போதும் உணர்ந்ததில்லை" என்றான். அங்கிருந்த மற்றவர்கள் அரசரின் மென்மையையும் வள்ளல் தன்மையையும் பாராட்டிப் பாராட்டிப் பேசினார்கள்.

வசதியும், மென்மையும், கம்பீரமும் ஒன்றாகி ஒருவரிடத்திலேயே அமைந்திருப்பதுவும், இது குறைவு இது அதிகம் என்று சொல்ல முடியாத வண்ணம் எல்லாம் சம அளவில் கலந்து அமைந்திருப்பதும் மிகவும் அபூர்வம். மிகப் பெரிய அதிகாரத்திலிருப்பவர்கள் இப்படி இருப்பது போன ஜன்மத்துப் பலன் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தக் காலத்தில் அரசாங்கத்தில் வேலை செய்கிற ஒரு சாதாரண ஆள் கூட பெரிய ராஜாவைப் போல ஜனங்களுக்கு மத்தியில் அட்டகாசம் செய்வதைத்தான் பார்த்திருக்கிறோம். கண்ணியமான வேலையில் இருந்து விட்டால், தன் கர்வத்தாலும், அதிகாரத்தாலும் ஜனங்களுக்குப் பலவகையிலும் துன்பம் கொடுப்பதையும் பார்த்திருக்கிறோம். ஜனங்களோடு பேசுவதும், பழகுவதும் அவர்களின் குறைகளை விசாரிப்பதும் கூட தம் கௌரவத்துக்கு இழுக்கு என்று நினைக்கிறார்கள். பேசாமல் ஜனங்கள் ஒதுங்கும் போது அவர்களுக்கு குறையே இல்லை என்று சொல்கிறார்கள். பேசத் தொடங்கினால் துஷ்டர்கள் என்று குற்றம் சொல்கிறார்கள். நாலு வார்த்தை அதிகம் பேசிவிட்டாலோ வெறுப்போடு அவர்கள் மேல் ஒரு கண்வைத்து, தருணம் பார்த்து நாசம் செய்கிறார்கள். புத்தியில்லாமலும், விவேகமில்லாமலும், குரோதத்தாலும் தான் செய்கிற காரியங்கள் எல்லாவற்றிற்கும் அரசரின் ஆணையோடுதான் செய்கிறோம் என அவர்மேல் பழி சுமத்துகிறார்கள். நல்ல காரியம் ஏதேனும் நாட்டில் நடந்துவிட்டால் அதற்குத்தாமே காரணம் என்பார்கள். கெட்டது ஏதேனும் நடந்துவிட்டால் அதற்கு அரசனே காரணம் என்பார்கள். எது எப்படி யானாலும் பொதுமக்கள் அரசனின் பக்கத்தில் நெருங்கி விடாத வண்ணம் பார்த்துக் கொள்வார்கள். தன்மேல் யாரேனும் பழி சொல்கிறார்களா என காத்துக் கொண்டிருப்பார்கள். அரசனைக் காணும் போது முகஸ்துதி செய்து பாராட்டுவார்கள். காணாத போது பழி சொல்லி வசைபாடுவார்கள். தன் வேலையை எப்பாடுபட்டேனும் காப்பாற்றிக் கொள்கிறாக்ள். பக்கத்தில் இருந்துகொண்டு நல்லவிதமாகப் பேசுகிறவர்களையே நம்பிக்கைக்குரியவர்களாக நினைத்து விடுகிறார், அரசர். அவர்கள் சொல்கிறபடி நடந்து கொள்வது மனித சுபாவம். இப்படி அரசனுக்கு அருகில் முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் சுய நலத்துக்கே பாடுபடுகிறார்கள். பொது மக்கள் அரசனைச் சந்தித்துப் பேசக்கூட முடியாதபடி செய்துவிடுகிறார்கள். இதுவே பழக்கமாகிப் பழக்கமாகி மக்களிடம் பேசுவது என்பது தன் கௌரவத்துக்கும் மரியாதைக்கும் இழுக்கு என்கிற அளவுக்கு அரசர்கள் வந்துவிடுகிறார்கள். இதனால் அரசருக்கும், மக்களுக்கும் நடுவில் சம்பந்தமே இல்லாமல் போய்விடுகிறது. இவர்கள் மனம் அவருக்கும், அவர் மனம் இவர்களுக்கும், புரியாமல் ஒரு

பரஸ்பர கசப்புணர்ச்சி பிறந்து விடுகிறது. இதனால் சக்தி வாய்ந்த அரசர் மக்களுக்கு ஏகப்பட்ட கஷ்டங்களைக் கொடுத்து தாம் மட்டும் ஆனந்தமாய் காலம் கழிக்கிறார்."

"இம்மாதிரியான நடத்தை இந்தப் பிரதேச அரசர்களிடம் மிக அதிக அளவில் இருந்ததென்னமோ நிஜம். அரசர்கள் என்று சொல்லிக் கொள்கிற வர்களுக்கெல்லாம் ஒரே மாதிரி தலையெழுத்து உடையவர்களோ என்கிற அளவுக்கு ஒன்று போலவே ஒவ்வொருவரும் இருந்தார்கள் என்பதும் நிஜம். புராணங்களில் புகழ்பெற்ற நளன், ராமன் போன்ற சக்ரவர்த்திகளும், சமீபத்தில் வாழ்ந்து மறைந்த அநேக அரசர்களும், இக்காரணம் குறித்தே 'மக்களே கடவுள்' என்று தெளிவு கொண்டிருந்தார்கள். அட்டகாசங் களையும், படாடோபங்களையும் விட்டொழித்து எல்லோரிடமும் மிக மென்மையாய்ப் பழகினார்கள். அவர்களின் இன்ப துன்பங்களை அறிந்து அதற்குத் தகுந்தபடி உதவி செய்தார்கள். பழங்காலத்தில் இருந்த பல அரசர்கள் பொது மக்களின் குறைகளையும் நிலையையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவர் களாயும் காட்சிக்கு எளியவர்களாயும், அணுகுவதற்கு சுலபமானவர் களாகவும் இருந்தார்கள். அரசாட்சியும் அதற்குத் தகுந்தபடியே நடந்து வந்தது. மேலை நாட்டுக்காரர்கள் பிரபலமாகாத காலம் அது. அவர்களின் துரை மார்களும் பெருமை கொள்ளாத காலம். நம் அரசர்களுக்கு பொது மக்களிடத்தில் ஆழ்ந்த அன்பு இருந்தது. அதைப் பார்த்து அவர்களும் அன்போடு இருந்தார்கள். இங்கிருந்த அரசர்களின் ஆடம்பரம், ஆட்ட பாட்டத்தைப் பார்த்து தாமும் அவர்கள் போல வாழ விரும்பினார்கள். பொதுமக்கள் சேவையில் நம் அரசர்களுக்கு இருந்த அளவுக்கு மேலை நாட்டுக்காரர்களுக்கப் பயிற்சி இல்லை. இதனால் வடதேசத்து மக்கள் அங்கங்கே தம் அரசர் களுடன் போராடி ஆட்சிக்குட்பட்ட மானியப் பிரதேசங் களைக் கைப்பற்றி மக்களுக்கு உகந்த வகையில் ஆட்சியை உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். இப்படி ஒரு பக்கத்தில் மக்கள் பலம் அதிகமாகிக் கொண்டிருந்தாலும், இன்னொரு பக்கத்தில் அரசர்களின் அட்டகாசங்களும், ஆடம்பரங்களும் கூட அதிகரித்துக் கொண்டே வந்தன. சுயநலக்காரர் களின் பேச்சுக்குச் செவிசாய்த்து தீயவழிகளில் இறங்கி மக்களுக்குத் துன்பம் தரும் பழக்கமும் வளர்ந்தது. இதனால் மக்களுக்கு ராஜபக்தி என்பது கொஞ்சமும் இல்லாமல் போய்விட்டது. இக்காரணத்தால் தம் பதவியையும் அதிகா ரத்தையும் இழந்த அரசர்களின் கதைகள் ஏராளம். இம் மோதலில் மக்களும் அரசர்களும் உயிரையே இழந்த கதைகளும் ஏராளமாய் உண்டு."

இந்த அளவு வெளிநாட்டில் விபரீதமாய் நடந்தாலும் கூட, நம் தேசத்தில் அந்த அளவு நடந்ததில்லை. இதற்குக் காரணமும் உண்டு. ஆடம்பரமும், பகட்டும் நம் அரசர்களின் மத்தியில் அதிகமாக இருப்பினும் சமய சந்தர்பங்கள் நேரும்போது தம் பதவிகளைத் துறந்து மக்களோடு மக்களாகக் கலந்து

பழகவும், அவர்களது குறைகளை நீக்கவும் அரசர்களாக இருப்பதால் அடாவடிக்காரர்கள் கூட மனம் திருந்தினார்கள். நம் அரசர்களுக்கு இப்படிப் பட்ட குணம் இருந்ததாலேயே மேலைநாட்டு அரசர்கள் பலருக்கு நேர்ந்த பாதிப்புகள் போல நம்மவர்களுக்கு ஏற்பட்டது இல்லை. ஆனால் சமீப காலங்களில் அவர்களைப் பார்த்து இவர் களும் மாறத் தொடங்கி விட்டார்கள். பொது மக்கள் விஷயத்தில் எந்த அளவுக்கு உதாசீனம் கொள்கிறார்களோ, அந்த அளவுக்கு அதன் முடிவுகளையும் சந்திக்கவே நேரும். இக்கோணத்தில் இருந்து யோசிக்கும் பொழுது தானே கிருஷ்ணராஜ உடையாரின் மகிமையும், தாராள மனப்பான்மையையும் பெருந்தன்மையையும் புரிந்து கொள்ள முடியும். எப்படிப்பட்ட எதிரிகளையும் இக்குணங்கள் நண்பர்களாக்கிவிடும். பொது மக்களைத் தம் சொந்தக் குழந்தைகளைப் போல எண்ணிக் கொண்டு ஆட்சி செய்யும் இவரின் விவேகத்தால்தான் இந்த அளவுக்கு மைசூர் வளர்ந்திருக்கிறது."

இப்படியாக திருமணம் நடந்து முடிந்தது. சம்பந்திகளுக்கு விருந்து உபசாரங்கள் குறையின்றி நடந்தன. மற்றபடி சம்பிரதாயப்படி மருமகனுக்கு செய்யவேண்டிய உபசாரங் களும் நடந்தன. எல்லாம் முறைப்படி நடந்தேறின. எல்லாரும் சஞ்சவாடிக்குத் திரும்பினார்கள். தன் மாணவனாகிய மகாதேவனின் திருமணத்துக்கு ஆசிரியராகிய நாரப்பய்யாவும் வந்திருந்தார். சீரும் சிறப்புமாய் நடந்த திருமணத்தின் கோலாகலத்தைக் கண்டு எதுவும் பேச வராதவராய் இருந்தார் அவர்.

தாய்வீட்டிலிருந்து சீத்தம்மாவுக்கு எல்லாவிதமான சீரும் சிறப்பும் செய்யப்பட்டன. திருமணத்திலும் சரி, சீர் வரிசைகள் செய்வதிலும் சரி, கவனித்துக் கொள்ளும் விதத்திலும் சரி, சம்பந்தி வீட்டாருக்கு எந்த மனக் குறையும் நேராத வண்ணம் நடந்து கொண்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு அத்தை வீட்டுக்குச் சீத்தம்மாவை அழைத்து வந்து வைத்துக் கொண்டிருந்தார்கள் வருஷப் பிறப்பு, தீபாவளி முதலிய பண்டிகை தினங்களில் மருமகனை வீட்டுக்கு அழைத்து விருந்துபசாரம் செய்தார்கள். பெண் வீட்டுக்காரர்கள். சில நாட்க்ளுக்குப் பிறகு சீத்தம்மா பருவம் எய்தினாள். மஞ்சள் நீராட்டு விழாவும் நடந்தேறியது. பெண்ணை மாமியார் வீட்டுக்கு அழைத்து வந்து வாழச் செய்தனர். மகளுக்கும், மருமகனுக்கும் தங்கம் வெள்ளியாலான ஆபரணங்களையும், பண்ட பாத்திரங்களையும் வாங்கிக் கொடுத்தனர். ஆடைகளைத் தைத்துக் கொடுத்தனர். மாமியார் வீட்டில் சீத்தம்மாவின் வாழ்வு தொடங்கியது.

8

திம்மம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சாவித்திரி என்று பெயரிட்டனர். செல்லமாக 'சாத்தி' என்று அழைத்தார்கள். பருவ மெய்தி சீத்தம்மா கணவனுடன் வாழ வந்த போது சாத்திக்கு ஒன்பது வயசாகி இருந்தது. உருவத்தில் தன் தாயையே கொண்டிருந்தாள் அவள். அரிக் கொட்டாரம் தேவரப்பா உடையார் மகனுக்கு இவளை மணம் செய்வித் திருந்தார்கள். சாமராஜ நகருக்கு அரிக்கொட்டாரம் என்பது பழைய பெயர். திம்மம்மாவுக்கு வேறு குழந்தைகள் இல்லாத காரணத்தால் சாத்தியே அவளுக்கு செல்லக் குழந்தையாக இருந்தாள். விரத ஒழுங்குகளைச் சீத்தம் மாவும், சாத்தியும் சேர்ந்தே பின்பற்றினர். ஜோசியர் வீட்டில் எந்த விஷ யதிலும் குறை வைப்பதில்லை. உலக ஒழுக்க விதிகளின்படியே எல்லாம் நடந்தேறின. ஏனோ புதிய மருமகளைப் பார்க்கும்போது திம்மம்மாவுக்குப் பிடிப்பதில்லை. அந்தப் பெண்ணைப் பார்க்கும் போது விஷத்தைப் பார்ப் பதைப் போலப் பார்த்தாள். முதலில் மகாதேவனுக்கு வேறு ஓர் இடத்தில் பெண் பார்த்திருந்தார்கள். திம்மம்மாவின் வழியில் மாமாவின் பேத்தி யைத்தான் பார்த்திருந்தார்கள். ஆனால் இச்சம்பந்தத்தில் சதாசிவதீட்சிதனுக்கு அவ்வளவாக திருப்தியில்லை. பார்க்க அவ்வளவாக லட்சணமில்லாதவள் அவள். இந்த உறவு வழி ஆட்கள் எல்லாம் சண்டைக்கு என்றே காத்திருப் பவர்கள். தன் சொந்த மாமாவாகிய பசுபதி சாம்பசாஸ்திரியின் வழியாக சம்பந்தத்தைப் பேசி முடிப்பதிலேயே அவனுக்கு ஆர்வம் அதிகமிருந்தது. கடவுளின் விருப்பமும் அது போலவே இருந்தது. ஆகையால் திம்மம்மா வழியாக நினைத்திருந்த சம்பந்தம் நிறை வேறாமல் போனது. சாம்ப சாஸ் திரிக்கு இருந்த சொத்தும், அரசு வழி உறவுகளும்தான் சதாசிவதீட்சிதனின் கண்ணை மூடச்செய்து, இன்னொரு சம்பந்தத்தை விலக்க வைத்தது என்று சொல்வதற்கில்லை.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் கணவனின் மனம் போலவே மனைவியின் மனமும் இருப்பது எப்படிச் சாத்தியம்? சம்பந்த உறவுகளைப் பொருத்தமட்டில் இருவரின் மனநிலையும் வேறு வேறு. அதைப்பற்றிய கருத்து நிலைப்பாடும் வேறுவேறாகவே இருந்தது. அதனால் மைசூர்ச் சம்பந்தத்தைப் பொருத்த

மட்டில் தன் வெறுப்பையே காட்டினாள் திம்மம்மா. இவ்வெறுப்பு சம்பந்திகளிடமிருந்து தாவி சீத்தம்மாவின்மேல் கவிந்தது. அனைவரின் மேலும் இருக்கிற கோபத்தையும் கசப்பையும் சீத்தம்மாவின் மேல் கொட்ட ஆரம்பித்தாள் திம்மமம்மா.

மஞ்சள் நீராட்டு விழா நடந்து முடிந்த பிறகு, புருஷன் வீட்டுக்கு மகளை அனுப்பும்போது, தாய் தந்தையருக்கும் மற்ற நெருக்கமான உறவுக்காரர்களுக்கும் பிரிவாற்றா மையால் மனம் வருந்திக் கண் கலங்குவது எங்கெங்கும் காண நேர்கிற ஒரு விஷயம். அந்தக் காலத்திய பழக்க வழக்கப்படி தாத்தாவாகிய பசுபதி சாம்பசாஸ்திரியை வணங்க பேத்தியாகிய சீத்தம்மா வந்தாள். அத்தருணத்தில சாம்பசாஸ்திரிக்கும் மனம் கலங்கிவிட்டது. அவர் சீத்தம்மாவிடம் "அம்மா, கணவன் வீட்டுக்குக் கிளம்பி விட்டாயா? போய் வா கவனமாக நடந்து கொள். புத்திசாலித்தனத்தோடு இரு", எனச் சொல்லி அனுப்பி வைத்தார்.

மாமனார் வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னர் சீத்தம்மா நடந்து கொள்ளும் விதம் பற்றி இங்கு சுருக்கமாய் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. அத்தை, மாமா, கணவன் ஆகியோர் என்ன சொன்னாலும் கோபம் கொள்வதில்லை இவள். அவர்களுடன் பேச நேரும்போது சிரித்த முகத்துடனேயே பேசினாள். புருஷனின் முன் தலையைத் தாழ்த்தி நேருக்கு நேராய் அவனைப் பார்ப்பதைத் தவிர்த்து மெதுவான குரலில் பேசினாள். தன் கணவனே கண்கண்ட தெய்வம் என்று நம்பினாள். வீட்டு வேலைகளைத் தானே செய்தாள். காலத்தை நல்ல வழியிலேயே செலவழித்தாள். நல்ல கதைகளைக் கேட்டாள். தீயவர்களைக் கண்டால் அவர்களைப் பார்ப்பதையும், அவர்களுடன் பேசுவதையும் தவிர்த்தாள். தனக்குத் துன்பம் விளைவிப்பவர்களே கெட்ட வர்கள் என்கிற அளவுக்குத் தெளிவு பிறக்காதவள் அவள். தன்வழிக்கு வராவிட்டாலும் கூட மற்றவர்களுக்கு கேடு விளைவிப்பவர்களும் தனக்கு எதிரிகளே என்ற எண்ணம் அவளிடம் இருந்தது. வீட்டில வேலை செய்யும் வேலைக்காரர்களிடம் அதிகம் பேசுவதில்லை. ஆடை, ஆபரணம் இல்லை என்று எந்தக் காலத்திலும் முகத்தைச் சின்னதாக்கி வைத்துக் கொள்வதில்லை பண்டிகை மற்றும் விசேஷ நாட்களில் வேண்டும் மட்டும் நகைகளை அணிந்து கொள்வாள். அப்போதும் கூட மின்னுகிற ஆடம்பரமான புடவை வகைகளை அணிவதில்லை. போட்டுக் கொண்டிருக்கிற நகைகளை மற்றவர்கள் காணட்டும் என்று புடவை முந்தானையை மாறி மாறி விலக்கவும் சரி செய்வதுமாய் என்றும் இருப்பதில்லை. அதிக அலங்காரங்களில் ஆசை எதுவும் இல்லை. பத்தினித் தெய்வங்களின் கதைகளை என்றும் மனசில் நினைத்துக் கொண்டே இருப்பாள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் மன வருத்தம் கொள்கிற அளவுக்கோ குறை சொல்லும் அளவுக்கோ அவளிடம் எந்தக் குணமும் இல்லை. யாரிடமும் அளவுக்கு மீறி அதிகமாய் பேச்சு

வார்த்தை வைத்துக் கொள்வதில்லை. யாராவது வீட்டுக்கு அழைத்தாலும் அங்கு போவதற்கு அவளுக்கு விருப்பம் இருப்பதில்லை. தேடித்தேடி அவளே எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள். இதனால் சிற்சில வேளைகளில் 'அகம்பாவம் பிடித்தவள்' என்று இவளைப் பற்றி மற்றவர்கள் பேசும்படி ஆனது.

புருஷனிடத்தில் அவளுக்கு அளவுகடந்த அன்பு இருந்தது. அவளது நடத்தை குறித்து மாமனாகிய சதாசிவ தீட்சிதனுக்கு அளவற்ற திருப்தி யிருந்தது. "வேலைகளில் ஒரு அடிமையைப் போலவும், அறிவுரை வழங்கு வதில் ஓர் அமைச்சனைப் போலவும், உருவத்தில் மகாலட்சுமியைப் போலவும், சகிப்புத் தன்மையில் பூமியைப் போலவும் கவனித்துக் கொள்வதில் ஒரு தாயைப் போலவும், படுக்கை அறையில் தன்னை மனமுவந்து அளிக்கும் விலைமகளைப் போலவும் ஆகிய ஆறு குணங்கள் உள்ளவளே நல்ல மனைவி" என்கிற வாசகத்துக்குத் தகுந்தபடி இருந்தாள் சீத்தம்மா. மற்றவர்கள் எதைச் சொன்னாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் அவளிடம் சிரிப்பதும் பேசு வதுமாய் இருந்தான். சாத்தியின் தன்மை போகப் போகத் தெரியும். பல சிரமங்களுக்கு நடுவே கண்ணும் கருத்துமாய் தான் வளர்த்த மகாதேவனின் இல்லற வாழ்வு சீரும் சிறப்புமாய் அமைந்து விட்டதை நினைத்து ஆனந்தப் பட்டாள் பார்வத்தம்மாள். தன்தம்பி நீலகண்ட ஜோசியனின் குடும்பம் என்றென்றும் பெயர் விளங்கத் தொடங்கியதை நினைத்து மிகவும் மகிழ்ச்சி கொண்டாள் வெங்கம்மா. திம்மம்மாவின் மனத்தில் மட்டும் புகைபோல அதிருப்தி இருந்தது. மருமகள் எந்த வேலையைச் செய்தாலும் இல்லாத தவறுகளையெல்லாம் கண்டு பிடித்து குறை சொன்னாள் திம்மம்மா. ஒருநாள் எப்போதும் போல அதிகாலையில் எழுந்த சீத்தம்மா முகம் கழுவி, குங்குமம் இட்டு, வாசலையும், பிருந்தாவன மேடையையும் பெருக்கிச் சுத்தம்செய்து கோலமிட்டாள். விடிந்ததும் எழுந்து பார்த்த திம்மம்மா, "என்னடி இது, கோலம்போடுகிற வேலை? மெதுவா இழுத்துட்டே இருந்தா எப்போது போட்டு முடிப்பாய்? இதை முடிச்சிட்டா வேற வேலை செய்யணுமின்னு நிதானமா இழு இழுன்னு இழுத்திட்டிருக்கியா? உன் வேஷம், தந்திரம் எல்லாம் எனக்கும் தெரியும்டி. நாட்டுப்புறம்தானே, என்ன தெரியும் இவளுக்குன்னு நினைக்காதே. உன்னை மாதிரி பட்டணக்காரர்கள் என்னென்ன செய் வார்கள், எப்படிச் செய்வார்கள், எல்லாம் தெரியும். அம்மாடி, இவள் ஒன்றும் சாமான்யப்பட்ட பெண் இல்லடி. இனிமேல் நான்தான் இந்த வீட்டிலே சோற்றுக்கு பிச்சை வாங்கணும். நான் சொன்னா, என் பேச்சைக் கேட்பாயா நீ, அட சீ, எழுந்து போடி அந்தப் பக்கம். அப்புறம் ஏதாவது சொல்லிவிடப் போகிறேன். கோலம் போடறாளாம் கோலம், உன் கோலத்தில் நெருப்பு வைக்க. 'உனக்கு வேலை சொல்லிக் கொடுத்தவள் முகத்தில் தண்ணியைத் தான் கொதிக்கவச்சு ஊத்தணும்.' நான் சொல்லிட்டே இருக்கேன் நீ போய்க்

கொண்டே இருக்கியா" என்று கூவியபடியே சீதையின் கையை இழுத்தாள். அவள் போட்டிருந்த கோலத்தை அழித்து, கோல மாவு வைத்திருக்கும் கல் சட்டியை அவள் கையிலிருந்து பிடுங்கி, எல்லா மாவும் கீழே சிதறுமாறு வீசி எறிந்தாள். எதுவும் பேசாமல் உள்ளே எழுந்து சென்றாள் சீத்தம்மா. என்றும் போல விடிந்ததும் எழுந்து வெளியே சென்றிருந்த சதாசிவதீட்சிதன் துவைத்த வேட்டி, பூக்கூடை, துளசிப்பாத்திரம் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு உள்ளே வருகையில் வாசலைப் பார்த்ததும், "இன்றைக்கு வெள்ளிக் கிழமை. வாசலில் போட்ட கோலத்தை யார் அழித்தார்கள், கோலமாவை யார் இறைத் தார்கள்?" என்று கேட்டார்கள். முடிக்கப்படாத அக்கோலம் போட்டிருந்த வரையில் அழகாகவும், மிச்சம் புள்ளிகளாக இருந்தன. இதைத் தன் மருமகளே போட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். அப்படி இருக்கும் பட்சத்தில் போட்ட கோலத்தை அழித்து மாவைச் சிதறியடிக்க வேண்டிய அவசியம் இல்லை என யோசித்தபடி இருக்கும்போது திம்மம்மா வந்து, "இது எல்லாம் உங்க மருமகள் செஞ்ச வெட்கம் கெட்ட வேலை. ஏதாவதுபேசப் போனால், நான் தான் கெட்டவளாகத் தெரிகிறேன். ஜாக்கிரதையாய் கோலம் போட் டுட்டு எழுந்திருடி, மாவு சிந்தப் போவதுன்னு சொன்னதற்கு போட்ட கோலத் தையும் அழிச்சிட்டு வெள்ளிக் கிழமைன்னு கூடப் பாக்காம சட்டிய கவிழ்த்து அங்கங்கே மாவைக் கொட்டிட்டு, சட்டியையும் அங்கேயே தூக்கிப் போட்டு விட்டு ஓடிப்போனாள். ரொம்ப சாதாரணமான பெண் என்று எல்லாரும் நினைச்சிட்டிங்க போல இருக்குது. அதை எல்லாம் சொல்ல ஆரம்பிச்சா வண்டிவண்டியா இருக்குது, சொல்ல" என்றாள். அச் சமயத்தில் சாத்தி முன் வந்து தன் அண்ணியைப் பற்றி இழுத்தாள். "அண்ணி, இங்கே எதற்கு நின்னுட்டிருக்கே. உப்புமாவு சாப்பிடலாம் வா. அம்மா ரகளை என்றைக்கும் இருக்கிற சங்கதிதான் வா" என்று சொன்னாள் சாத்தி. சீத்தம்மாவும், "போய் முகம் கழுவிக்கொண்டு வா சாத்தி. உனக்கு உப்புமாவு எடுத்து வைக்கிறேன்" என்றாள். உடனே வாசலுக்கு ஓடி வந்த சாத்தி கோலம் பற்றிச் சதாசிவ தீட்சிதனுடன் பேசிக் கொண்டிருந்த தன் தாயிடம், "பாரும்மா, சாமி அறைல அழுதுட்டே உட்கார்ந்திருக்கா அண்ணி. சாப்பிட ஏதாச்சிம் கொடுன்னு கேட்டா ஒன்னுமில்லை போன்னு வெளியே தள்ளிட்டா" என்று சொன்னாள்.

திம்மம்மா: (கணவனிடம்) "பாத்தீங்களா, அவள் நடக்கிற விதத்த. சாப்பிட ஏதாச்சிம் கொடுன்னு குழந்தை போய்க் கேட்டா அவ எப்பிடி தள்ளி விட முடியும்? பாவம் பச்சைக் குழந்தை. என்ன செஞ்சது அவள். சாத்திய பாத்தா போதும் அப்படியே அதும்மேல விஷத்தயே கொட்டறாளே. இவதா வேணும், இவளே வேணும்ன்னு வேண்டி வேண்டி கல்யாணம் செய்ததுக்கு நமக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். பழைய சம்பந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னு செஞ்சதுக்கு எனக்கே இதெல்லாம் நடக்குது".

சதாசிவதீட்சிதன் : "இன்னும் விவரம் புரியாத பெண். போகட்டும் விடு. சின்ன விஷயத்த பெரிசாக்க வேணாம்"

திம்மம்மா: "நான்தான் வளர்த்து பெரிசாக்குகிறேனா? எனக்கென்ன? எப்படியாவது பாழா போகட்டும். அவள் வழிக்கே நான் போவதில்லை. அவள் மட்டும் இன்னும் விவரம் புரியாத பெண். என்னுடைய பெண் எல்லாம் தெரிஞ்ச பெரிய கிழவி."

இப்படி பேசிக் கொண்டே மடித்துணியை மாற்றிக் கொள்வதற்காக, சதாசிவதீட்சிதன் பின்கட்டுக்குப் போனான். அதே சமயம் பின்வீட்டிலிருந்து ஏதோ வேலையாக வெளியே வந்தான் மகாதேவன், அப்போது

திம்மம்மா: "என்னப்பா மகாதேவா. உன் மனைவியின் அருமை பெருமையையெல்லாம் உள்ளேயே உட்கார்ந்து கேட்டுக் கொண்டே இருந்து விட்டு இப்போதுதான் வெளியே வருகிறாயா?"

மகாதேவன்: "புத்தி சொல்லிக் கொடுக்க நீ இருக்கும் போது எனக்கென்ன தெரியும் சின்னம்மா?"

திம்மம்மா: "ஆஹா, நானெல்லாம் ஒரு கணக்கில் சேர்த்தியா அவளுக்கு"

கேட்டுக் கொண்டே வெளியே வந்தான் மகாதேவன். அன்றைய தினம் சாயங்காலம் இரவு வரைக்கும் இந்தப் பேச்சு தொடர்ந்து கொண்டே இருந்தது.

இன்னொரு நாள் சீத்தம்மா வழக்கம்போல காலையில் எழுந்து வாசலைச் சுத்தமாக்கி கோலம்போட்டுவிட்டுச் சென்றாள். அதைப்பார்த்த திம்மம்மா, "என்னடி இது, மாட்டுக்குச் சூடு போட்ட மாதிரி பட்டை பட்டையா கோலம் இழுத்திருக்கே? யாராவது நடக்கும் போது கால் நடுங்கி கீழ வீழுந்திருவாங்க போலிருக்கே. பார்க்கச் சகிக்கலைடி உன் கோலம். இது தான் பட்டணத்துக் காரங்க கைவரிசையா? இப்படித்தான் உங்கள் அம்மா வேலை சொல்லித் தந்தாளா? வெள்ளிக் கிழமையும் அதுவும் வாசலிலே ஒரு அழகான கோலம் போட வேண்டாமா? இதையல்லாமா சொல்லித் தரவேண்டும்? எத்தனை தரம் சொன்னாலும் உனக்குத் தெரிவதில்லை. என்றைக்குத் தான் நீ வேலையை கற்றுக் கொள்ளப் போகிறாய், ரொம்பதான் லட்சணம் போ, ஏதாவது சொல்ல ஆரம்பித்தால் என் வாயில் என்ன வார்தை வரும் என்று எனக்கே தெரியாது. எனக்கென்ன, எக்கேடாவது கெட்டுப்போ, உன் வழிக்கே வர மாட்டேன். எனக்கென்ன ஆக வேண்டியது இருக்கிறது? ஒரு தட்டுல சோறு, அத்தோடு என் கதை முடிஞ்சது. வாழ்ந்து அனுபவிக்க வேண்டும் என்கிறார்கள். வேண்டுமென்றால் கற்றுக் கொள்ளட்டும். வேண்டா மென்றால் விட்டு விடட்டும். ரெண்டு மூணுநாள் முன்னாலதான் அரைப்படி கேழ்வரகு கொடுத்து பத்து சேர் கோலமாவு வாங்கி வைத்தேன். நீ எல்லா வற்றையும் இப்படியே பாழாக்கினால், வாழ்வது எப்படி? உங்கள் அம்மாவீட்டு ஆஸ்தியா அவ்வளவு கோலப்பொடியை வீணாக்குவதற்கு? இப்பவே அந்த பொடியையெல்லாம் கூட்டி வாரு. இல்லையென்றால் பிடித்து துவட்டி

விடுவேன் துவட்டி. எப்படிபட்ட ஆள் நான்னு தெரியுமில்லையா? என்னமோ அப்பன் வீட்டில் இருந்து ஒரு வண்டி நிறைய கோலப் பொடியை ஏற்றி எடுத்துக் கொண்டு வந்தவளைக் காட்டிலும் கன்னா பின்னான்னு கொட்டிப் பாழாக்கறியே. ஏதாச்சிம் சொன்னோமென்றால் பல்லைக் கடித்துக் கொண்டு எதிர் பேச்சு பேச வந்து விடுகிறாய். கொஞ்சம் கூட வெட்கம் இல்லை உனக்கு. உன்னைச் சொல்லி என்ன பிரயோஜனம். எல்லாம் எங்கள் தலையெழுத்து; தேடித் தேடி இப்படி ஒரு பாழானவளா கடைசியில எங்களுக்கு கிடைக் கணும்?" என்றாள்.

பார்வத்தம்மா: "திம்மா, பாழானவா, அது, இதுன்னு எதுக்காக அந்த பொண்ண திட்டற? எந்த வேலய எப்படி செய்யணுமோ அப்படிச் செய்ன்னு சொல், தானாக செய்யப் போறாள். ஒரு பதில் வார்த்தை வராது அவளிட மிருந்து."

திம்மம்மா: "இந்த விஷயத்தில் நீங்கள் தலையிட வேண்டாம். தகுந்த புத்திய நான் சொல்லித் தருகிறேன். நீங்கள் எல்லாம் செல்வம் கொடுப்பதால்தான் அவளுக்குக் கொழுப்பு. இந்த பாழாப்போன வீட்டில எனக்கு என்னதா உரிமை இருக்கு?"

பார்வத்தம்மா: "பாழாப்போனது, பாழாப் போனதுன்னு வார்த்தைக்கு வார்த்தை எதுக்குடி சொல்கிறாய்? அவள் வீடும் பாழாக வேணாம். இந்த வீடும் பாழாக வேணாம். வார்த்தைய அளந்து பேசணும். ஒரு நேரம் போல இன்னொரு நேரம் இருக்காது."

திம்மம்மா: "இல்லையென்றால் எப்படியாவது போவட்டும். நீங்கள் எல்லாம் இருக்கீங்க இல்லையா, அது போதும்."

இவ்விதம் சற்று நேரம் அத்தையும் மருமகளும் மோதி விட்டு அமைதி யானார்கள். கௌரிப் பண்டிகை வந்தது. திருஷ்டி கழிப்பதற்காகத் தேவை யானதை தயார் செய், என சீத்தம்மாவிடம சொன்னாள் திம்மம்மா. மைசூரில் பெரிய பெரிய வீடுகளில் திருஷ்டி கழிப்பதற்காக செய்வதை பார்த்திருந்த பழக்கத்தில் கொஞ்சம் தடபுடலாகச் செய்தாள். ஒரே ஒரு தேங்காய் வேண்டி யிருந்தது. அத்தையிடம் சென்று ஒரு தேங்காய் வேண்டும் என்று சொன்னாள். அப்போது

திம்மம்மா: "அடியே வெட்கம் கெட்டவளே. திருஷ்டி கழிக்க தேங்காய் வேண்டும் என்று சொன்னது யாரடி உனக்கு? உன்னைக் கேட்க யாரும் இல்லைன்னு எண்ணமா? யாரக் கேட்டுடி தேங்காய்கள எடுத்து வைத்தாய். உனக்கு சுதந்தரம் கொடுத்தவர் யாருடி? வயிற்றுக்கு சோறு தான் சாப்பிடு கிறாயா, இல்லை மண்ணைச் சாப்பிடுகிறாயா?"

அளவு கடந்து கோபத்துடன் பேசிய திம்மமம்மா ஒரு தேங்காயை எடுத்து சீத்தம்மாவின் தலையையே இடித்தாள் திம்மம்மா, பலமா அடி, காயமாகி விட்டது. வலி தாளாமல் 'அய்யோ' என்று அலறினாள் சீத்தம்மா. அப்போது

திம்மம்மா, "கூச்சல் போடறியா கூச்சல், அடங்காப் பிடாரி. என்ன நடந்துட்ட துன்னு இப்படி வேஷம் போடறே" என்று சொன்னபடி சீத்தம்மாவின் கன்னத்தில் அறைந்தாள். அந்த அடிகளில் ஒன்று சீத்தம்மாவின் மூக்கின் மேல் ஒன்றும் விழுந்தது. மூக்குத்தித் திருகாணி உட்புறம் குத்திவிட ரத்தம் பெருகியது. எந்த வார்த்தையும் எதிர்த்துப் பேசாமல் எழுந்து உள்ளே சென்றாள் அவள்.

இவ்விதமான சின்னச் சின்ன அற்பமான விஷயங்களுக்கு எல்லாம் மானம் மரியாதை இல்லாதபடி சீத்தம்மாவை பேசுவதும், அவமானப்படுத்து வதுமாய் இருந்தாள் திம்மம்மா. இப்படியே காலம் கழிந்து கொண்டிருக்கும் போது வெங்கம்மா, பார்வத்தம்மா ஆகிய இருவரில் ஒருவர் பகல் உணவுக்குத் தேவையான சமையல் வேலைகளைக் கவனித்துக் கொண்டனர். என்றைக் காவது ஒரு நாள் பரிமாறுவதற்கு மட்டும் திம்மம்மா வருவாள். இல்லாவிடில் அதையும் அந்த வயதானவர்களில் ஒருவரே கவனித்துக் கொள்வார்கள். என்றைக்கும் தனியாக சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டதில்லை திம்மம்மா. தப்பித்தவறி என்றாவது ஒரு நாள் அபூர்வமாக சமையல் வேலையைச் செய்துவிட்டால் அன்றைய தினம் அரிசி பாதிதான் வெந்திருக்கும் அல்லது வெந்து கூழ் கூழாக ஆகி இருக்கும். ரசத்தில் புளிப்பு அதிகமாகிவிடும். குழம்பில் உப்பு அதிகமாகிவிடும். அது மட்டுமல்லாமல் அவள் வேலை செய்யப் போனால் எடுபிடி வேலைக்கு சுற்றியும் நான்கு ஆள்கள் வேண்டும். உப்பு இவ்வளவு போடு, புளி இவ்வளவு போடு, இதற்குக் காரம் அதிகம். இதற்குக் காரம் குறைவு என்று சொல்லித் தருபவர்களும் நின்று கொள்ள வேண்டும். அவள் சமைக்கிற நேரத்தில் யாரேனும் குறுக்கும் நெடுக்குமாய் நடந்துவிட்டால் போதும் அவர்களை வாய்க்கு வந்தபடி திட்டுவாள். கூவுவாள். இத்தனை அமளி துமளிக்குப் பிறகும் கூட சமையல் சரியாக வராது. கெடுத்து விடுவாள் யாருக்கும் அரைவயிறு கூட நிறையாத அளவுக்குச் செய்து விடுவாள். நடுநடுவே சமைத்துவிட்டு கடவுளுக்குப் படைப்பதற்கு முன்னேயே தன் மகளை அழைத்து அவளுக்கு உண்ணக் கொடுத்தாள். கடைசியில் ஒருவழியாக இரவு உணவை சீத்தம்மா மூலம் செய்விக்க ஆரம்பித்தனர். சமையல் வேலையை மிக நேர்த்தியாய்ச் செய்தாள் சீத்தம்மா. சமையலில் ஒரு சிறிய குறையைக் கண்டாலும் கூட சதாசிவ தீட்சிதன் வயிறு நிறைய சாப்பிடுவதில்லை. மகன் இப்படி அரை வயிற்றுக்குச் சாப்பிட்டுப் போகிறானே என்றமன வருத்தத்தில் தினசரியும் பார்வத்தம் மாவே முன்னின்று சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டாள். வரவர இளமை திரும்புமா என்ன? முதலிலேயே கிழவி. சக்தி குறைவு.இவளை விடவும் வயதானவள் வெங்கம்மா. எப்படியோ, இந்த இருவருமே கூடிச் சமாளித்து வந்தனர். திம்மம்மாவின் வேலை லட்சணம் எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான். கிழவிகளுக்கு உதவி செய்ய அப்புறம் யார்தான் இருக்கிறார்கள்?

ஒரு குழந்தைக்குத் தாயாகும் வரைக்கும் அவள் கைச்சமையலை கிழவிகள் சாப்பிட முடியாது. இக்காரணத்தால் ஒரு வேளைக்கு கிழவிகளில் யாரேனும் ஒருவர் சமைத்து வைத்தனர். இரவு நேரத்தில் பார்வதம்மாவுக்கு சரியாகக் கண் தெரிவதில்லை. இதனால் இரவுச் சமையலின்போது இருவரில் யாரும் சமைக்கப் போவதில்லை.

ஒரு நாள்:

சதாசிவதீட்சிதன்: "நம் சீத்தம்மா நகர்புறவாசி, நல்ல வசதியான வீட்டில் பிறந்த பெண். அவள் தாய்வீட்டில் வேலை செய்யும் ஆட்களுக்குக் குறைவே இல்லை. அவர்கள் எல்லாரும் உட்கார்ந்து கொண்டு இவளிடம் வேலை வாங்குவார்களா? அப்படி இருந்தும் கூட இவளுக்குச் சமையல் வேலையைக் கற்பித்திருக்கிறார்களே".

பார்வதம்மாள்: "அதைத் தான் நானும் சொல்ல வருகிறேன். இந்த ஒரு விஷயம் மட்டுமல்ல, அவள் எந்தக் காரியத்தைச் செய்தாலும் ரொம்ப கச்சிதமாய் செய்கிறாள். அவளுக்கு இந்த வேலை தெரியும், இந்த வேலை தெரியாது என்று சொல்லவே முடியாது".

திம்மம்மா: ஆமாமாம். அப்படியே இருக்கட்டுமே. உங்கள் மருமகள் தான் புத்திசாலி. தேடித் தேடி நல்ல புத்திசாலியாய்த் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் ஒரு முண்டம். பைத்தியம். சமைக்கத் தெரியாதவள். எந்த வேலைக்கும் உபயோகமில்லாதவள். என்னைக் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தானே இவ்வளவையும் சொல்கிறீர்கள். உங்கள் மனசில் என்னென்ன தோன்றுகிறதோ, அதையெல்லாம் சொல்லுங்கள். பேச்சு வாங்கிக் கட்டிக் கொள்ளத்தானே நான் இருக்கிறேன். என் அப்பா என்றைக்குச் செத்தாரோ அன்றே எல்லாம் முடிந்து விட்டது. இனிமேல் அதெல்லாம் எதற்கு? எல்லாரிடமும் பேச்சு வாங்கிக் கொண்டு மிச்சம் மீதியைச் சாப்பிட்டுக் கொண்டு வாழ வேண்டும் என்பது என் தலையெழுத்து. இன்னும் என்னென்ன நடக்க வேண்டுமோ, நடக்கட்டும்."

சதாசிவதீட்சிதன்: "எதற்காக இல்லாததையெல்லாம் இழுத்து இழுத்துப் பேசுகிறாய்?"

திம்மம்மா: "இருக்கட்டும். இருக்கட்டும். அவளே செய்யட்டும். எனக்கும் வேலை சுலபமாகிவிட்டது. நானும் காலாட்டிக் கொண்டு சாப்பிடுகிறேன்".

இப்படியாகப் பேச்சு நடந்தது. இரவு நேரத்தில் சீத்தம் மாவே சமையல் வேலையைக் கவனித்துக் கொண்டாள். ஏற்றி, இறக்குவது வரைக்கும் எல்லா வேலைகளையும் அவளே செய்தாள். இரவிலேயே சாப்பிட்டு முடித்ததும் பாத்திரங்களைச் சுத்தமாகக் கழுவி கவிழ்த்து வைத்தாள். பாலுக்கு உறை ஊற்றி, அதற்கப்புறம் உண்டாள். அப்புறம் வீட்டையெல்லாம் பெருக்கிச் சுத்தமாக்கி மூட வேண்டியதெல்லாம் மூடிவிட்டு படுத்துக் கொண்டாள். கச்சிதமான அவள் செய்கையும், நேர்த்தியும், தூய்மையும் அவளிடமிருந்து மற்றவர்கள் கற்றுக் கொள்ளும் அளவுக்கு இருந்தன. அவள் செய்கை

ஒவ்வொன்றும் மற்றவர்கள் பார்த்து பாராட்டும்படியே இருந்தது. இப்படி இல்லை, அப்படி' என்று நொந்து கொள்ளும்படியோ இல்லை. இதைக் காணப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய் இருந்தாள் திம்மம்மா. ஏதாவது குற்றம் குறை கண்டுபிடித்து, அவளைத் திட்டுவதற்காகவே தருணத்துக்குக் காத்தி ருந்தாள். தப்பு கண்டுபிடிப்பதே தன் வேலையாய் ஒருவர் உட்கார்ந்து கொண்டு கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு பார்க்கும்போது எங்காவது ஒரு தப்பு தட்டுப்படுவது சகஜமான விஷயம் தான். ஏதாவது செய்தால் அது தப்பு, எதையாவது செய்யாமல் விட்டால் அது தப்பு இப்படி சீத்தம்மா செய்கிற ஒவ்வொரு வேலையையும் ஆட்சேபித்துச் கொண்டே இருந்தாள் திம்மம்மா. பழிப்பதும், திட்டுவதும் நேரம் கிடைக்கும் போது அவளுடைய தாய்வீட்டு ஜனங்களை ஏளனம் செய்வதும் எல்லாமே அவளது தினசரி வேலைகளாய் இருந்தன.

சாத்தி செய்யும் அட்டகாசங்களும் வரவர அதிகமாயின. ஒரு நாள் மாலை மடித்துணி அணிந்து கொண்டு, அடுப்பில் உலை ஏற்றி விட்டு பயிர் உலையையும் ஏற்றி வைத்துவிட்டு, தண்ணீர் எடுத்துவரும் பொருட்டு குடம் எடுத்துக் கொண்டு பின் கட்டுக்குப் போனாள் சீத்தம்மா. இதைக் கவனித்துக் கொண்டிருந்த சாத்தி விடுவிடுவென சமையல் கட்டுக்குச் சென்று சோற்றுக்கு வைத்திருந்த உலைக்குள் ஒரு பிடி உப்பை அள்ளிப் போட்டுவிட்டு ஓடி வந்தாள். இப்படி நடந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கக்கூட சீத்தம்மாவுக்கு வழி இல்லை. இடுப்பில் ஒரு குடமும், கையில் ஒரு குடமுமாய் நீர் சுமந்து கொண்டு வந்த சீத்தம்மா, அவற்றை சமையல் அறையில் இறக்கி வைத்த பின்பு சமையல் வேலையை மீண்டும் தொடர்ந்தாள். வழக்கம் போல சுனையில் சந்தியா வந்தனத்தை முடித்துக் கொண்டு வந்த ஆண்கள் சாப்பாட்டுக்குத் தயாரா னார்கள். மடி அணிந்து கொண்டு சந்தியாவந்தனம் செய்த பிறகு கடவுளுக்குப் பூஜை செய்து முடித்த மகாதேவன் எல்லாருக்கும் உட்கார மணையும் உண்ண இலையும் விரித்து எல்லாரையும் சாப்பிட அழைத்தான். சதாசிவதீட்சிதன், மைசூரிலிருந்து வந்த இரண்டு உறவுக்காரர்கள், பத்துப் பதினைந்து வருஷங் களாகவே தீட்சிதன் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டு வந்த ஆசிரியர் நாராப்பய்யா, எல்லாரும் வந்து மணைப் பலகைகளில் உட்கார்ந்து கொண் டனர். ஊறுகாய் முதலியவற்றை முதலில் படைத்த பிறகு சீத்தம்மா எல்லா இலைகளிலும் சோற்றை பரிமாறினாள். அப்பாவின் பக்கத்தில் உட்கார்ந் திருந்தாள் சாத்தி. எல்லாரும் மந்திரம் முணுமுணுத்து உண்ணத் தொடங்கும் முன்பு, "அப்பா, சோறு உப்பு கரிக்கிறது" என்று சொன்னாள் சாத்தி. பெரிய வர்கள் இலையில் கை வைப்பதற்கு முன்பு சிறுவர்கள் இலையில் கை வைக்கும் பழக்கம் இல்லை. மற்றவர்கள் மந்திரம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே சோற்றில் உப்பு இருப்பது சாத்திக்கு எப்படித் தெரிந்தது? இது ஒரு பக்கம் இருக்க, சாத்தியின் பேச்சைக் கேட்டதும் எல்லாரும் ஒருகை சோற்றையள்ளி உண்டு பார்த்தனர். உண்மையிலேயே உப்பு அதிகமாக இருந்தது. எல்லாரும்

இலையை விட்டு எழுந்து விட்டனர். உடனடியே இன்னொரு முறை சோறு வடித்து பரிமாறினாள். இப்படிச் செய்து விட்டாளே இவள், என்று எல்லாரும் சீத்தம்மாவின் மேல் எரிச்சலுற்றனர்.

சதாசிவதீட்சிதன்: "என்ன சீத்தம்மா, நல்லா சமைக்கிறே, நல்லா சமைக்கிறேன்னு நினைத்துக்கொண்டிருந்தால் இப்படி செய்துவிட்டாயே. சமையல் வேலை யிலே கெட்டிக்காரின்னு சமையல்கட்டுல விட்டா, சாம்பாருக்கு உப்பு எவ்வளவு போடணும்ன்னு கேட்டாளாம் ஒருத்தி. அந்தக் கதையாக ஆகி விட்டதே உன் கதை?"

நாரப்பய்யா: "ஏதோ சின்னப் பெண். தெரியாமல் உப்பு போட்டிருக்கக் கூடும்"

பார்வதம்மாள்: "என்னடி சீத்தம்மா. ரொம்ப நல்லாத்தானே சமைப்பே; சோற்றுக்கு யாராச்சும் உப்பு போடுவாங்களா. அரிசியிலே உப்பு ஏதாச்சும் இருந்ததா, பார்த்தாயா?"

சீத்தம்மா : "இல்லை. அரிசிய முறத்துல போட்டு நல்லா பார்த்தப்புறம் கழுவி சுத்தமாக்கி விட்டு அப்புறம்தான் உலையிலே போட்டேன். உலை யிலேயும் நல்ல தண்ணீர்தான் வைத்தேன். உப்புத் தண்ணீர் எதுவும் கிடையாது."

திம்மம்மா : "அப்படி என்றால் வேறு யாராவது வந்து உலையைத் திறந்து உப்பு போட்டு விட்டார்களா? அதிகம் பேசாதே, வாயை மூடு. யாரும் அரை வயிறு கூட சாப்பிடாத அளவுக்குச் செய்துவிட்டாயே. தட்டுவாணி ஒன் கைத்திறமையில நெருப்பு வைக்க மருமகள் நல்லா சமைக்கிறாள் என்று மெச்சிக் கொண்டிருந்தார் மாமனார். அதனாலேயே அவள் ஆகாயத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பாழாய்ப்போன வீட்டிலிருந்து பெண் எடுத்து எல்லாமே வீணாகிவிட்டது. சொல்லடி, எதற்காக சோற்றில் உப்பை போட்டாய்? (என்று கேட்டுக் கொண்டே உலை அடுப்பில் எறிந்துகொண்டு இருந்த கொள்ளிக்கட்டையை எடுத்து சீத்தம்மாவின் வலக்கையில் பலமாக சூடு இழுத்தாள்)

பிறந்ததில் இருந்து அதுவரைக்கும் இப்படியொரு தண்டனையை என்றும் அனுபவித்ததில்லை என்பதாலும் தாய் வீட்டில் செல்லமாக வளர்ந்த பெண் என்பதாலும் சீத்தம்மாவுக்கு வலியின் வேதனை தாங்க இயலவில்லை. சூடு பட்ட இடம் வெந்து தோல் கருகிவிட்டது. புடவை முந்தானையும் கொஞ்சம் சுட்டுவிட்டது. 'ஐயோ' என்று சத்தமிட்டு அலறினாள் சீத்தம்மா. அப்போது திம்மம்மா மிகுந்த ரோஷத்துடன், "சத்தம் போட்டு பார்க்கறியா, சூர்ப்பனகை" என்று சொல்லிக்கொண்டே மீண்டும், அதே கொள்ளிக் கட்டையை எடுத்து மருமகளின் தலையில் இடித்தாள் வலி தாளாமல் அந்த பெண் அழுது அலறினாள். அப்பொது பார்வதம்மாள் வந்து "இப்படி யாராச்சும் அடிப்பாங் களாடி திம்மம்மா? வேண்டுமென்றேயா சோற்றிலே உப்பை அள்ளிப்

போட்டாளா அவள்? எங்கேயாவது புண்ணியம் செஞ்சவங்க வீட்டுல வாழ வேண்டிய பெண்ண இங்க கட்டிட்டு வந்தது உயிரோட கொலை செய்வதற் குன்னு ஆயிடுச்சே", என்று சொன்னாள். அழுதுபடி நின்று கொண்டிருந்த சீத்தம்மாவை ஒரு பக்கமாய் இழுத்துக் கொண்டு போனாள். சாப்பாடு கூட சாப்பிடாமல் மடிப் புடவையையே கட்டிக் கொண்டு சீத்தம்மா வீட்டின் மூலையில் நின்றிருந்தாள். அத்தைக்காரி தலைமேல் அடித்த அடியாலும் கையில் இழுத்த சூட்டாலும் அவளுக்கு காய்ச்சல் வந்துவிட்டது. தரையிலேயே இரவு முழுக்க படுத்துக் கிடந்தாள். சூடுபட்ட இடம் வீங்கி வலி அதிகமானது. அது குணமாக பத்து நாட்கள் பிடித்தன.

இதெல்லாம் நடந்து முடிந்த பிறகு ஒருநாள் அத்தைக்காரி தூங்கிய பிறகு, சிறிய தட்டு ஒன்றில் வெற்றிலை பாக்கு எடுத்துக் கொண்டு மூடியவண்ணம் புருஷன் இருந்த புறவீட்டுக்குச் சென்றாள் சீத்தம்மா. வெற்றிலை பாக்கு மடித்து கொடுக்கும்போது மகாதேவனின் கை சூடுபட்ட இடத்தில் இடறியது. அப் போது சீத்தம்மா வலியில் 'ஆ' என்றாள்

மகாதேவன்: "எதுக்காக ஆன்னு சத்தம்? கை என்னாச்சு"

சீத்தம்மா: "காயம்பட்டு வீங்கிட்டுது"

மகாதேவன்: "எங்கே காயமாச்சு? இவ்வளவு பெரிய காயம் உண்டாகிற அளவு எங்கேயாவது தடுக்கி விழுந்தியா? என்ன காரணம்?"

சீத்தம்மா: "கொஞ்சம் கொஞ்சமா குணமாய்ட்டே வருது"

மகாதேவன் "இவ்வளவு பெரிய காயத்துக்கு என்ன காரணம்?"

சீத்தம்மா: "என்னமோ தடுக்கிடுச்சி"

மகாதேவன் : என்ன தடுக்கிடுச்சி

சீத்தம்மா: "கொள்ளிக்கட்டை தடுக்கிடுச்சி"

மகாதேவன்: "கொள்ளிக்கட்டை தடுக்கி விழுந்து இவ்வளவு பெரிய காயம் வருமா? ஒங்க வீட்டுல புண்ணியவதி போல வசதியா வாழ்ந்துட்டு இங்கே வேலை அது இதுன்னு செய்யப் போனா இப்படித்தான் ஏதாவ்து ஆகும்".

அதுவரைக்கும் அமைதியாய் இருந்த சீத்தம்மாவுக்கு வெட்கமும், துக்கமும் உண்டாயின. அத்தையைப் பற்றிய பயமும் இத்தோடு சேர்ந்து கொண்டது. எல்லாம் சேர்ந்த கலவையான உணர்ச்சியால் அவள் கண்கள் தளும்பின. சாத்தி இருந்த கதவுப்பக்கம் திரும்பித்திருமபிப் பார்த்தபடி கண்களைத் துடைத்தபடி அமைதியாய் இருந்தாள். இந்த அளவு பெரிய காயம் உண்டாக ஏதோ வேறு பெரிய காரணம் இருக்க வேண்டும் என்றும், வெட்கத்தாலோ அல்லது பயத்தாலோ சீத்தம்மா சொல்ல மறுக்கிறாள் என்றும் புரிந்து கொண்ட மகாதேவன் அதிகம் பேச இயலாதவனாய் மௌனம் கொண் டிருந்தான். மறுநாள் ஆண்கள் யாரும் வீட்டில் இல்லாத போது மூன்றாம் ஜாமத்தில் திம்மமம்மா, "என்னடி சீத்தம்மா, நேற்று ராத்திரி புறவீட்டில் பேச்சு ரொம்ப பலமா இருந்துச்சே, என்ன விஷயம்? குசுகுசுன்னு ஒரே சத்தமா

யிருந்திச்சி. எந்த கோட்டைய புடிச்சி சாதனை செய்யணும்னு புருஷனும் பெண்டாட்டியும் சேர்ந்து திட்டம் போட்டிங்க? ரெண்டு பேருமா சேர்ந்து என்ன வீட்ட விட்டு வெளிய அனுப்பிடுங்க. அது ஒன்னுதான் எனக்கு பிராயச்சித்தம். அதுவும் நடக்கட்டும். அந்தப் பொண்ணையும் அழைச்சிப் போயி எங்கேயாவதுஆறு, குளம்னு விழுந்து சாகிறோம். நான் ஒருத்தி வீட்டில் இருப்பதால் தானே வீட்டில் இவ்வளவு பிரச்சனைகள்? நானும் புருஷன் பெண்டாட்டிங்கள் ஊரிலே எத்தனையோ பேரப் பாத்திருக்கேன். ஆனா, இப்படி ஒரு புருஷன் பெண்டாட்டிய எங்கேயும் பார்த்ததில்லை. சும்மா இருந்துடுவாளா இந்த தாடகை? புருஷன்காரனுக்கு சொல்லிக் கொடுத்து சொல்லிக் கொடுத்து, அவனை நல்லா வளைச்சிப் போட மாட்டாளா? அவளால செய்ய முடியாத காரியம் என்ன இருக்குது? மைசூரில் ஆயிரம் தேவடியாள்கள் இறந்து இவள் ஒருத்தி பிறந்து வந்திருக்கிறாள். அவளால எந்தக் காரியத்தை செய்ய முடியாது? நானும் எத்தனையோ பொண்ணுங்கள் பார்த்திருக்கேன். ஆனா இப்படி ஒரு பொண்ண எங்கேயும் பார்த்ததில்லை. அப்படி என்னடி பேசிட்டிங்க ரெண்டு பேரும்? சொல்லுடி. சொல்லவில்லையென்றால் தகுந்தபடி தண்டனை கிடைக்கும். என்று மனசுக்கு வந்தபடி கன்னா பின்னாவென்று கீழ்த்தரமான வார்த்தைகளில் பேசினாள். அவள். கேள்விக்கு எந்தவிதமான பதிலையும் சொல்லாமல் சும்மா இருப்பதே சீத்தம் மாவுக்கு எப்போதும் பழக்கம். ஆனால் மைசூர் தேவடியாள்களுடன் தன்னை ஒப்பிட்டுப் பேசியதும், தன் புருஷனான மகாதேவனைப் பழித்துப் பேசியதும் அவளுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தன. அப்போது,

சீத்தம்மா: "அம்மா, எதுக்கும்மா கோபப்படறீங்க? நான் யாரைப்பற்றியும் எதைப்பற்றியும் சொல்லலை."

திம்மம்மா: "பதிலுக்கு பதில் சொல்ற அளவுக்கு ஆய்டுச்சா? இப்படிப் பேசுடின்னு உன் புருஷன்காரன் சொல்லிக் கொடுத்தானா? அவனயும் உன் பக்கம் இழுத்து வளச்சிப் போட்டுட்டே, அப்புறம் என்ன? வீடு சொந்த மாய்ட்டுது. வாசல் சொந்தமாய்ட்டுது. எங்க அப்பா ஆஸ்தியெல்லாம் உங்க ளுக்கே சொந்தமாய்ட்டுது. இன்னும் என் முகத்தில் சாம்பல் பூசி வீட்டைவிட்டு தள்ளி விடறது ஒன்றுதான் பாக்கி. இந்த பாழாய்ப்போன வயித்துக்கு வேளா வேளைக்கு ஏதாவதுபோடலைன்னா சும்மா இருக்காது. ஒரு பிடி சோறு. ஒரு துணி இதுக்காகத் தானே இத்தனநாள் இருந்தேன். இனிமேல் எதுவும் மிச்ச மாகும். என்ன வெளிய தள்ளிடுங்க. புருஷன் கூட சேர்ந்து என்னென்ன வேலை செய்ய ஆரம்பிச்சிட்ட நீ? சீ, போனா போவுதுன்னு சும்மா இருக் கறேன். இல்லையென்றால் சரியான புத்தி கத்துக் கொடுத்துடுவேன்"

சாவித்திரி: "நான் போய் சோற்றிலே உப்பு போட்டேனாம். அண்ணன் கிட்டே சொல்லிட்டிருந்தாள் அண்ணி. அந்தப் புறவீட்டு கட்டைமேல் உட் கார்ந்துட்டிருந்தேன். நம்மைப் பற்றியெல்லாம் என்னென்னமோ சொல்லிக் கொண்டிருந்தாள் அண்ணி."

சீத்தம்மா: "நான் யாரைப்பற்றியும் பேசலை. அப்படி ஏதாச்சிம் பேசினேன்னு வையுங்கோ என் வாய்ல பாம்பு தான் புற்று கட்டும்"

திம்மம்மா: "அப்படின்னா, என் பொண்ணு பொய் சொல்றாளா? புருஷனும் பெண்டாட்டியுமா சேர்ந்து என்ன தான் பேசனீங்களோ, உன்னால தான் என்ன செய்ய முடியும், அவன்தான் என்ன செய்ய முடியும்? இந்த சாத்தி சோத்துல உப்பு போட்டாளா? ரொம்ப நல்லா இருக்குது. அவள் உப்பு போட்டதை நீ கண்ணாலே பார்த்தியா? பாக்காத ஒரு விஷயத்த எப்படிச் சொல்வாய்? நீயாக ஒரு கதையை கட்டிவிட்டாயா? சொல்லிவிடு. சும்மா விட மாட்டேன். காது ரெண்டையும் அறுத்து கூட்டு வச்சிடுவேன். மனசிலே என்னைப்பற்றி என்ன என்று எண்ணம் உனக்கு? வரட்டும் அவர். இரண்டிலே ஒன்று தீர்மானம் செய்து விடுகிறேன். அப்பாவிப் பெண்மேல கட்டுக்கதை கட்டறியா நீ, என்ன பாவம் செஞ்சா உனக்கு அவள்? உன் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டாளா? எது நடந்தாலும் நடக்கட்டும். உன்னால எனக்கு கிடைக்கக் கூடிய பிரயோஜனம் எதுவுமே இல்லைன்னா கூட பரவாயில்லை. இன்றைக்கும் அந்த அறியாத பெண்மேலே பழி சொன்ன நீ நாளைக்கு என் மேலேயும் பழி சொல்வாய். எதுக்கும் தயங்காதவளாச்சே நீ? உன்னைப் பற்றி தெரியாது என்று நினைத்துக கொண்டாயா? வாடி, இங்கே. செய்யறதெல்லாம் செஞ்சிட்டு பூனை மாதிரி உட்கார்ந்து கொண்டாயா? சொல்வதையெல்லாம் சொல்லிவிட்டு வேஷம் போடுகிறாயா வேஷம்? வரட்டும், அவர் இன்றைக்கு. இந்த வீட்டிலே ஒன்று நீ இருக்கவேண்டும். இல்லையென்றால் நான் இருக்க வேண்டும்.

சீத்தம்மா : (அத்தை எதிரில் வந்து நின்று) "நான் யாரைப் பற்றியும் எதைப்பற்றியும் பேசவே இல்லை அம்மா"

சதாசிவதீட்சிதன்: (வெளியே இருந்து வீட்டுக்குள் நுழைந்து) என்ன இது ஒரே சத்தம்? வீட்டிலே எந்த நேரமும் சத்தம்தானா? இதற்கு ஒரு முடிவே இல்லையா?

திம்மம்மா: "அன்றைக்கு சோற்றிலே உப்பு இருந்துச்சே அதை நம் சாத்தி தான் அள்ளிப் போட்டாள் என்று சொல்கிறாள் உங்கள் மருமகள். வேண்டுமென்றால் சாத்தியையே கேட்டுக் கொள்ளுங்கள். என் வார்த்தை மேலே யாருக்கும் நம்பிக்கை வருவதில்லை."

சாத்தி: "ஆமாம்பா. நேற்று ராத்திரி அண்ணனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் அண்ணி".

சதாசிவதீட்சிதன் : "உனக்கு எப்படித் தெரியும்?"

சாத்தி: "அண்ணன் இருக்கும் புறவீட்டுக் கட்டைமேலே உட்கார்ந்து கொண்டிருந்தேன். நேற்று ராத்திரி. அப்பொழுதுதான் நம்மைப் பற்றியெல்லாம் திட்டித்திட்டிப் பேசினாள் அண்ணி".

சதாசிவதீட்சிதன்: "திட்டிப் பேசினது ஒரு பக்கம் இருக்கட்டும். சோற்றுலே உப்புப் போட்டது நீதான்னு சொன்னாளா? அதை மாத்திரம் சொல்"

சாத்தி: "அது என்னமோ குசுகுசுன்னு ரெண்டுபேரும் பேசிட்டாங்க. என்னன்னு சரியா காதிலேயே விழலை".

சதாசிவதீட்சிதன்: "புறவீட்டுக் கட்டைமேலே உட்கார்ந்து அவர்கள் பேசினதை ஒட்டுக்கேட்டது எதற்கு? புருஷன் பெண்டாட்டி உள்ளே இருக்கும் போது அப்படி யெல்லாம் அங்கே போகலாமா நீ? அந்தக் கட்டை மூங்கிலால செஞ்சிருக்கும். எட்டிஎட்டிப் போட்டு கட்டி வச்சிருக்கோம். இன்னும் சரியா பூசி மெழுகக் கூட இல்லை. பதிமூணு வயசுப் பெண் நீ. வயசுக்கு வந்த பெண் அப்படியெல்லாம் போய் உட்காரலாமா?"

திம்மம்மா: "அது என்ன, அந்த மாதிரி பேசறீங்க. ஒன்றும் தெரியாத பச்சைக் குழந்தை அது அந்த ராட்சசி சொன்னதெல்லாம் ஒரு மூலைக்கு எங்கேயோ போச்சு. அந்தபெண் மேலேயே பழி கண்டுபிடிக்கிறீங்களா?"

சதாசிவதீட்சிதன்: "சொன்னாள் கின்னாள்ன்னு இல்லாததயெல்லாம் கற்பனை செய்து கொண்டு எதுக்கு புலம்பற? சரியா காதுல விழலைன்னு சாத்தியே சொல்றாளே, புருஷன் பெண்டாட்டி ரெண்டுபேரும் தனியா இருக்கும்போது இந்தப் பைத்தியக்காரப் பெண் அங்க போனதும் பார்த்ததும் தப்பு. அவர்கள் பேசினதை ஒட்டுக் கேட்டதும் தப்பு. முன்னும் பின்னும் யோசிக்காமல் பேசறது தப்பு. பேச்சு ரெண்டு பேருக்குள்ளேதான். ஆனா கேக்கறவங்க ஆயிரம்பேர். புத்தியில்லாத இந்த பேச்சைக் கேட்டா அக்கம் பக்கத்திலே இருக்கிறவர்கள் என்ன நினைப்பாங்க? சும்மா இரு. வெட்கக் கேடு. யாராச்சும் கேட்டா சிரிப்பாங்க"

திம்மம்மா: "பாத்து சிரிக்கற மாதிரி ஆய்ட்டுது இந்த ஜன்மம். என் தலையிலேயும் என் பெண்ணோட தலையிலேயும் மண்ணவாரிப் போட்டு வெளிய அனுச்சிட்டா எல்லாருக்கும் நிம்மதியாகிவிடும்"

திம்மம்மா இப்படிப்பேசத் தொடங்கியதும், அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டு வீட்டில் இருப்பதற்கு அசிங்கப்பட்டு மீண்டும் வீட்டைவிட்டு வெளியேறினான். சதாசிவ தீட்சிதன். புருஷன் பேச்சில் இருக்கிற நியாயத்தைப் புரிந்து கொள்ளாத திம்மம்மா அன்றைய தினம் முழுக்கவும் ஏதேதோ பேசி ஆர்ப்பாட்டம் செய்தாள். வீட்டில் இருக்கிறவர்கள் அனைவரையும் திட்டினாள். கோபத்தில் முடியையெல்லாம் விரித்து போட்டபடி தலையில் அடித்துக் கொண்டாள். வீட்டின் மூலையில் போய் படுத்துக் கொண்டாள். சாப்பாட்டுக்குக் கூட வர வில்லை. அன்று இரவும் சீத்தம்மாவே சமைத்தாள். எல்லாருக்கும் பரிமாறினாள். அத்தைக்காரி சாப்பிடவில்லையே என்று தானும் சாப்பிடாமல் உட்கார்ந்தாள். மடிப்புடவையுடன் உட்கார்ந்து களைத்துப் போனாள். கடைசியில் அடுப்பங்கரைக்கு முன்னாலேயே தரையில் படுத்துக் கொண்டாள். சீத்தம்மாவுக்குத் தூக்கம் வரவில்லை. காலையில் இருந்து சாயங்காலம் வரைக்கும் வேலைகள் செய்து சோர்ந்ததைப் பற்றி, நேற்று இரவு புருஷனுடன் படுத்திருந்ததை கட்டை மேலே உட்கார்ந்து

பார்த்துவிட்டு அம்பலப்படுத்தியதில் உண்டான வெட்கத்தைப் பற்றி, இப்படி அவமானப்பட நேர்ந்து விட்டதே என்பது பற்றி, புசித்த பாம்பு போல படுத்துக் கொண்டிருக்கும் அத்தை விடிந்ததும் இன்னும் என்னென்ன செய்யப் போகிறாளோ என்பது பற்றி, வயிற்றில் எதுவுமின்றி உருவான சங்கடம் பற்றி எதை எதையோ யோசித்ததில் சீத்தம்மாவுக்கு தூக்கமும் வராமல் போனது. இதுமட்டுமன்றி, தாய் வீட்டில் இருந்தபோது பட்டு மஞ்சத்தில் படுத்துப் பழகினவள் அவள். கரடுமுரடான தரையில் படுத்தால் உறக்கம் வருமா?

விடிந்தது. யாரார்ரோ வந்து எழுப்பினாலும் கூட மாயக்காரியான திம்மம்மா எழுந்திருக்கவில்லை. நண்பகலுக்கு மேல் எழுந்து மடித்துணி உடுத்திக் கொண்டு தனி உலை வைத்து சோறு ஆக்கிக் கொண்டாள். யாரிடமும் பேசவில்லை. தடதடவென சத்தம் எழுகிறமாதிரி பாத்திரங்களை தரையில் எடுத்து வைத்தாள். இலையைப் போட்டுக் கொண்டாள். "சாத்தி, வாடிம்மா வா. என் ராசாத்தி வாடி" என்று மகளை அழைத்து ஒரு பிடி குழைந்த சோற்றை அவளுக்குத் தந்தாள். தானும் உண்டு முடித்தபிறகு பாத்திரங்களைக் கொண்டு போய் கழுவும் தொட்டியில் போட்டாள் அதற்கப்புறம் பக்கத்துவீட்டுக்குப் போய் வீட்டு விஷயங்களை எல்லாம் பேசி அரட்டை அடித்தபடி உட்கார்ந்து கொண்டாள்.

9

கொஞ்ச நாட்களிலேயே ரிஷிபஞ்சமி வந்தது. பார்வதம்மா வெங்கம்மா இருவருமே விரதமிருந்தார்கள். இதனால் நேரத்துக்கு மடித்துணி அணிந்து கொண்டு சமைக்க முடிய வில்லை. இருவருமே சுனைக்குச் சென்றார்கள். விரதத்தால் மூச்சுக்கு முந்நூறுதரம் உடம்பெல்லாம் மண்ணைத் தேய்த்துக் குளித்தல், முந்நூறுதரம் பல் தேய்த்தல், முந்நூறு தரம் தளித்தல் எல்லா வற்றையும் முடித்துக் கொண்டு வீட்டுக்கு வரவே சாயங்காலம் மணி நான்கு ஆகிவிடும். இருவருமே அன்றைய தினம் விரதத்தின் காரணத்தால் பகல் வேளை உணவு சமைக்கவில்லை. எடுததுச் செய்ய வேறு யாரும் முன்வராத தால் பகல் வேளை உணவையும் சீத்தம்மாவே இழுத்துப்போட்டுக் கொண்டு செய்தாள். அன்றைய தினம் இரவு. நெருங்கிய உறவுக்காரர்கள் சிலர் வந்திருந் தார்கள் அப்போது சதாசிவதீட்சிதன் சீத்தம்மாவை அழைத்து, "நேற்று விநாயகர் சதுர்த்தி, பலகார தானம் கொடுப்பதற்கு பிராமணர்கள் கிடைக்க வில்லை. இன்றைய தினம் தானாகவே அவர்கள் வந்துள்ளார்கள் உண்டை, கொழுக்கட்டை, சோமாஸ் எல்லாம் செய். இன்றைக்கும் பண்டிகை தான். பூஜைக்கு நைவேத்தியம் செய்ய சித்ரான்னமும், பாயசமும் செய்துவிடு" என்றான் பெரிய விருந்துக் கான சமையலைக் கூட தான் சமைக்கக்கூடியவள் என்கிற நம்பிக்கை தன் மாமனாருக்கு இருக்கிறதை நினைத்து சந்தோஷப்பட்டு உற்சாகத்தோடு சமையல் வேலையில் ஈடுபட்டாள் சீத்தம்மா. மட்டை உரித்து தேங்காய் உடைத்து பூப்போல அதைத் துருவி எடுத்துக் கொண்டாள். வெல் லத்தை பொடியாக்கி அதை இன்னொரு முறத்தில் வைத்து மூடினாள் அண்ணி யோடு சேர்ந்து தானும் சமைக்கப் போவதாய் உள்ளும் புறமுமாய் ஓடோடிக் கொண்டிருந்தாள் சாவித்திரி. மடிக்காக சீத்தம்மா வெளியே போயிருந்த சமயம் அவள் செய்து வைத்திருந்த தேங்காய்த் துருவலையும் வெல்லத் தூளையும் கலந்து வாணலியில் போட்டு அடுப்புப்பற்ற வைக்க முயற்சி செய்தாள். மடி உடுத்திக் கொண்டு அதே தருணத்தில் சீத்தம்மாவும் உள்ளே வந்து விட்டாள். நடந்ததையெல்லாம பார்த்து, "சாவித்திரி, மடி உடுத்திக் கொள்ளாமல் இதை யெல்லாம் செய்யக் கூடாது. வெல்லத்தையும் தேங்காய்த் துருவலையும் இப் பொழுதே ஏன் கலந்தாய்? சாமிக்கு பூஜை செய்து நைவேத்தியம் படைத்து

பலகாரதானம் செய்ய வேண்டும் என்று மாமா சொல்லி இருக்கிறார். எல்லா வற்றையும் மடியாக இருந்து செய்ய வேண்டும் என்றாள். "அப்படின்னா, நீயே செஞ்சிக்கோ", என்று சொல்லிக்கொண்டே வெளியே புறப்பட்டு சென்றாள் சாவித்திரி. சமையல் வேலையையும், பலகாரம் சுடும் வேலையையும் ஒருத்தி யாகவே செய்து முடித்தாள் சீத்தம்மா. ஆண்கள் எல்லாம் பூசையை முடித்துக் கொண்டு மடியாகவே சாப்பிடுவதற்கு இலைபோட்டுக் கொண்டு உட்கார்ந் தார்கள். பூசை வேலைகளை முடித்தான் மகாதேவன். எல்லாருக்கும் பலகார தானம் கொடுத்து வணங்கி தானும் சாப்பிடுவதற்கு இலைமுன் உட்கார்ந்தான் சதாசிவதீட்சிதன் "சாப்பாடு மிக நன்றாக உள்ளது", என்று சொல்லிக் கொண்டே எல்லாரும் சாப்பிட்டனர். அப்போது சோமாஸ்களைக் கொண்டு வந்து எல்லாருக்கும் இலையில் வைத்தாள் சீத்தம்மா. சாப்பிட்டுக் கொண்டிருந் தவர்கள் அதனை எடுத்துக் கடித்துத் தின்னத் தொடங்கினர். நறநறவென்று எல்லாருடைய பற்களும் கடிபட்டன. நிறைய மணல் துகள்கள் யாராலும் சாப்பிட முடியவில்லை. எல்லாரும் அதை எறிந்துவிட்டனர். சீத்தம்மாவின் தாய் மாமனும் அன்றைய தினம் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். என்ன சீத்தம்மா, இவ்வளவு மணலையும் கடற்கரையில் இருந்து அனுமார் கொண்டு வந்து தந்தாரா", என்று கேலி செய்தான், அவன்.

"தேங்காயெல்லாம் துருவி வைத்துவிட்டு மூட மறந்து விட்டதா? ஏதாவது மண் உதிர்ந்ததா? இவ்வளவு மண் இருக்கக் காரணம் என்ன?" என்று சதாசிவ தீட்சிதன் கேட்டான். எல்லாவற்றிற்கும் முந்திக் கொண்டு வந்து பதில் சொல்கிற சாவித்திரி "அதெல்லாம் இல்லப்பா தேங்காயெல்லாம் துருவி முறத்தில் வச்சிருந்தாளா, அதை எடுத்து கல்ஜாடியில கொட்டும் போது கீழே சிந்திப் போச்சு. சமையக் கட்டுல வேலை செய்வதற்காக பொடிமணல் போட்டு வைத்துள்ளோமே, அதன்மேலே தான் சிந்திப் போச்சு. சிந்தினதை யெல்லாம் மேலோடு வாரி எடுத்தாள். அதையே வெல்லத்தோடு கலந்து சுட ஆரம்பித்துவிட்டாள். 'வேண்டாம் அண்ணி, மண்ணா இருக்குது'ன்னு சொன் னேன் என்னை வெளியே போன்னு துரத்திவிட்டாள்." என்று சொன்னாள். அப்போது சதாசிவ தீட்சிதன் "அந்த ஒரு காய் போனா போனால் போகிறது இன்னொரு காயை உடைத்து துருவி இருக்கலாமே" என்று எரிச்சலுடன் சொன்னான். அப்பொழுது திம்மமாவும வந்து, "வாயைத் திறந்து பதில் சொல்லுடீ" என்றாள். எதற்கும் பதில் சொல்லாமல் தலைதாழ்த்தியபடி சுவரோரம் நின்றிருந்தாள் சீத்தம்மா. அத்தைக்காரியான திம்மம்மா என்ன தண்டனை கொடுக்கப் போகிறாளோ என்று மனசுக்குள் பயந்து நடுங் கினாள். அவள் நிற்கும் இடத்திற்கு நெருங்கி வந்து நின்றாள் திம்மம்மா- 'தேங்காய்த் துருவல்ல மண்ண கலந்து சுட்டிருக்கியே, ஒனக்கு கொஞ்சம் கூடவா புத்தி இல்லை? இப்பொழுது செய்த பலகாரமெல்லாம் பாழாகி விட்டதே. உன் அப்பன் வீட்டு சாமான்கள் என்ற எண்ணமா உனக்கு? அந்த

மண்ணு சோமாஸ் எல்லாவற்றையும் நீயே தின்னு. அதையெல்லாம் தின்று முடிக்கிற வரைக்கும் வேறு எந்த சாப்பாடும் உனக்குப் போட முடியாது." என்று கடுமையாகச் சொன்னாள். வாய்க்கு வந்தபடி வார்த்தைகளால் திட்டினாள். வந்திருந்த உறவுக்காரர்கள் முன்னிலையில் அவமானப்படுத் தினாள். சீத்தம்மாவழி உறவுக்காரர்களுக்கும் சங்கடமாக இருந்தது. அப்போது சீத்தம்மாவின் தாய்மாமன், "அவளுடைய தாய் வீட்டு ஜனங்களையெல்லாம் வீணாக பேச்சில் இழுத்து எதற்காகத் திட்டு கிறீர்கள்? இது சரியில்லை. வேண்டுமென்றே யாராவது பலகாரத்தில் மண்ணைக் கலப்பார்களா? ஏதோ அறியாத பெண். ஏதோ கவனப்பிசகால் நடந்திருக்கக் கூடும். மண்ணில் விழுந்த தேங்காய்ப் பூவை எடுக்காமலேயே விட்டிருக்கலாம். என்னமோ, விவரம் புரியாமல் எடுத்துவிட்டாள். வேண்டுமென்றால் நல்ல புத்தி வரும்படி நாலு வார்த்தை திட்டுங்கள். ஆனால் அவளுடைய தாய் தந்தையரை பேச்சுக்குள் இழுத்துத் திட்டக்கூடாது" என்றான். உடனே திம்மம்மா வெகுண் டெழுந்து, "எங்கள் வீட்டு விஷயத்தில் நீங்கள் எதற்கு தலையை நீட்டுகிறீர்கள். இவ்வளவு பேச நீங்கள் யார்? வேறு எங்கேயும் சோறு கிடைக்கவில்லை என்று இங்கே வந்திருக்கிறீர்கள். சாப்பாடு முடிந்தது, இல்லையா? அப்புறம் என்ன? நாங்கள் அப்படித்தான் தெரிந்ததா? தாய் தந்தையரை பேச்சுக்கள் இழுத்து திட்டக் கூடாது, அப்படி, இப்படி என்று நீங்கள் ஒன்றும் பேச வேண்டாம். சிக்கு நீர்க்கிற ஆள்மாதிரி பேச ஒன்றும் வேண்டாம். தன் வீடு பாழா போனது போதாது, நம் வீடும் பாழா போகட்டும்ன்னு பெண் கொடுத் திருக்காங்க, எல்லாம் அவர்கள் செய்த மாய்மாலமும் வார்த்தை ஜாலமும் தான் இந்த அளவுக்கு கொண்டு வந்துள்ளது..." என்று வாய்க்கு வந்தபடி முகதாட் சண்யத்துக்குக்கூட இடம் இல்லாமல் பேசினாள்.

சதாசிவதீட்சிதன்: "அவரிடம் இந்த மாதிரியா பேசுவது? ரொம்ப அழகுதான். போ. பத்தாயிரம் பொன் கொட்டிக் கொடுத்தாலும் நம் வீட்டுக்கு வரக்கூடியவர்களா இவர்கள்? என்ன பேச்சு இது? சங்கரப்பா அவர்களே, தயவு செய்து கோபம் கொள்ள வேண்டாம். அவளது சுபாவம் உங்களுக்குத் தெரிந்த விஷயம்தானே." என்று எல்லாரையும் அமைதிப்படுத்தினான்.

இந்த ராட்சசியான திம்மம்மாவின் ஆர்ப்பாட்டங்களை கண்டு மிகவும் நடுங்கினாள் சீத்தம்மா. கடைசிவரைக்கும் அவள் சாப்பிட சோறு படைக்க வில்லை அவள். முடிந்த அளவு பசியைத் தாங்கிக் கொண்டிருந்தாள் சீத்தம்மா. முடியாத போது அத்தை பார்க்காத படிக்கு சோமாஸ்களை உடைத்து மணல் ஒட்டியிருக்கும பகுதியை கீழே உதறிவிட்டு வெறும் மாவுப்பகுதியை ஊதி ஊதித்தின்றாள். அவளுக் குண்டான மன வருத்தத்தை வார்த்தைகளில் எழுது வது மிகவும் கஷ்டம். அனுபவிப்பது என்பதே அதைவிட கஷ்டம்.

இன்னொரு நாள் வேறொரு விபரீதமான சம்பவம் நடந்தது. தன்புடவை யையும், மற்றவர்கள் புடவைகளையும் வேறு வேறு இடத்தில் மடித்துணி மாற்றிக் கொள்ளுமிடத்தில் எப்போழுதும் வைத்திருப்பாள் சீத்தம்மா. அன்று

காலை மடித்துணியை மூங்கில் கோல்மூலம் கொடியிலிருந்து எடுத்து அணி வதற்காகப் பிரித்தாள். புடவை யெங்கும் உள்ளங்கை அகலத்துக்கு நிறைய கிழிசல்கள். அது புதிய புடவை. எடுத்து ஒரு மாதம்தான் ஆகியிருந்தது. அழகான எட்டு கெஜப் புடவை. மகளுக்காக என்று தாய் வீட்டிலிருந்து அனுப்பி இருந்தார்கள். அதன் வர்ணமும், கரையின் கவர்ச்சியும், பூக்க ளோடிய முந்தானையும் சேர்ந்து அந்தப் புடவையை எடுப்பாக்கியது. அதைக் கட்டிக் கொண்டு திம்மம்மாவின் காலில் விழுந்து என்றைக்கு வணங்கப் போனாளோ, அன்றைக்கே அவள் கண்கள் சிவந்து பொறாமை படர்ந்து விட்டது. சமயம் வாய்க்கும் போதெல்லாம், "அவளுக்கு என்னடி வேண்டும் என்கிற போதெல்லாம் அம்மா வீட்டிலிருந்து புடவையை வரவழைத்துக் கொள்வாள். யார் மூலமாவது எப்படியோ வந்து சேர்ந்து விடுகிறது. இது என்ன, இன்னும் நல்ல நல்ல புடவைகள்கூட அவளுக்கு வந்து சேரும். என்னைக் கேக்கறவங்க யார் இருக்காங்க? யார் விசாரிப்பாங்க? அவள் அப்பாவுக்கும், தாத்தாவுக்கும் எவ்வளவு வேண்டும் என்றாலும் ராஜா கொடுப்பாரு. எங்க அப்பா ஏழை. இவ்வளவு பகட்டும் செல்வமும் வா என்றால் எனக்கு எங்கே இருந்து வரும்?" என்று நினைத்து நினைத்துப் பேசு வதும், சீத்தம்மாவைப் பழிப்பதாய் இருந்தாள் திம்மம்மா. அவளுக்கு இந்தப் புடவையின் மேல் ஒரு கண் இருந்தது. என்ன ஆனதோ எப்படி ஆனதோ, புடவை முழுக்க நிறைய ஓட்டைகள், கிழிசல்கள், கட்டிக் கொள்ளும் நிலையில் இல்லை அது. வேறு மடிப்புடவையும் இல்லை. மடிப்புடவை அணிந்து கொண்டு செய்ய வேண்டிய வேலைகள் வேறு நிறைய இருந்தன. அவற்றைச செய்யாமல் போனாள் அத்தையின் கோபம் ஆகாயத்துக்கும் மண்ணுக்கும் எகிறி விடும். தனக்கு உண்டான அவஸ்தையை வெளியே சொன்னாலும் கஷ்டம். வெளியே சொல்லாவிட்டாலும் கஷ்டம். என்ன செய்வது? தான் உடுத்தி இருந்த ஈரப் புடவையையே நன்றாக முறுக்கிப் பிழிந்து அதையே மீண்டும் உடுத்திக் கொண்டு உள்ளே சென்றாள். மடிப்புடவையணிந்து செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் செய்து முடித்துவிட்டு வேறு புடவை அணிந்து கொண்டு, ஈரப்படவையை உலர்த்தினாள். கிழிந்த புடவையை வேறொரு மூலையில் போட்டுவிட்டு யாருடனும் தன் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளாமல் மனசுக்குள்ளேயே அடக்கிச் சகித்துக் கொண்டாள்.

இன்னொரு நாள். ஏதோ பண்டிகை தினம். குளிக்கப் போகும் முன்பு தன் நகைகளையும், கழுத்தில் போட்டிருந்த அட்டிகையையும் கழற்றி அடுப்பங் கரையில் மிளகாய் போடும் பாத்திரத்துக்குள் வைத்து மூடிவிட்டு குளிய லறைக்குச் சென்றாள். இந்நகைகள் சீத்தம்மாவின் தாய் வீட்டாரால் அவளுக்குத் தரப்பட்டன. குளித்து முடித்து விட்டு நகைகளை எடுக்க மீண்டும் பாத்திரத்தைத் திறந்து பார்த்தாள். ஏழு இழைச் சங்கிலியில் நான்கு இழைகள் மட்டுமே இருந்தன. மூன்று காணவில்லை. காதுக்கம்மல் இரண்டாக முறிந் திருந்தது. ஒட்டியாணம் இடுப்பில் பொருந்தாமல் நான்கு விரற்கடை அகலம்

குறைந்திருந்தது. இதையெல்லாம் பார்த்து அவளுக்கு துக்கம் பொங்கியது. துக்கம் பொங்கி என்ன பயன்? யாரையேனும் ஏதேனும் செய்யும் நிலையில் இருக்கிறாளா என்ன? அன்றைய தினம் முழுக்க யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் மனசுக்கு உள்ளேயே வைத்திருந்தாள். இரவு வந்ததும் கண வனிடம் பேசிக் கொண்டிருக்கும் போது தனது புடவைக்கும் நகைகளுக்கும் உண்டான நிலைமைகளைச் சொல்லி கண்ணீர் விட்டு அழுதாள். அனைத் தையும் கேட்டு மகாதேவனுக்கு மன வருத்தம் மிகுந்தது. நடுநடுவில் அவள் பேச்சுக்குப் பரிதாபத்துடன் உச்சுக் கொட்டிப் பேச்சைக் கேட்டான். பதிலுக்கு எதையும் பேச இயலாமல் அமைதியாக இருந்தான். வேறெதையும் செய்ய அவனுக்குச் சாத்தியமற்றதாய் இருந்தது. அந்தக் காலத்தில் கணவன் மனைவியானவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், காலம் காலமாக வாழ்ந்தவர்களாக இருந்தாலும் கூட, கணவனைப் பற்றி மனை வியோ, மனைவியைப் பற்றிக் கணவனோ பெரியவர்கள் முன்னிலையில் பிரஸ்தாபித்துப் பேசும் வழக்கம் கிடையாது. முதலாவதாக வெட்கம். இரண் டாவதாக குடும்பத் தலைவராக இருப்பவரே அனைவரின் சுகதுக்கங்களையும் கவனித்துக்கொள்ளத் தக்கவர் என்கிற நிபந்தனை. அச்சூழலில், கணவனைப் பற்றி மனைவியோ, மனைவியைப் பற்றிக் கணவனோ, பெரியவர்கள் முன் பிரஸ்தாபித்துப் பேசத் தொடங்கும் பட்சத்தில் அக்குடும்பத்தில் குடும்பத் தலைவரின் கட்டுப்பாடும், ஆதிக்கமும் குறைந்துவிட்டது. என்று பொருளாகி விடும். இக்காரணத்தால் தந்தையிடம் இவ்விஷயம் குறித்துப் பேசப் போவது மரியாதைக் குறைவு ஆகும். ஒவ்வொன்றுக்கும் ஏதாவது ஒரு அர்த்தத்தைக கற்பித்து வம்பு வளர்க்கக் காத்திருக்கிற சின்னம்மா பற்றிய பயம் எல்லா வற்றைக் காட்டிலும் மிக அதிக அளவில் ஆக்கிரமித்திருந்தது. இப்படி எல்லாப் பக்கங்களிலும் உருவாகும் சங்கடங்களை அலசி ஆராய்ந்தபின்பு வரும் கஷ்டங்களை அனுபவித்தே தீர வேண்டும் என்று முடிவுக்கு வந்தான். இல்லா விட்டால் காரணமின்றி ஊர் அபவாதத்துக்கும், வேறு இம்சைகளுக்கும் இடம் உண்டாகும் என்று மௌனமாய் இருந்தான்.

இரவு உணவு சமைக்கும் வேலையையும் சீத்தம்மாவே செய்து வந்தாள் ஓர் இரவில் இரண்டு மூன்று பேர் உணவு உட்கொள்ளவில்லை இதனால் சோறு எஞ்சி விட்டது. அதைப் பார்த்துவிட்ட திம்மம்மா வாய்க்கு வந்தபடி மரு மகளைத் திட்டினாள். "உன் அப்பன் வீட்டிலிருந்தா அரிசி வந்து இறங்குகிறது. மூதேவி? பழைய சோறு எதுவும் வீணாகக் கூடாது. எவ்வளவு சோறு மிஞ்சி யுள்ளதோ எல்லாவற்றையும் நீயே தின்ன வேண்டும்" என்று சீத்தம் மாவைப் பார்த்துச் சத்தமிட்டாள். பயந்துவிட்ட சீத்தம்மா, மறுநாள் காலை பழைய சோறையே சாப்பிட்டாள். இன்னும் மிஞ்சிப் போன சோற்றை வைத்திருந்து அன்றைய இரவும் சாப்பிட்டாள். பழைய சோற்றைச் சாப்பிடும் பழக்கம் அவ்வளவாக இல்லாதவள் அவள். அவ்வளவு சாப்பிட்டும்கூட, பத்தில் ஒரு பாகம் தான் சாப்பிட முடிந்தது. மிச்சம் ஒன்பது பாகமும் வீணானது. பக்கத்து

வீட்டுக்காரியான சுப்பம்மா என்கிறவளிடம் எப்போதாவது தன் சங்கடங்களைச் சொல்லி ஆற்றிக் கொள்ளும் வழக்கம் சீத்தம்மாவிடமிருந்தது. தனக்கு வரும் சங்கடங்களை அடுத்தவர்களிடம் சொல்லி ஆற்றிக் கொள்ளாமல் இருப்பது எந்த மனிதனுக்கும் மிகவும் சிரமமான காரியம். மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாமல் உள்ளுக்குள்ளேயே துக்கங்களை இறுக்கி வைக்கத் தொடங்கினால் துயரங்கள் தேங்கித் தேங்கி, மேலும் துயரம் உண்டாகும் போது தாங்கும் சக்தி இல்லாமல் போகும். தன் கஷ்டங்களை மற்றவர்களுடன் பகிந்து கொள்ளும்போது அவர்கள் காட்டும் அனுதாபமும், பரிவும் நம் பார்வையில் தவறானதல்ல. மற்றவர்களும் நம்மைப் போலவே ஒரு விஷயத்தை அணுகுகிறார்கள் என்கிற அனுபவம் மனசுக்கு ஒருவிதமான தைரியத்தையும் கொடுக்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமாக, கஷ்டங்களை சொல்லிப் பகிர்ந்து கொள்ளும் போது கண்களில் நீர் பெருகுவதும், குரல் உடைந்து விடுவதும் உண்டு. இவையே துக்கத்தின் அளவு, எப்படி இருந்தாலும் குறைத்து விடும் சக்தியை உடையவை. இவ்விதமாக தன் கஷ்டங்களை சுப்பம்மாவிடம் சொல்லி சீத்தம்மா ஆற்றிக் கொண்டிருந்த தருணத்தில் பழைய சோறு விஷயம் பற்றியும் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. சீத்தம்மா அனுபவிக்க நேர்ந்த இம்சையைப் பார்த்து அவளுக்கு மனம் கரைந்தது. பழைய சோற்றில் தண்ணீரை ஊற்றி வைத்திருந்து பிழிந்து சாப்பிட்டால் வாசனை குறையக் கூடும் என்றும், தோஷம் ஏதேனும் இருந்தால் அதுவும் விலகக் கூடும் என்றும் அவளே சொல்லித் தேற்றினாள். அதன்படியே சீத்தம்மாவும் செய்து தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டாள்.

இன்னொரு நாள் சமையல் முடிந்தது. எல்லாருக்கும் பரிமாறினாள் சீத்தம்மா. சோற்றில் தலைமுடி ஒன்று கிடைத்துவிட்டது. தொடர்ந்து சாப்பிடுவது சிரமமாய் இருந்தது. அப்போது சதாசிவதீட்சிதன், "சீத்தம்மா சமைக்கிற போதெல்லாம் ஏதேனும் ஒரு பிரச்சனை வந்து விடுகிறது. இதற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை." என்று மனவருத்தத்துடன் பேசினான். அப்போது மகாதேவனும் சும்மா இருக்காமல், "ஒவ்வொரு அரசிக்கும் ஒவ்வொரு முடியைக் கலந்த மாதிரி இருக்கிறது" என்றான். உடனே திம்மம்மா, "எல்லாம் உன் அருமைப் பெண்டாட்டி ஆக்கி இறக்கினது. இங்கயே தலை வாரிட்டு முடியையெல்லாம் இதிலேயே போட்டுட்டாள் போலிருக்கு. படுபாவி, யாரும் ஒழுங்கா சாப்பிட முடியாத அளவுக்கு முடியப் போட்டு அசிங்கப்படுத்திட்டா" என்று திட்டினாள். மீண்டும் மகாதேவனும் சும்மா இருக்காமல்," சாப்பாட்டில் கிடைத்த தலைமுடியெல்லாம் சின்னச் சின்னதாக இருக்கிறது. எல்லாம் பொடி முடி. நீளமான முடி ஒன்று கூட இல்லை" என்றான். உடனே திம்மம்மா கோபத்தால் முகம் சிவந்து இறுக, "என்னடா, பெண்டாட்டிக்குப் பரிந்து கொண்டு பேச வந்துவிட்டாயா? உன் பெண்டாட்டி தலை முடி நீளம், என் பெண்ணோட தலைமுடி குட்டைங்கற அர்த்தத்தில் தானே நீ பேசுகிறாய்? அப்படியென்றால் சோற்றுப் பாத்திரத்தில்

சாவித்திரிதான் தலைமுடியைக் கொண்டு போய் போட்டாளா? கடவு ளேன்னு அவள் பாட்டுக்கு ஒரு மூலையில் ஆடிட்டிருக்கா. அவள்மேல எதற்குடா வீண்பழி சுமத்தறே? அவளை எங்கே தள்ளி விடட்டும்நான்? உங்கள் நடுவில் என்னால் வாழ முடியாது. எங்கேயாவது குளத்திலேயோ ஏரி யிலேயோ அவளைத் தள்ளி சாகடிச்சிட்டு நானும் விழுந்து உயிரை விட்டுடறேன். இந்த இம்சைகளுக்கு நடுவில் யாரால் வாழ முடியும்? வார்த் தைக்கு வார்த்தை ஏதாவது ஆட்சேபனை. ஏதாவது பழி. அந்தப் பெண் மேலேயும் பழி. எது செய்யவும் தயங்காத ஆளு, நீ. ஏன் செய்ய மாட்டே, சொல்? எல்லாச் சொத்தும் கைக்கு வந்தாச்சு. என்னையும் என் பெண்ணையும் வீட்டை விட்டு துரத்துவது ஒன்றுதான் பாக்கி. அதுவும் செய்து விட்டால் உங்களுக்கு வயிற்றிலே பால் வார்த்த மாதிரி ஆகிவிடும். அப்பா, பிள்ளை இரண்டு பேருக்கும் எங்கள் மேல்தானே கண் எப்போதும்?" என்று மூச்சு விடக்கூட நேரமின்றி வாய்க்கு வந்தபடி பேச ஆரம்பித்தாள். அதற்கு மகா தேவன், "சின்னம்மா நான் என்ன சொன்னேன்? தலை முடி நீளமானதல்ல என்று சொன்னதற்கு இவ்வளவு பேச்சா. இருக்கட்டும். எல்லாம் எங்கள் கிரகக்கோளாறு" என்று சொன்னபடி எழுந்து வெளியே போனான். அதற்கப்புறம் எல்லாப்பேச்சும் சீத்தம்மாவின்மேல் திரும்பியது. தலையில் அடித்துக் கொண்டும் அழுது புலம்பியும் ஒப்பாரி வைக்க ஆரம்பித்தாள், திம்மம்மா.

அத்தைக்காரிக்கும், நாத்தனார்க்கும் தண்ணீர் இறைத்து வைத்துவிட்டு குளிப்பதற்குத் தயாரானாள் சீத்தம்மா. தலையில் எண்ணெய் ஊற்றித் தேய்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவள் மட்டும் மற்ற எல்லாருக்கும் தலையில் எண்ணெய் ஊற்றிஅரக்கத் தேய்க்க வேண்டும். சமயங்களில் தலைக்குத் தேய்த்துக் கொள்ள ஒரு சொட்டு எண்ணெயும் இருப்பதில்லை. எல்லாருக்கும் தண்ணீர் இறைத்துக் கொடுத்தாள். ஆனால் இவளுக்கென யாரும் இரண்டு குடம் நீர் இறைதது்க் கொடுத்ததிலலை. சிகைக்காய்த்தூளை பக்குவமாக இவள் அரைத்து வைத்தி ருந்தாள். எல்லாரும் அதையே தேய்த்துக் குளித்தார்கள். இவள் குளிக்கப் போகும்போதோ கொஞ்சம் கூட சிகைக் காய்த்தூள் இருந்ததில்லை. இந்த லட்சணத்தில் "மருமகள் குளிக்கப் போனால் எவ்வளவு எண்ணெய் வைத்தாலும் போதாது" என்ற புகார் மாத்திரம் இருந்தது. பண்டிகை முதலான தினங்களில் வீட்டில் பட்சண வகைகள் ஏதேனும் செய்யப்படும்போது முதலிலேயே வேண்டும் என்கிற அளவுக்கு எடுத்துத் தனியே மூடி வைத்துக் கொள்வாள். எல்லாருக்கும் பரிமாறி விட்டு இறுதியில் சாப்பிடுகிற பழக்கம் உள்ளவளான சீத்தம்மாவுக்கு தின்ன எந்த பட்சணமும் இல்லாத வகைக்குச் செய்தாள். "சீத்தம்மாவுக்குக் கொடுத்தாயா, சாப்பிட்டாளா" என்று வீட்டில் இருக்கிற பெரியவர்களான பார்வதம்மாள், காவேரியம்மாள் யாரேனும் கேட்டால், "ஐயையோ, எனக்கு மறந்தே போச்சு.

இவளை உட்காரவைத்து ஓர்ஆள் பரிமாற வேணடுமா, என்ன? வைத்த இடத்தில் போய் தானே எடுத்துக் கொள்கிறாள். அவள் சாப்பிடுவதே இல்லையாம், பாவம் ஆனால் வைக்கிற பட்சணங்கள் மாத்திரம் வைத்த இடத்தில் இருப்பதில்லை எல்லாம் மாயமாகி மறைந்து விடுகிறது. அவள் அப்பாவித்தனத்துக்கு நெருப்பு வைக்க. பட்சணங்களை நம் முகத்தில் கூட காட்டமாட்டாள். செய்தது எல்லாவற்றையும் அவள் குடல் தானே விழுங்கி வைக்கிறது. நானாகட்டும் என் பெண்ணாகட்டும் அது எப்படி இருக்கிறது என்று கூட அறியமாட்டோம். செய்த அன்றைக்கு இலையில் வைத்து என்ன சாப்பிட்டோமோ, அதுதான் நாங்கள் கண்டது. மிச்சம் எல்லாம் புருஷன் பெண்டாட்டி இரண்டுபேரும் தானே விழுங்குகிறார்கள் அந்த வித்தையெல்லாம் அவள் அப்பன் வீட்டிலிருந்து வரும்போதே சரளமாய்க் கற்றுக் கொண்டுதான் வந்திருக்கிறாள். அவள் ஒன்றும் சாதாரண ஆள் இல்லை பெரிய மாயக்காரி. அதையெல்லாம் சொல்லவும் நன்றாக இருக்காது, கேட்கவும் நன்றாக இருக்காது. "இப்படி இல்லை, அப்படி" என்று சொன்னால் போதும் பெரிய ராட்சசிபோல வருகிறாள். எப்படியாவது பாழாப் போகட்டும், எனக்கென்ன? அவள் பிரச்சனையே எனக்கு வேணாம்" என்று கொஞ்சம்கூட பொருத்தமே இல்லாமல் வாய்க்கு வந்தபடி பேச ஆரம்பித்து விடுவாள் திம்மம்மா.

10

எல்லாப் பிரச்சனைகளையும் சமாளித்துச் சகித்து கொண்டும், தன் பதி விரதா தர்மத்துக்கு எந்த பாதகமும் வராமல் பார்த்துக் கொண்டும் எச்சரிக்கையுடன் நடந்தாள் சீத்தம்மா. அப்போது ஊர் மக்களின் விருப்பத்திற்கிணங்கி, ஒவ்வொருநாள் இரவும் ஈஸ்வரன் கோயிலில் புராணச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தான் சதாசிவதீட்சிதன். இயல்பாகவே அவன் பண்டிதன். சாத்விகமான குணமுடையவன். ஆழமான பார்வையை உடையவன். அநேக ரகசியங்களை அறிந்தவன். அவன் சொன்ன புராணக் கதைகள் பெருமளவில் பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் ரசனைக்குரியன வாகவே இருந்தன. இதைக் கேட்பதற்காக அக்கம்பக்கத்துக் கிராமத்து ஆட்கள் எல்லாம் திரண்டு வந்தனர். சீத்தம்மாவைத் தவிர வீட்டில் இருந்த எல்லாப் பெண்களும் தினந்தோறும் புராணக் கதை கேட்கப் போனார்கள் ஒரு நாள் புராணக் கதையில் பதிவிரதைகளின் பெருமைகளைப் பற்றிப் பேச வேண்டிய கட்டம் வந்தது. அடுத்த நாள் த்வாதசியான காரணத்தால் புராணக் கதை இல்லை. காலை வேளைச் சாப்பாடு முடிந்தது. எல்லாப் பெண்களும் கிராமத்தையே இடம் வலமாய் ஒரு சுற்று சுற்றி முடித்துத் திரும்பினார்கள். திம்மம்மா, வெங்கம்மா, பார்வதம்மா, அடுத்த வீட்டு சுப்பம்மா, எதிர் வீட்டு ராதாபாய் எல்லோரும் மூன்றாம் ஜாம சமயத்தில் ஜோசியர் வீட்டு முற்றத்தில் சேர்ந்தார்கள். மந்தாரை இலைகளை முன்னால் குவித்து வைத்துக் கோத்தார்கள். தைத்துக் கொண்டே "நேற்றுப்படித்த புராணம் நன்றாக இருந்தது" என்றோ, 'பதி விரதை தர்மத்தைப் பற்றியும், பதி விரதைகள் சரித்திரத்தையும் தீட்சிதன் அழகாகச் சொன்னான்" என்றோ பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருத்தி, "இருந்தால் அப்படி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்படி ஒரு ஜன்மமெடுத்து பிறக்கவே கூடாது. "நாலுபேர் மெச்சிக் கொள்கிற அளவுக்கு இல்லையென்றால் அது என்ன வாழ்வோ" என்றாள். இன்னொருத்தி, "எல்லாருக்கும் அப்படி ஒருவாய்ப்பு வாய்த்து விடுமா? மனசு வைத்தால் வரமும் சாபமும் கொடுக்கிற சக்தி மிக்க புண்ணியவான்கள் யாரும் இப்போது இல்லை. அப்படியே இருந்தாலும் அது எல்லாம் இப்போது நடப்பதும் இல்லை" என்றாள். மற்றொருத்தியோ, "அதெல்லாம் நடக்காது என்று

சொல்லக்கூடாது. இது கலியுகம். இந்த இந்த யுகத்தில் இப்படி இப்படி நடக்கும் என்று எல்லா யுக தர்மங்களையும பற்றி தீட்சிதர் சொன்னாரே இந்த கலியுகத்தில் எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருந்தால் போதும். அந்தக் காலத்தில் நடந்த தெல்லாம் இப்போதும் நடக்க வேண்டும் என்பது நடவாத காரியம்" என்றாள். இன்னொருபெண், "அந்த பழைய யுகங்களில் கூட நல்லவர், கெட்டவர் எல்லோரும் தானே இருந்தார்கள். எல்லாமே அவரவர்பூர்வ ஜென்ம பலன் களைப்பொறுத்தே நடக்கும். இல்லாவிட்டால் மழை யெல்லாம் வருமா, என்ன? இப்பொழுது கூட எந்தப் பத்தினித் தெய்வம் இருக்கிறாளோ, அவள் பாதமே கதி" என்றாள். இன்னொருத்தி, "நடக்கிறதெல்லாவற்றிற்கும் பூர்வஜன்ம பலன்கள்தான் காரணம் என்று பொத்தாம் பொதுவாக சொல்ல முடியாது,. கெட்ட வழிக்குப்போய் கெட்டவை அனைத்திலும் ஆழ்ந்து அமிழ்ந்துவிட்டு 'இது என் பூர்வஜென்ம பலன் அதற்குத் தகுந்தபடியே எல்லா சந்தர்ப்பங்களும் கூடி வருகின்றன. அதற்கேற்றாற் போல் தான் நம் புத்தியும் இருக்கிறது. அதிலிருந்து தப்பிக்க பிரம்மாவானாலும் முடியாது. கெட்டதாய் இருந்தாலும் சரி நல்லதாய் இருந்தாலும் சரி. நம் தலையில் எழுதி இருக்கிற மாதிரிதான் நடக்கும். அதை மாற்ற யாராலும் முடியாது,' என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தால் அதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?" என்றாள். அவர்களுள் மற்றொருபுத்திசாலிப் பெண், "எல்லாம் பூர்வ ஜன்ம பலன் என்று சொல்லிக்கொண்டு மனசை இஷ்டம் போல அலையவிடக் கூடாது. மனசை ஒரு கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். நல்ல வழியில் தான் நடக்க வேண்டும் என்று முடிவெடுத்து முயற்சி செய்தால், எப்பொழுதோ கணநேரம் கெட்ட புத்தி தோன்றினாலும் அது மனசிலேயே பிறந்து மனசுக்குள்ளாகவே மடிந்து போகும்" என்றாள். அடுத்து இன்னொரு புத்திசாலிப் பெண்,"போன ஜன்மத்தில் நல்வினை குறைவாய் இருந்து தீவினை அதிகமாக இருக்கும் பட்சத்தில் மனசு உறுதியாக நிற்பதில்லை. முதன்முதலில் மனசில் எது தோன்றுகிறதோ, அது போன ஜன்மததின் தொடர்ச்சியாய்த் தோன்றுவது ஆகும் என்று அன்றைக்குத் தீட்சிதர் சொன்னாரில்லையா? அது மட்டுமல்லாமல் மனசை அடக்கி அடக்கி நாம் பயிற்சி செய்தோமானால், போன ஜன்மத்து தீவினைப் பயன்களை தடுத்து நிறுத்தி விட முடியும். இப்பழக் கத்தை இறுதி வரைக்கும் கடைபிடிக்க முடியுமெனில் இன்னும் நல்லது. அடுத்த ஜன்மத்துக்கு எந்த தீவினைத் தொடர்ச்சியும் இல்லாமல் பார்த்துக் கொள்ள முடியும். மனசில் உதித்த ஓர் எண்ணம் எப்பொழுது காரியமாக மாறுகிறதோ, அப்பொழுதே அந்த வினைப்பயன் இந்த ஜன்மத்தில் தோன்றும் என்ப தோடன்றி அடுத்த ஜன்மத்திற்கும் தொடரும் என்று கூட விரிவாகப் படித்துச் சொன்னாரே, அல்லவா" என்றாள். மற்று மொருத்தி, "இந்த கலியுகத்தில் மட்டும் இந்த ஜன்மத்து வினைப்பயன், இந்த ஜன்மத்திலேயே கிடைத்துவிடும். அடுத்த ஜன்மம் வரைக்கும் காத்திருப்பதில்லை" என்றாள். மீண்டும் அவர்

களுள் ஒருத்தி, "பாவமாக இருந்தாலும் சரி, புண்ணியமாக இருந்தாலும் சரி எது அதிகமாய் இருக்கிறதோ அதன் பலன் இப்பொழுதே கிடைத்துவிடும். இப்பொழுதே ஒருவேளை இல்லையென்றாலும் எதிர் காலத்தில் கிடைத்து விடும்" என்றாள். அச்சமயம் இன்னொருத்தி, "நம் புத்தி நம் வசத்தில் கட்டுப் பாட்டில் இருந்தால் எதுவும் முன்னால் வராது, பின்னாலும் போகாது" என்று ஒரே வார்த்தையில் பேசி முடித்தாள்.

இவ்விதமாக எல்லாரும் புராணச் சொற்பொழிவில் கேட்ட சங்கதிகளில் ஞாபகத்தில் இருந்தவை பற்றிப் பேசிக் கொண்டே இலை தைத்துக் கொண் டிருக்கும் போது, அது வரைக்கும் எதைப் பற்றியும் எதுவும் பேசாமல் இருந்த கிழவியான வெங்கம்மா பேசத் தொடங்கினாள்.

"எல்லாம் போன ஜன்மத்துப் பலன் என்று சொன்னாலும் சொல்லுங்கள். இல்லையென்றால் அனைத்திற்கும் நம் அறிவுதான் காரணம் என்று சொன் னாலும் சொல்லுங்கள். இந்தக் காலத்தில் நல்லவர்கள் இல்லை, அந்தக் காலத்தில்தான். இருந்தார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்? எல்லாக் காலங்களிலும் நல்லவர்களும் உண்டு, கெட்டவர்களும் உண்டு. நீயே சொல் பாகீரதி, என் அம்மா இருந்தாளே,, அவளுக்கு என்ன குறைச்சல்? உனக்குத் தெரியுமில்லையா அவளைப் பற்றி," என்றாள். அப்போது பாகீரதி அம்மாள், "எனக்கு நன்றாகத் தெரியுமே அருந்ததி அம்மாளைப் பற்றி. நெருப்பு போன்ற பெண்மணி அவள். அநத மாதிரி ஒருத்தியை வளர்ந்திருப்பவர்களுள்ளும் பார்த்ததில்லை, பிறந்திருப்பவர்களுள்ளும் பார்த்ததில்லை" என்றாள். மீண்டும் வெங்கம்மாவே அருந்ததி அமமாளின் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள். அது என்னவெனில்:

"என் அம்மாவின் பெயர் அருந்ததியம்மாள். சரிவர தெரியாதவர்கள் அரவிந்தம்மாள் என்று கூப்பிட்டார்கள், என்று அப்பா சொல்வதுண்டு. அப்போது நாங்கள் சிறுவர்கள். எங்களை உட்கார்த்தி வைத்துக் கொண்டு பழைய கதையை எல்லாம் சொல்வதுண்டு என் அம்மாவின் ஜாதகத்தைப் பார்த்து அவளுக்கு அருந்ததி என்று பெயர் வைத்தார்களாம் அவளை அருந்ததி அம்மாள் என்று அழைப்பதற்குப் பதிலாக 'அருந்தம்மா' என்று அழைத்து வந்தார்கள். இவள் பிறந்த நட்சத்திர பலனை அனுசரித்து இந்தப் பெயரை வைத்தார்களாம். இளமையில் இருந்தே தெய்வம், பெரியவர்கள், குருக்கள் ஆகியோர்களிடம் அம்மாவுக்கு அளவு கடந்த பக்தி இருந்தது. சாகும் வரைக்கும் அவளுக்கு அந்த பக்தி இருந்தது. நல்ல புடவை வேண்டும், நல்ல நகைகள் வேண்டும். அந்த தின்பண்டம் வேண்டும், இந்தப் பூ வேண்டும் என்று எந்த காலத்திலும் அடம் பிடித்தவள் இல்லையாம் அவள். ஏழுவயதுப் பெண்ணாக இருக்கும் சமயத்திலிருந்தே தனக்கு நல்ல புருஷன் அமைய வேண்டும் என்று நித்தமும் மிகவும் பக்தியுடன் கௌரி பூஜை செய்து வந்தாளாம். அதற்குத் தகுந்தாற் போலேயே அவளுக்கு நல்ல புருஷனாகவே

அமைந்தான். கல்வியறிவில் மிகப் பெரியவர் என்று எந்த அளவுக்குப் பெயர் வாங்கி இருந்தாரோ அந்த அளவுக்கு நல்ல குணசீலன் என்றும் பெயர் வாங்கி இருந்தார், என் அப்பா. ஆரம்பக் காலத்தில் அவர் மிகவும் ஏழை. அம்மாவைத் திருமணம் செய்து கொண்ட பிறகுதான் மண்ணைத் தொட்டால்கூட பொன் னாகிற அளவுக்கு எல்லாம் கைகூடி வந்ததாம். அம்மாவிடம் அப்பாவுக்கு அளவுகடந்த அன்பு இருந்தது. வருத்த மூட்டும்படி எந்த வார்த்தையையும் சொன்னதில்லை. அம்மாவின் குணம், நடத்தையைக் கண்ட மாமனாரும், மாமியாரும் ரொம்பவும் மெச்சிக் கொண்டாடார்கள். வீட்டுக்கு விளக்கேற்றி வைக்க வந்த மகாலட்சுமி இவள், உருவத்தில் கூட சாட்சாத் அந்த ஆதி லட்சுமியைப் போலவே இருக்கிறாள் இவள், நடத்தையும் அதற்குத் தகுந்த மாதிரியே உள்ளது, என்று பாராட்டிக் கொண்டாடினார்கள். அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு, மடித்துணி உடுத்திக் கொண்டு சமையல் வேலைகளை எல்லாம் செய்து முடித்து, தினசரி கௌரி பூஜையையும் பிருந்தாவன பூஜையையும் செய்து முடித்து, மாமனார், மாமியார், புருஷன் அனைவரையும் வணங்குவாள். சாயங்காலம் ஆனதும் மீண்டும் ஒருமுறை இதே போலச் செய்வாள். இது மட்டுமன்றி, தினசரி புருஷனின் காலைத் தூய்மையாகக் கழுவிப் பணிவிடை செய்யாமல் சாப்பிடப் போவ தில்லை. அந்தத் தண்ணீரை கீழே ஊற்றி விடாமல் வேறொரு பாத்திரத்தில் வைத்திருந்து, புருஷன் ஊருக்குப் போயிருக்கும் சமயங்களில் அதை வணங்கிய பின் வேறுவேலைகளைச் செய்தாள். இவளைவிட வயதில் மூத்தவர்கள் கூட இவளைக் கண்டு மிகவும் வியப்படைந்தனர். எல்லார்க்கும் இவளைக் கண்டால் ஒருவித அச்சம் இருந்தது. நாங்கள் இருவர் மட்டுமே பிறந்தோம் நானே மூத்தவள். தம்பி நீலகண்டன் அடுத்தவன். அதற்கப்புறம் யாரும் இல்லை. அவள் சொன்ன வார்த்தை என்றென்றும் தவறியதே இல்லை".

"பக்கத்துவீட்டில், அந்த வீட்டு மருமகனான கோபாலன் என்பவன் இருந்தான். ரொம்ப நாள் கழித்து அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்த வீட்டுக்கும் எங்கள் வீட்டுக்கும் மத்தியில் இருந்த எங்கள் வீட்டுச் சுவர் இடிந்து விழுந்து ரொம்பவும் தொந்தரவாக இருந்தது. அந்தச்சுவரை மீண்டும் கட்டும் பொருட்டு முயற்சி செய்தார் அப்பா. அப்போது அந்தக்கோபாலன் எங்கள் மீது புகாரை சர்க்காருக்கு எழுதிப் போட்டான். வருத்தமும், கவலை யுமாயிருந்தார் அப்பா. அப்பாவின் கவலையைப் பார்த்து அம்மாவும் மனம் வருந்தினாள். நாலுபேர் முன்னால் அவமானப்படுகிற அளவுக்கு தொல்லை உண்டாக்கினான், கோபாலன். இந்த விவாதத்தில் புருஷனுக்கு அவமானம் உண்டாகிவிட்டதே என்கிற கவலையுடன் அவள் நேரே பக்கத்தது வீட்டுக்குச் சென்றாள். 'கோபாலா, நீ வயசில் சின்னவன், ஆனாலும் பரவாயில்லை உன் காலைப் பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன். யார் யார் பேச்சை யெல்லாமோ கேட்டு எங்களை அவமானப்படுத்தாதே' என்று அவனிடமே போய்

சொன்னாள். அதற்குத் துடுக்கனாகிய அந்த கோபாலன், 'இந்த வேஷம் எல்லாம் இங்கே வேண்டாம். எனக்கே பாடம் சொல்ல வந்துவிட்டாயா? தேவடியாள் மாதிரி உள்ளே நுழைந்துவிட்டு பெரிசாய பேசவந்தாயா?' என்றான். அதைக் கேட்டதுமே அம்மாவின் கண்கள் ததும்பிவிட்டன. அந்தத் துக்கத்தையும் பொறுத்துக் கொண்டு மீண்டும் எங்கள் அம்மா, 'கோபாலா, உன்னை நான் எதுவும் திட்டப் போவதில்லை. உன் வார்த்தையில் சத்தியம் இருந்தால் எங்களுக்கு இப்போது கிடைக்கிற சாப்பாட்டுக்கு எந்த வழியும் இல்லாமல் போகட்டும். என் இரண்டு குழந்தைகளும் இப்போதே செத்துச் சாம்பலாகட்டும். ஒரு வேளை எங்கள் பக்கத்தில் சத்தியம் இருக்குமெனில் உன் இரண்டு கால்களுக்கும் குஷ்டரோகம் வந்து அழுகி விழும் உன் நாக்கு அறுந்து போகும். ஒரு சொட்டு தண்ணீரோ, ஓர் அடி நிழலோ கூட இல்லாத இடத்தில் தவித்துத் தவித்து உன் உயிர் போகட்டும். பிசாசாக உன் உயிர் அலையட்டும். சூரிய நாராயணன் சாட்சியாக இதைச் சொல்கிறேன். நான் பதிவிரதையெனில் இது நடக்கட்டும்" என்று கோப ஆவேசத்துடன் அவனுக்குச் சாபமிட்டாள். அம்மா சொன்னபடியே சில நாட்கள் கழிந்த பிறகு அவனுக்குக் காய்ச்சல் வந்தது கால்கள் இரண்டும் பெரிதாய் வீங்கிக் கொண்டன. வீக்கம் உடைந்து நீர் ஒழுக ஆரம்பித்தது. கடைசியில் கால்கள் எங்கும் புண்ணாகி பாதங்கள் அழுகின. சாயங்கால அளவில் ஒரு பாதம் முழுக்க அழுகி அறுந்து விழுந்தே விட்டது. அன்றைய இரவே கோபாலனுக்கு ஜன்னி கண்டது. நாக்கு இழுத்துக் கொண்டது வைத்தியரிடம் காட்டுவதற்காக வண்டியில் கிடத்திக் கொண்டு அழைத்துச் சென்றார்கள். ராமசமுத்திரத்தி லிருந்து சாமராஜநகர் செல்லும் வழியில் துன்பம் அதிகமாகி வண்டியிலேயே கோபாலனின் உயிர் பிரிந்தது. வேறு என்ன உதாரணம் வேண்டும்?

இதுவன்றி இன்னொரு விசித்திரமும் நடந்தது. எங்கள் வீட்டு நிலத்தில் குத்தகைக்குப் பயிர் செய்து கொண்டிருந்தவன் வரதன் என்கிற கௌடா ஒரு முறை வீட்டுக்கே கொண்டு வந்து எட்டு மூட்டை நெல் அளந்து தந்தான். எங்கள் அம்மாதான் முன்னே நின்று வாங்கினார்கள். அப்பா ஊரில் இல்லாத சமயம் அது. நஞ்சன் கூடிற்குச் சென்றிருந்தார். அவர் ஊரிலிருந்து திரும்பிய பிறகு இன்னும் தர வேண்டிய பன்னிரண்டு மூட்டை நெல்லையும் கொண்டு வந்து தரச்சொல்லி அவனை வற்புறுத்தினார். அதற்கு அந்த கௌடா இருபது மூட்டை நெல்லையும் அம்மாவின் முன் கொட்டி அளந்து கொடுத்துச் சென்றதாகப் பொய் சொன்னான். அவனைக் கையோடு அழைத்து வந்த அப்பா, அவனை அம்மாவின்முன் நிறுத்தினார் கேட்டதையே மீண்டும் திருப்பிக் கேட்டார். கொஞ்சமும் தயக்கம் காட்டாமல், "இருபது மூட்டை நெல்லையும் அளந்து உங்கள் வீட்டுத் திண்ணையில் வைத்துவிட்டுச் சென்றேன், அல்லவா" என்று சொன்னான். அதற்கு என் அம்மா, "பொய் சொல்கிறாய். உனக்கும் ஒரு குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தை சாட்சியாய்ச் சொல்கிறேன். உன்

பொய்க்கு அந்தக் குழந்தையே சாட்சியாகட்டும்" என்றாள். வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டிக் கொண்டு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு கௌடா புறப்பட்டுப் போனான். ஒரு நாள் இரவு. சாப்பாட்டை முடித்துக் கொண்டு அவனும், பெண்டாட்டியும், குழந்தையும் படுத்திருந்த சமயத்தில் மேலிருந்த மரச்சாரம் முறிந்து குழந்தையின் மேல் விழுந்தது. குழந்தை அந்தக் கணத்திலேயே இறந்தது. அவன் மனைவிக்கு உடனே விஷயம் தெளிவாகி விட்டது. 'அருந்தம்மாளி'ன் சாபத்தாலேயே குழந்தை இறந்தது, என்று அந்த ஊர்மக்களும், பக்கத்து கிராமத்து மக்களும் பேச ஆரம்பித்தார்கள்.

இது மட்டுமன்றி சுற்று வட்டாரக் கிராமங்களில் நோய்வாய்ப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, ஏதோ சங்கடத்தால் வருந்துபவர்களாக இருந்தாலும் சரி, அவர்களை எங்கள் வீட்டுக்கு அழைத்து வருவார்கள். வேப்பஞ்சாற்றைக் குடிக்கச் செய்து மந்திரம் சொல்லி மூன்று தரம் சுற்றிப் போட்டால் அவர்களின் நோய் விலகி குணமடைந்து விடுவார்கள். சுற்றுவட்டார ஜனங்கள் எல்லாரும் அம்மாவின் பெயரைக் கேட்டதும் கைகூப்பி வணங்குவார்கள். எங்கள் தாத்தாவும் பாட்டியும் முதலிலேயே இறந்துவிட்டார்கள். சில ஆண்டுகளுக்குப் பிறகு அப்பாவுக்கு காய்ச்சல் வந்தது. காய்ச்சலிலேயே அவர் உயிர் பிரிந்தது. அந்த முறை அவர் பிழைக்கமாட்டார் என்று என் அம்மாவுக்கு எப்படியோ தெரிந்திருந்தது. கண்ணாகாலம் என்கிற ஊருக்கு ஆள் விட்டு அனுப்பி, நீத்தார் காரியங்கள் செய்யவல்ல பிராமணர்களை அழைத்துவரச் செய்தாள் இரவு ஒரு மணிக்கு எங்கள் அப்பா இறந்தார். அதற்கு முன் சாயங்காலமே என்னையும், நீலகண்டனையும் அழைத்து, 'நீலகண்டா, அக்காவைக் கைவிட்டு விடாதே. வைதவ்யம் அனுபவிக்க வேண்டியது அவள் தலையெழுத்தாகி விட்டது அதை அனுப்வித்துத்தான் தீர வேண்டும். வயசுதான் இருபத்தைந்து ஆகிறதே தவிர நீ விவரம் தெரியாத பிள்ளை, உன்னைவிட ஐந்து வயது மூத்தவளானாலும் அவளுக்கும் விவரம் தெரியாது. நீங்கள் இரண்டு பேருமாய்ச் சேர்ந்து குடும்ப பாரத்தைச் சுமக்க குடும்பத்துக்கு கெட்ட பெயர் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். இந்த சாவிக் கொத்தை வாங்கிக் கொள். அவருக்கோ பிரக்ஞை தப்பிவிட்டது. எல்லாமே கெட்ட அறிகுறிகளாக உள்ளன. என் வழியை நான் பார்த்துக்கொள்கிறேன். அம்மாவின் மேலும் அப்பாவின் மேலும் இருக்கிற உங்கள் நெருக்கத்தை இதோடு விட்டுவிடுங்கள்" என்று புத்திமதிகளைச் சொன்னாள் அம்மா எனக்கோ, தம்பிக்கோ அவ்வளவாக அனுபவம் இல்லை. எங்கள் அம்மாவின் பேச்சைக் கேட்டு எங்கள் இருவருக்கும் ஆச்சரியம் அதிகமானது. அன்று இரவு அம்மாவே தம்பிக்கு சாப்பாடு போட் டாள். எனக்கு ஏதோ பலகாரம் தந்தாள். எங்களுக்கோ எதையும் சாப்பிட முடியாத நிலை. எழுந்து நாங்கள் கைகழுவிக் கொண்டோம். அப்பொழுது எங்கள் இருவரையும் பக்கத்தில் அழைத்து தலைகளைத் தடவிக் கொடுத்தாள் அம்மா. கண்களில் நீர் தளும்ப

எங்கள் இருவரையும் ஆரத் தழுவிக் கொண்டாள். அதற்கப்புறம் எங்களை விட்டு விலகி அப்பாவின் பக்கத்தில் சென்று அமர்ந்தாள். அவருக்குத் தேவைப்படுகிற பாலையும் தண்ணீரையும் வாய்க்குள் ஊற்றிக் கொண் டிருந்தாள். அன்றைய இரவே அப்பாவின் உயிர் பிரிந்தது. அவருக்குச் சந்நியாச தீட்சை கொடுக்கிற தகுதி இருக்கிறது என்று நிறையப் பிராம ணர்கள் வந்து காத்திருந்தார்கள். அப்போது அம்மா, "அவருக்கு பிரக்ஞை இல்லை. நாக்கும் துவண்டுவிட்டது. மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்யும் நிலையில் அவர் இல்லை. அதனால் தீட்சை கொடுக்கிற கட்டம் மீறிவிட்டது" என்று அவர்களிடம் சொன்னாள். அப்பாவின் உயிர் பிரிந்ததும் அவர் பாதங்களையே பற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அரைநாழிகை ஆன பிறகு கண்ணா காலத்தில் இருந்து வந்திருந்த பிராமணர்களை அழைத்து, "ஐயா, என் கணவரைவிட்டு என்னால் வாழ இயலாது. என் கணவரோடு சேர்ந்து அக்கினிப் பிரவேசம் செய்வது என்று முடிவெடுத்துள்ளேன். உடன்கட்டைக்குத் தேவையான எல்லாமும் தயாராகட்டும். தேவைப்படும் பொருள்களை ஆலோசித்து வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். காலதாமதம் உண்டாக்கி விடாதீர்கள்," என்று சொன்னாள் அம்மா. அம்மாவின் வார்த்தை களை நானும் என் தம்பியும் கேட்டுத் துக்கமடைந்தோம். எங்களாலோ எதையும் தடுக்க முடியாத நிலைமை. "அம்மா அப்பாதான் இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தார். நீயும் எங்களை விட்டுப் பிரிந்து எங்களை அனாதைகளாக ஆக்கி விடாதே அம்மா" என்று சொல்லி சிறு பிள்ளைகள் போல அழுதோம். ஆனால் அம்மாவோ எங்களோடு ஒருவார்த்தை கூடப் பேசவில்லை அப்பாவின் பாதத்தை விட்டுக் கொஞ்சம் கூட அகல வில்லை. புரோகிதர்கள் வந்து, "நகர சுபேதாருக்கு இந்த விஷயத்தை முதலில் சொல்ல வேண்டும்" என்று அம்மா விடம் சொன்னார்கள். அப்பொழுது எங்கள் அம்மா, "யார் யாருக்குச் சொல்ல வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் தெரியப்படுத்துங்கள்" என்றாள். இவ்விதமாய்க் கணவ னுடன் மனைவியும் இறக்கத் துணியும்போது, அரசாங்கத்தில் இருந்து குங்குமம், மஞ்சள், பூ, தாம்பூலம், வேட்டி, புடவை, சால்வை அனைத்தும் வழங்கப்படும். அதுமட்டுமன்றி கணவனுடன் சிதையில் ஏறும் பெண் நெருப்பின் சூட்டைப் பொறுக்க இயலாமல் வெளியே எழுந்து வந்து விடுவாளேயானால் அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் கேடு உண்டாகும் என்கிற நம்பிக்கை பரவி இருந்த காரணத்தால் அதைத்தடுக்கும் பொருட்டு எண்ணெய் நிரம்பிய குடங்கள், மருந்துக் குடங்கள், அம்புகள் ; எல்லா வற்றையும் சிதைக்கு மத்தியிலேயோ அல்லது பக்கத்திலேயோ வைத்துக் கொள்ளும் பொருட்டு வேண்டும் பொருள்களையெல்லாம் கூட அரசாங்கமே தந்தது. அவை அனைத்தையும் எடுதத்துக் கொண்டு தாலுக்கா மட்ட உயர் அலுவலர்கள் வந்தார்கள். காலை ஐந்து நாழிகைக் கெல்லாம் சுற்று வட்டாரக் கிராமத்து மக்கள் எல்லாரும்வந்து சேர்ந்தனர். இருபது இருபத் தைந்தாயிரம்

ஜனங்கள் வந்து கூடி இருந்தது போல என் கண்ணுக்குத் தோன்றியது. அடுத்த கட்ட வேலை தொடங்க எல்லா ஏற்பாடுகளும் நடந்தன.

தயக்கமோ, துயரமோ இன்றி அம்மா குளித்து முடித்து முகம் முழுக்கவும் மஞ்கள் பூசிக் கொண்டாள். மஞ்சள் புடவையணிந்து எப்பொழுதும் வழக்க மாய் வைத்துக் கொள்வது போல நெற்றியில் அகலமாய் குங்குமப் பொட்டு வைத்துக் கொண்டாள். பூ முடிந்து கொண்டாள். சந்தனம் பூசிக் கொண்டாள். பிராம்மணர்களுக்கு வேண்டும் அளவுக்கு தான தர்மம் வழங்கினாள். சுமங்கலிப் பெண்களுக்கு மஞ்சள், குங்குமம், பூ, சந்தனம், புடவை, மேலாடை, தாம் பூலம், தட்சணை அனைத்தையும் வழங்கினாள். புரோகிதர்கள் சொன்ன படி செய்ய வேண்டியவை அனைத்தையும் செய்து முடித்தாள். சிறுவர்களை எல்லாம் தழுவி, பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கினாள். பூமாலை அணிந்து கொண்டு, கையில் எலுமிச்சம்பழங்களை வைத்துக் கொண்டு அம்மானை ஆடியபடி நின்றாள். அப்பாவைத் தூக்கி பாடையில் படுக்க வைத்தனர். பாடை யின் மேலிருந்து ஒரு மாலையை எடுத்து வந்து அம்மாவின் கழுத்தில் அணிவித்தனர். ஒரு கையால் அப்பாவின் பாதத்தையும். இன்னொரு கையால் எலுமிச்சம்பழங்களால் அம்மானை ஆடியபடியும் அம்மா நடந்தாள். இந்த அதிசயத்தைக் காணும் பொருட்டு கிராமங்களிலிருந்து மக்கள் கும்பல் கும்பலாய் வந்து கொண்டே இருந்தார்கள். சுடுகாட்டில் சிதை தயாராயிருந்தது சுடுகாட்டில் செய்ய வேண்டிய காரியங்கள் அனைத்தையும் செய்து முடித் தார்கள். அப்பாவின் உடலைச் சிதையில் படுக்க வைத்தார்கள். பக்கத்தில் அம்மாவையும் படுக்க வைத்தனர் சிதையின் நெருப்புச் சூட்டைத் தாங்க இயலாமல் மனம்மாறி எழுந்து வர இயலாத அளவுக்கு இறுக்கமாக கட்டுகள் போட்டனர். மேலே பாரங்களை ஏற்றினர். நான்கு புறங்களிலும் பரவி எரிந்தது தீ. சிதையின் மேல் அவ்வப் பொழுது தொலைவில் இருந்து எண்ணெய் ஊற்றினர். மகாபத்தினி என்ற கூவலும், வாழ்த்தொலிகளும் எழுந்து விண்ணதிர்ந்தது. வழிநெடுக அம்மா நடந்து வந்த காலடிச் சுவடு களைத் தொட்டு வணங்குவதும், காலடிச் சுவட்டு மண்ணை அள்ளி நெற்றியில் பூசிக் கொள்வதுமாய் இருந்தார்கள் பலர். ஜய ஜயகோஷம் எழுப்புபவர் பலர். இப்படிப்பட்ட புண்ணியவதி மறைந்துவிட்டாளே என்று துக்கமுடன் அழு வோர்களும் பலர். பக்தியுடன் கண் தளும்ப நின்றவர்களும் பலர் எல்லா ருடைய பார்வையும் சிதையின் மேல் படிந்திருந்தது. அச்சமயத்தில் தான் ஓர் அற்புதமான சம்பவம் நடந்தது.

எல்லாரும் சிதையையே பார்த்துக்கொண்டிருக்கும் போது சிதை மெல்ல அசைவது தெரிந்தது. விறகு பாரமும், கல்களின் பாரமும் அசைந்தன. உள்ளே அம்மா எழுந்திருப்பது தெரிந்தது. அம்மா எழுந்ததைப் பார்த்ததுமே, நாட்டுக்கு ஏதோநாசம் வரப்போகிறது என்று பயந்து சிதைக்குப் பக்கத்தில் இதற் காகவே காத்திருந்தவர்கள் அவள் எழுந்து வெளியே வரும் பட்சத்தில் சிதைக்

குள்ளேயே மீண்டும் தள்ளும் பொருட்டு தயாராக இருந் தார்கள். அங் த கூடிய அரசாங்க அதிகாரிகள், புரோகிதர்கள் எல்லாரும் 'ஏதோ விபரீதம் நடந்துவிட்டது' என்று கூவினார்கள் கூடி இருந்த கும்பலெல்லாம் நடுங்கத் தொடங்கியது. ஆனால், நடந்த அற்புதத்தை எப்படிச் சொல்வது? ஒரே ஒரு கணத்தில், அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கம் திரும்புவதற்குள் அப்பாவின் கால்மேல் தலையை வைத்துப் படுத்துக் கொண்டாள் அம்மா. அடுத்த வினாடியே அவள் தலை வெடித்தது கொஞ்ச நேரத்துக்குள் அப்பாவின் தலையும் வெடித்தது. இந்த ஆச்சரியத்தைக் கண்டு அங்கிருந்தவர்கள் அனை வரும் அம்மாவின் பெயரைச் சொல்லி வணங்கினார்கள் இவர்கள் இரு வரையும் சுட்ட இடத்தில் சிறு தோட்டம் ஒன்று வைத்து வளர்த்தனர். அதற்கு 'பிருந் தாவனம்' என்று பெயரிட்டார்கள் இன்றைக்கும் இந்த கிராமத்து மக்கள் அதற்குப் பூஜை முதலானவற்றைச் செய்து வருவதும். பிரார்த்தனை செய்து கொள்வதும் நம் எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான். அவரவர்கள் பிரார்த் தித்துக் கொண்ட விஷயங்கள் எல்லாம் நல்லபடி நடக்கின்றன எங்கள் பின் வீட்டு வாசலில் நின்று பார்த்தால் ஒரு கல்லெறி தூரத்தில் அந்த பிருந்தா வனத்தின் முகப்பு தெரியும்'.

வெங்கம்மா தன் தாயின் சரித்திரத்தையே சொல்லி முடித்தாள். அங்கிருந்த எல்லாருமே அருந்ததியம்மாளை பெரிய பதிவிரதை என்றும், அவளுடைய பாதங்களே சரண் என்று அடைக்கலம் புகுவோருக்கு நல்லவழி கிட்டும் என்றும் பலவாறாகப் பேசிப் புகழ்ந்தார்கள். அங்கிருந்த எல்லா ரோடும் உட்கார்ந்து கொண்டு இலை தைத்துக் கொண்டே இந்தக் கதையைக் கேட்டாள் சீத்தம்மா. அருந்ததி யம்மாளின் துயரைக் கேட்டு அவ்வப்போது கண்ணீர் உகுத்தாள் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்தாள்.

அடுத்த நாளிலிருந்தே காலையில் எழுந்து கணவனின் காலைத் தொட்டு வணங்கியபின் வீட்டு வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டு, மடி ஆடை அணிந்து தினசரி கௌரிபூஜையைச் செய்துவிட்டு. பிருந்தாவனத்துக்குச் சென்று பூசைகளைச் செய்ய ஆரம்பித்தாள். பக்தியுடன் இவள் செய்ய ஆரம பித்த இந்த பூசை விஷயம் வீட்டில் எல்லாருக்கும் தெரிய வந்தது. நல்ல காரியம் என்பதால் அதற்கு யாரும் ஆட்சேபணை செய்யவில்லை. அதனைக் காரியான திம்மம்மாவிற்கு மாத்திரம் எந்த வேலையைச் சீத்தம்மா செய்தாலும் அதை மறுத்தோ அல்லது அதில் ஏதேனும் குற்றம் குறை கண்டோ குத்திக்குத்திப் பேசும் பழக்கம் வரவர அதிகமாகிக் கொண்டே இருந்தது.

பிருந்தாவனக் கோயிலுக்குச் செல்லும் வழி ஜோசியர் வீட்டுக்கு கொஞ்சம் சுற்று வழியாக இருந்தது ஊரை யெல்லாம் சுற்றிக் கொண்டு மீனவர் குடியிருப்பு வழியாகச் சென்று சேர வேண்டியதாயிருந்தது. இந்த வழி கொஞ்சம் தொலைவாக இருந்ததோடு மட்டுமன்றி வேறு சில சங்கடமான சங்கதிகளும் இருந்தன. வீட்டு வாசல்களில் மீனவர்கள் உலர வைத்த கரு

வாட்டின் நாற்றம், வீதியெங்கும் பரப்பி உலர வைத்த பெரிய பெரிய மீன் வலைகள், மீனின் வாசனை, தெருவில் அங்கங்கே மனசுக்கு வந்த இடத்தில் மலஜலம் கழித்து செய்து வைத்திருந்த அசிங்கம், அங்கங்கே இறைந்து கிடந்த குப்பை கூளங்களின் கழிவு, ஒவ்வொரு வீட்டின் முன்னிருந்தும் பெருகித் தெருவில் கலந்து தேங்கிய சாக்கடை நீர், மாடுகளின் சாணம், வைக்கோல், பிசிறு வைக்கோல்களும் சாணமும் கலந்து குழம்பிய சேறு, என தெருவே நாறிக்கிடந்தது. இத்தெருவில் நடந்து செல்வது சீத்தம்மாவுக்கு வெகு சிரமமாய் இருந்தது. அதுவும் மடி ஆடைகள் அணிந்து கொண்டு அந்த வழியே நடந்து செல்வது அசாத்தியமாக இருந்தது. சீத்தம்மாவின் சுபாவத் துக்கு கொஞ்சமும் பொருந்தாமல் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேல் அது சுற்று வழி. கொல் லாப்பூர் மகாலட்சுமி அம்மன் கோயில் சமீபமாகத் தொட்டுச் சென்றது. அந்தக் கோயிலின் பக்கத்தில் சூதாடுவோர், குடிகாரர்கள், அரட்டையடிப்பவர்கள், லாவணிகளையும் மட்டமான ரசனையை எழுப்பும் பாடல்களையும் பாடிக் கொண்டு காலம் கழிப்பவர்கள், பெண்களைக் கண்டதும் நேருக்கு நேர் அவர்களைக் கிண்டல் செய்வதும், பல்லைக் காட்டிச் சிரித்துக்கொண்டே அவர்களுக்குப் பின்னாலேயே சற்று தூரம் சென்று திரும்புகிறவர்கள், ஆகி யோரே அதிக அளவில் சேர்ந்திருந்தார்கள். இக்காரணங்களால், அந்த வழியைப் பற்றி சீத்தம்மா செல்வதில்லை. ஜோசியர் வீட்டுப் பின்வாசலில் நின்று கொண்டு பார்த்தால் ஒரு கவண்கல் எறியும் தூரத்தில்தான் அக்கோயில் இருப்பது தெரியும். வழித்தடமாக எதுவும் இல்லை. ஆனால் எங்கும் புல்வெளி. இடையே நடந்து சென்று திரும்ப முடியும். அசிங்கம் எதுவும் இல்லாத ஒழுங்கான புல்வெளியே, அது. அதனால் தினமும், ஒரு தட்டில் மஞ்சள், குங்குமம், சந்தனம் ஆகிய எல்லாவற்றையும் வைத்து, கூடவே பூ, நைவேத்தியத்துக் கென்று ஏதேனும் ஒரு பழம் ஆகியவற்றையும் வைத்து எடுத்துக் கொண்டு அந்த வழியிலேயே செல்ல ஆரம் பித்தாள் சீத்தம்மா. மடி ஆடையிலேயே அன்று பூசையை முடித்துத் திரும்பினாள். இதற்கிடையில் சீத்தம்மா கரு வுற்றாள். வாய் ஏதேதோ ருசிக்கு ஏங்கியது. அவ்வப் பொழுது வாந்தியும், மயக்கமும் வந்தன. சரியாய்ச் சாப்பிட முடியவில்லை. ஆனாலும் பசி வாட்டியது. வீட்டுவேலைகளினால் உருவான களைப்பு சமயம் கிடைக்கும் போதெல்லாம் இறையும் அத்தையின் வசைகள் ஆகியவையும் சேர்ந்து கொண்டன. ஒரு நாள் அவளை நெருங்கிய பார்வதம்மாள், "எதற்காக நீ சாப்பிடுவதேயில்லை? சாப்பிடவே இல்லையென்றால் வேலை செய்யக் கை காலுக்கு சக்தி எங்கிருந்து வரும்? கொஞ்சமாவது சாப்பிடு சீத்தம்மா. பிடிக்கவில்லை, பிடிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு எதையுமே சாப்பிடாமல் இருந்தால் எப்படி? அப்படி இருக்கக் கூடாது தெரியுமா?" என்றாள். இந்த வார்த்தைகளை திம்மம்மா எங்கே நின்று எப்படி ஒட்டுக் கேட்டாளோ தெரியவில்லை, பார்வதம்மா பேசி முடிப்பதற்கு முன்னேயே திடுமென அவளே முன்வந்து நின்று, "அவளைச் சாப்பிடாதே சாப்பிடாதே

என்று யாராச்சும் தடுத்தார்களா என்ன? வேண்டுமென்றே சாப்பிட மாட்டேன் என்று அவள்தான் அடம்பிடிக்கிறாள். வாழப்போன வீட்டிலே சோற்றுக்குக் கூட வழியில்லை, ஏதோ கிடைத்ததை அரைத்துக் கூழாக்கித்தான் குடித்துக் கொண்டு கிடக்கிறார்கள் என்று அக்கம் பக்கத்திலேயும், அம்மா வீட்டிலேயும் சொல்லி நமக்கு 'கெட்டவர்கள்' என்று பட்டம் வாங்கித்தர வேண்டுமில்லையா, அதற்குத்தான் இந்த நாடகமாடுகிறாள். நான் தான் கெட்டவள், பாழாய்ப் போனவள், நான் போய் ஒழிந்தால உங்களுக்கெல்லாம் சந்தோஷமாய் இருக்கும். முக்கியமாய் என் மேலேயே அவளுக்குக் கண். 'மேய்க்கிறவனுக்கு ஆடுமேலேயே கண்' என்று சொல்வார்களே, அந்த மாதிரி என்னமோ நீங்கள் தான் அவளைச் சின்னப் பெண், சின்னப் பெண் என்று தலைக்கு மேலே தூக்கி வைத்துக் கொண்டாடுகிறீர்கள். அவள் யாரைக் கவிழ்க்கப் போகிறாளோ தெரியவில்லை. இலை நிறைய சோறு போட்டுக் கொண்டு தளர குழம்பு ஊற்றிக் கொண்டு நன்றாக உருட்டி உருட்டி வயிற்றுக்குள் தள்ளத்தான் செய்கிறாள்" என்று வாய்க்கு வந்தபடி சீத்தம்மாவைப் பழித்துத் திட்டினாள். அதற்கு பார்வதம்மாள், "எதற்காக அப்படியெல்லாம்பேசுகிறாய். பாவம் பிள்ளைத் தாய்ச்சிக்காரி. ஏதோ நாக்குக் கசப்பு. சோறு ஒத்துக் கொள்ளவில்லை. உண்மைதானே அது" என்றாள் கொஞ்சமும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத திம்மம்மா, "ஆஹா அவளை ரொம்பத்தான் மெச்சிக் கொள்கிறீர்கள். பெரிய பிள்ளைத் தாய்ச்சியாம், பிள்ளைத்தாய்ச்சி இருக்கட்டுமே. அதற்கென்ன? ஊரெல்லாம் 'நான் பிள்ளைத்தாய்ச்சி நான் பிள்ளைத்தாச்சி' என்று மேளம் அடிக்கணுமாக்கும். ஆகட்டுமே. சாணம் மேலே சாணம் விழுந்தால் கூட புழு உண்டாகும். தான் பெரிய பிள்ளைத்தாய்ச்சி, எல்லாரும் வந்து தன்னைக் கவனிச்சிக் கட்டும் என்ற எண்ணம் அவளுக்கு. வேண்டுமென்றே சோறு வேண்டாம் என்று சொல்வது, பிசைந்த சோற்றை வெளியே கொண்டுபோய்க் கொட்டுவது எல்லாம் செய்கிறாள். தான் பிள்ளைத்தாய்ச்சி என்று ஊருக்கெல்லாம் தெரியவேண்டுமே அதனால்தான். எப்படியாவது பாழாய்ப் போகட்டும் அவள். அவள் வழிக்கே நான் வரவில்லை". என்றெல்லாம் பேசத் தொடங்கிவிட்டாள். பேசப் பேச சும்மா பேச்சுதான் வளரும் என்று உணர்ந்த பார்வதம்மாள் அமைதியானாள்.

இன்னொரு நாள் வேறொரு ரகளை நடந்தது. மரியாதையும் கண்ணியமுமான குடும்பத்தில் பிறந்தவள் சீத்தம்மா. இவளிடம் எல்லா நல்ல குணங்களும் இருந்தன. ஆரம்பத்தில் இருந்தே இரவில் படுக்கும்பொழுது கடவுளை வணங்கிப் பிரார்த்தனை செய்து கொள்ளும் பழக்கம் சீத்தம்மாவிடம் இருந்தது. ஒருநாள் மகாதேவன் ஊரில் இல்லாத சமயம். ஏதோ ஒரு வேலைக்காக கிராமத்துக்குப் போயிருந்தான். பெண்கள் எல்லாரும் படுத்துக் கொண்டிருந்தனர். சீத்தம்மா படுத்துக்கொள்ள இடம் கொஞ்சமாகவே ஒதுக்கப்

பட்டிருந்தது. அங்கேயே படுத்துக் கொண்டாள் அவள். உத்திரத்துக்கு நேர் கீழாக அவள் படுக்கை இருந்தது. அவளுக்குப் பக்கத்திலேயே சாவித்திரியின் படுக்கையுமிருந்தது. இரவில் கழுவி வைக்க வேண்டிய பண்ட பாத்தி ரங்களையெல்லாம் கழுவி அடுக்கி வைத்து விட்டு வந்து படுத்துக் கொள் வதற்கு நெடுநேரமாகிவிட்டது. நேராக வந்து படுத்துக் கொண்டாள். படுத்ததுமே தலைக்கு நேராக உத்திரக் கட்டை மேலே இருப்பதைப் பார்த்து விட்டு பயந்து போனாள். "உத்திரமே, உத்திரமே, நானே மரம், நீயே மனிதன். பாம்பின் மேல் ஆணை. தேளின் மேல் ஆணை. எறும்பு முதலான எண்பது கோடி ஜீவராசிகள் எதுவும் இருந்த இடத்தைவிட்டு எங்கள் பக்கம் வராமல் இருக்கக் கடவதாக. வலது பக்கம் சிவன் இருந்து காக்கட்டும் இடது பக்கம் அரி காக்கட்டும். சித்தம் சென்று அச்சுதனோடு சேர்ந்திருக்கட்டும். மனம் சென்று மாதவனோடு இருக்கட்டும். நான் சென்று காசிவிசுவேசுவரனோடு இருக் கிறேன். ஸ்வாமி நஞ்சுண்டேஸ்வரா, தாயே சாமுண்டீஸ்வரி, நல்லவர்கள் துணையைக் கொடு, கெட்டவரின் சகவாசத்தை விலக்கு தாயே" என்று கடவு ளிடம் பிரார்த்தனை செய்து கொண்டு கண்ணை மூடினாள். தூக்கம் வந்தது பக்கத்தில் படுத்திருந்தவர்கள் எல்லாருமே தூங்கிக் கொண்டிருந்தார்கள்., சீத்தம்மாவின் அருகில் படுத்திருந்த சாவித்திரிக்கு மட்டும் கொஞ்சம் விழிப்பு தட்டியது. சீத்தம்மா சொன்னதையெல்லாம் கேட்டுக் கொண்டாள். அப்படியே உறங்கியும் போனாள். உறங்கப் போகும் முன்பு கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்துவிட்டு உறங்கச் செல்லும் பழக்கம் சீத்தம்மாவுக்கு மிக இளமைக் காலத்தில் இருந்தே இருக்கிறது.

அதிகாலையிலேயே எழுந்துவிட்ட சீத்தம்மா காலையில் முடிக்க வேண்டிய வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து விட்டு குளிப்பதற்கு வேண்டி அடுப்பில் வெந்நீர் காய்ச்சினாள். உடனேயே மடி ஆடை உடுத்துக் கொண்டு ஆற்றுத் தண்ணீர் எடுத்து வருவதற்காகச் சென்றாள். இடுப்பில் ஒரு குடத் தையும் தலையில் ஒரு குடத்தையும் அதன்மேல் பூஜைக்கு என்று விசேஷமாக ஒரு தாமிரக் குடத்தையும் சுமந்து கொண்டு நதியிலிருந்து திரும்பினாள். உதயராகத்தை மனசுக்குள்ளேயே மெல்ல மெல்ல முணுமுணுத்தபடி மிகவும் எச்சரிக்கையோடு தண்ணீர் சிறிதும் கீழே சிந்தாத வண்ணம் கவனமுடன் கூடத்துக்குள் வந்தாள். தலையில் சுமந்திருக்கும் குடத்தின் மேல் இருக்கும் தாமிரக்குடம் எதன் மேலும் தடுக்கிக் கீழே விழுந்தவிடாத வண்ணம் கத வருகே குனிந்து உள்ளே நுழைந்தாள். அதே சமயத்தில் அவளைக் கண்ட சாவித்திரி, "அம்மா, அண்ணி ஏதோ மந்திரம் சொல்லிக் கொண்டே வருகிறாள் அம்மா. இரவிலும் கூட படுக்கும் போது இப்படித் தான் பாம்பின மேல் ஆணை, தேளின் மேல் ஆணை, அம்மாவின் பாதத்தின் மேல் ஆணை, என்று என் பாய்க்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சொன்னாள் அம்மா. எனக்கு என்னமோ மந்திரம்தான் போட்டு விட்டாள். தலையெல்லாம் வலிக் கிறது. கண்கள் எரிகின்றன." என்றாள். மகள் பேச்சைக் கேட்டதும் திம்மம்

மாவுக்கு ஆத்திரம் பொங்கியது., சட்டென்று எழுந்து உள் வாசலுக்குக் குறுக்கே நின்று சீத்தம்மாவை மறித்துக் கொண்டாள். அவளைப் பார்த்து, "அதென்னடி வாயில் ஒரே முணு முணுப்பு. அது என்ன மாயமந்திரம்? சொல்லிவிடு". என்று சத்தமிட்டாள். அப்போது சீத்தம்மா, •அம்மா, உதய ராகத்தை முணு முணுத்துக் கொண்டு வந்தேன்" என்றாள். அதைக் கேட்டதும் திம்மம்மா, "உதயராகம் என்றால் என்ன? சொல்லடி? நேற்று ராத்திரி சாவித்திரியின் படுக்கைக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சொன்ன மந்திரம் என்ன? சொல்" என்றாள். அதற்கு, "அம்மா, நான் எந்த மந்திரத்தையும் சொல்ல வில்லை. ராத்திரி படுக்கப் போவதற்கு முன்பு கடவுளை நினைத்து பிரார்த் தனை செய்வதும், எனக்கு நல்ல புத்தியைக் கொடு கடவுளே' என்று வேண்டிக் கொள்வதும் என் பழக்கம்". என்றாள் சீத்தம்மா. பயத்தில் தலையிலிருந்து குடங்களைக் கூட இறக்காமல் நின்ற இடத்தில் நின்றபடியே பதில் சொன்னாள். ஆனாலும் அதைச் சிறிதும் நம்பாத திம்மம்மா, "பாம்பின் மேல் ஆணை என்றால் என்ன? தேளின் மேல் ஆணை என்றால் என்ன? என் மகள் பக்கத்தில் உட்கார்ந்து இப்படிச் சொல்வதற்கு என்ன காரணம்? ராத்திரியி லிருந்தே சாவித்திரிக்கு உடம்பு சரியில்லை. தலைவலி, குளிர் என்று சொல்கிறாள் அவளைப் பார்த்தாலே போதும், உனக்கு பிடிக்கவில்லை. அவளுக்கு என்னமோ நீ செய்துவிட்டாய் அது என்ன செய்தாய், சொல். சொல்லா விட்டால் உன்னைச் சும்மா விட மாட்டேன். என் வீட்டுச் சோற்றைத் தின்று, என் வீட்டுத் துணிமணியைக் கட்டிக்கொண்டு என் மகளின் உயிருக்கே உலை வைக்கப் பார்க்கிறாயே. நீ நன்றாய் இருப்பாயா? ஒழுங்காய் என்ன செய்தாய் என்று சொல்லிவிடு உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் குடும்பமாயிற்றே, உங்கள் குடும்பம். மரியாதையாய்க் கேட்கிறேன். சொல்லி விடு அவளுக்கு என்ன செய்தாய், சொல்லடி கைகாரி. எப்பொழுதாவது உன் வழிக்கு வந்தாளா அவள்? உன் கூட பேச்சுக் கொடுத்தாளா? உன்னை ஏதாவது சொன்னாளா? உன் கண்ணைக் குத்தினாளா? உன் வயிற்றில் அடித்தாளா? உன் அப்பன் வீட்டுச் சொத்தில் ஏதாவது கை வைத்தாளா? உன் அப்பா வீட்டிற்கு நெருப்பு வைத்தாளா? உன் அப்பா முகத்தில் சுட்டாளா? உன் அம்மா தலையில் மண்வாரிப் போட்டாளா உன் முகத்தில் முள்ளால் கீறினாளா?" என்று வாய்க்கு வந்தபடியெல்லாம் கேட்டாள் திம்மம்மா. அவள் குரலில் ஆத்திரம் கலந்திருந்தது. ஆங்காரத்துடன் அவள் பேசிய விதத்தைக் கண்ட சீத்தம்மாவுக்கு பயத்தில் கை கால்கள் நடுங்கத் தொடங்கின. நடுக்கத்தில் கீழேயே விழுந்து விட்டாள். குடங்கள் இரண்டும் கீழே விழுந்து ஒடுக்கு விழுந்துவிட்டன. சீத்தம்மாவுக்கோ ஏக நடுக்கம். அப்படியே மயங்கிக் கிடந்தாள் உடனே பார்வதம்மா ஓடி வந்து அவளைத் தூக்கினாள். அருகில் கால் தடுக்கியது. எல்லாக் குடங்களும் சரிந்து உருண்டன. குடங்களின் மேலேயே மீண்டும் விழுந்தாள். நெஞ்சில் அடிப்பட்டது. இடுப்பில் காய மானது. அப்பொழுது பார்வதம்மா, "திம்மம்மா, என்ன இது? இன்னும் விடியக்

கூட இல்லை. அதற்குள் என்ன சண்டை? அப்படி அவள் என்ன தப்புதான் செய்தாள், படுக்கும்போதும், எழுந்திருக்கும்போதும் யாருமே கடவுளை நினைத்துப் பிரார்த்தனை செய்வதில்லையா? உன் மகளுக்கு அவள் என்ன செய்துவிட்டாள்? என்று நினைத்துக் கொள்கிறாய்? அவளோ இரண்டு உயிர்க்காரி. அவளைப் போய் இப்படி கன்னா பின்னா வென்று வாய்க்கு வந்தபடி பேசலாகாது. நான் ஒரு தலைமுறையையே வாழ்ந்து முடித்தவள் . என் பேச்சைக் கேள்" என்றாள். மேலும், "இத்தனைக்கும் அவள் செய்த தப்புதான் என்ன? பிரபஞ்சத்தில் யாரும் இந்த மாதிரிக் கடவுளைப் பிரார்த்திப்பது இல்லையா? யாரும் பார்த்ததில்லையா? இதற்கும் அவள் அப்பாவுக்கும் என்ன சம்பந்தம்? நடுநடுவில் அவர் பெயரை இழுத்து எதற்குத் திட்டுகிறாய்? அவள் அம்மாவின் தலையில் மண்ணை எதற்கு அள்ளிப் போடுகிறாய்? ரொம்ப நல்லா இருக்குது. நம் வீட்டு விஷயம் இது வரைக்கும் நாலு சுவருக்கு நடுவிலேயே அடுத்தவர் காதுகளுக்கு எட்டாத அளவில் இருந்தது. ஒருநாளும் இந்தமாதிரி சண்டையெல்லாம் நடந்ததில்லை. இன்றைக்கும் ஊர் ஜனங்கள் எல்லாம் வந்து வேடிக்கை பார்க்கிறதே. சரி போகட்டும், சும்மா இரு" என்றாள். சீத்தம்மாவைத் தூக்கி உள்ளே அழைத்துக் கொண்டு போனாள். குட்டி போட்ட புலி மாதிரி மீண்டும் திம்மம்மா சீற ஆரம்பித்தாள். வாசலிலேயே உட்கார்ந்து கொண்டு, "இந்த பாழாய்ப் போன வீட்டில் நான் எதுவும் வாய்திறந்து பேசக் கூடாது. எல்லாரும் என் வாயைத்தான் மூட வருகிறார்கள். எல்லாரும் வந்து சேர்ந்து என் அப்பா வீடே அடுத்தவருக்குச் சொந்தமாகி விட்டது. என் வயிற்றில் ஓர் ஆண்பிள்ளை பிறந்திருந்தால் இப்படி ஆகி இருக்குமா? இந்த பாழாய்ப்போன வயிற்றில் அதற்கு ஒரு வழி இல்லாமல் போய்விட்டதே. இந்தப் பாழாய்ப் போன வயிற்றில் நெருப்பு விழுந்து விட்டதே. என் தாய்வீட்டு மரியாதைக்கே பங்கம் வந்து விட்டதே. "தொட்டுக்க துடைச்சிக்க" என்று இருக்கிறவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லும்படி ஆகிவிட்டதே. இன்றைக்கு அவரே வரட்டும். இந்த வீட்டில் நான் இருக்கட்டுமா, கூடாதா என்று இரண்டில் ஒரு தீர்மானம் ஆக வேண்டும்" என்று புலம்ப ஆரம்பித்தாள். அந்தச் சமயத்தில் ஊரிலிருந்து மகாதேவன் வீட்டுக்குத் திரும்பினான். வாழை இலை, பூ. துளசி ஆகியவற்றை எடுத்துக் கொண்டு தீட்சிதனும் வந்தான். நடந்ததையெல்லாம் கேட்டு மிகவும் மனம் நொந்து எல்லாரையும் சமாதானப்படுத்தினான். சண்டையை வேடிக்கை பார்க்க வந்திருந்த அக்கம் பக்கத்து ஜனங்கள் எல்லாம் ஒவ்வொரு வராகக் கலைந்து செல்ல ஆரம்பித்தனர். போகும்போது, "சீ அந்தப் பெண் எவ்வளவோ தங்கமான பெண். அவள் மேல் இப்படி அபாண்டமாய்ப் பழி சொல்லக்கூடாது, இந்த திம்மம்மா. இந்த மட்டுக்காவது இவர்கள் குடும்பப் பேர் சொல்லிக் கொள்கிற அளவுக்குப் பெருமையாக இருக்கிறது என்றால், அதற்கு இவள் வந்து இங்கு குடியேறியது தான் காரணம். இல்லையென்றால் 'வீடே

எருக்கம் புதராகத்தான் இருந்திருக்கும்" என்று தமக்குள் பேசியபடி புறபட்டுச் சென்றார்கள்.

மகளுக்கு உண்டான இம்சைகளையெல்லாம் கேள்விப் பட்டு அவளுடைய தாய்வீட்டார் மிகவும் மனம் வருந்தினர். பிரசவத்துக்கு அழைத்துப் போகிறோம் என்று சொல்லி விட்டு மகளை மைசூருக்கு அழைத்துச் சென்றனர். மகளின் கஷ்டங்களை யெல்லாம் கேட்டு மனம் சங்கடப்பட்டனர். ஆனாலும் என்ன செய்ய முடியும்? கல்யாணம் செய்து கொடுத்த பெண் எல்லாவிதத்திலும் புகுந்த வீட்டுச் சொத்து. அவள் தலையில் என்ன எழுதி இருக்கிறதோ, அப்படியே அவள் அனுபவித்தாக வேண்டும் எல்லா விதத்திலும் பெண் ஜன்மம் எடுத்தவர்களுக்குக் கஷ்டம்தானே தவிர எந் நாளும் சுகமில்லை. இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டே வயிற்றுப் பிள்ளைக்காரியாய் இருக்கும் பெண்ணுக்குச் செய்ய வேண்டிய சீமந்தம் முதலான சடங்கு, சீர்களையெல்லாம் முறைப்படி செய்தனர். பேறுகாலம் நெருங்கியது. சீத்தம்மாவுக்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. சுகப்பிரசவம் தான். குழந்தைக்கு நான்கு மாதங்கள் ஆகிற வரை அவளை வீட்டுக்குள்ளேயே ரொம்ப கவனமுடன் பார்த்துக் கொண்டனர். ஐந்தாவது மாதம் ஆரம் பித்ததும் சீத்தம்மாவையும், குழந்தையையும் அழைத்து வந்து சஞ்சவாடியில் புருஷன் வீட்டில் விட்டுச் சென்றனர். எல்லாருக்கும் அளவு கடந்த சந்தோஷ மானது. எப்போதும் சிடுசிடுவென்றிருக்கிற திம்மம்மா மட்டும் ஏதோ வாய்க்குள் முணுமுணுத்தபடி இருந்தாள். ஆனால் பேரக் குழந்தையைப் பார்க்கும் போது மட்டும் அன்பான முகத்துடன் இருந்தாள். ஆனால் குழந் தையை மட்டும் தூக்குவதில்லை. கொஞ்சுவதில்லை. தலைமேல் ஏற்றி விளை யாட்டுக் காட்டுவதில்லை. தோள் மேல் ஏற்றுவதில்லை. ஆனால் மற்றவர்கள் எல்லாரும் குழந்தைமேல் உயிராக இருந்தார்கள். எப்போதும் யாரேனும் ஒருவர் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டே இருந்தனர் 'என் செல்லக் கண்ணு, என் ரகுகுல ராமச்சந்திரனே நீ தான்' என்று கொஞ்சினார் ஒருவர். இன்னொருவர் குழந்தையோடு சாய்ந்தாடம்மா ஆட்டம் ஆடினார் மற்றும் ஒருவர் குழந்தையைத் தூக்கி நிற்க வைத்து,"ஆனை வந்தது ஆனை, அசைந்து வந்தது ஆனை. தழையைத் தின்றது ஆனை, தண்ணீர் குடித்தது ஆனை" என்று இப்படியும் அப்படியுமாக அசைந்து நடக்க வைத்தனர். இன்னொருவரோ, "நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா" என்று நிலாவைக் காட்டிப் பாடினார். மற்றவர், "மயிலே மயிலே பதில் சொல்லு. மழை வந்தால் நீ எங்கே போவாய்? திருமலைத் தெய்வத்தின் கோயிலில் இருப்பேன். வண்ணத் தோகை விரிக்கும் மயிலே, வா வா மயிலே ஆடு மயிலே" என்றெல்லாம் பாட்டுப்பாடி ஆட்டம் காட்டினர். இவ்விதமாய் எல்லாரும் அந்தக் குழந்தையை எடுத்துக் கொஞ்சினர். கிட்டு ஜோசியன் வெளியே புறப்படும் போதெல்லாம், ஆடை அணிகலன் களையெல்லாம் குழந்தைக்கு அணிவித்து, "வாடா கிருஷ்ணசாமி" என்று அன்பாகக் கூப்பிட்டுத் தூக்கிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றி வந்தான்.

இடையில் பருவமடைந்த சாவித்திரிக்குச் செய்ய வேண்டிய சடங்கு முறைகளையெல்லாம் செய்து முடித்து புருஷன் வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். மெல்ல மெல்ல திம்மம்மாவின் கவனம் குழந்தையின் மேல் திரும்பியது. நாளுக்கு நாள் மருமகளின் மேல் புகார்களும் குறைந்து கொண்டு வந்தன. என்றும்போல் சீத்தம்மா வீட்டு வேலைகளையெல்லாம் முறைப்படி செய்து வந்தாள். கௌரி பூஜை முதலியவற்றையும் சம்பிரதாயத்துக்கு எக்குறையும் வைக்காமல் செய்து வந்தாள். ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்ட காரணத்தால் சீத்தம்மாவின் சமையலைப் புசிப்பதில் மடி ஆசாரக்காரர்களான வெங்கம்மா, பார்வதம்மா இருவர்க்கும் தற்போது எந்த தயக்கமும் இல்லை. இதனால் பகல் வேளை உணவையும் சீத்தம்மாவே தயாரிக்க ஆரம்பித்தாள். அழகான பேரனின் மழலைப்பேச்சு, அவனது குழந்தையாட்டம் ஆகியவற்றில் மகிழ்ந்தார்கள் எல்லோரும். அவனை அலங்கரிப்பதும், உணவு ஊட்டுவதும் திம்மம்மாவின் வேலையாயிற்று. பழைய காயங்களைக் கீறிப் பெரிசாக்குகிற சாவித்திரி வீட்டில் இல்லாமல் புருஷன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போன காரணத்தால் மருமகளிடம் குற்றம் கண்டுபிடிப்பது குறைந்தது. ஆனாலும் அவ்வப் போது அவளது கோப நெருப்பு அற்ப காரணங்களுக்கெல்லாம் பற்றி எரியத்தான் செய்தது. முக்கியமாக அவள் முன்பாக சாவித்திரியைக் குறைவுபடவோ, மருமகளைப் பெருமையாகவோ பேசி விடக்கூடாது. இரண்டில் ஏதாவது ஒன்று நடந்தாலும் போதும், பெரிய ரகளையே உருவாகி விடும்.

11

ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதம் பதினைந்தாம் நாள் தவறாமல் ஜோசியர் வீட்டில் பானக பூஜை நடப்பதுண்டு. இதை வெகு விமரிசையாகக் கொண்டாடுவார்கள். சுற்று வட்டாரத்தில் இருக்கிற பத்து கிராமங்களில் இருந்தும் பிராமணர்கள் வந்து பூஜையில் கலந்து கொண்டார்கள். அந்த ஒரு நாளில் மட்டும் நூற்றுக்கணக்கில் பணம் செலவானது நூற்றுக்கணக்கான பணம் என்னும் போது இப்பொழுது இருப்பவர்களுக்கு அற்பமாகத் தோன்றக் கூடும். தவறாமல் மழை பெய்த காரணத்தால் விளைச்சலும் நல்லபடி இருந்தது அந்தந்த இடத்தில் விளைந்த விளைச்சல் அங்கங்கேயே உபயோக மானது. பெரிய நகரங்களுக்கோ, பெரிய சந்தைக்கோ அவற்றை வண்டியில் ஏற்றிச் செல்கிற அளவுக்கு போக்குவரத்து வசதி இல்லை. எருதுகளும், கழுதைகளும்தான் அந்தக் காலத்தில் சுமை களைத் தூக்கிக் கொண்டு நடக்க உபயோகமாகின சரக்குகளை இடம் மாற்றப் போதுமான போக்குவரத்து இல்லாத காரணத்தால் அங்கங்கே விளைந்த பயிர்கள் அங்கங்கேயே இருந்தன. இப்போது பதினைந்து ரூபாய்க்கு விற்கிற அரிசி அந்த நாட்களில் இரண்டு அல்லது இரண்டரை ரூபாய்க்கு விற்றது பணம் கொடுத்து வாங்குவோர் இல்லாமல் உபரியாகி மலிவான விலையில் கிடைத்தது. நாணய மதிப்பும் கூட இப்போது இருப்பதைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக இருந்த காலம் அது. அதனால் அப்பொழுது நூற்றுக்கணக்கான ரூபாய்ச் செலவிலான காரியம் என்றால், இப்பொழுது ஆயிரக் கணக்கான ரூபாய்ச் செலவுள்ள காரியத்துக்குச் சமமாகும். பிராமணர்களுக்கும், சுமங்கலி களுக்கும், மன நிறைவு கொள்ளும் அளவுக்கு உணவு படைத்தனர் பிராமணர் களுக்கெல்லாம் தட்சணை தாம்பூலம் கொடுத்து அனுப்பிய பிறகு சுமங்கலிப் பெண்கள் ஒன்று சேர்ந்தார்கள். இதில் பங்கெடுத்துக் கொள்வதற்காகவே விசேஷமாக சாவித்திரியை புருஷன் வீட்டில் இருந்து வரவழைத்திருந்தனர். பலகாரம் உண்டு பானகம் பருகியபிறகு தாம்பூலம் எடுத்துக் கொண்டார்கள் பெண்கள். எல்லாம் ஆனதற்குப் பின்பு எல்லாரும் உட்கார்ந்து பேசத் தொடங்கினார்கள். பேச்சுவாக்கிலேயே பக்கத்துவீட்டு சுப்பம்மா, திம்மம்மா, உன் குடும்ப வாழ்வு மிகவும் சுச்சிதமாக உள்ளது. ஆஸ்திக்கு ஒரு ஆண்குழந்தை

கீர்த்திக்கு ஒரு பெண் குழந்தை. முத்துமாலை போல அழகான பேரக்குழந்தை. மாற்றார்தாய் மகன்தான் எனினும், எல்லாவற்றிற்கும் சின்னம்மா சின்னம்மா என்று கூவிக் கொண்டுதான் வருகிறான். கிழித்த கோட்டைத் தாண்டாத மகன். மருமகளும் அப்படியே எத்தனை வருஷங்கள் தவம் செய்தாலும் இப்படி ஒரு மருமகள் கிடைக்க மாட்டாள். அவள் புத்திசாலித்தனத்தையும், அவள் வடிவழகையும் என்ன வார்த்தை சொல்லிப் பாராட்டுவது? இன் றைக்குக் காலை அவள் பிருந்தாவன பூஜையை முடித்துக் கொண்டு வரும்போது தான் பார்த்தேன். எப்படிச் சொல்வேன் அந்தக் காட்சியை? சாட்சாத் அந்த ஆதி லட்சுமியே எழுந்து வருகிறமாதிரி இருந்தது. நீளமான அவள் கூந்தல், அழகான நேர் வகிடு, லட்சணமான அவள் கண், மூக்கு, உதடு, எடுப்பான அவள் புடவை, கம்பீரமான அவள் நடை, அவள் சிரித்த முகம், அவள் மிருதுவான பேச்சு, எல்லாமே வணக்கத்துக்கு உரியவை, எதைப்பற்றிப் பாராட்டிப் பேசுவது, போன ஜன்மத்தில் என்ன புண்ணியம் செய்தாளோ, மகராசிக்கு அந்த வடிவழகும், குணங்களும் கிடைத்திருக்கின்றன என்று புகழ்ந்து பாராட்டினாள். அந்தப் புகழுரைகளைக் கேட்கக் கேட்க வயிற்றில் புளியைக் கரைத்த மாதிரி இருந்தது, திம்மம்மாவுக்கு. உடனே அவள், என்னதான் இருந்தாலும் பட்டணக்காரர்களின் லட்சணம் யாருக்கும் தெரியாதா? விடு சுப்பம்மா, பார்க்கச் சகிக்கவில்லை, சீத்தம்மாவின் கூந்தல்; ஏதோ மாதிரி சுருட்டிக் கொண்டு இருக்கிறது,. எவ்வளவு எண்ணெய் தடவினாலும் எப்படிச் சீவினாலும் படியாத கூந்தல் நீளமாக இருந்து என்ன பிரயோஜனம்? எங்கேயாவது உட்கார்ந்தால் சுருட்டிக் கொண்டுதான் உட்கார வேண்டும். அது என்ன, அழகாகவா இருக்கிறது? அவளுக்கு சடை போடுவது எவ்வளவு கஷ்டம் தெரியுமா? அம்மாடி, அதில் சிக்கெடுத்து நீட்டி முடிப்பதற்குள் பொழுது போய்விடும். தொட்டுச் சிக்கெடுத்து அப்படியே வாரி முடிக்கிற மாதிரி சின்னதாய் இருந்தால் தான் லட்சணம். நம் சாவித்திரிக்குத் தான் அந்த மாதிரி இருக்கிறது. சாவித்திரிக்கு இருக்கிற மாதிரி இரண்டு விரல்கடை அகலம் இன்னும் அதிகமாக இருந்தால் தான் நெற்றிக்கு அழகு. அதைவிடவும் அகலமாக இருந்தால் நெற்றி சப்பட்டையாகத் தான் தோன்றும். நம் சாவித்திரிக்கு புருவத்தின் மேல் அங்கொன்றும், இங்கொன்றுமாய்த் தெரிந்தும் தெரியாமலும் இருந்தால்தான் அழகு. ஒரு பெண்ணுக்கு இதை விடவும் வேறு எப்படி இருக்க வேண்டும்? சீத்தம்மாவுக்கு அப்படி இல்லை. மூக்கின் மேல் ஒரே பட்டையாக இருக்கிறது. காதோரம் செல்லச் செல்லக் குறுகிக் கொண்டே போகிறது. ஒரு வகையில் சொன்னால் வேப்ப இலை மாதிரி இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அவள் புருவத்தைப் பார்க்கும் போதெல்லாம் வேப்ப இலையைத் தின்றால் எவ்வளவு கசக்குமோ, அவ்வளவு கசப்பாய்த் தோன்றும். கண்ணைத் தான் எடுத்துக்கொள்ளேன். சீத்தம்மாவுக்கு இருக்கும் கண்ணே ஒரு தினுசு. சாதாரணமாய்ப் பார்த்தால் பாதி மூடிக்கொண்டு இருக்கிற மாதிரிதான் இருக்கும். முழுசாகத் திறந்து

பார்த்தாலோ குழந்தைகளைப் பயமுறுத்துகிறாளோ என்று நினைக்கும்படி இருக்கும். அவள் கண்ணைச் சுழற்றுகிற விதம் யாருக்குத்தான் வரும்? பளீர் பளீர் என்று மின்னல் அடிக்கிற மாதிரி இந்தக் கடைசியிலிருந்து அந்தக் கடைசிக்கும், அந்தக் கடைசியிலிருந்து இந்தக் கடைசிக்கும் கண்ணை உருட்டுவது யாருக்கு வரும்? நம் சாவித்திரிக்கு இருக்கிற மாதிரி கண்கள் சின்னஞ்சிறிதாய் இருந்தால்தான் அழகு. அந்த மைசூர்க்காரிகளுக்கே மூக்கு அமைப்பு தனிவிதம். புருவங்களில் நடுவில் சின்னதாய் ஆரம்பித்து வளர்ந்து இறுதியில் கொஞ்சம் வளைந்த மாதிரி இருக்கும். அந்த மாதிரி மூக்கு இருந்தால் மூச்சு இழுப்பதும் விடுவதுவும் எவ்வளவு சிரமம்? சாதாரணமாய் நம் கிட்டுவுக்கும், சாவித்திரிக்கும் இருக்கிற மாதிரி கீழே தடித்தும் நுனி கொஞ்சம் தூக்கினாற்போல இருந்தால்தான் மூச்சு விடுவது சுலபம். நம் மருமகளுக்கு இருக்கிறமாதிரி வாய் சின்னதாய இருந்தால் உண்டை, கரும்பு முதலிய வற்றைத் தின்னுவது எப்படி? சாவித்திரிக்கு இருக்கிற மாதிரி வாய் எப்போதும் அகலமாகவே இருக்க வேண்டும், சளி பிடித்து மூக்கு அடைத்துக் கொள்ளும்போது வாயாலாவது மூச்சை இழுத்துப் பிழைத்துக் கொள்ளலாம். உதடு கூட அப்படித் தான். சாவித்திரிக்கு உதடுகள் தடித்திருக்கும். சீத்தம்மா வுக்கு சின்ன உதடு. உதடு தடித்திருந்தால், சாப்பிடும் போது ஏதேனும் விழுந்து விட்டால் கூட உதட்டாலேயே மடக்கித் தடுத்துவிட முடியும். சீத்தம்மாவுக்கு மேல் உதடு வளைந்து கீழ் நோக்கிப் பார்த்த மாதிரி இருக்கிறது. சாவித்திரிக்கு மேல் உதடு மேல்புறமாய் வளைந்து எந்தவகையில் இருந்தால் நன்றாக இருக்குமோ அந்த வகையில் இருக்கிறது. நீ ஆயிரம்தான் சொல், சீத்தம் மாவுக்குப் பல்லழகு கிடையாது. ஒருத்தி சிரிக்கிறாள் என்று வைத்துக் கொள், அவள் பற்கள் நன்றாகத் தெரிய வேண்டாமா. சீத்தம்மாவுக்கு அப்படி இல்லை. தெரிந்தாலும் போச்சு. தெரியாவிட்டாலும் போச்சு. அப்படி இருக்கிறது அவள் கதை. சீத்தம்மாவின் நிறம் என்னமோ சிவப்புதான், உண்மை. ஆனால் அதில் என்ன அழகு இருக்கிறதோ தெரியவில்லை. என்னமோ குஷ்டநோய் பிடித்தமாதிரி தான் இருக்கிறது. நம் சாவித்திரி குழந்தையாய் இருக்கும் போது எவ்வளவு அழகு தெரியுமா, பார்க்க பத்து கண்கள் போதாது. அப்படி இருந்தது, அம்மை போட்டு விட்டதால் அவள் இப்படியாகி விட்டாள். அங்கங்கே புள்ளி புள்ளியாகிவிட்டது. கொஞ்சம் உடல் கருத்துவிட்டது. அவ்வளவு தான். என்னமோ எங்கேயாவது இருந்து பிழைத்துப் போகட்டும். அந்த மைசூர்க்காரிகளின் ஒய்யாரம் அலங்காரம் சிங்காரம் எல்லாம் யாருக்கு வரும்? அதையெல்லாம் கட்டிக்கொண்டு நம் சாவித்திரிக்கு ஆக வேண்டியது என்ன இருக்கிறது? ஒரு பெண்ணுக்கு, புருஷனுக்கு நல்ல மனைவி யாகவும், பிள்ளைகளுக்குத் தாயாகவும் இருப்பதே அழகு. அது போதும் என்றாள்.

திம்மம்மாவின் பேச்சைக் கேட்ட அங்கிருந்த சுமங்கலிகள் எதுவும் பேசத் தோன்றாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு வெறுமனே ஒரு போலிச் சிரிப்பைச் சிந்திவிட்டு அமைதியானார்கள். வெற்றிலை, பாக்குத்

தாம்பூலம் எடுத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் தமக்குள், "திம்மம்மா பேசுகிறதைக் கேட்டீர்களா. எல்லாம் வயிற்றெரிச்சலில் பேசுகிற பேச்சு. சரி, என்ன வேண்டுமென்றாலும் சொல்லிக் கொள்ளட்டும் என்று அவளைப் பேசவிட்டு கேட்டுக் கொண்டிருப்பதற்குள்ளேயே போதும் போதும் என்றாகிவிட்டது! அவள் பெண் சாவித்திரியைப் பார்த்தால் ஒரு வகையில் பிசாசு மாதிரி இருக்கும். அந்த மூதேவியின் சேஷ்டைகளும் புத்தியும் அவளுடைய உருவத்துக்குத் தகுந்த மாதிரியே இருக்கும். 'அழகற்ற வர்களே அழகற்ற காரியங்களைச் செய்கிறார்கள்' என்கிற வசனத்துக்குத் தகுந்த மாதிரி இருக்கும். அவளைப் பார்த்தாலே போதும் வாந்தி வந்துவிடும். அவளைப் போய்த் தூக்கி வைத்துப் பேசி சீத்தம்மாவைத் தாழ்த்திப் பேசினாளே'! நமக்கு என்ன பார்ப்பதற்கு கண்கள் இல்லையா? பாவம் அந்தப் பெண். சீத்தம்மா என்கிற பெயருக்குத் தகுந்த மாதிரியே சீதைதான் அவள்" என்று பேசிக் கொண்டு நடந்தார்கள்.

இது இப்படி இருக்க அந்தப்பக்கம் அம்மன் கோயில் அப்பாஜியின் பெயர் ரொம்பவும் பிரபலமாகிக் கொண்டி ருந்தது. அவனைப் பார்க்க வருகிற கூட்டம் வரவர அதி கரித்துக் கொண்டே இருந்தது. அங்கு சேரத் தொடங்கிய துஷ்டர்களின் அமளியும் அதிகரித்துக் கொண்டே இருந் தது. பக்தர்கள் அம்மனுக்கு வழங்கும் காணிக்கை, அப்பாஜியின் மூட்டையைக் கனக்கச் செய்து கொண்டே இருந்தது. அற்பனுக்குப் பணம் அதிகமாகும் போது அவன் புத்தி விகாரமுறுவது உலக விஷயம்தானே! காதுக்கு பத்து வகை கடுக்கன்கள் சேர்ந்து விட்டன. கையில் தங்கக்காப்பு சேர்ந்தது. விரல் களில் மோதிரம் சேர்ந்தது. பட்டுக்கரை போட்ட வேட்டி வந்தது. உடுத்துவ தெல்லாம் விலையுயர்ந்த அணிகலன்களாயின. பூசை மேடையில் உட்காரும் போது அணியும் மஞ்சள் மடித் துணியில் தங்கச்சரிகை கூடியது. அவனது ஆடம்பரமும், சொகுசுகளும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருந்தன. அவன் எங்கே போனாலும் அவனது பழைய நண்பர்கள் கொஞ்சம் பேர் முன்னும் பின்னும் நடக்க ஆரம்பித்தார்கள். இவர்களே கோயிலின் முன் உட்கார்ந்து சகல நேரங்களிலும் சூதாடிக் கொண்டும் அரட்டை அடித்துக் கொண்டுமிருந்தனர். சிலர் பாட்டு பாடிக் கொண்டுமிருந்தனர். இளவயசுப் பெண்களைப் பார்த்தால் போதும், இந்தக் கும்பல் உற்சாகத்தால் துள்ளி னார்கள். இந்தத் தொந்தரவால் பெண்கள் அந்தப்பக்கம் நடமாட முடியாமல் போனது. ஊர்மக்களில் பெரும்பாலோர் அந்த வழியாகத் தான் தண்ணீர் எடுத்து வருவ தற்காக குளத்துக்குப் போய் வந்தார்கள். கட்டுப்பாடு எதுவும் இன்றி விருப்பம் போலத் திரிகிற இவர்களின் தொந்தரவால் எது நடக்கும் எது நடக்காது என்று சொல்ல முடியுமா?

ஜோசியர் வீட்டிலிருந்து தினம்தோறும் பிருந்தா வனத்தில் பூஜை செய்து திரும்பும் பொருட்டு சீத்தம்மா போய் வருகிற விஷயம் தெரிந்ததே! அந்தப் பிருந்தாவனம் சுனைக்குக் கொஞ்சம் அருகாமையில் இருந்தது. சுனைக்கும்,

பிருந்தாவனத்துக்கும் போக வர முன்பு வழி இருந்தது. தடுப்பு எதுவும் இல்லை. போகப் போகத் தான் சுனைக்குப் பக்கத்தில் இருந்த இடத்தில் வேலி போட்டு வளைத்துக் கொண்டனர். பிருந்தாவனமும் கூட அந்த நிலத்தின் நடுப் பகுதியில் இருந்தது. ஆனாலும் பூஜைக்கு வேண்டி வருகிறவர்க்கு எந்தத் தடையும் இல்லை. அம்மன் கோயில் எதிரே இருந்தது இந்த பிருந்தாவனம். இரண்டுக்கும் நடுவில் நூறு அல்லது நூற்றி ஐம்பது கஜ தூரம் இருந்தது. தினந்தோறும் பிருந்தாவனத்துக்கு பூஜை செய்யும் பொருட்டு சீத்தம்மா போய் வருவது கோயில் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு பார்ப்பவர்களுக்கு நன்றாகவே தெரியும். எந்த நேரத்தில் வந்து போகிறாள் என்ற செய்தியும் தெரிந்திருந்தது. அம்மன் கோயிலைச் சுற்றி இந்தப் போக்கிரி இளைஞர் களின் தொந்தரவுகள் அதிகரித்திருந்த சமயம் அது. மனசில் கள்ளம் சேர்ந் திருப்பதைப் பார்வையே காட்டிவிடும். சீத்தம்மா பிருந்தாவனத்துக்குச் சென்று பூஜையை முடித்துக் கொண்டு திரும்புகிற வரைக்கும் கோயில் முற்றத்தில் உட்கார்ந்திருக்கும் எல்லாருடைய கண்களும் அவள் மேலேயே குவிந்திருந்தன. ஒருநாள் அப்பாஜியும் கோயில் முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு அவளைப் பார்த்தான். கண்கள் திருப்தியடையவில்லை. வைத்த கண் வாங்காமல் அவளையே பார்த்தபடி இருந்தான். கொஞ்சநேரம் கழித்து, "இவள் தீட்சிதனின் மருமகள் அல்லவா" என்று கேட்டான். அங்கிருந்தவர்கள் எல்லாரும் "ஆமாம்" என்றார்கள். அப்போது அப்பாஜி "நல்ல அழகு. மிகமிக வடிவாயிருக்கிறாள். நான் சரியாகப் பார்த்ததில்லை. இப்படி ஒரு மனங்கவரும் அழகை நான் எங்கும் பார்த்ததில்லை" என்றான். உடனே அங்கிருந்தவர்களில் ஒருவன், "அவள் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது" என்றான். இன் னொருவன், "கூந்தலைப் பற்றிப் பேசுகிறாயே! சுருள் சுருளாக, அழகாக அளவாக வந்து விழும் மயிர்க் கற்றையைப் பார்த் திருக்கிறாயா, அதுதான் எத்தனை அழகு" என்றான். மற்றொருவன், அந்தக் கண்கள், அந்தப் புருவம், அந்த பார்வை, ஆ இதற்கு ஈடு இணை இந்த உலகத்திலேயே இல்லை" என்றான். உடனே இன்னொருவன், "ஒரே ஒரு முறை அவள் சிரிப்பதற்கு எதை வேண்டுமானாலும் பரிசாகத் தரலாம்" என்றான். உடனே மற்றொருவன் "ஐயோ, அவள் உதட்டழகை விட்டு விட்டாயே" என்றான். அடுத் தவன், "அழகாக, அளவாகக் கடைந்தெடுத்த சந்தனப் பொம்மை போல இருக்கிறாள். அவள் உடம்பு நிறத்தின் பளபளப்பை எப்படி வர்ணிப்பேன்" என்றான். இன்னொருவன் ஐயோ, பெரிசா உடம்பு நிறத்தைப் பற்றிப் பேச வந்து விட்டாயே. எதுதான் அவளிடம் அழகற்றதாய் இருக்கிறது. சொல், பார்ப் போம்" என்றான். மற்றொருவன் "அடேய், நிறுத்தங்கடா உங்க பேச்சை. மைசூர் பட்டத்து யானை நடக்கிற மாதிரி மெல்ல மெல்ல அசைந்து நடக் கிறாளே அந்த நடைக்கு எதுடா சமமாகும்?" என்றான். இன் னொருவன், "என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கடா, கண்ணை இந்தப் பக்கத்தில் இருந்து அந்தப் பக்கத்துக்கு அசைக்கிறாளே, அதைப் பார்த்தால் உயிர் ஒரு

நிமிஷத் திலேயே கரைந்து விடுமே, தெரியுமா" என்றான். அடுத்தவன், "சும்மா இருடா, ரொம்ப அதிகம் பார்த்தவன் போலப் பேசாதே. கண்ணைப் பார்த்து விட்டு கரைந்து விட்டானாம் கரைந்து. கரைய வைக்காதது எதுடா அவன் உடம்பில் இருக்கிறது. அந்த நெஞ்சுக்குச் சமமாகச் சொல்ல உலகத்தில் என்னடா இருக்கிறது?" என்றான். இன்னும் ஒருவன், "அவள் நடக்கும்போது இடுப்பை அசைத்து அசைத்து நடக்கிற விதம் இருக்கிறதே, அதைப் பார்க்க அந்தக் கடவுள் பத்துக் கண்கள் கொடுத் திருந்தாலும் போதாது. இன்னொருவன், "போன வெள்ளிக் கிழமை கிட்டப்பா வந்து ரோஜாப் பூக்கள் கொடுத்து எடுத்துச் சென்று வீட்டில் கொடுத்து விட்டு வா என்றான். நான் எடுத்துக் கொண்டு சென்றேன். பூ வாங்கிக்கங்கன்னு சொன்னேன். அவள் வந்து கையை நீட்டி பூவை வாங்கி னாள். ஆஹா, அது என்ன கை, அவள் உள்ளங்கை நிறமும் பூவின் நிறமும் ஒன்றுடா" என்று வர்ணித்தான். மேலும் ஒருவன், "அவள் முகத்தைப் பார்த் திருக்கிறாயா நீ. எவ்வளவு அழகு? நெற்றியில் இட்ட பொட்டும், சாந்தும் எவ்வளவு கவர்ச்சி தெரியுமா? பேசு கிறார்களாம் பேச்சு. பார்த்துவிட்டு எதையும் பேச வேண்டும். பார்க்காமல் எதையும் பேசக் கூடாது? செத்த நாய் போல விழுந்து கிடக்க வேண்டும்" என்றான். அதற்கு இன்னொருவன் ஆள்தான் கொஞ்சம் தடியாக இருக்கிறாள், இல்லையா" என்றான். மற்றவன், "உன் கதையெல்லாம் வேண்டாம் நிறுத்து. ரொம்ப பெண்களைப் பார்த்த ஆள் மாதிரி பேசாதே. அவளைப் போய் தடியாய் இருக்கிறாள், அது, இது என்று பேசாதே. அந்த மூலை வீட்டுப் பெண்ணைப் பார்த்து விட்டுப் பேசுகிறாயா. இளங்கன்று போல மெல்ல மெல்ல அசைந்து நடக்கிறாள் அவள். நானும் எத்தனையோ ஊர்களில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். அங்கெல்லாம் சலித்து எடுத் தாலும் கூட இப்படி ஒரு பெண் கிடைக்க மாட்டாள்." என்றான். அதற்குப் பதிலாக இன்னொருவன், "இவளைப் பற்றி உனக்கு என்னடா தெரியும்? ஏதோ ஒரு பாட்டுப் பாடு கிறாள் அங்கே. கேட்கிறவன் யாரும் அந்த இடத்தை விட்டு அகல முடியாது, அப்படி பாடுகிறாள்" என்றான். இன்னொ ருவன், "ரொம்ப பாட்டு கேட்டவன் மாதிரி பேசாதே. மைசூரில் அவள் அப்பா, தாத்தா எல்லாரும் பாடுகிறவர்கள் தானாம். அட, செவிடன் நஞ்சப்பாவின் கல்யாணத்துக்கு வரவில்லையா? அப்பொழுதுகூடப் பாடினாளே, கேட்க வில்லையா. அட, பாட்டை விடுங்கடா, எதில்தான் அவள் குறைச்சல், சொல்" என்றான் இன்னொருவன். இப்படி ஒருத்தி எனக்கு கிடைத்திருந்தால் எப்படி வாழ்வேன் தெரியுமா? என்று பெருமூச்சு விட்டான். இவர்களோடு உட்கார்ந் திருந்த வயசான கிழவன் ஒருவன், "என்னடா பேச்சு பேசறிங்க பசங்களா, கையில் ஒரு பைசா காசு இல்லை. உடம்பில் உடுத்திக் கொள்ள நல்ல ஒரு துணி இல்லை. போகிற வருகிற தாசியைக் கண்டு மயக்கம் போட்டு விழுந்தானாம். அந்தக் கதையாக அல்லவா இருக்கிறது உங்கள் கதையும்" என்றான். கூடவே இருந்த இன்னொரு கிழவன், "நடங்கடா அந்தப் பக்கம். சும்மா பேசா தீங்கடா.

அவள் எப்படிப்பட்ட புண்ணியவதி? நீங்கள் யாரும் அக்கா தங்கைகளோடு பிறக்கவில்லையா?" என் றான். அதற்கு அப்பாஜி, "அவள் பெயரும் அழகு. அவள் உருவமும் அழகு. அதுதான் ஆண்களின் மனசை நறுக்கித் துண்டாக்கு கிறது." என்றான். அதற்குப் பதிலாக பக்கத்தில் இருந்த ஒருவன், "இவள் பெரிய பத்தினியாம் வீடு, வீடு விட்டால் கோயில் என்று இருக்கிறாள்" என்றான். அப்போது அப்பாஜியின் வலப்புறம் உட்கார்ந்திருந்த ஆசிரியர் நாரப்பய்யா "நமக்கு எதற்குடா இந்த வம்பு எல்லாம்?" என்று சொல்ல இதில் ஏதோ விவகாரம் இருக்க வேண்டும் என்று நினைத்தான் அப்பாஜி. "என்ன ஆசிரியர் ஒரு மாதிரி இழுத்துப் பேசுகிறார்? ரொம்ப நாட்கள் அவருடைய வீட்டிலேயே இருந்து சாப்பிட்டவரல்லவா? அவருக்குத் தெரியாத விஷயமா?" என்று பொய்ச்சிரிப்பு ஒன்றை உதிர்த்தபடி நெருங்கி வந்தான். அதற்கு அவர், "எனக்குத் தெரியாதது என்ன இருக்கிறது. இவள் புருஷன் மகாதேவன் இருக்கிறானே, அவன் என்னிடம் படித்த பையன். அவனுக்கு இப்படி ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டு வந்து கட்டி வைத்து என்ன பிரயோஜனம்? தூங்கி எழுந்ததில் இருந்து தூங்கப் போகிற வரைக்கும் அத்தைக் காரிக்கும் இவளுக்கும் சதா நேரமும் சண்டை. கேட்டுக் கேட்டு எனக்கும் போதும் போதும் என்றாகிவிட்டது" என்று சொன்னார். அப்போது அப்பாஜி, "எதற்கு அத்தைக் காரிக்கும் இவளுக்கும் சதாகாலமும் சண்டை?" என்று கேட்டான்.

நாரப்பய்யா "எதற்கு சண்டை என்று கேட்டால் என்ன வென்று தெரியும்? எனக்குத் தெரிந்த வரைக்கும் எவ்வளவு பெரிய நல்ல தாய் தந்தைக்குப் பிறந்தவள் அந்த திம்மம்மா. அதுதான் இவள் அத்தைக்காரி. அவளுக்குக் கெட்ட நடத்தை எதுவும் பிடிக்காது. அதற்காகத் தான் சண்டை."

அப்பாஜி "மருமகளிடம் அப்படி என்ன கெட்ட நடத்தை இருக்கிறது?"

நாரப்பய்யா செய்யறவங்க பாவம் எல்லாம் பேசறவங்க வாயிலன்னு சொல்கிற மாதிரி நமக்கு எதற்கப்பா அது, விடு"

அப்பாஜி "அப்படியென்றால் ஏதாவது தப்பு சங்கதி உண்டா?"

நாரப்பய்யா "நான் கண்ணாலும் பார்த்தது கிடையாது, காதால் கேட்டதும் கிடையாது. எதுவுமே இல்லை யென்றால், பாவம் அந்த அத்தைக் காரி எதற்காக இவளைத் திட்டிக் கொண்டு இருக்க வேண்டும்?"

அப்பாஜி: "இங்க பாருங்க, நானும் எவ்வளவோ பார்த்திருக்கிறேன். அழகு எங்கு இருக்கிறதோ ஆபத்தும் அங்கே இருக்கிறது. அது இல்லாமல் அழகு இல்லை."

நாரப்பய்யா: "தாராச்சாங்கத்தில் படித்துக்காட்டவில் லையா அன்றைக்கு சந்திரன் அழகாக இருந்ததால் தான் அவனிடம் தோஷம் சேர்ந்தது. என்றென் றைக்கும் அது களங்கமாகவே நிலைத்துவிட்டது!

அப்பாஜி: எனக்கு ஏதோ சந்தேகம் பாருங்க. அழகு இருக்கிற இடத்தில் எதற்கு தோஷம் இருக்க வேண்டும்? கடவுள் முகங்களை எத்தனை அழகாகச் சித்திரத்தில் எழுதுகிறோம்? அப்படியென்றால் கடவுளிடமும் தோஷம் இருக்க

வேண்டும் என்பதுதான் நம் விருப்பமா? நமக்குத் தோஷம் பிடிக்கவில்லை என்றபிறகு அவர்களை நாம் எதற்கு பூசை எல்லாம் செய்ய வேண்டும்?"

நாரப்பய்யா; "தோஷமற்ற அழகு கடவுளிடம் உள்ளது. மனிதர்களிடம் தான் அழகோடு சேர்ந்து தோஷமும் இருக்கிறது"

அப்பாஜி; "அழகற்ற இடத்தில் தோஷம் பிறப்பது அபூர்வம்."

சபாபத்தையா: "தோஷம் இருக்கிற இடத்தில் அழகு இருக்குமா? அழகு இருக்கிற இடத்தில் தோஷம் இருக்குமா? எப்படி சொல்ல முடியும்?"

அப்பாஜி: "அழகு மனிதர்களைக் கவர்ந்திருக்கிறது"

சபாபத்தையா: "வெறும் அழகு மட்டும் மனசைக் கெடுப்பதில்லை. மிகச் சிறந்த அழகோடு ஓர் ஓவியத்தை வரைந்தால் மனசு கெட்டு விடுமா?"

அப்பாஜி: "அப்படியும் சொல்வதற்கில்லை. உயிரற்ற பொம்மை, படங் களின் அழகு எதுவும் மனிதர்களின் மனசைக் கெடுப்பதில்லை. உயிர் இருக்கிற அழகுதான் மனசை அலைக்கழித்துக் கெடுக்கிறது?"

சபாபத்தையா: "நான் சொன்னது உனக்குப் புரியவில்லை அப்பாஜி. உயிரற்ற பொம்மை படங்களின் அழகைப் பார்த்துவிட்டு நாம் வெறுமனே ஆனந்தப் படுகிறோம். அவ்வளவுதான். அதேபோலவே ஒரு அழகான பூவைப் பார்க்கும் போதும், மிக நன்றாக கட்டப்பட்டிருக்கிற வீட்டைப் பார்க்கும் போதும், நமக்கு ஆனந்த மாகவே இருக்கிறது. உயிருள்ளவர்களின் அழகைப் பார்த்து உருவாகும் ஆனந்தமும் இவ்விதமே. ஆண்கள் பெண்களின் அழகைப் பார்க்கும் போதும் பெண்கள் ஆண்களின் அழகைப் பார்க்கும் போதும் இப்படிப்பட்ட ஆனந்தமே பிறக்க வேண்டும். ஆனால் நம் புத்தியைக் கெடுத்து காம உணர்வைத் தூண்டும் சக்தி வேறொன்று உள்ளது."

நாரப்பய்யா: "ஏதோ புதிய சங்கதியைச் சொல்கிறீர்கள். யாருக்கும் தெரியாத சங்கதி அது எப்படிப்பட்டது?"

சபாபத்தையா; "மனசைக் கரைப்பது வெறும் அழகு மட்டுமல்ல. அது பொம்மை, சிலை போன்றவற்றிலும் இருக்கிறது என்று ஆரம்பத்திலேயே நான் சொல்லி உள்ளேன். அப்படியென்றால் கரைக்கிற சக்தி வேறொன்று என்றுதானே அர்த்தம். ஆண்களைப் பார்த்தும் பெண்கள் தலையைக் கவிழ்த்துக் கொள்வது, கடைக் கண்ணால் அவனைப் பார்ப்பது, முந்தா னையை அப்போதுதான் சரிப்படுத்திக்கொள்வது, யாரிடமாவது பேசிக் கொண்டிருக்கும்போது எதை எதையோ எண்ணிக் கொண்டு குறுநகை செய்வது, ஆண்களைப் பார்க்கவே மனம் கசந் தவள் போல புருவத்தை இறுக்கிக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொள்வது, இறுக்கம் குறையாம லேயே மெல்லச் சிரிப்பது, அதே நிலையிலேயே மெல்லத் திரும்பி அவன் பக்கம் பார்த்து ஓரக்கண்ணால் சிரிப்பது, அடிக்கடி ஆடை, ஆபரணங்களை சரிப்படுத்தியவாறு நிற்பது, அடிக்கடி முகத்தை துடைத்துக் கொள்வது, கண்ணாடியைப் பார்த்துக் கொள்வது, ஆடவன் தன்னைப் பார்க்காத கணங்களில் அவனையே கண் இமைக்காமல் வெட்கத்தையும் விட்டுப்

பார்ப்பது, ஆடவன் தன் பக்கம் திரும்பும் போது அவனைப் பார்க்காதவள் போல வேறொரு பக்கம் பார்ப்பது, கால் கட்டைவிரலால் நிலத்தில் கோடு இழுப்பது, குழந்தைகளைக் கண்டதும் அவற்றைத் தூக்கி அளவுக்கு மீறிக் கொஞ்சுவது, மனசுக்குள்ளேயே ராகம் இழுப்பது, சிரித்தபடி ரொம்ப பணிவோடு பேசுவது, எல்லாமே ஆடவன் என்கிற பிம்பம் பெண்கள் மனத்தில் உருவாக்கும் காரியங்கள். ஓர் ஆடவனைக் கண்டதும் அசையாத கண்கள் எவ்வளவு அழகாக இருந்தாலும் கேடற்றவை. பேசாத வாய் எத்தனை லட்சணமாக இருந்தாலும் தவறற்றவை. அசையாத கையும் கால்களும் எவ்வளவு சரியாக இருந்தாலும் பயமில்லை. நன்றாக யோசித்துப்பாருங்கள். அப்படிப்பட்ட காரியம் ஏதேனும் இருக்கிறதா, சொல்லுங்கள். வெறும் அழகு மட்டுமே எல்லாவற்றிற்கும் காரணம் என்று சொல்லாதீர்கள்".

நாரப்பய்யா; "இவ்வளவு விஷயம் எனக்குத் தெரியாது ஸ்வாமி. இப்படியே ஒவ்வொன்றையும் தோண்டித் தோண்டி அலசிப் பார்ப்பதற்கு என்னால் முடியாது"

அப்பாஜி; "சபாபத்தையா சொல்வதெல்லாம் ஏதோ புத்தகத்தில் எழுதி இருக்கிற வார்த்தைகள்; உலக வாழ்வில் நடப்பதெல்லாம் நம் ஆசிரியர் நாரப் பய்யா சொன்ன மாதிரி தான். எவ்வளவோ காலம் ஜோசியர் வீட்டிலேயே இருந்து பார்த்தவர் அவர். அவருக்குத் தெரியாததா?"

இப்படி சபாபத்தையாவின் வார்த்தைகளை ஒதுக்கியும், நாரப்பய்யா சொன்ன வார்த்தைகளை ஏற்றும் தன் ரசனையைத் தெரிவித்தான், அப்பாஜி. இப்படி உரையாடல் நிகழ்ந்து கொண்டிருக்கும் போதே அவனுக்கு மனம் கலங்கியது. இருட்டு கவிந்தது. புத்தியில் வேறு எந்த விஷயமும் படியாத தாகியது. எதுவுமே பேசாமல் அமைதியாக உட்கார்ந்தான் அப்பாஜி. அங்கி ருந்தவர்கள் எல்லாரும் எழுந்து தத்தம் வீடுகளுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். தனிமை உருவான பிறகு ஆசிரியரை அழைத்துக் கொண்டு பின்புறம் அழைத்துச் சென்றான் அப்பாஜி. அங்குமிங்கும் பார்த்து யாரும் இல்லாததை உறுதி செய்து கொண்டு, "அப்படியென்றால் தீட்சிதரின் மருமகளைப் பற்றி வெளி உலகம் என்ன வேண்டுமானாலும் பேசிக் கொண்டாலும் கூட, உள் விவகாரம் வேறு விதம் என்று சொல்லுங்கள். நான் என்னமோ ஜனங்கள் பேசிக் கொள்வதையெல்லாம் உண்மை என்று நம்பிக் கொண்டிருந்தேன்", என்றான். அதற்கு நாரப்பய்யா, "அவர்கள் வீட்டிலேயே தங்கி இருந்து மூன்று வேளையும் என்ன நடக்கிறது என்று பார்த்த ஆள் இல்லை. அந்தப் பையனுக்கும் அந்த பெண்ணுக்கும் எந்தப் பொருத்தமும் இல்லை. அந்த மகாதேவன் என்னிடம் படித்த புத்திசாலியான பையன். ஆனால், இப்போது என்னைக் கண்டால் கொஞ்சமும் மதிப்பதில்லை. எனக்கென்னப்பா வயசாகி விட்டது, கிழவனாகி விட்டேன். இருக்கிற விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். அவர் இவர் மாதிரி தலையாட்டிப் பொம்மையாக இருந்தால்தான் அவளுக்குச் சரி. விட்டுத்தள்ளுப்பா, எப்படியாவது போகட்டும். எனக்கு எதற்கு இது

எல்லாம் முதலிலேயே அந்த சதாசிவ தீட்சிதனுக்கு என்னைக் கண்டால் பிடிப்பதில்லை. பிள்ளைகளை அடிக்காவிட்டால் அவர்கள் பாடம் கற்பது எப்படி? அந்தக் காலத்தில் இந்த மகாதேவனை ஒரு அடி அடித்ததற்கு அத்தனை ரகளை உண்டாகிவிட்டது. நான் உயிர் பிழைத்து எழுந்ததே பெரிய புண்ணியம். உனக்கு அதெல்லாம் புரியாது. சொல்ல ஆரம்பித்தால் மூன்று நாட்களுக்குக் காணும் அந்தப் புராணம். கடைசியில் பிள்ளைகளுக்குச் சொல்லித்தர எனக்குத் தெரியவில்லை என்று சொல்லி விட்டான் அந்த தீட்சிதன். இந்த ஊரில் என் கையால் தயாராகாத பையன் யார் உண்டு, சொல் பார்ப்போம். விரல் விட்டுச் சொல்லச் சொல் பார்ப்போம். அன்றைக்கு அவன் சொன்ன வார்த்தை ஒவ்வொன்றும் இன்னும் என் வயிற்றில் நெருப்பாக எரிகிறது. இத்தனைக்கும் யார் இவர்கள்? ஜோசியர் வீட்டில் சேர்ந்து கொண்டவர்கள். இல்லாவிட்டால் இவர்கள் கதி என்ன ஆகி இருக்கும்? ஏதோ கொஞ்சம் பண நடமாட்டம் இருக்கிறது. ஆனாலும் உலகில் இவர் மாதிரி இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள். சொத்துக்களை யெல்லாம் விழுங்கி ஏப்பம் விட்டாகி விட்டது. எல்லாம் அந்தத் திம்மம்மாவின் அப்பா கஷ்டப்பட்டுச் சம்பாதித்தது. இந்த மகாதேவனின் பெண்டாட்டியை முழுக் கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கிறாள் அந்த திம்மம்மா" என்றான்.

ஆசிரியரை அனுப்பிவிட்டு தனியாக தன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்த அப்பாஜி ஆசிரியர் சொன்னதை எல்லாம் மீண்டும் மனசுக்குள் அசை போட்டான். ஆசிரியர் சொன்னதெல்லாம் சம்பிரதாயத்துக்குப் பேசிய பேச்சு அல்லது வேண்டுமென்றே அப்பாஜியின் பித்துக் குளித்தனத்தை இன்னும் கொஞ்சம் தூண்டுவதற்குப் பேசிய பேச்சா என்று தெரியவில்லை. ஆனால் அப்பாஜியோ அதை முழுக்க முழுக்க நம்பினான். சீத்தம்மாவுக்கு தானே சரியான பொருத்தம் என்று எண்ணினான். மன்மதனின் வலையில் விழுந்தான். கண்கள் குருடானவன் போல நடந்து கொண்டான். இந்த ஆசை ஈடேறுவது எப்படி? "திம்மம்மாதான் வீட்டு எஜமானி. இவளே, மருமகளை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளாள்" என்று யோசித்தபடி நடந்தவனுக்கு ஏதோ ஒரு வழி புலப்பட்டது. அதுவே சரி என்று நினைத்துக் கொண்டான். இவனுக்குத் தோன்றிய விபரீதமான புத்தி வேலை செய்யத் தொடங்கியது.

தினந்தோறும் இரவில் அம்மன் கோயிலில் பூசை நடப்பது வழக்கம். அம்மன் சிலைக்கு விதம்விதமாக அலங்காரம் செய்து படையல் வைத்துப் படைத்து வந்திருக்கும் பக்தர்களுக்கெல்லாம் பிரசாதம் கொடுப்பதும் வழக்கம். அலங்காரமும், படையலும் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தன. அம்மனுக்கு அலங்கரிக்க மைசூரில் இருந்து ஆட்கள் வந்தார்கள். மகிஷாசுர மர்த்தினி, மகா காளி, சீதாபார்வதி, சாவித்திரி, காயத்ரி, ராஜராஜேஸ்வரி, திரிபுரசுந்தரி, கங்கா, ஆகிய வகைவகையான அலங்காரங்கள் எல்லாம் அம்மனுக்கு நடந்தன. அடிக்கடி உற்சவங்களும் ஊர்வலங்களும் நடந்தன. விசேஷமாக அம்மனுக்கு ஏதோ பூசை நடக்கிறது என்றும் எல்லாரும் அதை

வந்து அவசியம் பார்க்க வேண்டும் என்றும் எல்லாருக்கும் ஆசை உண்டாகிற மாதிரி கோயில் காரியங்கள் நடந்தன. சதகண்ட ராவணவதை அலங்காரத தையும் மோகினி அலங்காரத்தையும் செய்த தினங்களில் அவை மிகவும் சிறப்பாக இருந்தன என்று பேச்சு அடிப்பட்டது. இன்னொரு முறை அவற்றைப் பார்க்கும் ஆசை நிஜமாகவே எல்லாருக்கும் உண்டானது. ஆரத்தி சமயத்தில் ஊர் முக்யஸ்தர்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் மரியாதை செய்யப்பட்டது. ஜோசியர் வீட்டுப் பெண்களை மிகவும் மரியாதையுடன் அழைத்துக் கொண்டு வருவதும், அழைத்துக் கொண்டு போய் விடுவதும் நடந்தது. எல்லாரைக் காட்டிலும் இவர்களுக்கு தட்டுநிறைய பூவும், பிரசாதமும் கொடுக்கப்பட்டன. நவராத்திரி சமயத்திலும், வரலட்சுமிப் பண்டிகையின் போதும் சுமங்கலிகள் பிரசாதம் என்ற பெயரில் நல்ல புடவைகளும் ரவிக்கைத் துண்டுகளும் தீட்சிதன் வீட்டுக்கு கொடுத்தனுப்புவது வாடிக்கை யானது. ஊரார்கள் எல்லாரும் அவனை மிகவும் பாராட்டிப் பேச ஆரம்பித் தார்கள்.

இது மட்டுமில்லை. ஒரு நாளும் தவறாமல் பிருந்தாவன பூஜைக்கு சீத்தம்மா போய் வந்தாள் அல்லவா, அப்படியே தினந்தோறும் சுனையில் இருந்து நல்ல நீரை எடுத்துக் கொண்டு வருவதும் அவளுக்குப் பழக்கமாய் இருந்தது. இந்த இரண்டு வேலைகளைத் தவிர வேறு எந்த வேலையின் பொருட்டும் சீத்தம்மா வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. இப்படி இருக்கும் போது பிருந்தா வனத்தில் இவள் தினந்தோறும் பூசை செய்யும் இடத்தில், துளசி பீடத்துக்கு வெகு அருகில் அரளி இலையில் சுற்றிய பூப்பொட்டலங்கள், சந்தன உண்டைகள் நிரம்பிய டப்பிகள், புனுகு, ஜவ்வாது, குங்குமம், மஞ்சள், பச்சைக் கற்பூரம் ஆகிய வாசனைத் திரவியங்கள் நிரம்பிய சிறு குப்பிகள், மல்லிகை, சம்பங்கி, பாதிரிப்பூ ஆகியவையும், நடுநடுவே மருக்கொழுந்தும் சேர்த்துக் கட்டிய மாலைத் துண்டுகள், அரச முத்திரையிட்ட பொற்காசுகள், பழைய வராகன்கள் ஆகியவை எல்லாம் வந்து விழத் தொடங்கின. அவற்றை விஷம் போலப் பார்த்தாள் சீத்தம்மா. மனம் சிறிதும் சஞ்சலப்படவில்லை. பூசாரியிடம் வாங்கிச் சாப்பிடுகிற கூட்டத்தின் பேச்சு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருந்தது. இவள் காதில் விழட்டும் என்றே உரக்கப்பேசிய அவர் களின் பேச்சின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சீத்தம்மா சிறிதும் மனம் சலனமடையாமல் உறுதியுடன் இருந்தாள்.

அவர்கள் நடவடிக்கை இன்னும் கொஞ்சம் அதிகமானது. அருந்ததி அம்மாவின் பிருந்தாவனத்தில் இருந்து நான்கைந்து கஜ தூரம் ஒரு ஆலமர வேர்ப் பகுதி பரந்திருந்தது. அதற்கு தினசரிப் பூஜை செய்து வணங்கும் பழக்கம் ஏற்பாடாகியது. எல்லாம் அப்பாஜியின் திட்டம். ரொம்ப ஆடம்பரமாக அந்த பூஜையை நடத்தினான் அவன். சீத்தம்மா பூஜைக்கு வரும் நேரத்தைப் பார்த்துக் கொண்டிருந்து அதே நேரத்தில் தானும் மரத்துக்குப் பூஜை செய்யத் தொடங் கினான். அந்த நாட்களில் வேண்டுமென்றே சீத்தம்மாவின் பக்கம் திரும்பி

சிரிக்கத் தொடங்கினான் அப்பாஜி. ஆனால் சீத்தம்மா அதை லட்சியம் செய்ய வில்லை. பூஜைக்குப் பூ எடுத்துக் கொள்ளுங்கள். நைவேத்யத்துக்குப் பழம் எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஏதோ ஒரு காரணத்தை முன்னிறுத்தி பேச்சுத்தர ஆரம்பித்தான். சீத்தம்மாவோ அதையும் லட்சியம் செய்யவில்லை. அவன் பக்கமே திரும்புவதில்லை. பூஜையை முடித்துக் கொண்டு இறுக்கமான முகத்துடன் எச்சரிக்கையாகத் திரும்பிச் சென்றாள். இவ்விதமாய் நாள் தோறும் அந்த நீசனின் தொந்தரவுகள் அதிகரித்தன. இவற்றை அடுத்தவர் களிடம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கஷ்டம். தினந்தோறும் அவற்றை அனுபவிப்பதும் கஷ்டம். இப்படியே சங்கடங்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. ஆனால் சீத்தம்மாவின் மன உறுதி குலையவில்லை. சாயங் காலந்தோறும் மைசூரிலிருந்து விசேஷமாய்த் தருவிக்கப்பட்ட மல்லிகைப் பூப்பொட்டலம் கோயில் பிரசாதம் என்ற பெயரில் ஜோசியர் வீட்டுக்கு வர ஆரம்பித்தது. தினந்தோறும் திம்மம்மாவே கோயிலுக்குச் சென்று வந்து கொண்டிருந்தாள். கோயிலில் அவளுக்கு ஏகப்பட்ட வரவேற்பு இருந்தது. பல வகையான பழங்கள் நிரம்பிய தட்டுகள் பாதாம்பருப்பு, கற்கண்டு, திராட்சை ஆகியவை நிரம்பிய தட்டுகள் வெள்ளிக் கிழமைகளில் புடவை ரவிக்கைத் துண்டுகள் ஆகியவற்றை ஒரு ஆளின் தலையில் தூக்கி வைத்து தினந்தோறும் கூடவே அனுப்பி வைத்தான் அப்பாஜி. ஓடுமீன் ஓட உறுமீன்-வரும் வரைக்கும் காத்திருக்கும் கொக்குப்போல காத்திருக்கும் அப்பாஜியின் தந்திரம் திம்மம்மாவுக்கு அவ்வளவாய்ப் புரியவில்லை. அவனைப் பற்றிய அபிப்பிரா யங்கள் ஒரு முறை நல்லவிதமாகவும் அடுத்த முறை வேறு விதமாகவும் தோன்றியது. ஒரு நாள் இரவு ஆரத்தி முடிந்து புறப்பட்டுப் போகும் சமயத்தில் திம்மம்மா, "அப்பாஜி, நீ மகராசனாய் இருக்க வேண்டும். உன்னிடம் சக்தி கொண்டிருக்கிற அளவுக்கு அந்த அம்மன் யாரிடமும் சக்தி கொண்டிருக்க வில்லை. இந்தக் கோயிலுக்கு எத்தனையோ பூசாரிகள் வந்தார்கள். போனார்கள் அப்படி ஒரு சேவை எந்நாளும் நடந்ததில்லை. பெரிய பெரிய துரைமார்களின் கோயில்களில் கூட இப்படி தினமும் நடக்காது. போன ஜன்மத்தில் நல்ல புண்ணியம் செய்திருக்க வேண்டும். அதனால்தான் கடவுளின் அருள் உனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த ஜன்மத்தில் அவளுக்குப் பூஜை செய்யும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. அடுத்த ஜன்மத்திலும் உனக்கு நல்ல அருளே கிடைக்கும்." என்று சொன்னாள். அப்போது அப்பாஜி, "தாயே, உன் ஆசீர்வாதத்தால் எல்லா சேவைகளையும் செய்யும் சக்தி எனக்கு உண் டானது. அது சரி தாயே, அம்மன் தரிசனம் காண இந்த ஊர் ஜனங்கள் மட்டுமல்ல, பெரிய பெரிய சீமைகளில் இருந்தெல்லாம் வந்து போகிறார்கள். நம்முடைய சின்ன சாஸ்திரி குடும்பம் மட்டும் கோயிலுக்கு வருவதே இல்லையே, அம்மன் தரிசனத்துக்கு என்றாவது ஒரு நாள் அவர்களையும் அனுப்பிக் கொடு தாயே. மைசூரில் அவர்கள் எத்தனையோ கோயில்களைப் பார்த்திருக்க முடியும். இது என்ன சின்னக் கோயில்தானே என்று அலட்

சியமாய் இருக்கிறார்களோ என்னமோ" என்று திம்மம்மாவைப் பார்த்து வணங்கியபடி சொன்னான். அப்போது திம்மம்மா, "நல்லது அப்பாஜி. அவளையே அனுப்பி வைக்கிறேன். நீ கூப்பிடுவது அதிகமோ அல்லது அவள் வருவது அதிகமோ. என்னமோ, இந்தக் காலத்துப் பிள்ளைகள். நான் என்ன சொல்ல முடியும். என் வார்த்தை எதுதான் நடக்கிறது, சரி விடு, அவளை அனுப்பி வைக்கிறேன்" என்று புறப்பட்டுச் சென்றாள். மருமகளை இந்தக் காலத்துப் பிள்ளை" என்று திம்மம்மா குறிப்பட்டதைத் தப்பான அர்த்தத்தோடு புரிந்து கொண்ட அப்பாஜி தன் ஆசை கைகூடும் சமயம் நெருங்கி விட்டது என்று நினைத்தான். அங்கே வீட்டுக்குப் போய்ச் சேர்ந்த திம்மம்மா சீத்தம் மாவை அழைத்து "ஏண்டி நீ அம்மன் கோயிலுக்குப் போவதே இல்லையாம். அந்த அப்பாஜீ எவ்வளவு வருத்தப்படுகிறான் தெரியுமா? ஊரில் எத்தனை பேர் போகிறார்கள், வருகிறார்கள், உனக்கு மட்டும் என்ன வந்தது, அம்மன் அலங்காரம் எவ்வளவு அழகாக இருக்கிறது தெரியுமா. பார்க்கிற கண்ணுக்கு பாவம் தொலையும் போய் அம்மன் தரிசனம் செய்துவிட்டு வாடி அங்கே கொடுக்கும் வகைவகையான பிரசாதங்களையும் எடுத்துக் கொண்டு வாடி போய் வந்தால் என்ன குறைந்துவிடும், உனக்கு? எல்லாரும் போய் வரும்போது நீ மட்டும் என்ன உசத்தி? அம்மாடி நீ எவ்வளவு பெரியவள், எத்தனை பெரிய ஒழுங்குக்காரிதெரியாதா எனக்கு. போடி கூப்பிட்டுச் செல்ல ஆள் வந்து காத்திருக்கிறது. வெளிச்சத்துக்கு இரண்டு தீவட்டிக்காரர்களும் வந்திருக் கிறார்கள், கிளம்பு. அந்த மகராசன் அப்பாஜி மாதிரி உலகத்தில் ஆள் இருக்குமோ சொல்" என்றாள். அப்பொழுது சீத்தம்மா, "எவ்வளவு கட்டாயப் படுத்தினாலும் அந்தக் கோயிலுக்கு மாத்திரம் நான் போகமாட்டேன்" என்று உறுதியாய்க் கூறினாள். இந்த விஷயம் அப்பாஜிக்கு தெரிந்ததுமே நாம் இத்தனை செலவு செய்து மேற்கொண்ட முயற்சி முழுக்க வீணாகி விட்டதே என்று மிகவும் கவலைப்பட்டான்.

இன்னொரு நாள். சமையல் வேலையெல்லாம் முடிந்தது. சூரியோதய நேரத்திற்குச் சரியாக வீட்டு ஆண்கள் எல்லாம் சாப்பிட்டு முடித்தார்கள். அந்த மரத்தின் அருகில் பூசைக்காக அப்பாஜி வருவதற்கு முன்பேயே துளசி பூஜையை முடித்துக் கொண்டு வந்து சாப்பிட்டுக் கொள்ளலாம் என பிருந்தா வனத்துக்குப் புறப்பட்டு விட்டாள் சீத்தம்மா. இதைப் புரிந்து கொண்ட அப்பாஜி தானும் வெகுசீக்கிரமாய் எழுந்து மர்த்துக்குப் பூக்களால் அர்ச்சனை செய்து துளசிமாடத்தில் எரியும் விளக்கில் இருந்து கற்பூரத்தை எரிய வைத்து தீபாரதனை செய்யலாம் என்ற எண்ணத்துடன் அங்கு வந்து சேர்ந்தான். சுற்றிலும் ஆள் உயரத்துக்கு கள்ளிச்செடி வேலி. அந்த இடம் கோயில் முற்றத்தில் ஏறி உட்கார்ந்திருக்கும் ஆள்களுக்கு மாத்திரம் சிறிது தெரியும். அங்கே யாரும் இல்லை என்று ஆரம்பத்திலேயே உறுதி செய்து கொண்டான். ஜன நடமாட்டம் தொடங்கும் அளவுக்கு இன்னும் பொழுது விடியவில்லை. அது மட்டுமன்றி, அன்றைய தினம் நிறைய பனி வேறு. ஒரே புகை மண்டலம்.

அது காமம் சுடும் அவன் கண்ணின் புகையோ, நீசன் எரிந்து சாம்பலாவதற்கு முன் எழுந்தலையும் புகையோ, மன இருளின் புகையோ, மகாபதி விரதையின் கற்பு என்னும் நெருப்பில் இருந்து கிளம்பும் புகையோ, கடவுளுக்கு செய்த பூஜை சேவை யெல்லாம் பற்றி எரிய நல்ல மனசுக்காரர்களின் பெரு மூச்சிலிருந்து கிளம்பிய புகையோ எது என்று சொல்வது அசாத்தியமாய் இருந்தது. அடுத்து நடந்த சம்பவத்தை எப்படிச் சொல்வது? சொல்லக் கூட வாய் நடுங்குகிறது. கையால் எழுதவும் முடியவில்லை. எழுதுகோல் நழுவிக் கீழே விழுந்துவிடும் போல நடுங்குகிறது. அந்தக் காலத்தில் தீபாரதனைக்குச் செல்லும் முன்பு கற்பூரத்தைப் பற்ற வைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்ற பழக்கம் இருந்தது. இதனால் துளசிமாடத்திலிருந்த சுடரில் கற்பூரத்தைப் பற்ற வைத்துக் கொள்ள வந்த அந்த அப்பாஜி நவீன காலத்து ராவணனோ, கலியுக எமனோ என்னும்படி தோற்றம் அளித்தான். துளசியை வணங்கிய சீத்தம்மா மெதுவாக குனிந்த தலை நிமிர்ந்து மெல்ல மேலெழும் சமயத்தில் அவள் புடவை முந்தானையைப் பிடித்து இழுத்தான்; அவளைப் பார்த்து, "என் கண்ணுக்கு நீயே மகாலட்சுமி. உன் கருணை கிடைக்க வேண்டும் என்று வெகு நாட்களாக படாதபாடுபட்டேன். உன் அழகுக்கு இருக்க வேண்டிய இடமா அது? உன் அழகைப் பார்த்து ராஜவம்சத்துப் பெண்கள் கூட வெட்கப் பட வேண்டும். அப்படிப்பட்ட உயரத்தில் உன்னை நான் வைக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே அந்த பத்தினிப் பெண்ணைத் தழுவிக் கொள்ளும் பொருட்டு கைகளை நீட்டினான். இறுக் கமான ஒட்டியாணத்தால் புடவை அவிழவில்லை. ஆத்திரத்தோடும் வேகத்தோடும் அவனைத் தள்ளிய சீத்தம்மா, "அடேய் நீசனே, சண்டாளனே, கீழ்ப்புத்திக்காரனே, என்னைத் தொட முனைந்தாயே. உன்னை இங்கேயே கொன்று உன் பிணத்தை நாய்க்குத் தின்னக் கொடுத்து விட்டுப் போகும் சக்தி எனக்கு இருக்கிறது. ஜாக்கிரதை, தூர விலகிவிடு. இன்றைக்கு என்னமோ உன் தலையெழுத்து சரியாக இல்லை என்று நினைக்கிறேன். உன்னைக் கொல்ல வந்த எமன் நான்தான் என்று தெரிந்து கொள்" என்று உறுதியான குரலில் அவனைப் பார்த்துச் சொன்னாள். தண்ணீர்ச் செம்பை அவன்மேல் வீசினாள். தட்டைக் கீழே வைத்து விட்டு பக்கத்தில் விழுந்திருந்த ஒரு பாறையைத் தூக்கி அவன் நெஞ்சை நோக்கி வீசினாள். சரியாக அவன் இதயத்தைத் தாக்கி விழுந்தது கல். அங்கேயே தடுமாறிக் கீழே விழுந்தான் அவன். எழுந்திருக்க முடியாமல், "ஆ, ஐயோ, செத்தேன்" என்று அலறினான். இருக்கட்டும் என்னையே அடிக் கிறாயா? என்றைக் கிருந்தாலும் உன்னை என்னுடையவளாக ஆக்கிக் கொள் வேன். நீ பிணமானாலும் சரி உன்னை விடமாட்டேன். இப்போது உன்னைப் பிடித்து நிறுத்துவது ஒன்றும் கஷ்டமான காரியம் இல்லை. ஆனால் போகப் போக என் சாமர்த்தியம் என்ன என்று நீயே தெரிந்து கொள்வாய். உன்னை அடைந்து என் திட்டத்தில் வெற்றி காணாமல் விடமாட்டேன்." என்று ஏதேதோ புலம்பினான். அதற்குள் தட்டு, செம்பு ஆகியவற்றையெல்லாம்

எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் சீத்தம்மா. தட்டுத் தடுமாறி மீண்டும் அப்பாஜி எழுந்திருப்பதற்குள் பக்கத்து வீட்டு சுப்பக்கா காலைச் சாப்பாட்டை முடித்து விட்டு எச்சில் இலையை வீசுவதற்காக பின்கட்டுக்கதவைத் திறந்தாள். கிர்ரெனச் சத்தமிட்டது கதவு. சத்தத்தைக் கேட்டதும் அரக்கப்பரக்க எழுந்த அப்பாஜி வேகமாய் தலைதெறிக்க ஓடினான். சுப்பக்காவின் கண்களில் அவன் விழவில்லை. சீத்தம்மாவின் ஆவேசமும், ஆத்திரமும் அடங்கவில்லை. பத்து ஆட்களுக்கு இருக்க வேண்டிய சக்தி அவள் ஒருத்திக்கே வந்த மாதிரி இருந்தது. தலைக் கூந்தல் அவிழ்ந்து தொங்கியது. முகமும், கண்ணும் நெருப்புத் துண்டுகளாய்ச் சிவந்தன. எப்போதும் மெல்ல நடக்கிற அவள் பூமி அதிர் கிறமாதிரி தொம் தொம் என நடந்து வீட்டுக்குத் திரும்பினாள். அப்போது அவளைப் பார்த்த சுப்பக்கா அதிர்ச்சியடைந்தாள். மெல்ல பேச்சுக் கொடுக் கும் பொருட்டு "படைச்சி சாப்பாடாயிற்றா?" என்று கேட்டாள். ஆனால் சீத்தம்மாவிடமிருந்து எந்த பதிலும் இல்லை. கைகால்கள் நடுங்க, உதடு, வாய் எல்லாம் அதிர வந்த சீத்தம்மாவின் வாயிலிருந்து ஒரு சொல்லும் வெளியே வரவில்லை. வீட்டுக்குச் சென்ற சீத்தம்மா நேராக சமையல் அறைக்குச் சென்று உட்கார்ந்து கொண்டாள். சாப்பிடேன்டி, ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கிறது. ஏன் தலையைக் கலைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறாய் என்று கிழவிகள் கேட்டதற்குக் கூட எந்தப் பதிலும் சொல்லாமல் பேசா மடந் தையாய் இருந்தாள். வேறு எந்த வேலையையும் செய்ய அவளுக்கு மனம் வர வில்லை. நடந்த கொடுமையை யாரிடம் சொல்வது? பாட்டியிடம் சொல்லலாம் என்றால் அவள் மூலம் என்ன உபயோகம் ஆகப் போகிறது. எரிந்து எரிந்து விழும் அத்தைக்காரியிடம் சொல்லலாம் என்றால் கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொரிந்த கதையாய்த் தான் அது முடியும்? மாமனாரிடம் சொல்லக் கூடுமெனினும் அது மரியாதையை மீறினதாய் அவர்கள் நினைத்து விட்டால் என்ன செய்வது? புருஷனிடம் சொன்னால், புதுசாக பிரச்சனைகள் கிளம்ப அது காரணமாகி விடுமோ? யாரிடம் தான் இந்தச் சங்கதியைச் சொல்லிப் பகிர்ந்து கொள்ள முடியும்? என்ன சொல்ல முடியும்? நீசனான ஒரு ஆடவன் தன் புடவையைக் கையால் பற்றி இழுத்தான் என்று சொன்னால் அது தன் கற்புக்கு கேவலம் இல்லையா? இன்னும் நான் இந்த உயிரை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமா? இதைவிட தற்கொலை செய்து கொண்டு நான் உயிரை மாய்த்துக் கொள்ளலாமே. கெட்ட புத்திக்காரனாகிய துச்சாதனன் திரௌபதியின் புடவையைப் பற்றி இழுத்துவிட்டுப் பட்டபாடு தெரியாதா. அவள் கற்புக்கு எந்தக் குறையும் நேரவில்லையே. தற்கொலை செய்து கொள்ள லாம் என்று முடிவெடுத்தால் கூட எனக்குப் பிறகு இந்த அழகிய சிறு குழந்தையை விட்டுப் போக மனம் எப்படி வரும்? ஒரு வேளை உயிரை மாய்த்துக் கொண்டாள் எனில் என்னமோ கெட்ட விஷயம் நடந் திருக்கிறது. அது, அம்பலமாகிவிட்டது, அந்த அவமானம் தாங்காமல்தான் உயிரை விட்டாள் என்று ஊர் ஜனங்கள் பேசிக்கொள்ளுமே. அதற்கு நானே வழி

வகுக்கலாமா? ஐயோ, இவ்வளவு தூரம் முன்யோசனை செய்வது பாவம் இல்லையா. சீதையை ராவணன் இழுத்து ரதத்தில் உட்கார வைத்துக் கடத்திக் கொண்டு போனானே. அதனால் அப்போது சீதையின் கற்புக்கு என்ன பங்கம் விளைந்தது? துளசி மாடத்துக்குப் பக்கத்தில் அவன் செய்த காரியத்தை இன்னும் யார் யார் பார்த்திருந்தார்களோ? அதைப் பார்த்தவர்கள் முன் மீண்டும் என் முகத்தைக் காட்டுவது எப்படி?" இப்படியெல்லாம் மாறி மாறி யோசித்துக் கொண் டிருந்தாள் சீத்தம்மா. சாப்பிட்ட இலைகளை எல்லாம் எடுத்தெறிந்துவிட்டு சாணநீர் தெளித்து மெழுகித் துடைத்து முடிப்பதற்குள் அவள் உடம்பில் வெட்டுப்பட்டது போல ஒரு வேதனை பரவியது. திடுமென கோபமோ, பீதியோ, ஆனந்தமோ உண்டாகும் போது உடம்பில் பலவிதமான மெய்ப்பாடுகள் தோன்றுவது சகஜம்தான். எது எப்படியோ ஆகட்டும், சீத்தம்மாவுக்கு அன்று உண்டான கோபம் நாள் முழுதும் இறங்கவே இல்லை. அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் கூட அப்படியே இருந்தது கோபம். ஏன் சீத்தம்மா ஒரு மாதிரி இருக்கிறாள் என்று வீட்டில் இருக்கிறவர்கள் எல்லாரும் பேசிக் கொண்டார்கள். என்ன ஆனாலும் துளசி பூஜையை மாத்திரம் கைவிட்டு விடவில்லை அவள். மீண்டும் அந்த பாதகன் வந்து தொல்லை கொடுப்பானோ, அவமானப்படுத்துவானோ, உயிரைப் பறித்து விடு வானோ என்கிற பயம் இருக்கத்தான் செய்தது. ஆனால் பிருந்தாவனப் பூஜைக்குப் புறப்படும் போது பார்வதம்மாளையும் கூடவே அழைத்துச் சென்றாள் சீத்தம்மா. அந்த இடத்துக்குப் போனதுமே முன்பு நடந்த அந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்து மீண்டும் கோபத்தீ அவளுக்குள் மூண்டது. இப்படியே இரண்டு நாட்கள் கழிந்தன. அமாவாசையன்று நடக்கும் பூசையும் நடந்தது. அதற்கப்புறம் நடந்த விபரீதத்தைப் பற்றி என்னவென்று சொல்வது?

12

அமாவாசை தினம் பகல் வேளை. கௌரிபூஜையும் துளசி பூஜையும் முடிந்தன. சமையல் வேலைகளை எல்லாம் முடித்தாள் சீத்தம்மா. ஆண்கள் எல்லாம் முதலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். தண்ணீர் கொண்டு வருவதற்காக பின்கட்டுக்குச் சென்றாள் சீத்தம்மா. அங்கே வெங்கம்மா குளித்துக் கொண்டிருந்தாள். அவள், "சீத்தம்மா, மூன்று நாட்களாகவே ஏன் உன் முகம் சரியில்லை? ஒரு மாதிரியாகவே இருக்கிறாயே ஏன்? யாரிடமும் சரியாகப் பேசுவது கூட இல்லை. ஆரோக்கியமாக இருக்கிறாயா என்ன செய்கிறது, சொல்" என்றாள். எவ்வளவு பொலிவோடு இருந்த முகம். என்ன ஆனதம்மா இப்போது?" என்று அக்கறையோடு கேட்டாள். அப்பொழுதும் எந்த பதிலும் சொல்லவில்லை அவள். குடத்தில் நீர் நிறைத்துக் கொண்டு பின்கட்டுக் கதவைத்தாண்டி உள்ளே வரும்போது 'ஓ' என்ற அலறலோடு கீழே விழுந்தாள் சீத்தம்மா. குடமும் கீழே விழுந்தது. அப்போது நடுப்பகல் வேளை. சத்தம் கேட்டு உள்ளே சாப்பிட்டுக்கொண்டிருந்த ஆண்கள் எல்லாரும எழுந்து வந்து பார்த்தார்கள். சீத்தம்மா கீழே விழுந்து கிடந்தாள். புருஷனும் மற்றவர்களும் வந்த போதும் எழவில்லை. இவர்களின் முன்பு மரியாதையை மீறி என் றென்றும் அவள் நடந்து கொண்டதில்லை. அதனால் தீட்சிதன்," ஐயோ, சீத்தம்மா விழுந்து விட்டாளே. யாராவது ஓடி வாருங்கள்" என்று கூவினான். வீட்டில் இருந்த பெண்கள் எல்லாரும் ஓடி வந்தார்கள். தன் வழக்கமான பாணியிலேயே திம்மம்மா, "என்ன ரோகம் வந்துவிட்டது இவள் விழுவதற்கு? நல்ல மரம் மாதிரிதானே இருக்கிறாள். போதும்டி. எழுந்திரு. போதும் உன் வேஷம். வீட்டிலே இருக்கிற ஆண்கள் எல்லாம் வந்து பணிவிடை செய் யட்டுமே என்றுதானே விழுந்து கிடக்கிறாய். எனக்குத் தெரியாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறாயா? சும்மா தானே விழுந்திருக்கிறாய் எல்லா வற்றையும் பார்த்தபடி எழுந்திரடி" என்று வாய்க்கு வந்தபடி திட்ட ஆரம் பித்தாள். அவளைப் பிடித்து மேலே தூக்குவதற்குச் சென்றாள், வெங்கம்மா. "ஐயோ, எனனால் தூக்க முடியவில்லையே. யாராவது ஆண் பிள்ளை வந்து தூக்கிக் கிடத்துங்களேன்" என்றாள் வெங்கம்மா. கடைசியில் மகாதேவனே வந்து தூக்கி நிறுத்தினான். நிற்க வைக்கமுடியவில்லை. உட்கார வைப்ப

தற்கும் முடியவில்லை. சிறிதும் பிரக்ஞையே இல்லை, படுக்கையை விரித்து அதன்மேல் படுக்க வைத்தனர். திருஷ்டி சுற்றிப் போட்டார்கள். தலையில் தண்ணீரால் மெல்ல ஈரம் பரவச் செய்தார்கள். காதுக்குள் ஊதினார்கள். மருந்துச் சாற்றை அவள் வாயில் ஊற்றினார்கள். சதாசிவ தீட்சிதனும் பார்வ தம்மாவும் தமக்குத் தெரிந்த சிகிச்சை முறைகளையெல்லாம் செய்தார்கள். அக்கம் பக்கத்தவர்கள் எல்லாரும் சேர்ந்து தமக்குத் தெரிந்த வைத்திய முறைகளை யெல்லாம் செய்தார்கள். மந்திரம் ஓதினார்கள். சிவகவசப் பாடல்கள் படித்து நெற்றியில் திருநீறு பூசினார்கள். விஷ்ணு துதிப் பாடல் களைப் படித்தார்கள். லலிதா சகஸ்ர நாமம் படித்து குங்குமம் இட்டார்கள். ஏதேதோ செய்தும் கூட சுயபிரக்ஞை திரும்பவில்லை. வாயில் பாலை ஊற்றி னார்கள். ஆனால் பால் உள்ளே இறங்கவில்லை. கடை வாய் வழியாக வழிந்தது. உதடுகளைத் தள்ளிப் பிரித்த போது அவள் பற்களைக் கடித்தபடி இறுக்கமாய் மூடிக் கொண்டிருப்பது தெரிந்தது. திம்மம்மா, "அவளுக்கென்ன இத்தனை பணி விடைகள் வேண்டிக் கிடக்கிறது?" எல்லாரும் தனக்குச் சேவை செய்யட்டும் என்றுதானே விழுந்து கிடக்கிறாள். இரும்பை நன்றாகப் பழுக்கக் காய்ச்சி நாலு சூடு இழுத்தால் எல்லாம் தானே சரியாகும்", என்றாள். மூச்சுத் தடுமாறி இருக்கக் கூடும் என்று யோசித்து உள்ளங்காலில் கயிற்றை நன்றாகச் சுட்டு அந்த வெப்பத்தைப் பதித்தனர். என்ன செய்தும் அவள் ம் என்று கூட முனகவில்லை. அப்போதுகூட அத்தைக்காரி "அவளை என்ன என்று நினைக்கிறீர்கள். அக்னிஸ்தம்பம், ஜலஸ்தம்பம் வித்தையை யெல்லாம் அறிந் தவள். அவளுக்கு இந்த வைத்தியங்கள் எல்லாம் எம்மாத்திரம்" என்றாள். தாயைப் பார்க்காமலும் தாயோடு பேசாமலும் குழந்தை கிருஷ்ணசாமிக்குப் பைத்தியம் பிடித்தமாதிரி இருந்தது. தாய்ப்பால் குடித்து நெடுநேரம் ஆகி விட்டிருந்தது. அந்தக் குழந்தைக்கு அம்மா, வா, பால் ஆகிய மூன்று வார்த் தைகளே பேச வந்தன. தாயை நெருங்கிய குழந்தை தன் இச்சையாக அவள் மார்பை நெருங்கி அழ ஆரம்பித்தது. எவ்வளவு விளையாட்டுக் காட்டினாலும் தன் அழுகையை நிறுத்தவில்லை குழந்தை. அம்மாக்காரியையே நெருங்கி நெருங்கிச் சென்றது. அவள் மேலே விழுவதும், முகத்தைத் தன்னை நோக்கித் திருப்புவதும் புடவையை இழுப்பதுவுமாக இருந்தான். ஆனால் யார் எது செய்தாலும் இந்த உலகத்தைப் பற்றிய பிரக்ஞையே அவளுக்கு இல்லை. வீட்டில் யாருக்கும் அன்றைய தினம் இரவு தூக்கம் வரவில்லை. அடுத்தவீட்டு சுப்பக்கா இதைப் பார்த்து, "ஏகாதசி வரைக்கும் ஆரோக்கியமாகவே இருந்தாள். த்வாதசி அன்று பிருந்தாவனத்தில் பூஜையை முடித்துக் கொண்டு திரும்பினாள். நான் பின் வாசலில் நின்றிருந்தேன். முகமெல்லாம் ஒரு மாதிரி இருந்தது. பேச்சுக் கொடுத்தேன். வாய், உதடு எல்லாம் நடுங்க ஏதோ சொல்கிற மாதிரி இருந்தது. ஆனால் என்ன என்று எனக்குப் புரியவில்லை. சரி ஏதோ ஆகி இருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன். எனக்குத் தெரிந்து, எப்பொழுதும் இவள் இப்படி படுத்தவள் இல்லை. யார் பார்த்து கண்

வைத்தார்களே, தெரியவில்லை" என்று புலம்பினாள். ஊரில் எல்லாரும் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். இரண்டு நாள்கள் கழிந்தன. மூன்று நாட்களும் ஆயின. இப்படியே பதினைந்து நாட்கள் ஆயின. ஒரு மாசம் கூட ஆனது. ஆனால் அவளுக்கு பிரக்ஞை திரும்பவே இல்லை. அரைக்கண் மாத்திரம் திறப்பதும் விழிப்பதுமாக மட்டும் இருந்தாள். இதற்கு நடுவில் அந்தக் குழந்தை படும்பாட்டைப் பார்த்தவர்களுக்கு கண்களில் நீர் நிறைந்து விடும். திம்மம் மாவுக்கு மருமகளின் மேல் அன்பில்லை எனினும்கூட குழந்தையின் மேல் இருந்த அன்பின் காரணமாக விசனத்தோடு யாராரோ சொன்ன சிகிச்சை களையெல்லாம் அவ்வப்பொழுது செய்து பார்க்க ஆரம்பித்தாள். ஆனாலும் என்ன பயன்? இவள் வேலை யெல்லாம் கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொரிந்ததைப் போல ஆனது. அப்பொழுது திம்மம்மா, "ஆயிரம் மருத்துவம் செய்தும் என்ன பிரயோஜனம்? அம்மன் கோயிலுக்குச் சென்று அப்பாஜியிடம் குறி கேட்டால் எல்லாம் புரியும்" என்று சொன்னாள். வெற் றிலை, பாக்கு, கற்பூரம், சாம்பிராணி, தேங்காய், வாழைப் பழம் இரண்டு தட்சிணைக்குப் பணம் எல்லாவற்றையும் ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு அப்பாஜியின் முன்னால் அத்தட்டை வைத்தாள். அப்பாஜி எங்கள் சீத்தம்மா பிரக்ஞை தப்பி விழுந்திருக்கிறாள். பேய் பிடித்ததா, பிசாசு பிடித்ததா தெரியவில்லை. போன ஜன்மத்துப் பாவமோ என்னமோ அதுவும் புரிய வில்லை. எல்லாம் கடவுளுக்குத் தான் வெளிச்சம். இது குணமாகுமா, ஆகாதா? நீதான் பார்த்துக் குறி சொல்ல வேண்டும்" என்றாள். சஞ்சீவி பர்வ தத்துக்கு வழி எது என்று எமனிடமே போய் ஆஞ்சநேயன் கேட்ட கதையாகி விட்டது அந்த களவன் நினைத்தபடியே ஆனது. அவன் தரையில் படிய உட்கார்ந்து கொண்டு வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியைப் பிடித்து மீண்டும் மீண்டும் நிலத்தின்மேல் அடித்தான். இடக்கையில் இரும்புக் காப்பை உருட்டியபடி முதலில் கடவுள்களையும், தேவதைகளையும் ஆவிகளையும் கூப்பிட்டு ராகமுடன் இழுத்து குறி சொல்ல ஆரம்பித்தான். "உயிர் பிழைக்குமா, பிழைக்காதா என்ற கவலையில் குறி கேட்க வந்திருக்கிறீர்கள். இது ஒன்றும் வியாதி இல்லை. கடவள் உருவாக்கியதும் இல்லை. மனிதன் உருவாக்கியதும் இல்லை. யார் கண்படவும் இல்லை. காற்று கருப்பும் இல்லை. மனிதர்கள் மனத்தின் அடி ஆழம் பார்க்கத் தானே ஆசைப்பட்டுச் செய்து கொண்டமாதிரி இருக்கிறது. இது கபட வேஷம் என்று தெரிந்து கொள் ளுங்கள்" என்று சொல்லி முடித்தான். அவன் வார்த்தையை உண்மை என்று நம்பிய திம்மம்மா வீட்டுக்குத் திரும்பி மருமகளை மீண்டும் பழித்துப் பேசவும் திட்டவும் ஆரம் பித்தாள். அப்போது பக்கத்துவீட்டு சுப்பக்கா வந்தாள்.

சுப்பக்கா: "எதற்காக அப்படியெல்லாம் பழிக்கிறாய்? பாவம். வாயில் உட்காருகிற ஈயைக்கூட உணர முடியாத நிலையில் படுத்துக்கிடக்கிறாள். ஒரு நாள் இரண்டுநாள் என்றால் சரி, இப்படி மாதக்கணக்கில் ஒருத்தி அன்ன ஆகாரமின்றி படுத்திருக்கிறாளென்றால் அது எப்படி பொய்யாகும்? அவள்

உண்மை நிலையை அறியாமல் மனசுக்கு வந்தபடி அந்த பாழாய்ப் போன அப்பாஜியின் பேச்சைக் கேட்டுக் கொண்டு வீணாகப் பேசுகிறாயே அவன் நடத்தைக்கும், பேச்சுக்கும் நெருப்புத்தான் வைக்க வேண்டும்"

திம்மம்மா: "அப்படியென்றால் அப்பாஜி நம்மிடம் பொய் சொல்லி ஏமாற்றுகிறான் என்கிறாயா?"

சுப்பக்கா: "அவன் வார்த்தையை நீ நம்பாதே. மைசூருக்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கே மந்திரமோ மருத்துவமோ செய்வது நல்லது புற்றுக்குள்ளே பாம்பை வைத்துக் கொண்டு, புற்றையடித்தால் பாம்பு செத்துப் போகுமா?

இப்படி மைசூருக்கு அழைத்துக் கொண்டு போவது என்று முடிவானது. வண்டி வந்து தயாரானது. வண்டியின் மேல் படுக்க வைப்பதற்காக சீத்தம் மாவைத் தூக்கினார்கள். வீல் என்று அலறிக்கொண்டு எழுந்த அவளை அத்தனை பேர் பிடித்தாலும், அவர்கள் பிடிகளில் இருந்து விலக்கிக் கொண்டு தான் முதலில் படுத்திருந்த இடத்திலேயே மீண்டும் விழுந்து விட்டாள். ஏதோ கிரகக் கோளாறு இருக்குமென்று எண்ணி மூன்றுமுறை பூஜை செய்து சுற்றிப் போட்டனர். என்னென்னமோ செய்தார்கள். எதுவும் பயன் கொடுக்க வில்லை. இதையெல்லாம் பார்த்து மகாதேவனுக்கு மிகவும் கவலையானது. அடுத்தவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும் வெட்கம். எதுவும் செய்யாமல் சும்மா இருக்கவும் மனம் அமைதியாகவில்லை. இப்படியே பகலில் உண்பதும் இல்லை. இரவில் தூங்கவும் முடிவதில்லை. மனைவியைப் பற்றிய கவலையே புழுப் போல அவனை அரித்தது. துயரத்தில் குறுகிப் போனான். எல்லா வற்றிற்கும் மேல் குழந்தையைப் பற்றிய கவலை எல்லாருக்கும் அதிகரித்தது. இதைப் பற்றி மைசூரில் பேசி முடிவெடுத்துக் கொள்ளலாம் என்று சதாசிவ தீட்சிதன் கிளம்பிச் சென்றான். மகளின் நிலைமையைக் கேட்டு மிகவும் மனம் வருந்திய அவளது தாய் தந்தையரும் தாத்தாவாகிய பசுபதி சாஸ்திரியும் உடனே புறப்பட்டு சதாசிவ தீட்சிதனுடனேயே திரும்பினார்கள்.

13

அப்பாஜியும், ஆசிரியர் நாரப்பய்யாவும் வெகு சுலபமாய் நிறைவேறக்கூடும் என்று நினைத்த காரியம் நடக்கவில்லை. பரிசு, பிரசாதம், குறி என்று திம்மம்மாவுக்கு ஆசை காட்டி நடத்திக் கொள்ள நினைத்த திட்டமும் பலிக்க வில்லை. இதனால் இதுவரை யோசித்து நிகழ்த்திய திட்டங்கள் போதா வென்று இன்னும் புதிய திட்டமொன்று தீட்ட வேண்டுமென இருவரும் கூடி ஆலோசித்தனர். தன் திட்டத்தை நிறைவேற்ற முட்டாளான கிட்டு ஜோசி யனைப பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டனர். அப்பாஜி, நாரப்பய்யா உள்ளிட்ட அந்த கும்பலைச் சேர்ந்தவர்கள் ஏதோ கருமமே கண்ணாயினார் போல தம் திட்டங்களுக்காக கிட்டு ஜோசியனுக்கு வலைவீச ஆரம்பித்தனர்.

உள்விஷயம், செயல்களின் உள்மர்மம் எதையுமே அறியாத கிட்டு ஜோசியன் முதலிலிருந்தே அம்மன் கோயில் வாசலில் ஒரு நாளின் பல மணி நேரங்களைக் கழிக்க ஆரம்பித்திருந்தான் அங்கே உட்கார்ந்திருக்கிற ஏனைய ஆட்களுக்குச் சிறுசிறு பணிவிடைகள் செய்வதும், அதன் மூலம் கிடைக்கிற சிறு தொகையை இடுப்பில் செருகிக் கொள்வதுமாய் இருந்தான். எல்லாருக்கும் சிரிப்பு மூட்டுவதும் தானும் அவர்களோடு சேர்ந்து சிரிப்பதும் அவனது பொழுது போக்காய் இருந்தது. ஒரு நாள் கோயில் முற்றத்தில் மூன்றாம் ஜாமத்திற்குப் பிறகு எல்லாரும் சேர்ந்தனர். கிட்டு ஜோசியனிடம் பேச்சுக் கொடுப்பது அவனோடு சில அசிங்கமான நகைச்சுவைத்துணுக்குகளைப் பரிமாறிக் கொள்வது, அதைச் சாக்கிட்டுக் கொண்டு விழுந்து விழுந்து சிரிப்பது என்று பொழுது போக்கினர்.

நாரப்பய்யா: "கிட்டு, பஞ்சாங்கம் எடுத்து வந்திருக்கிறாயா? இன்றைய விசேஷச் செய்திகள் என்ன, கொஞ்சம் சொல்லேன்".

கிட்டு: "ஓ. தாராளமாய்ச் சொல்கிறேன். எனக்கு என்ன பஞ்சாங்கம் பார்த்துச் சொல்லத் தெரியாது, என்று நினைத்திருக்கிறாயா? படிக்கிறேன். கேளுங்கள். ப்ரமாத வருஷம். மார்கழி மாதம். பஞ்சமி. சனிக்கிழமை. பத்து நாழிகை கழிந்து இருபதாம் நாழிகை தொடக்கம், சித்ரா நட்சத்திரம். நாலில் இருந்து ஐந்திற்கு, அதிகண்ட நாம யோகம் 1-2, இரவெல்லாம் இருட்டா யிருக்கும். சிலருக்கு அனுகூலம். சிலருக்கு நஷ்டம்.

நாரப்பய்யா: "இன்றைய பலன் என்ன?"

கிட்டு: "ஓ... சொல்கிறேனே. ப்ரமாத வருஷம் என்ற பெயரைக் கொண்டிருப்பதால் இந்த வருஷத்தில் அசம்பாவிதங்களும் நடக்கக் கூடும். மார்கழி மாசம் பஞ்சமி என்று போட்டிருக்கிறது. மார்கழி என்றால் வழியில் போகிறவர்கள் தலை என்று அர்த்தம். மாசம் என்றால் விசேஷமாக என்று அர்த்தம். பஞ்சமி என்றால் பஞ்சத்வம் அல்லது மரணபயத்தை வெல்வது என்று அர்த்தம். அது எப்படி என்றால் வழியிலே போகிறவர்களின் தலையை திருடர்கள் உடைப்பார்கள் என்று அர்த்தம் இது மட்டும் அல்லாமல் பஞ்சமி சனிக்கிழமை என்றால் சனீஸ்வரனின் தொந்தரவுகள் அதிகமாகும் என்று அர்த்தம். சித்ரா நட்சத்திரம் என்றால் மனசுக்கு என்னென்ன தோன்றுகிறதோ அதன்படியே அவர்கள் நடக்கலாம் என்பதே அதன் அர்த்தம். அதிகண்ட யோகம் என்றால் எல்லா விதமான ஆபத்துகளும் மிக அதிகமான அளவில் நடக்கும் என்று அர்த்தம். சகுனிகரணம் என்றால் இன்றைய தினம் பிறக்கிற குழந்தைகள் எல்லாம் தந்திரசாலிகளாக இருப்பார்கள் என்று அர்த்தம். என்னப்பா, நான் சொன்ன தெல்லாம் புரிந்ததா?

அப்பாஜி: பஞ்சாங்கப் பலனைச் சொல் கிட்டு.

கிட்டு: எனக்கென்ன எதுவும் தெரியாது என்று நினைத்துக் கொண்டாயா? என்ன அப்படி சொல்லி விட்டாயே, சொல்கிறேன் கேள். 'தித்தேச ஸ்ரீ மான்போதி' அதாவது பஞ்சாங்கம் கேட்டு தந்தைதாய்க்கு எல்லாரும் திதி செய்கிறார்கள். அதன் மூலம் எல்லாருக்கும் சாப்பாடு கிடைத்து தான தட்சிணைகளும் கிடைக்கும். இதன் மூலம் ஸ்ரீ என்கிற செல்வமும் சேரும் என்று அர்த்தம்.

'வாராதாயுஷ்ய வர்தனம்' என்றால் இன்றைக்கு இன்ன கிழமை என்ற ஞானம் அவசியம், அது தெரிந்தால் இன்ன கிழமையில் இன்னவர் வீட்டில் சோறு கிடைக்கும் என்பது தெரியும். இப்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் சோறு சாப்பிட்டு வந்தால் ஆயுள் கூடும் என்று அர்த்தம். "நட்சத்ரார்த்தே பாபம்" என்றால் நட்சத்திரம் தெரிந்து கொள்வதன் மூலம் மக்கள் பாவமூட்டையைச் சுமக்க நேர்கிறது. "யோகாதரோக நிவாரணம்" என்றால் நம் யோகம் என்ன என்று தெரிந்து கொண்டு வேலை செய்யும் போது எல்லா விதமான ரோகங்களும் விலகி சுகம் உண்டாகும் என்று அர்த்தம். "கரணாது கார்யசித்திஞ்ச" என்றால் வீட்டில் பலவிதமான உபகரணங்களைப் பயன்படுத்தி வேலை செய்கிறார்கள் என்று அர்த்தம். புரிகிறதா எல்லா அர்த்தமும். எனக்குச் சொல்லவராது என்று என்னை எல்லாரும் சோதிக்கிறீர்களா?"

நாரப்பய்யா: "அது சரி, வீட்டில் நீ எங்கே படுத்துக் கொள்வாய்?'

கிட்டு: "நான் எப்போதும் முற்றத்தின் நடுவில்தான் படுத்துக்குவேன். அந்த இடத்தை யார் வந்து கேட்டாலும் தர மாட்டேன். எழுந்திருக்கவும் மாட்டேன். அப்பா என்றாலும் நடக்காது. அம்மா என்றாலும் நடக்காது. விடிந்த

பிறகுதான் எழுந்திருப்பேன். நடுவில் யானை, குதிரை எல்லாம் வந்து ஆட்டம் போட்டாலும் எழுந்திருக்க மாட்டேன். அது கிடக்கட்டும். ஒரு சிட்டிகை பொடி இருந்தால் கொடு."

சபாபத்தையா: "கிட்டு, வெங்கடையா சத்திரத்து அப்பள ஐயங்கார் வந்திருக்காரே, பார்த்தாயா?"

கிட்டு : "என்ன அப்பள ஐயங்கார், பொறியல் ஐயங்கார், எப்பொழுது வந்தாய்?"

அப்பள ஐயங்கார் : "நேற்று ராத்திரி வந்தேன் கிட்டு"

கிட்டு: "எங்கே வாசம் ? ராத்திரி சாப்பாடு ஆச்சா? நாமப் பெட்டி எடுத்து வந்தாயா? இல்லை, கையையே தலைக்கு அண்டக்கொடுத்து படுத்துக் கொண்டாயா?"

சபாபத்தையா: "என்ன இப்படி கேட்கிறாய்? சமையல் செய்து சாப்பிட்டாலும் வயிறு நிறையும். நாமப்பெட்டி மூலம் என்ன நிறையப் போகிறது?"

கிட்டு· நன்றாக நிறையும் தெரியுமா. அய்யங்காரிடம் இருப்பதில் நாமப்பெட்டியே மூலதனம்".

அப்பாஜி: "நாமப் பெட்டியில் நாமக்கட்டி இருக்கும். வயிறு நிரம்புவது எப்படி?"

கிட்டு: "அந்த ரகசியம் உனக்கு எப்படித் தெரியும்? அந்தப் பெட்டியில் செம்பு, கம்பளி, சாப்பாட்டு மூட்டை, செருப்பு, பூசைக்கு என்று சின்ன ஒரு விக்ரகம் ஆகிய ஐந்து சாமான் களும் அந்த பெட்டிக்குள் இருக்கும். அந்த ஒரு பெட்டியை மாத்திரம் தோளில் போட்டுக் கொண்டு போனால் போதும், இந்த உலகத்தையே ஒரு சுற்று சுற்றி வந்து விடலாம். இந்த ஐந்து சாமான்களும் அவர்களிடமே எப்போதும் இருக்க வேண்டும். அதனால்தான் இவர் போன்றவர்களுக்கு ஐயங்கார் என்று காரணப்பெயர் உண்டானது".

அப்பள ஐயங்கார்: "சீ சீ சீ எப்பொழுது பார்த்தாலும் சோற்று புத்தி தானா? செருப்பு, விக்ரகத்தையெல்லாம் பெட்டியிலே வைத்துப் பூட்டு வார்களா யாராவது? பைத்தியக்காரன் மாதிரி பேசாதே.

கிட்டு: "அப்படியென்றால் அந்த பெட்டியிலே எதை வைத்து அப்படி பத்திரப்படுத்துகிறீர்கள், உங்கள் ஆட்கள் மைசூரிலிருந்து கெஞ்சுள ஹட்டி, கணவாய் வழியாக சீரங்கம் போக வேண்டுமென்றால் பத்து நாள் நடந்தால் தான் முடியும். வழியிலே எங்கே நீங்கள் சமைத்துக் கொள்வீர்கள், சொல்லுங்கள் பார்ப்போம். தண்ணீர் கிடைக்கிற இடத்தில் முகம், கை, கால் கழுவுவது, நாமம் போட்டுக் கொள்வது, குடுமியைப் பிரித்து சிக்கெடுத்துக் கொண்டே வறட்டி எங்காவது கிடைத்தால் அதன்மூலம் சுடுநீர் காய்ச்சி வைத்துக் கொண்டு, நாமப்பெட்டியில் இருக்கிற இருபத்தொன்று புளியோதரைப் பொட்டலங்களில் ஒரு பொட்டலத்தைச் சாப்பிடுவது, அப்புறம் சுடுநீர் குடிப்பது, அப்புறம் மேற்கொண்டு பிரயாணம் தொடர்வது... உண்டா, இல்லையா சொல்."

அப்பள ஐயங்கார்: "எவனோ ஒரு குலம்கெட்டவன், அது மாதிரி செய்தால் எல்லாரும் செய்கிறார்கள் என்று அர்த்தமா?"

கிட்டு: "சரி, அப்படி செய்தவர்கள் யாரையேனும் நீங்கள் பகிஷ்காரம் செய்துவிட்டீர்களா? இல்லையே. அடுத்தவங்க விஷயங்களைத்தானே நீங்கள் பேசுவீர்கள். உங்களைப் பற்றி வாயைத் திறக்கவே மாட்டீர்களே".

சபாபத்தையா: "சாப்பாட்டு மூட்டைய அப்படி யாராச்சும் கட்டி எடுத்துக் கொண்டு போவர்களா? கேழ்வரகில் நெய்வடிகிறது என்றால் கேட்பவனுக்கு புத்தி எங்கே போச்சு? எவனோ சொன்னானென்று கேட்டுக் கொண்டு வந்து பேசுகிறாயே".

கிட்டு : "உங்களுக்கு என்ன தெரியும்? அந்த ரகசியங்கள் எல்லாம் வேறு. ராமானுஜ ரகசியம், சிதம்பர ரகசியம், ரதி ரகசியம், யோக ரகசியம் என்று நாலுவகை ரகசியம் இருக் கிறது. வைணவர்களில் எச்சில் சாப்பாடு தோஷம் கிடையாது. "அல்லாண்டு பல்லாண்டோ, காசுக்கு மூணு அப்பளம் வாங்கிக் கொண்டோ, முரித்து முரித்து வாயில் போட்டுக் கொண்டோ, கம்பத்து மேலே கையைத் துடைத்துக் கொண்டோ" என்று சொல்லிவிட்டால் போதும், எச்சில் தோஷம் போய்விடும், தெரியுமா".

அப்பள ஐயங்கார்: "என்னடா, நாய் குரைக்கிற மாதிரி குறைக்கிறாய்? எச்சில் தோஷம் இல்லை என்று யாரடா சொன்னது? சாமிக்கு படைத்த நைவேத்யத்தை மட்டும் வைத்திருந்து சாப்பிடலாம். அதில்தான் எச்சில் தோஷம் இல்லை என்பது சாஸ்திரம். அதிலே யாராவது தோஷம் சற்பித் தார்கள் என்றால் அது அநேக பாவங்கள் செய்ததற்குச் சமமாகி விடும். அதற்கு பிராயச்சித்தம் கூட சொல்லி இருக்கிறார்கள்".

கிட்டு: "அதெல்லாம் சரி. நீ சொல்வது நிச்சயம். அதற்கு மூல மந்திரம் வேறு இருக்கிறது. ரங்கனே பெருமாள். பொங்கலே பிரசாதம். கம்பமே தண்ணீர்" இந்த மந்திரத்தைச் சொல்லிவிட்டால் தோஷம் எல்லாம் பறந்தோடி விடும் என்று சொல்வார்கள். இதுவே இப்படி என்றால் மடி விஷயம் பற்றிச் சொல்லவே வேண்டாம்".

அப்பள ஐயங்கார்: "என்னடா இது பைத்தியக்காரத் தனமான பேச்சு. சும்மா தலை கொழுத்துப் போன நாய் மாதிரி ஒரே சத்தம்"

அப்பாஜி: "அது என்ன மடி விஷயம்?"

கிட்டு: "இவர்கள் வகையில் வருஷப்பிறப்பு, தீபாவளி முதலான பண்டிகை நாட்களில் தான் எல்லாரும் குளிப்பார்கள். தினசரி குளிக்கிறவர் களாயிருந்தால் இவர்கள் குடுமி இத்தனை உறுதியாய் இருக்குமா? மடித்துணி கட்டிக் கொண்டு எதைத் தொட்டாலும் அதுவும் மடியே ஆகுமாம். தீட்டாவதில்லையாம்"

அப்பள ஐயங்கார்: "ஆமாம். அது அப்படித்தான் 'உபஸ்பர்ஷோ ந ஸ்பர்ஷ' என்று சொல்லி இருக்கிறார்கள்.

கிட்டு: "மடி உடுத்துக் கொண்டு வண்டியில் துணியை விரித்துப் போட்டு அதன்மேல் உட்கார்ந்தால் தீட்டாவ தில்லையாம்".

அப்பள ஐயங்கார்: "ஆமாம். அதுவும் சரியே. வண்டியின் மேல்தான் உட்கார்ந்திருக்கிறோம். விரிப்பின் மேல் அல்ல. வண்டியே நமக்கு முக்கிய மானது. அதன்மேல் விரிப்பு உள்ளது. அவ்வளவுதான். அதற்கும் வண்டியே ஆதாரம். ஆகவே விரிப்பின்மேல் உட்கார்கிறோம் என்றாலும் அது வெறும் விரிப்பைக் குறிக்காது. விரிப்புக்கும் ஆதாரமாய் இருக்கிற வண்டியில் உட்கார்ந்திருப்பதாகத்தான் அர்த்தம்".

கிட்டு: "மண்ணின் மேல் விரிப்பை பிரித்து அதைத் தொட்டால்...?

அப்பள ஐயங்கார் : "அது தீட்டாகும்"

கிட்டு: "அப்பொழுதும் தீட்டில்லை என்றுதானே சொல்ல வேண்டும். எதற்கு தீட்டு என்று சொல்கிறீர்கள். பூமியின் மேல் விரிப்பு இருந்தாலும் விரிப்புக்கும் பூமியே ஆதாரமாகி இருப்பதால் விரிப்புக்கும் நமக்கும் நேரிடைத் தொடர்பு இல்ல என்பதால் அது தீட்டு ஆகாது என்றுதானே சொல்லவேண்டும். தர்க்கப்படி இது சரிதானே".

அப்பள ஐயங்கார் : "பூமி தொடர்பானதற்கு மாத்திரம் அதை நேரிடைத் தொடர்பு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் தீட்டாகிறது என்று சொல்கிறோம்"

கிட்டு: "மடி உடுத்திக் கொண்டுதானே விரிப்பை மிதிக்கிறோம். அது எப்படித் தீட்டாகும். நீங்கள் தான் விளக்க வேண்டும்"

அப்பள ஐயங்கார்: "எல்லாமே அந்தந்த தேசத்துக்கும், குலத்துக்கும் தக்க பழக்க வழக்கப்படிதான் நடக்கும்.

நாரப்பய்யா: "அது சரி, சீத்தம்மாவுக்கு ஆரோக்கிய நிலை எப்படி இருக் கிறது கிட்டு? விழுந்தது விழுந்த இடத்திலேயே விழுந்து கிடக்கிறாளாம், பாவம்"

கிட்டு: முதலில் அப்படித்தான் இருந்தது. இப்பொழுது மந்திரமெல்லம் போட்டிருக்கிறார்கள். வீட்டுக்குப் பின்னால் ஒரு சின்ன வீடு இருக்கிறது. அங்குதான் மகாதேவனின் வாசம். அங்குதான் அவளைப் படுக்க வைத்திருக் கிறார்கள். எங்கள் மாமாதான் மைசூருக்குப் போயிருக்கிறார். அங்கிருந்து நல்ல மந்திரவாதிகளைப் பார்த்து அழைத்து வருவார். அவர் வருகிறவரை இருக்கட்டும் என்றுதான் மகாதேவனின் பின்வீட்டில் படுக்க வைத்திருக் கிறார்கள்"

அப்பள ஐயங்கார்: "வைணவர்கள் மடி விவகாரம் உனக்குத் திருப்தி யாயிற்றா, இல்லையா கிட்டு?"

கிட்டு : "விட்டுத் தள்ளுப்பா. அது எதற்கு. அது ஒரு விபரீதம் அவர்களுக்கு எல்லாம் மடியாகவே ஆக வேண்டும். ஆச்சாரியார் ஒருவர் இருந்துவிட்டால் போதும் அவர்களுக்கு. எல்லாம் அவர் சொல்கிறபடி ஆகும்"

சபாபத்தையா: "எந்த ஆச்சாரியார் கிட்டு,"

கிட்டு : "ஆச்சாரி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு வருகிறவர்கள் எல்லாம் பெரிய ஆச்சாரி, பூரி ராமச்சாரி, பீமாச்சாரி, எட்டு மணங்காச்சாரி, கோவாட்டச்சாரி, இவர்களுக்கு சீடர்கள் அப்பய்யா, டொப்பையா,

டுணய்யா, டுஷ்யா ஆகியோர். உரல் மாதிரி பெரிசு பெரிசாய் சங்கு சக்கரம் எழுதிக் கொள்வார்கள். நாமக்கோடு ஒவ்வொன்றும் உலக்கை போல இருக்கும். எல்லாரைப் பற்றியும் எனக்குத் தெரியும். இவர்களிடம் எல்லாம் மடி அதிகம்தான், நான் ஒப்புக் கொள்கிறேன். உட்கார்ந்தால் மடி, நின்றால் மடி, கால் பட்டால் மடி, கை தொட்டால் மடி, குளியலுக்கு மடி, படுக்க மடி, சாப்பாட்டுக்கு மடி, பெண்டாட்டிக்கு மடி, புருஷனுக்கு மடி, எல்லாவற்றிற்கும் மடியப்பா மடி".

சபாபத்தையா : "கிட்டு, ராயர் வீட்டுக்கு ஆச்சாரியார் போனாரே அந்தக் கதையைச் சொல்லு"

கிட்டு: "ராயர் வீட்டிலே கல்யாணம். அதற்காகத் தன்னுடைய ஊரிலிருந்து புறப்பட்டார் ஆச்சாரியார். அவர் கூடவே அவர் பெண்டாட்டியும் கிளம்பினாள். ஆச்சாரியார் குதிரை தயாரானது. தயாரானதுமே டுன்யா என்கிற சிஷ்யன் 'ஆச்சாரியார் குதிரை மேலே உட்காரத் தயாராக இருக்கிறார்' என்று கூவினான். அப்புறம் ஆச்சாரியார் வந்து உட்கார்ந்தார். அதற்கப்புறம் அவர் மனைவி, பிள்ளை எல்லாரும் வந்து உட்கார்ந்தார்கள். மீசைக்கார யங்கண்ணா, கிருஷ்ணாச்சாரி, ராமாச்சாரி எல்லாரும் கூடவே கிளம்பினார்கள். வழியிலே காவேரி நதி. குளிக்காமல், நாமம், சந்தனம் இட்டுக் கொள்ளாமல் ஒரு குடும்பஸ்தன் வீட்டுக்குப் போகலாமா? கூடாது அல்லவா. அதனால் ஆச்சாரி குளித்தார். மூக்கில் இருந்து மேல் நெற்றி வரை பெரிய நாமம் எழுதிக் கொண்டார். சாமிக்குப் பூஜை செய்ய வேண்டுமே. ஆச்சாரியார் வருகைக்கு எல்லாரும் காத்திருக்கிறார்கள் விளக்கு ஏற்ற வேண்டி அகல்களை எடுத்து வைத்தனர். எண்ணெய் எங்கே? ஆச்சாரியார் மடி மூட்டைக்குள் தேட ஆரம்பித்தார். எண்ணெய் இல்லை. அப்பொழுது ஆச்சாரியார் மனைவி 'என்னய்யா, எப்படி இருக்கிறது, கண்ணாடி சீசாவில் ஒரு சிட்டா எண்ணெய் வாங்கி வந்து குழந்தைக்குக் கொடுத்து, வேலைக்காரிக்குக் கொடுத்து, விளக்குக்கு ஊற்றி, நடுவீட்டு விளக்கு வாசல் விளக்கு பின் வீட்டு விளக்குக்கெல்லாம் ஊற்றி, குழம்புக்கு ஊற்றி, கடன் கொடுத்து எல்லாம் போக ஒரு சொட்டு எண்ணெய் மிச்சம் வைத்திருந்தேன். நம் பிள்ளைகள் சிங்குவும் மங்குவும் சேர்ந்து ஆடிய ஆட்டத்தில் அதுவும் கவிழ்ந்து போயிற்று என்றாள். அப்பொழுது ஆச்சாரியார், 'சாட்சாத் சூரிய பகவானே விளக்குகளுக்கெல்லாம் விளக்காக இருக்கிறார். இன்னொரு விளக்குக்கு தேவை இல்லை. எல்லாம் சாஸ்திரம் சொல்கிறது' என்று சொல்லி பூஜை செய்ய ஆரம்பித்தார். அப்பொழுது கிரகஸ்தன் •வீட்டிலிருந்து அவரைக் கூப்பிட ஆள் வந்தது. 'சுக்லாம் பரதரம் விஷ்ணும்' என்று சொல்லிக் கொண்டே பூசையை ஆரம்பிப்பதற்குள் கூப்பட வந்துவிட்டார்களே என்று தோன்றியது. வேறு வழியில்லை. உடனே 'ஸ்வஸ்தி ப்ரஜாப்ய பரிபால யந்தாம்' என்று பூஜையின் கடைசி மந்திரத்தைச் சொல்லிமுடித்து பெட்டி,

முடிச்சுகளை முதலில் பிரித்ததைப் போல மீண்டும் எல்லாவற்றையும் எடுத்து உள்ளே அடுக்கி மூடிக் கட்டினார்கள். அப்பொழுது ஆச்சாரியாரின் குழந்தை, 'அம்மா, சாப்பிட ஏதாச்சும் கொடும்மா' என்று அழுதது. அதற்கு அவள், 'பலாப்பழம் தின்ன நாம் என்ன அரச பரம்பரையா, வாழைப்பழம் தின்ன நாம் என்ன பணக்காரர் பரம்பரையா, நெய்யூற்றித் தின்பதற்கு நாம் என்ன பூர்ணய்யா வம்சமா' என்று சொல்லி குழந்தையைச் சமாதானப் படுத்தினாள் (பூர்ணய்யா அக்காலத்தில் திப்பு சுல்தானுக்கு மந்திரியாக இருந்த ஒரு செல்வந்தன).

சபாபத்தையா: "கிட்டு, உன்னைப் பைத்தியம் என்று யாரடா சொன்னது?"

கிட்டு: நான் பைத்தியம் என்பதும் உண்மை. நீ முட்டாள் என்பதும் உண்மை.

நாரப்பய்யா: "அப்படியென்றால் பெட்டிகள், சாமான் கள் எல்லாம் பின் வீட்டில் தான் இருக்கிறதா?"

கிட்டு: "வைத்திருப்பதற்கு என்ன பயம்? எங்கள் சீத்தம்மா தான் அங்கேயே படுத்திருக்கிறாள் அல்லவா"

அப்பள ஐயங்கார்: "எல்லாரைப் பற்றியும் ஏளனம் செய்கிறாயே, நீங்கள் அட்டகந்ததவர் பிரிவு. நீங்கள் மட்டும் எல்லாவற்றிலும் சரியா?"

கிட்டு: "நாங்கள் எல்லாவற்றிலும் சரிதான். காயப் போட்ட துணியை கோலால்தான் எடுத்து வருவார்கள். ஆனாலும் அது கூட எங்களுக்கு மடிதான். அதே மடியில் உட்கார்ந்து திதி, சிராத்தம் கூட செய்யலாம் சாப்பாட்டு மூட்டை கட்டிக் கொண்டு போவோம் வழியில் அது ஒன்றும் தீட்டு ஆகாது எங்களில் உப்பு போட்ட பதார்த்தங்களுக்கு மட்டும் தீட்டு உண்டு. அதிலும் உப்பிட்ட துவரம் பயிறு கடலைப்பயிறு ஆகியவற்றிற்கு தீட்டு கிடையாது. ஆனால் வெந்து விட்டால் தீட்டு ஆகும். ஆனால் கோதுமை, ரவை ஆகியவை வெந் தாலும் தீட்டு இல்லையாம். எங்களில் அவ்வளவாக வெளியே தெரியாது. கொஞ்சம் மடி, கொஞ்சம் தீட்டு, போர்த்திக் கொண்டால மடி, ஆனால் உடுத்திக் கொண்டால் தீட்டு. சிராத்தச் சாப்பாடு நாங்கள் சாப்பிடலாம். நாங்கள் தைத்யசேஷ பிரிவினர். நாங்கள் எல்லாக் கடவுள்களையும் கும்பிடு கிறோம். விபூதிக்காரர்கள் என்றுதான் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் நாமமும் போட்டுக்கொள்வோம். சமயங்களில் விபூதியும் இட்டுக் கொள் வோம். சாமுண்டி அம்மன் விபூதியும் இட்டுக் கொள்வோம். சாமுண்டி அம்மன் ஊர்வலம் என்றால் குங்குமம் கூட இட்டுக் கொள்வோம்.

சபாபத்தையா: "புலிக்கு தன் காடாக இருந்தால் என்ன, அடுத்தவர்கள் காடாக இருந்தால் என்ன கிட்டு, எல்லாம் ஒன்றுதானே"

கிட்டு: "பின் வேறெப்படி? அதுசரி, இவ்வளவு நேரம் உட்கார்ந்து அரட்டை அடித்தோமே. யாராவது ஒரு சிட்டிகை பொடி கொடுத்தீர்களா?

ஏதாவது ஒன்று சொன்னால் போதும், அதையே பிடித்துக் கொண்டு 'கொல்' என்று சிரிக்க மட்டும் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் இந்த கிட்டு வுக்கு ஒரு சிட்டிகை பொடி கொடுக்க வேண்டும் என்று மட்டும் யாருக்கும் தோன்றவில்லை"

இவ்விதமாக எல்லாரும் கூடிப் பேசிக் கொண்டிருந்தது. விநோதமாய்த் தோன்றினாலும், நாரப்பய்யாவின் கேள்விகள் மட்டும் வேறு விதமாகவே இருந்தது. நாரப்பய்யாவின் மனப்போக்கும் வேறு விதமாக இருந்தன. அவ்வப்பொழுது கேட்கும் கேள்விகளே புதுவிதமாக இருந்தன. எல்லாரும் எழுந்து கோவிலை விட்டுத் தத்தம் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றனர். பிறகு,

நாரப்பய்யர்: 'தெரு வாசலுக்குப் பக்கத்தில் பின் வீடு இருக்கிறது என்பது மட்டும் தெரிந்தது. அவ்வளவுதான். முதலிலேயே பேசினதுபோல இரண்டு வேலைகளையும் முடித்துக்கொள்ள இது தான் சமயம்"

அப்பாஜி: "எல்லாம் உங்கள் தயவால்தான் ஆக வேண்டும்" தெரியாதா? எப்படிச் செய்ய வேண்டும் என்பதையெல்லாம் நான் சொல்லித் தருகிறேன்".

அப்பாஜி: "எல்லாம் உங்கள் கட்டளைப்படியே செய்வோம்".

இவ்விதமாய்ப் பேசிக் கொண்டு அவர்களும் புறப்பட்டுச் சென்றார்கள்.

14

மைசூருக்குச் சென்று சதாசிவதீட்சிதன் மருமகளுக்கு உண்டாகி இருக்கும் நோய் இன்னதென்று தெரிந்து கொள்ள பல இடங்களில் கலந்தாலோசித்தான். எப்படிப் பட்ட பெரிய ஜோசியக்காரர்களிடம் கலந்து ஆலோசித்த போதும் அதைக் கண்டுபிடிக்க இயலவில்லை. உயிருக்கு அபாயம் உண்டு என்றார்கள் சிலர். பெரிய உயிருக்கு எந்த பயமும் இல்லை என்றார்கள் சிலர். கண்டிப்பாக இப்படி என்று சொல்ல இயலாமல் இப்படியும் அப்படியுமாய் ஊகம் செய்து சொன்னார்கள் சிலர் யாரோ ஒருவர் மாத்திரம் இது ஏதோ ஏவல் வேலை போலத் தெரிகிறது என்றார்கள். கடைசியில் மந்திரமூர்த்தி தலைச்சேரி சேஷய்யா என்று ஒருவர் இருக்கிறார் என்றும் அவருக்கு வைத்திய சாஸ்திரம், மந்திர சாஸ்திரம், மாட மந்திரம், ஏவல் செய்வது, அவற்றை எடுப்பது, எல்லாம் அவருக்குத் தெரியும் என்றும், அவர் கொல்லாப்பூர் மகாலட்சுமி பக்தர் என்றும், அவரிடம் விசாரித்துப் பார்த்தால் ஏதேனும் பயன் உண்டாகும் என்றும் சொன்னார்கள்

சேஷய்யா மிகவும் நல்ல மனிதன். எந்த விதத்திலும் அடுத்தவர் கையை எதிர்பார்த்து நிற்கும் மனிதன் அல்லன் அவன். அரண்மனையில் இருந்து சம்பளமும் வந்து கொண்டு இருந்தது. நெற்றி நிறைய குங்குமம் இட்டுக் கொண்டிருந்தான் அவன். பூசை எல்லாம் செய்துமுடித்து வெளியே வர பகல் பொழுது பல ஜாமங்கள் கழிந்து விடும். அதற்கப்புறம் வெளித் திண்ணையில் வந்து உட்காருவான். வேண்டுகிறவர்களுக்கு மருந்துகள் கொடுப்பது, மந்திரிப்பது எல்லாம் செய்வான். யார் வீட்டுக்கும் செல்வதில்லை. யாரிடமிருந்தும் பணம் வாங்கிக் கொள்வதில்லை. சாயங்கால வேளை பூஜை மிகவும் விமரிசையாக நடந்து வந்தது அந்த காலத்தில், நைவேத்யத்துக்காகவும், காணிக்கைக்காகவும் யாராவது ஏதேனும் கொண்டுவந்து தந்தால் அவற்றை மட்டும் எடுத்துக் கொள்வது வழக்கம். ஆனால் ஒவ்வொரு வெள்ளிக் கிழமை தோறும் நடக்கிற வெள்ளிக் கிழமை பூஜை, வரலட்சுமி பூஜை. நவராத்திரி பூஜை, அவற்றுள்ளும் காளி தேவதைக்கான பூஜை, இதனுடன் தொடர்புடைய சுமங்கலி பூஜை. பிராமணர்களுக்கு தானம் ஆகிய வற்றை மிகவும் பணம் செலவழித்து மிகவும் விமரிசையாய்ச் செய்தான். சுபாவமாக உல்லாசமாய்ப் பேசக்கூடிய

ஆண் இவன். மற்றவர்களுடன் சரிசமமாகப் பழகக் கூடியவன். மூன்றாம் ஜாமத்தில் பகடை, முதலிய ஆட்டங்களை ஆடுவான். அவ்வப்பொழுது மகா பாரதம், ராமாயணம், பாகவதம் முதலிய புராணங்களைப் படித்துச் சொல் வதும், கன்னடக் காவியங்களை ராகத்தோடு பாடுவதும், அவனுக்குப் பொழுது போக்குக்களாக இருந்தன. இது மட்டுமன்றி லௌகிக விவகார ஞானமும் இவனுக்கு இருந்தது. இதனால் குடும்ப விவகாரங்கள் பற்றி ஏதேனும் அபிப்ராயம் கேட்பதற்கும், விண்ணப்பம் முதலானவற்றை எழுதி வாங்கிக் கொள்ளவும் அடிக்கடி ஊர்மக்கள் வந்து போவதுண்டு. வெள்ளைக்காரர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறுவார்கள் என்றும் அவர்கள் வாணிகம் செய்ய வந்தவர்கள், அவர்களுக்கு அரசாங்கம் நடத்தி ஆக வேண்டியது என்ன உள்ளது என்றும் சொல்வான். துருக்கர்களை மந்திரம் போட்டு இந்த நாட்டை விட்டே தன்னால் ஒட்டி விட முடியும் என்றும், சிறுபிள்ளைத்தனமாய் அடிக்கடி சொல்வான். யார் எதைப் பேசினாலும் தாய் மொழி வார்த்தைகளையே பயன்படுத்திப் பேச வேண்டும் என்று வலியுறுத்து வான். 'அர்ஜி' என்று சொல்வதற்குப் பதில் 'விண்ணப்பம்' என்று எழுதச் சொல்வான். 'ஷாயி' என்பதற்குப்பதில் 'மை' என்றே எழுத வேண்டும். 'முலக்கி பாபு' என்பதற்குப் பதிலாக 'அட்டவணை' என்றே சொல்ல வேண்டும். 'பேனாகரி' என்று சொல்லிவிட்டால் மிகவும் கோபம் வந்துவிடும். 'எழுதுகோல்' என்றுதான் சொல்ல வேண்டும். 'ஹுத் தேதார்' என்று சொல்லக் கூடாது. 'அதிகாரி' என்றுதான் எழுதவேண்டும். 'த்ரிகுஷ்கி' என்று சொல்லக் கூடாது. 'நிலபுலன்' என்றோ 'நஞ்சை புஞ்சை' என்றோதான் வழங்க வேண்டும். 'பணவசூல்' என்று சொல்லக் கூடாது. 'பணம் தண்டுதல்' என்று தான் சொல்ல வேண்டும். சிற்சில வேளைகளில் இப்பழக்கம் மற்றவருக்கும் தொற்றிக் கொண்டது. ஒரு முறை பேச்சு வாக்கில் 'அரண்மனையில் ராத்திரி ஒட்டோலகத்தில்' என்று ஒருவன் சொல்லிவிட்டான். உடனே சேஷய்யா, "அது என்ன ஒட்டோலகம்? அழகாக தர்பார் என்று சொல்" என்றான். இவனோடு மிகவும் நெருக்கமாக பகடை ஆடிக் கொண்டிருந்த இன்னொரு நண்பன், தர்பார் என்பது கூட நம் மொழி வார்த்தை இல்லையே. அந்த வார்த்தை முகலாயர் வார்த்தை. ஆனால் சொல்வதற்கு ஜோராகத்தான் இருக் கிறது என்றான்.

பசுபதி சாம்பசாஸ்திரியும், சதாசிவ தீட்சிதனும் சென்று இந்த சேஷய்யாவை அவன் வீட்டிலேயே வைத்துப் பார்த்தார்கள். ஜனநடமாட்டம் இல்லாத நேரமாய்ப் பார்த்து சீத்தம்மா பற்றிய செய்திகளை மிகவும் விரி வாகச் சொன்னார்கள். ஏதோ சில கணக்குகளை எழுதிக் கூட்டியும், மந்திர சாஸ்திரப் புத்தகங்களின் குறிப்புக்களை ஆராய்ந்தும், இறுதியில் சேஷய்யா சொல்ல ஆரம்பித்தான். "இன்றைக்கு வெள்ளிக்கிழமை. எனக்கு அவ்வள வாய் பொறுமை இல்லை. அதுமட்டுமன்றி எந்த காரியத்தைப் பற்றியும் இன்றையதினம் பேசத்தக்க நாள் அல்ல. நாளைக்குச் சனிக்கிழமை. நல்ல நாள்

இல்லை. அன்றும் வேண்டாம். நாளைய மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை வந்தால் சொல்கிறேன்" என்று சொன்னான். அதே போலவே ஞாயிறு அன்று காலை சென்று பார்த்தார்கள். அப்போது சேஷய்யா, "என் கணக்குப்படி கண்டு பிடித்ததைச் சொல்லிவிடுகிறேன். உங்கள் அனுபவம் எப்படியோ, அதன்படி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குச் சொந்தமான இடத்திற்கு வெகு அருகிலேயே ஒரு பிராமணனல்லாதான் இருக்கிறான். அவன் மிகவும் கெட்டவன். ஒரு பெண்ணை அடைய அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோற்றுப் போனதால், ஒரு கெட்ட தேவதையை ஆவியாக்கி சூனியம் வைத்து அவள் மேல் ஏவி இருக்கிறான். பாதிக்கப்பட்டவளை என்றென்றைக்கும் ஏறி மிதித்து நாசம் செய்கிற அளவுக்கு ஒரு இடத்தில் ஒரு பொம்மையைப் புதைத்திருக்கிறான். இவனுக்கு ஒரு பிராமணனின் உதவியும் இருக்கிறது. இந்த பிராமணன் ரொம்ப காலமாக உங்களுக்கு நண்பனாக இருந்து விரோதியாக மாறியவன். இது சரியாய்ப் போகுமா போகாதா என்று உயிரைப் பற்றிய பயம் உருவாகியுள்ளது. என் ஆயுளுக்கு இப்படி ஒரு சந்தர்ப்பத்தைப் பார்த்ததே இல்லை. புத்தகத்தில் என்னமோ இது பற்றிய சங்கதிகள் இருப்பது வாஸ்தவம் தான். ஆனால் நேரில் பார்த்ததில்லை. ஒரு வகையில் பார்த்தால் உங்கள் பயம் நியாயமானது என்றுதான் சொல்ல வேண்டும். உயிர் திரும்பாது என்றுதான் தோன்றுகிறது. இன்னொரு கோணத்தில் பார்த்தால் உயிருக்கு எந்த அபாயமும் இல்லை என்றும் தோன்றுகிறது. எப்படிச் சொல்வது என்று புரியவில்லை. பகல் வேஷம் போடும் கிருஷ்ணய்யா இங்கேதான் வருவான். அவனிடமும் இதுபற்றிப் பேசிக்கலந்தாலோசித்து அந்த அம்மாவின் மேல் பாரத்தைப் போட்டு ஒரு முடிவுக்கு வருகிறோம். இப்படிப்பட்ட ஒரு சிக்கலை விடுவிப்பதில் எனக்கும் மகிழ்ச்சியே. நாளைககு திங்கள் கிழமை. மதிய வேளை வாருங்கள்" என்றான்.

இப்படிப்பட்ட விவகாரங்களில் கைதேர்ந்தவன் கிருஷ்ணய்யா. பிறக்கும் போது தெலுங்கு ராஜ்யத்தில் இருந்தவனாம். இளமையைக் கழித்தது மலையாள தேசத்தில். அங்கே அநேக சங்கதிகளைப் பயின்று தேர்ச்சியடைந் தான். மந்திரதந்திரம், சுக்ரநாடி அடிப்படையில் ஜோசியம், சூன்யம் எடுப்பது, வைப்பது, ஏவல், பில்லி சூனியம், அக்னிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், கண்ணைக் கட்டுவது, அவிழ்ப்பது, ஆகிய அனைத்து வித்தைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றிருந்தான் அவன். அது மட்டுமன்றி பகல்வேஷம் போடுவதிலும் அவன் நிபுணனாக இருந்தான். அடிக்கடி மைசூர் சமஸ்தானத்துக்கு அரசரைச் சந்தித்துச் செல்ல வருவதுண்டு. அரண்மனைக்கு இவன் எந்த வேளையில் வந்தாலும் தடுக்கக் கூடாது என்று அரசர் கட்டளை இட்டிருந்தார்.

ஒருநாள் உடம்பெல்லாம் விபூதியை வாரிப்பூசிக் கொண்டும், தலை முடியை வாராமல் பறக்க விட்டுக் கொண்டும், வலக்கையில் ஒரு முள் வாங்கியும், இடக்கையில் ஒரு மண்டையோடும் எடுத்துக்கொண்டு நிர்வாண கோலத்தில் கிளம்பிவிட்டான் கிருஷ்ணய்யா. கூடவே தன் பிள்ளைகளுள்

ஒருவனுக்கும் உடம்பெங்கும் விபூதியை வாரிப்பூசி, இடுப்பில் துண்டு ஒன்றைக் கட்டி, தனக்கு சிஷ்யனாக்கி அழைத்துக்கொண்டு போனான். ஏற்கனவே இவன் எந்த வேஷத்தில் எந்த நேரத்தில் போனாலும் தடுக்கக் கூடாது என அரச கட்டளை இருந்தது. இந்த வேஷத்தில் ஒரு சிறப்பான சங்கதியும் அடங்கி இருந்தது. பார்க்க ஆண் வேஷம் என்றாலும்கூட தன் ஆண் குறியை வெளியே தெரியாமல் வெகு சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டிருந்தான். பார்ப்பதற்கு ஏதோ ஒரு துவாரம் மட்டும் இருக்கிறதைப் போல தெரிந்தது. இதே நிலையில் அரண்மனைக்குள் சென்றான். அங்கிருந்த சபையோர்கள் இக் கோலத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். இவனைக் கடைசிவரைக்கும் பரீட்சித்துப் பார்த்து விடுவது என்கிற திட்டத்தில் அவனுக்கு எதிரே அழகழகான தாசிகளை அழைத்து வந்து நிறுத்தினர். அப்பெண்கள் அவனைப் பரிகசித்தும், பாட்டுப் பாடியும் அவனைச் சுற்றி வந்தனர். ஆனால் அவனது நிலையில் எந்த மாற்றமும் இல்லை. அரசருக்கு மிகுந்த ஆச்சரியம். அவனுக்குப் பல விதமான பரிசுகளை வழங்கி அனுப்பி வைத்தார்.

இன்னொரு நாள் இன்னொரு விசித்திரமான சம்பவம் நடந்தது. மைசூருக்கு அப்போது ஒரு பக்கிரி வந்திருந்தான். ஒரு திறந்த அமைப்புள்ள வண்டியில் முட்களாலான படுக்கை விரித்து அதன்மேல் வெற்றுமேனியுடன் படுத்தபடி வந்து கொண்டிருந்தான். அரசர் அதைப்பார்த்து அவனது துணிச்சலை மெச்சி ஏராளமான பரிசுகள் வழங்கி அனுப்பி வைத்தார். இந்த விஷயம் கிருஷ்ணய்யாவுக்குத் தெரியவந்தது. மறுநாளே ஒரு முள்படுக்கை விரித்த வண்டியைத் தயார் செய்து அதன்மேல் வெற்று உடம்புடன் படுத்துக் கொண்டான். அது போதாதென்று சப்பட்டையான இரண்டு பாரமான பாறைகளையும் தன் உடம்பின் மேல் அழுத்தி இருக்கும்படி ஏற்றிக் கொண்டான். சிவ பூசையை முடித்துக் கொண்டு அரசர் வெளியே வந்து பார்த்துக் கொண்டிருக்கிற நேரத்தில் குந்தனமட்டி மைதானத்தில் வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றான். ஜன்னல் வழியே பார்த்த அரசர் ஆச்சரியப் பட்டார். அந்தப்புரத்தில் இருக்கிற பெண்களெல்லாம் தம் அறை ஜன்னல்கள் வழியே எட்டிப் பார்த்தார்கள். அரண்மனை எதிரே இருந்த முற்றத்தில் வண்டி மூன்று சுற்றுகள் சுற்றி வந்து நின்றன. எல்லாரும் கிருஷ்ணய்யாவின் சாகசச் செயலை மெச்சினர். மீண்டும் அவனுக்குப் பரிசுப் பொருள்களை வழங்கினர்.

மற்றொரு அற்புதக் காரியமும் நடந்தது. அந்தக் காலத்தில் மைசூருக்கு ஒரு பைராகி வந்திருந்தான். குப்பண்ணன் தோட்டத்துக்கு மேற்கில், பூர்ணய்யன் கோட்டை அகழியில் சூர்ய நாராயண மண்டபம் ஒன்றிருந்தது. அதில் வந்து இறங்கினான் அந்த பைராகி. தினமும் ஒரு சேர் தானியத்தைப்பச்சையாகவே தின்று வந்தான். அரண்மனைக்குச் சொந்தமான பண்டகசாலையிலிருந்து அவனுக்குத் தானியம் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசர் ஆணையிட்டிருந்தார். அதைத் தினமும் வழங்கும் பொறுப்பு சித்திரக்காரனாகிய

திப்பண்ணனுக்கு ஒப்படைக்கப்பட்டது. இந்த சித்திரக்காரனிடம் அரசருக்கு மிகவும் அன்பிருந்தது. ராத்திரி உறங்கும் நேரம் தவிர அந்த சித்திரக்காரன் அரசருடன் பகடை ஆடுவதிலும், உரையாடுவதிலும் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தான். அரச சபையில் திப்பண்ணனுக்கு விசேஷமான மரியாதை இருந்த போதிலும், யாருக்கும் எந்த வகையான கேடும் விளைவிக்க அவன் நினைத்ததே இல்லை. தனக்கு சாத்தியமான வகைகளில் எல்லாம் மற்றவர்களுக்கு உதவிகளைச் செய்து வந்தான். மற்றவர்களால் முடியாது என்று கைவிரிக்கப்பட்ட வேலைகளை இவன் எளிதாக முடித்தான். பலரும் அவனை வீட்டுக்கு அழைத்து உபசரித்தனர். ஒருநாள் காலை எட்டு மணிக்கு திப்பண்ணன் வீட்டு மாடியில் பலரும் சேர்ந்திருந்தனர். பகல் வேஷக்காரனாகிய கிருஷ்ணய்யாவும் அங்கேயே வந்து உட்கார்ந்திருந்தான். பைராகிக்கு தானியம் எடுத்துச் செல்வதற்காக ஆட்களும் வந்திருந் தார்கள். உடனே வேண்டும் என்று அவர்கள் அவசரப் படுத்தினார்கள். எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டான் கிருஷ்ணய்யா. பிறகு திப்பண்ணனைப் பார்த்து, "நவபாஷணங்களையும் வரவழையுங்கள். உரலில் போட்டு இடித்து பொடியாக்கிக் கொள்ளுங்கள். அதில் ஒரு அதிசயமான விஷயத்தைச் செய்து காட்டுகிறேன்" என்றான். பகல் வேஷக்காரனாக இருப்பதால் ஏதேனும் தந்திரம் செய்யக் கூடும், அதையும் பார்க்கலாம் என்று எண்ணிய திப்பண்ணன் பண்டகசாலையில் இருந்து நவ பாஷாண வகைகளையும் வரவழைத்துப் பொடி செய்வித்தான். அந்த மாவுப் பொடியை ஒரு வெள்ளித் தட்டில் வைத்து கிருஷ்ணய்யாவின் முன் வைத்தார்கள். அந்தப் பொடிமாவையெல்லாம் உருட்டிப் பிசைந்து ஒரு உருண்டை யாக்கினான் கிருஷ்ணய்யா. அதே நேரத்தில் கூப்பிட்டுச் செல்ல அரண்மனையில் இருந்து அழைப்பு வந்தது. திப்பண்ணா புறப்பட்டுச் சென்றான். அங்கிருந்தோர் எல்லாருக்கும் கிருஷ்ணய்யாவின் செயலைக் கண்டு பயம் உண்டாகியது. கிருஷ்ணய்யா அந்த உருண்டையைத் தின்று விட்டான். பயத்தின் காரணமாக ஒவ்வொருவராக அங்கிருந்து கிளம்பி தத்தம் வீட்டுக்குச் சென்று விட்டார்கள். கடைசியில் கிருஷ்ணய்யா ஒருவனே எஞ்சி இருந்தான். எவ்வளவோ நேரம் காத்திருந்தான். யாரும் வரவில்லை. கடைசியும் கிருஷ்ணய்யாவும் கிளம்பி தன் வீட்டுக்குச் சென்று விட்டான். பசி தீர சாப்பிட்டுவிட்டு படுத்துக் கொண்டான். நான்கு மணி வாக்கில் எழுந்து வெற்றிலை பாக்கு போட்டபடி உட்கார்ந்திருந்தான். அரண்மனைக்குச் சென்ற திப்பண்ணனுக்கு பயம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. அதற்குள் கிருஷ்ணய்யா இறந்திருக்கக்க கூடும் என்று நினைத்தான். திப்பண்ணனின் வீட்டில் காலையில் சேர்ந்திருந்த மற்ற மக்கள் அனைவரும்கூட அதே விதத்திலேயே நினைத்தார்கள். நாழிகைக்கு ஒரு முறை, அரண்மனையில் இருந்து ஜவான்களை அனுப்பி அவனது ஆரோக்கிய நிலை பற்றிய தகவல்களை அறிந்தபடி இருந்தான். சுகமாக வீட்டில் உட்கார்ந்து கொண்டு தாம்பூலம் போட்டுக் கொண்டிருக்கிறான்

என்கிற தகவலைக் கேட்டு நடந்ததையெல்லாம் அரசரிடம் விவரித்தான் திப்பண்ணன். சபையில் இருந்த அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். உடனே சபைக்கு கிருஷ்ணய்யாவை அழைத்து வர அரசர் கட்டளையிட்டார்.

இப்படிப்பட்ட அமானுஷ்யமான செயல்களை அவன் எந்த மந்திர சக்தியால் செய்தான் என்கிற விஷயம் யாருக்கும் தெரியாது. அவனைப் பார்த்துப் பேசிய மந்திர மூர்த்தி சேஷய்யா,சதாசிவதீட்சிதனின் மருமகளான சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலையைப் பற்றி எடுத்துச் சொன்னான். அகண்ட சமுத்திரம் போல இப்படிப்பட்ட விஷயங்களில் அனுபவம் கொண்ட இவர்கள் இருவருக்கும் சீத்தம்மாவின் வியாதி ரகசியம் விளங்கவில்லை. இதற்கு நிவாரணம் என்ன என்பதும் அறிய சாத்தியமற்றதாக இருந்தது. கடைசியில் நோயாளியை நேருக்கு நேர் ஒரு முறை பார்த்தால் ஒழிய மேற்கொண்டு எந்த முடிவுக்கும் வர முடியாது என யோசித்து, அதன்படியே அவ்விஷயத்தை சதாசிவதீட்சிதனுக்கும், பசுபதி சாம்பசாஸ்திரிக்கும் அறிவித்தனர். சேஷய்யனோ ஊரைவிட்டு எங்கும் செல்லும் பழக்கம் அற்றவன். தானே நேரில் சென்று சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலையைக் கண்டுவர ஒப்புக் கொண்டான் கிருஷ்ணய்யா. ஆனால், தான் புறப்பட்டுச் செல்ல அரசரின் உத்தரவு பெற வேண்டும் என்றான்.

அரச உத்தரவைப் பெறும் பொருட்டு பசுபதி சாம்ப சாஸ்திரியும், சதாசிவதீட்சிதனும் அரண்மனைக்குச் சென்றனர். சிவபூஜையை முடித்துக் கொண்டதும் பண்டிதர்களோடு கொஞ்சநேரம் உரையாடிக் கொண்டிருப்பதும் அரசரின் பழக்கம். அன்றும் தன்பழக்கத்தின்படி பண்டிதர்களுடன் அரசர் பேசிக் கொண்டிருக்கும்போது சந்திக்கச் சென்றனர். அரசரைப் பார்த்ததும் சாம்ப சாஸ்திரி, "ஐயா, பகல் வேஷக்காரனான கிருஷ்ணய்யாவை இரண்டு நாட்களுக்கு மட்டும் சஞ்சவாடிக்கு அழைத்துச் செல்ல உத்தரவு வேண்டும்" என்று வேண்டி சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலைகளைப் பற்றி எடுத்துச் சொன்னான். அப்பொழுது அரசர், "சீத்தம்மா என்கிற பெண் நம் சதாசிவ தீட்சிதனின் மருமகள்தானே. கல்யாணத்துக்கு நானும்கூட வந்திருந்தேன் அல்லவா. எல்லாமே இப்பொழுதுதான் நடந்தது போலத்தான் இருக்கிறது. நீங்கள் சொல்வதைக் கேட்க துககமாக இருக்கிறது. இது யாரோ வேண்டுமென்றே செய்ததைப் போல உள்ளது. சூனியம், ஏவல் போன்ற அமானுஷ்ய சக்தியின் உதவியால்தான் இது நடந்திருக்க வேண்டும். நம் சதாசிவதீட்சிதனின் மனைவி சதா காலமும் அந்தப் பெண்ணுக்கு இம்சைகளைக் கொடுத்து வந்தாள் என்கிற மாதிரி காற்றுவாக்கில் செய்தி கேள்விப் பட்டேன். இப்பவும் அப்படித்தானா?" என்றார். இதற்கு எந்தப் பதிலும் பேசாமல் அமைதியாய் நின்றிருந்தான் பசுபதி சாம்பசாஸ்திரி. தன் மனைவியின் அறிவீனமான செயல்கள் அரச சபை வரைக்கும் எட்டி விட்டதை நினைத்து மிகவும் வெட்கமும் வேதனையும் அடைந்த சதாசிவ தீட்சிதன் தலை குனிந்து மௌனமுடன் நின்றிருந்தான். அதைப் பார்த்த அரசர், "இந்த சின்ன

விஷயத்துக்கு ஏன் மனம் குலைந்து விட்டாய் சதாசிவா? இந்த மாமியார் மருமகள் சண்டை உலகம் முழுக்க இருக்கிற சங்கதி. கடவுள்கள்கூட இதிலி ருந்து தப்பிக்க முடியுவில்லை. பாண்டவர்களாலும் முடியவில்லை. நீ ஒன்றும் பெரிதாக சங்கோஜப்பட்டுக் கொள்ள வேண்டாம். பகல்வேஷக்காரனாகிய கிருஷ்ணய்யாவைத் தாராளமாக நீ அழைத்துப் போகலாம்" என்று அவனைச் சமாதானம் செய்தார். இன்னும் ஐந்தாறு நாட்களுக்குள் தம் தந்தையாரின் திவசம் வருகிறது என்றும், அதை முடித்துக் கொண்டு உடனே புறப்படுவ தாகவும் சொன்னான் கிருஷ்ணய்யா.

அங்கிருந்து திரும்பிய பசுபதி சாம்பசாஸ்திரியும், சதாசிவதீட்சிதனும் வீட்டுக்கு வந்து உணவு உட்கொண்ட பின் உட்கார்ந்திருந்தார்கள். அதே நேரத்தில் சஞ்சவாடி யிலிருந்து மகாதேவன் கொடுத்தனுப்பிய கடிதத்தை எடுத்துக்கொண்டு ஓர் ஆள் வந்து சேர்ந்தான். அதில் கண்ட விவரம் என்ன வென்றால்—

புனிதமே உருவானவரின் பாதங்களுக்கு,

மகன் மகாதேவனின் தாள்பணிந்த வணக்கங்கள். இன்றைய தினம், வைகாசி மாதம் சுக்கிலபட்சம் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை இங்குள்ள அனைவரும் நலமாய் இருக்கிறோம். அங்குள்ளவர்களின் ஆரோக்கிய நிலைகள் பற்றிய செய்திகளை தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். என் மனைவி சீத்தம்மாவை தெருவாசலை ஒட்டி இருக்கும் பின் வீட்டில் கிடத்தி இருக்கும் செய்தி நீங்கள் அறிந்ததே. நேற்றைய முன்தினம் சாயங்கால வேளையில் திடுமென ஆ ஆ என்று கை கால்களை உதைத்தபடி கூவத்தலைப் பட்டாள், உடனடியாக திண்ணைக்கு அவளைத் தூக்கி வந்து கிடத்தினோம். தினந்தோறும் பத்துமுறைகளாவது அவள் மேல் விழுவதும், அழுவதுமாக இருக்கிறான் குழந்தை கிருஷ்ணசாமி. மனிதராய்ப் பிறந்த எவருக்கும் அவன் துக்கத்தைக் காணச் சகிக்காது.

இதற்கிடையில் இன்னொரு விபத்தும் நடந்தது. பின் வீட்டிலிருந்து சீத்தம்மாவைத் திண்ணைக்குத் தூக்கி வரும் வரை எல்லாம் சரியாய்த்தான் இருந்தது. உட்புறம் கதவைத் தாழிட்டுக்கொண்டு நாங்கள் அனைவரும் படுத் திருந்தோம். நேற்று விடிந்ததும் பார்க்கும் போது தெருப்பக்கத்திலிருந்து பின் வீட்டுக்குள் வரும் சுவரில் பெரிய கன்னமிடப்பட்டிருப்பது தெரிந்தது. இரண்டு ஆள்கள் நுழைந்து வெளியேறும் அளவுக்கு பெரிய துளை. அங்கிருந்த சாமான்கள் எல்லாம் அங்கங்கே சிதறிக் கிடந்தன. ஒரு கைப்பெட்டி உடைக் கப்பட்டு அங்கேயே சுக்கு நூறாகச் சிதறிக்கிடந்தது. தினந்தோறும் சீத்தம்மா பயன்படுத்தும் அட்டிகை, தோடு, கம்மல், சடைவில்லை ஆகியவற்றைக் கழற்றி கதவுக்குப் பக்கத்தில் ஒரு பத்திரமான இடத்தில் பெண்கள் வைத்திருந்தார்கள். அது வைத்த இடத்திலே இல்லை. நானே பார்த்தேன். இல்லை. எங்கே போயின என்றும் தெரியவில்லை. வேறு என்னனென்ன காணாமல் போயிற்று என்றும் தெரியவில்லை. இந்த கடிதத்தைக் கண்ட உடனே எந்த

வேலையாய் இருந்தாலும் அதை விடுத்து உடனுக்குடன் புறப்பட்டு வர வேண்டும். வீட்டில் இருக்கிற பெண்கள் எல்லாம் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். உங்கள் வரவை எதிர்நோக்குகிறோம். இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டும். அங்கே இருக்கிற அனைவருக்கும் என் பணிவான வணக்கங்களைத் தெரிவிக்க வேண்டும்.

வணக்கம்,

இப்படிக்கு,

மகாதேவன்.

இப்படி அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்து முடித்த சதாசிவதீட்சிதன், "என்னமோ நமக்கு கெட்ட காலம்தான். ஒரு பக்கம் என்றில்லாமல் எல்லாப் பக்கங்களில் இருந்தும் அநேக விதமான கஷ்டங்கள் வந்து கொண்டுள்ளன. கடவுள்தான் நம்மைக் காப்பாற்ற வேண்டும். மாமா, நான் இப்போதே புறப்பட்டுச் செல்கிறேன். போய்ச் சேர்ந்த பிறகு நிலைமைகளைக் கண்டு உங்களுக்கு எழுதுகிறேன். அப்புறமாக கிருஷ்ணய்யாவை நீங்களே அழைத்துக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லி விட்டு உடனே புறப்பட்டுவிட்டான். போகும் வழியிலேயே காவல் அதிகாரிகளைக் கண்டு இப்படி திருட்டுப் போன சமாச்சாரத்தையும் சொல்லிவிட்டுக் கிளம்பினான். காவல் அதிகாரிகளும், சேவகர்களும்கூட சதாசிவ தீட்சிதனின் வீட்டில் திருட்டு நடந்த சங்கதியைக் கேட்டு ஆச்சரியம் அடைந்தார்கள். சேவகர்கள் ஒரு முறை திருட்டு நடந்த பின்வீட்டை வந்து பார்த்து, பரிசோதித்து விட்டுச் சென்றார்கள். திருடர்களை எப்படியேனும் பிடித்து அவர்களுக்குத் தகுந்த தண்டனை வாங்கிக் கொடுப்பதாய்ச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சென்றார்கள்.

15

கும்பெனி சர்க்காரினைச் சேர்ந்து காவல்துறைச் சேவகர்கள் எட்டு பேரை அழைத்துக் கொண்டு வந்து மைசூரில் இருக்கும் சமஸ்தானத்துக் காவல் நிலையத்தை அடைந்து, அங்கிருந்த அதிகாரியிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். அதைப்படித்துப் பார்த்து விவரம் அறிந்த அதிகாரி தனக்கும் மேற்பட்ட அதிகாரியிடம் விஷயத்தைத் தெரிவித்து மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களுக்கான உத்தரவையும் பெற்றான். பிறகு கும்பெனிச் சேவகர்கள் அழைத்து வந்த எட்டு பேரையும் ஸ்ரீரங்கப் பட்டணத்தில் கஞ்சாமில் இருக்கும் சிறைக் கூடத்துக்கு அனுப்பி வைத்தான். அவர்கள் ஒவ்வொருவரையும் தனித் தனி அறையில் அடைக்க வேண்டும் என்றும், கடுமையான காவல் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் உத்தர வானது. துப்பறியும் அதிகாரிகள் மட்டும் வேலைக்காரர்கள் வேஷத்தில் இந்த அறைக்குள் சென்று அத்திருடர்களுடன் பேசிவிட்டுத் திரும்பினர். அவர் களைத் தவிர வேறு யாரும் நுழைவதற்கு அனுமதி இல்லை. இவ்வதிகாரிகள் சிறையில் இருப்பவர்களுடன் சந்தோஷமாகச் சிரித்துப் பேசிக் கொண்டும், அவர்களுக்குத் தேவைப்பட்ட சிற்றுண்டிகளை வாங்கிக் கொடுத்தும், அவர்களுக்குப் பிரியமான விதங்களிலேயே நடந்து கொண்டனர். தம் சொந்த சுகதுக்கங்களை மிகவும் ஆதுரத்துடன் அவர்களுடன் பகிர்ந்து கொள்கிற மாதிரி இல்லாததையெல்லாம் சொல்லி அவர்களின் நம்பிக்கைக்கு உரியவர் களானார்கள். பேச்சு வாக்கில் அவர்களின் ரகசியங்கள் ஒவ்வொன்றையும் மெல்ல மெல்ல சேகரித்தனர். எட்டு பேர்களும் தனித்தனி அறையில் அடைக் கப்பட்டிருந்த காரணத்தாலும், அவர்களுக்கு இடையே எந்த சந்திப்புக்கும் வழியற்ற காரணத்தாலும் ஒருவரைப் பற்றி மற்றவரிடம் பொய்யான தகவல் களைச் சொல்லி மேற்கொண்டு ஏதேனும் செய்திகளை வர வழைக்க முடியுமா என்று முயற்சி செய்தனர். ஆனாலும் அவர்கள் முயற்சிகள் எதுவும் அவ்வள வாகப் பலிக்க வில்லை. எட்டு பேர்களில் ஒருவனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இதேபோல ஏற்கனவே எத்தனையோ முறை சிறைப்பட்டவர்கள் என்பதாலும், எத்தனையோ சிறை களில் எத்தனையோ முறைகள் தண்டனை அனுபவித் தவர்கள் என்பதாலும், துப்பறியும் அதிகாரிகளின் தந்திர

முயற்சிகளையும், விசாரணைகளையும் நன்றாக அறிந் தவர்கள் என்பதாலும் 'எனக்குத் தெரியாது', 'நான் பார்க்க வில்லை' என்பது போன்ற பதில்கள்தான் அவர்களிட மிருந்து வந்தனவே தவிர, வேறு எந்த உபயோகமான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. எஞ்சிய ஒருவன் மட்டும் சிறைவாழ்வுக்குப் புதியவன். மற்றவர்களைவிட வயதில் இளையவன். இவனிடம் மிகவும் நெருக்கமாக நட்பு பூண்டு சாதுர்யமாகப் பேசினார்கள் துப்பறியும் அதிகாரிகள். மெல்ல மெல்ல அவனை வழிக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கள் பேச்சு முறையைக் கண்டு மயங்கிய அவன் தனது கதையைக் கொஞ்சம் கொஞ்சமாய் அவர்களுடன் பகிர்ந்து கொண்டான். அந்தக் கதை என்னவென்றால்—

"இமவத்கோபால குன்றில் இருக்கிற ஒரு ஊரில் நான் பிறந்தேன். அந்த ஊரின் பெயர் எனக்குத் தெரியாது. என் அப்பா மிகவும் ஏழை. என் அம்மாவுக்கு ஒரு கால் நொண்டி. அவளால் எந்த வேலையையும் செய்ய முடியாது. அவளுக்கு ஆண்குழந்தை ஒன்றும், பெண்குழந்தை ஒன்றும் பிறந்தன. அப்பா கூலிவேலை செய்து கொண்டுவரும் பணத்தில்தான் குடும் பத்தை நடத்த வேண்டி இருந்தது. ஞாயிற்றுக் கிழமை அமாவாசை அன்று சித்ரா நட்சத்திரத்தில் பிறந்தேன் நான். நான் பிறந்த நாள், நட்சத்திரம் எல்லாம் மிகவும் கெட்டவை என்று அந்த ஊரில் இருக்கிற ஜோசியன் என் அப்பாவிடம் சொன்னானாம். இதனால் என்ன கேடு நேருமோ என்று பயந்து பயந்தே நான் பிறந்த ஒரு வருஷத்துக்குள்ளேயே அப்பா இறந்துவிட்டாராம். அடுத்த ஆறு மாசத்துக்குள்ளேயே எங்கள் அம்மாவும் இறந்துவிட்டாளாம். அப்போது எனக்கு ஒன்றரை வயசு. என் அக்காவுக்கு ஐந்து வயசு. அது வரைக்கும் ஓயாமல் அப்பாவுடன் எப்போதும் சண்டை போட்டுக் கொண் டிருந்த எங்கள் சித்தப்பா எங்கள் இருவரையும் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். எங்கள் அப்பாவுக்குச் சொந்தமான வீட்டையும், நிலத்தையும் தாமே எடுத்துக் கொண்டார். திக்கில்லாமல் கிடந்த எங்களை எந்நேரமும் வாய்க்கு வந்தபடி திட்டுவதும், அடிப்பதுமே எங்கள் சின்னம்மாவின் வாடிக்கையான காரியங்களாக இருந்தன. ஒரு நாளைக்கு ஒரு வேளைக்கு கூழ் ஊற்றவே ரொம்பவும் சங்கடப்படுவாள். புருஷன் வந்ததும் எங்களைப் பற்றி இல்லா ததும், பொல்லாததுமாய் என்னென்னமோ சொல்லி நமக்கு உதை வாங்கி வைப்பாள். எங்களால் செய்ய முடியாத, எங்கள் பலத்தை மீறிய வேலைகளை எங்கள் மூலம் செய்விக்க வைப்பாள். நாங்கள் இருந்ததோ மழைப் பிரதேசம். அங்கே குளிர் அதிகமாக இருந்தது. போர்த்திக் கொள்ள கை அகலத் துணிகூட இல்லை. வெற்று உடம்புடன் நாங்கள் திரிந்திருந்தோம். ஒரே ஒரு கிழிந்துபோன கம்பளி இருந்தது. அது எங்கள் அப்பாவுடையதாம். அதையே நானும், என் அக்காவும் இழுத்துப் போர்த்திக் கொண்டு சுருட்டிக் கொள் வோம். என் மூன்றாம் வயதில் நடந்த விஷயங்கள் எல்லாம் எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றன. பகல் வேளையில் அங்குமிங்கும் கிடைத்த வைக்கோலை அந்தக் கம்பளியின் மேல் விரித்திருப்போம். இவ்வைக்கோலை

இரவில் உதறி விரித்து மாட்டுக் கொட்டகைக்குள்ளேயே இரண்டு பேரும் படுத்துக் கொள்வோம். கொட்டகையைச் சுற்றி முள்வேலி இருந்தது. மற்றபடி கதவோ, வாசலோ இல்லை. எனக்கு ஐந்து வயதும், அக்காவுக்கு ஒன்பது வயதும் ஆனது. நாங்கள் கேழ்வரகு மாவு அரைப்போம். கூப்பிடு தூரத்தில் இருக்கிற கிணற்றில் இருந்து நானும், என் அக்காவும் மாடுகளுக்கும், வீட்டில் இருக்கிற எல்லாருக்கும் குடிப்பதற்கென்று குடங்களில் நீர் கொண்டு வருவோம். ஒரு நாள் ஒரு பெரிய பானையைக் கொடுத்து அதில் நீர்நிரப்பித் தூக்கிக் கொண்டு வருமாறு சின்னம்மா சொன்னாள். நாங்கள் சின்னக் குடங்களில் நீரைச் சுமந்து வந்து கொஞ்சம் கொஞ்சமாய் அந்த பெரிய குடத்தை நிரப் பினோம். அந்த பெரிய குடத்தைத் தூக்குவது எப்படி? நாங்கள் இருவரும் சேர்ந்தாலும் தூக்க முடியாது. என்ன செய்வது? அங்கே கீழே விழுந்து கிடந்த விறகுக் கட்டைகளையும், மரத்தில் ஏறிப் படர்ந்திருந்த கொடி ஒன்றை இழுத்து அறுத்தும் குடத்தின் வாயில் குறுக்கே பிடித்துத் தூக்க வாகாகப் பொருத்தி இறுக்கக் கட்டினோம். இப்பொழுது கட்டையின் ஒரு பக்கத்தை அக்காவும், மற்றொரு பக்கத்தை நானும் சேர்ந்து தூக்கினோம். நான்கு அடிகள் தூரம் நடப்பது, அப்புறம் சற்றே நின்று இளைப்பாறுவது என்கிற வகையில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறினோம். எப்படியோ மெல்ல மெல்ல அறை வாசல் வரைக்கும் தூக்கி வந்துவிட்டோம். அதற்கே எங்களுக்கு ஏகப்பட்ட சிரமமாயிற்று. மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. எப்படியோ கொண்டு வந்து விட்டோம் என்கிற சந்தோஷத்தில், எப்படி யாவது மேலும் முயன்று உள்ளே கொண்டு போய் வைத்துவிட்டால் சின்னம் மாவுக்கு மகிழ்ச்சியுண்டாகக் கூடும் என்று நினைத்தோம். ஆனால் எங்கள் கெட்ட நேரத்தை என்னவென்று சொல்வது? வாசலைத் தாண்டி உள்ளே செல்ல மத்தியில் இருந்த அறை வாசல்படி கொஞ்சம் உயரமாக இருந்ததால் குடத்தைத் தூக்க வேண்டி யிருந்தது. எதிர்பாராமல் வாசலில் இடித்து குடம் அங்கேயே உடைந்தது. வீடெங்கும் தண்ணீரானது. வந்து பார்த்த சின்னம்மா எங்கள் இருவரையும் சரமாரியாய் அடித்து நொறுக்கினாள். என்மேல் அடிகள் விழும்போது என் அக்கா பெரிதும் அழுதபடி 'சின்னம்மா, தம்பியை அடிக்க வேண்டாம். வேண்டுமென்றால் என்னை எவ்வளவு வேண்டுமானாலும் அடியுங்கள்' என்று கையைக் குறுக்கே நீட்டித் தடுத்தாள். அதைப் பார்த்ததும் எங்கள் சின்னம்மா வுக்கு மேலும் கோபம் கூடியது. 'தம்பிக்காரனுக்குப் பரிந்து கொண்டு வருகிறாயா திறுக்கி,' என்று என்னையும், என் அக்கா வையும் மேலும் வேகமாக அடிக்க ஆரம்பித்தாள். சிறிது நேரத்தில் சித்தப்பா வீட்டுக்குத் திரும்பினார். அவரிடம் இல்லாததையும் பொல்லாததையும் திரித்து பொய்களாகச் சொன்னாள். சின்னம்மா. அவருக்கும் எங்கள்மேல் கோபம் உண்டானது. அங்கே கீழே கிடந்த பிரம்பை எடுத்து என்னையும், அக்கா வையும் அவர் பங்குக்கு அடித்தார். எங்கள் உடம்பெங்கும் வீக்கங்கள் கண்டன. அங்கங்கே ரத்தம் கசிந்து கொண்டி ருந்தது. அன்று முழுக்க வயிற்றுக்குச்

சோறில்லை. இரவு நெருங்கியது. வாசலைச் சாத்திக்கொண்டு சித்தப்பாவும் சின்னம்மாவும் படுத்துக் கொண்டார்கள்.எங்கள் கம்பளி வீட்டுக்குள் மாட்டிக் கொண்டது. வெற்று உடம்புடன் வெடவெடக்க மாட்டுக் கொட்டகையில் உட்கார்ந்து கொண்டிருந்தோம். அடி வாங்கிய வலி, குளிர், வெறும் வயிற்றின் உக்கிரம். தூக்கம் வரவில்லை. அங்கெல்லாம் புலி, சிறுத் தைகளின் தொல்லை அதிகம். நடு இரவைத் தாண்டிக் கொண்டிருந்தது. ஒரு புலி உறுமிக் கொண்டே எங்கள் கொட்டடியை நெருங்கி வருவது போல இருந்தது. எங்களுக்கு அளவுகடந்த பீதியானது. கைகால்கள் நடுங்கின. உட்கார்ந்த இடத்திலேயே கால்களைச் சேர்த்துக் கட்டி சத்தமின்றி உட்கார்ந்திருந்தோம். புலி அப்படியே திரும்பிப் போனது. 'எங்காவது குளம், குட்டையில் விழுந்து சாவலாம், வரு கிறாயா?' என்று என்னைக் கேட்டாள் என் அக்கா, சாவது என்றால் என்ன என்று எனக்குத் தெரியாது அப்போது. 'அப்படிச் செத்துவிட்டால் சின்னம்மா அடிக்க வந்தால் என்ன செய்வது. என்னால் அடி தாங்க முடியவில்லை அக்கா' என்றேன் நான். என் பேச்சைக் கேட்டு அக்காவுக்கு மிகவும் துக்கமாயிற்று. என்னைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்தாள். அதற்குள் விடிந்தே விட்டது. எழுந்து உட்காரக் கூட எங்களுக்குப் பலமில்லை. வாசலைத் திறந்து வந்த சித்தப்பா எங்கள் இருவரையும் பார்த்தார். 'ஏன் ராத்திரி சாப்பிடவில்லை?' என்று கேட்டார். நடுங்கிய படியே நான் கீழே விழுந்து விட்டேன். அப்போது உள்ளிருந்து உலர்ந்த ரொட்டியை கொண்டு வந்து எங்களுக்குத் தந்தார் சித்தப்பா. அதைத் தின்று தண்ணீர் குடித்த பிறகு தான் எங்களுக்கு உயிர் வந்தது. இப்படியே பல விதமான சிரமங்களுக்கிடையே காலத்தைக் கழித்து வந்தோம் நாங்கள். என் அக்கா சமையல் வேலையைச் செய்து வந்தாள். சின்னம்மா சமையல் சம்பந்தமான எல்லா வேலைகளையும் அக்கா மூல மாகவே செய்வித்தாள். அதன் மூலம் எங்கள் இருவருக்கும் எப்படியோ வயிறு நிறைய சாப்பாடு கிடைத்து வந்தது.

நாங்கள் மராத்திய வம்சத்தைச் சேர்ந்தவர்கள். பருவம் அடைவதற்கு முன்பேயே பெண்களுக்கு மணம் செய்து விடுவது வம்சப் பழக்கமாம். என் அக்கா பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பாள். பன்னிரண்டு வயது ஆகிக் கொண்டிருந்தது அவளுக்கு. அவளைத் திருமணம் செய்து கொள்ள அநேகம் பேர் முன் வந்தனர். ஐம்பது வராகன் கொடுப்பவருக்கே மணம் முடித்து வைப்பதாக சித்தப்பா ஒரே பிடிவாதமாக இருந்தார். திருமணத்துக்கு முன் ஒரு வேளை பருவமடைய நேரிடின் வம்சத்தைவிட்டு தள்ளி வைத்துவிடுவார்களே என்கிற பீதியில் யாராவது, எப்படியாவது, மணம் செய்து கொண்டு போனால் போதும் என்று அக்கா கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டாள். சமவெளிப் பிரதேசத்திலிருந்து பெண் கேட்டு ஒருவன் வந்தான். வழக்கம் போலவே ஐம்பது வராகன் கொடுக்கிறவர்க்கே மணம் செய்து வைப்ப தாகவும், அதற்கு ஒரு காசு குறைந்தாலும் மணம் கிடையாது என்றும் பழைய பல்லவியையே பாடினார், சித்தப்பா. கடைசியில் ஒரு வழியாக ஐம்பது வராகன்களை

எண்ணிக்க கொடுத்து விட்டு பெண்ணை அப்போதே அனுப்பி வைக்குமாறு கேட்டான் அவன். 'எங்களுக்கும் சோறு மிச்சமாச்சு, இப்பொழுதே வேண்டு மானாலும் அழைத்துப் போ' என்றாள் சின்னம்மா. அக்காவும் புறப்பட்டுச் செல்ல ஒத்துக் கொண்டாள். அப்பொழுது எங்கள் சின்னம்மா, 'என் வீட்டுப் புடவையை கழற்றிவிட்டு உன் புருஷன் வீட்டுப் புடவையைக் கட்டிக் கொண்டு போ' என்றாள். அதற்கு அவன், ரொம்ப நன்றாக இருக்கிறது உங்கள் கதை. ஐம்பது வராகன் எண்ணிக் கொடுத் திருக்கிறேன். பிறந்த வீட்டிலிருந்து ஒரே ஒரு பழம்புடவையைக் கூட கட்டிக் கொண்டு போகக் கூடாது என்று நீங்கள் சொன்னபிறகு, உங்கள் பெண்ணே எனக்கு வேண்டாம்' என்று கிளம்ப ஆரம்பித்தான். அப்போது அமைதியாய் இருக்க முடியாத அக்கா அவனைப் பார்த்து, 'ஐயா, எனக்காக ஐம்பது வராகன் கொடுத்துள்ளீர்கள். அவற்றோடு எனக்காக ஒரு அழுக்குத்துணிக்கு வழி செய்யக் கூடாதா? தயவு செய்து ஒரே ஒரு துணியை எனக்குக் கொடுத்து இந்த கஷ்டங்களிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்' என்று அழ ஆரம் பித்தாள். அவன் மிகவும் மனம் இரங்கி தன்னிடம் மாற்றுத் துணியாக இருந்த ஒரு வேட்டித் துணியை எடுத்து அவளிடம் நீட்டினான். அதை உடுத்திக் கொண்டு, பழைய துணியை அவிழ்த்து வைத்த அக்கா என்னைத் தழுவிக் கொண்டு அழுதாள். 'அக்கா, என்னை விட்டுப் போகாதே அக்கா, என்னால் அடி தாங்க முடியாது அக்கா,' என்று பலமாக அழ ஆரம்பித்தேன் நான். எங்கள் இருவரின் துயரத்தைக் கண்டு மாமாவின் மனம் இரங்கியது. அனுப்பி வைத்தால் என் னையும் கூடவே அழைத்துக் கொண்டு போய் காப்பாற்றுவேன் என்று மாமா சித்தப்பாவிடம் பிரஸ்தாபித்தார். ஆனால் அனுப்ப முடியாது என்று பிடிவாதமாக மறுத்தார் சித்தப்பா. அப்போது என்னை மீண்டும் தழுவி தலையை ஆதரவுடன் தடவிக் கொடுத்து 'எங்கே இருந்தாலும் நல்லபடி வாழ் தம்பி' என்று உச்சி மோந்து அழுதபடியே புறப் பட்டுச் சென்றாள்.

அக்காவைப் பற்றிய ஞாபகங்கள் பசுமையாய் நினைவில் இருந்தன. அவளை அடிக்கடி நினைத்து அழுதேன். என் அக்காவை அனுப்பியதன மூலம் பெற்ற ஐம்பது வராகன்களையும் ஒரு சின்ன மண்பாத்திரத்தில் போட்டு வைத்திருந்தார் சித்தப்பா. அதை யாருக்கும் தெரியாமல் எடுத்துக் கொண்டு ஊரில் இன்னொருவனோடு சேர்ந்து எங்கேயோ ஊரைவிட்டே ஓடிப் போனாள் சின்னம்மா. மாவு அரைக்கக் கூட வீட்டில் யாரும் இல்லாத நிலைமை. கடைசியில் அந்த ஊரைவிட்டுச் சித்தப்பா என்னையும் அழைத்துக் கொண்டு ஊரூராக அலைய ஆரம்பித்தார். வழியில் பார்த்தவர்கள் எல்லா ரிடமும், 'இருபது வராகன் கொடுப்பவர்களுக்கு இந்த பையனைக் கொடுத்து விடுவேன்' என்று சொல்லிக் கொண்டே வந்தார். இச்சங்கதியைச் சொல்லும் போதெல்லாம் நான் பிறந்த தேதி, கிழமை, நட்சத்திரம் எல்லாம் சொல்லி இந்த பையனை வளர்ப்பவரிடம் நிறைய பணம் சேரும் என்றும், இவன் பெரிய

புண்ணியவானாக வளர்வான் என்றும் ஆருடம் பார்த்தவர்கள் சொல்லி இருக்கிறார்கள் என்றும் சொல்ல ஆரம்பித்தார். கடைசியில் அரிக்கொட்டா ரத்துக்குப் பக்கத்தில் இருக்கும் சஞ்சவாடிக்கு வந்தோம். சாயங்கால வேளை. வழிச் சாப்பாட்டுக்காக நாங்கள் கொண்டு வந்திருந்த ரொட்டியெல்லாம் தீர்ந்து ஏற்கனவே நான் ஒரு முழு நாள் பட்டினியாகவும், சித்தப்பா இரண்டு நாள் பட்டினியாகவும் இருந்தோம். அவருடைய பெரிய மூட்டையைத் தூக்கிக் கொண்டு அவர் பின்னாலேயே ஓடி ஓடி எனக்கும் போதும் போது மென்றானது. அந்த ஊரில் இருக்கிற அம்மன் கோயில் முற்றத்தில் சென்று படுத்துக் கொண்டோம். யாராரோ அங்கே வந்து உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எங்களைப் பற்றிய விவரங்களை விசாரித்தார்கள். எங்கள் கதையை சித்தப்பாவே சொன்னார். அவர்களில் ஐம்பதுக்கும் மேல் வயது மதிக்கத் தக்க ஒருவர் எங்கள் மேல் இரக்கப்பட்டு எங்களைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று உணவு படைத்தார். எங்களுக்கோ கடுமையான பசி. அவர் சாதி, குலம் பற்றிக் கூட எதுவும் விசாரிக்கத் தோன்றாமல் சாப்பிட்டு முடித்தோம். அவரது வீட்டு வாசலையும், வீட்டின் உள் அமைப்பையும் பார்த்து ஏதோ உயர்ந்த சாதியைச் சேர்ந்தவராகத்தான் இருக்க வேண்டும் என்று நாங்களாகவே நினைத்துக் கொண்டோம். எது எப்படியோ, எங்கள் வயிறு நிரம்பியது. அந்த வீட்டுத் திண்ணையிலேயே நான் படுத்துக் கொண்டேன். அவரும் என் சித்தப்பாவும் ஏதேதோ பேசி விட்டு, பேச்சுவாக்கில் என்னைப் பற்றியும் பேசத் தலைப் பட்டனர். அதற்குள்ளாகவே எனக்கு உறக்கம் வந்தது. அதற்கப்புறம் என்ன பேசிக் கொண்டார்கள் என்கிற விவரம் எனக்குத் தெரியாது. விடிந்தது. தெரு வாசலில் ஒரு பத்து ஆள்கள் கூடிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த விவரம் எதுவும் எனக்குத் தெளிவாகப் புரிய வில்லை. அவர்களுள் ஒருவன், 'என்ன யோசிக்கிறாய். உனக்கோ பிள்ளை இல்லை. பையனும் அழகாக இருக்கிறான். அவன் பிறந்த நாள், நட்சத்திரப்படி இவன் மூலம் அநேக காரியங்கள் நடக்க உள்ளன. பணத்தின் பொருட்டு தயங்க வேண்டாம். ஒரே நாளில் இதைப் போல நூறு மடங்கும் சம்பாதிக்கும் திறமை உடையவன் இவன் என்று சொன்னான். இதற்குள் அந்த ஊர் ஆண்கள் எல்லாருமே வீட்டு முன்பு கூடிவிட்டார்கள். அவர்களும் கூட, "தயக்கம் வேண்டாம் மாதய்யா, பணத்தைக் கொடுத்து விட்டு பையனை நிறுத்தி வைத்துக் கொள்" என்றார்கள். அதற்குள் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு இருபது வராகனைச் சித்தப்பாவிடம் கொடுத்தார். தன் சந்தோஷத் துக்கு அடையாளமாக தன் ஒரு வேட்டியையும், ஒரு கம்பளியையும் வீட்டி லிருந்து கொண்டு வந்து வெற்றிலை பாக்கு வைத்து ஒரு தட்டிலிட்டுக் கொடுத்தார். அதை வாங்கிக் கொண்ட சித்தப்பா சாப்பாட்டிற்குப் பிறகு, 'நான் வருகிறேன்' என்ற சொல்லிக்கொண்டு புறப்பட்டுச் சென்றார். அந்த ஊர் மக்களெல்லாம் ஒவ்வொருவராக வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள். மாதய்யனுக்கு என்னைத் தவிர வேறு ஆண்குழந்தையோ, பெண் குழந்

தையோ இல்லை. வீட்டில் அவரும், அவர் துணைவியாரும் மட்டுமே இருந்தார்கள். என்னை அவர்கள் மிகவும் அன்போடு பார்த்துக் கொண் டார்கள். நானே அவர்களின் செல்லக் குழந்தையானேன். அன்றைய தினம் ஊரார் எல்லாருக்கும் வீட்டில் விருந்துக்கு ஏற்பாடானது. எனக்கு அமாவாசை என்று பெயரிட்டார்கள்.

ஊர் மக்கள் எல்லாருமே என்னிடம் அன்போடு இருந்தார்கள். அடிகள் எல்லாம் என் சித்தப்பா காலத்தோடேயே போயிற்று. அம்மன் கோயிலுக்குப் பின்பக்கம் இருக்கும் உடற்பயிற்சி நிலையத்துக்கு அழைத்துச் சென்று சில நாட்கள் எனக்கு பயிற்சி தந்தனர். பிறகு சிலம்பச் சண்டை, கத்திச் சண்டை, வாட்சண்டை, சுருள்கத்தி வீச்சு, குஸ்தி, ஓட்டம், தாண்டுதல் ஆகியவற்றில் கடுமையான பயிற்சி யளித்தனர். நானும் எல்லாவற்றையும் ஆர்வத்துடன் கற்றேன். அவற்றை அடிப்படையாக வைத்து சில புதிய முறைகளையும் செய்து காட்டினேன் நான். அந்த ஊரில் இருந்தவர்கள் எல்லாம் என்னைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டார்கள். எல்லாரும் எனக்குச் சிற்றுண்டி முதலிய வற்றைக் கொடுத்து உபசரித்தார்கள் வீட்டிலும் எனக்கு நல்ல சாப்பாடு கிடைத்தது. நாளுக்கு நாள் வளர்ந்தேன். நாள்தோறும் நான் உற்சாகத்துடன் எனக்குச் சொல்லித் தரப்படும் விஷயங்களைக் கற்றறிந்தேன் எந்த வேலையும் எனக்குச் சிரமமளிக்கவில்லை. கொஞ்சமும் எனக்குப் பயம் இல்லை. எல்லா வேலைகளுக்கும் நானே முதல் ஆளாய் நின்றேன். மற்றவர்கள் தம்மால் முடியாது என்ற வேலை களையெல்லாம் நான் முடித்துக் காட்டினேன். எனக்கு சுமார் பதினெட்டு வயது நிரம்பியது. ஒரு நல்ல நாள் பார்த்து என் குடுமியை மழித்து தலையை மொட்டை அடித்தனர். எனக்குப் புத்தாடை அணிவித்தனர் கழுத்தில் மாலையுடன் அம்மன் கோயிலுக்குச் சென்று விசேஷ பூஜை செய்தனர். நெற்றியில் குங்குமம் இட்டனர். அங்கே பூசாரியாய் இருந்த அப்பாஜி என்பவன் வெள்ளிப்பூண் போட்ட பிரம்பை எடுத்து வந்து மந்திரங்கள் ஏதோ முணுமுணுத்தபடி மந்திரித்தான். பழம், காய் ஆகிய பிரசாதங்களைக் கொடுத்தான். அப்புறம் எல்லாரும் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றோம். மாதய்யாவை நான் அப்பா என்றும், அவர் துணைவியாரை நான் அம்மா என்றுமே அழைத்து வந்தேன். ஒரு நாள் அப்பாவும், ஊர்ப் பெரியவர்களும் உட்கார்ந்திருந்த சமயத்தில் என்னைப் பற்றிய பேச்சு அடிபட்டது. என்னைப் பற்றி அவர்கள் சொன்ன விஷயம் என்ன வென்றால்—

மாதய்யா: 'இந்த ஊரில் நாம் எல்லாரும் ஒற்றுமையாக இருக்கிறோம். இருள் நேரங்களிலும், மழைக்காலத்திலும் நாம் ஊரைவிட்டு காட்டு வழிகளில் செல்கிறோம். நாம் போய்வரும் வழி நம்மைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. நமக்கு மட்டுமே தெரியும். நம்மை யாரும் தொடர்ந்து வந்து பிடித்து விட கூடாது என்பதால் இந்த ஏற்பாடு. ஊரைவிட்டு ஊர் சென்று செல்வந்தர்கள் வீட்டில் கன்ன மிடுகிறோம். உள்ளே நுழைந்து கிடைத்த

பொருள்களை வாரிச் சுருட்டி எடுத்து வருகிறோம். இந்த விஷயத்தில் எல்லாரும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறோம். அதாவது நம் திருட்டைப் பற்றி யாரேனும் கண்டுபிடிக்கிற பட்சத்தில் ஒருவர் பற்றிய விவரங்களை இன்னொருவர் சொல்லக் கூடாது. நாங்கள் ஈடுபடும் காரியம் கைகூடுமா, கூடாதா என்பதில் அம்மன் கோயில் பூசாரி அப்பாஜி குறி பார்த்துச் சொல்வான். எங்களுக்காக விசேஷமாகப் படைத்து பிரசாதங்கள் வழங்கு வான். இதனால் எங்க ளுக்குக் கிடைப்பதில் பத்தில் ஒரு பாகம் அவனுக்கும் கொடுத்து வந்தோம். கன்னம் இட்ட இடத்தில் நுழைந்து நகைகள், பணம் முதலானவற்றைக் கொண்டு வரும் ஆளுக்கு ஒரு பங்கு கொடுப்போம். நகரத்தின் காவல் ஆளுக்கு ஒரு பங்கு கொடுப்போம். நகரத்தின் காவல் சேவகர்களுக்கு ஒரு பங்கு கிடைக்கும். எஞ்சிய ஏழு பங்குகளை மிச்சமுள்ள அனைவரும் சமமாகப் பகிர்ந்து கொள்வோம். உள்ளே நுழைந்து திருடப் போகிறவன் அமாவாசை அன்று ஞாயிற்றுக்கிழமை, சித்தரா நட்சத் திரத்தில் பிறந்தவனாக இருக்க வேண்டும். உன் பிறந்த நாள், நட்சத்திரமும் இதற்குப் பொருத்தமாக இருக்கிறது. நீ தைரியமாக இந்த வேலையைச் செய்ய முடியுமா?"

அமாவாசை: "எந்த வேலையைச் செய்வதற்கும் நான் பயப்படவில்லை. எந்த ரகசியமும் என்னை மீறி வெளியே வராது. எல்லாரும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும். நமக்குள் எப்போதும் ஒற்றுமை இருக்க வேண்டும்"

மாதய்யா: "பயமின்றி நீ தைரியத்துடன் வேலை செய்தால் போதும். நாம் எல்லாரும் சேர்ந்து வேலை செய்கிறோம். நாளைய தினம் எல்லாரும் புறப் படுகிறார்கள் அவர்களோடு நீயும் கிளம்ப வேண்டும். அதனால்தான் உன்னைக் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறோம். நீ செய்ய வேண்டிய வேலைகளைப் பற்றிச் சொல்கிறேன். கேள். கன்னமிட்ட இடத்தில் நுழைய வேண்டிய நாளுக்கு முதல் நாள் இரவு நன்றாகத் தூங்கி எழ வேண்டும். தலையை நன்றாக மழித்துக் கொள்ள வேண்டும். குடுமி இருக்கக் கூடாது. பற்றி இழுக்க அது ஒரு வேளை துணையாகக் கூடும். அன்றைய தினம் பகல் வேளையில் அரை வயிற்றுக்குச் சாப்பிட வேண்டும். இரவில் வெறும் பாலைத்தான் குடிக்க வேண்டும். சோறு சாப்பிடக் கூடாது. அப்படி சாப்பிடும் பட்சத்தில் தப்பித்துக் கொண்டு ஓடும் போது சுமையாக இருக்கும். உடம் பெங்கும் எண்ணெய் பூசிக் கொள்ள வேண்டும். பிடிக்கும்போது வழுக்கிக் கொள்ள வேண்டும். அரைஞாண் கயிறு கூடாது. அன்றைய தினம் பிடித்தால் அறுபடுகிற மாதிரி வாழை நார்தான் பயன் படுத்த வேண்டும். முகத்துக்கு நன்றாக கறுப்பு மை பூசிக் கொள்ள வேண்டும். யாராவது பார்க்கும் பட்சத்தில் உடனடியாக அடையாளம் காண முடியாமல் போகும். யாராவது மீறிப் பிடிக்கும் பட்சத்தில் அவர்களது மர்ம ஸ்தானத்திலேயே எட்டி உதைத்து விட்டு ஓடிப் போக வேண்டும். இடுப்பு நாரில் சின்ன கத்தி ஒன்றைச் செருகி எடுத்துக் கொண்டு போக வேண்டும். பிடிபட்டால் பிடிப்பவர்களின் விலாப் புறத்திலோ, வயிற்றிலோ எட்டி செருகி விட்டு ஓடிவிட வேண்டும். வீட்டுக்குள்

புகுந்து திருடும் போதும் ரொம்ப எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். சுவர் அலமாரிகளில் சின்ன பெட்டிகளை வைத்திருப்பர்கள். உள்ளே நுழைந்ததும் முதலில் இவற்றை எடுத்து வெளியே நிற்பவர்களிடம் கொடுக்க வேண்டும். பெரிய பெட்டிகளை சாமர்த்தியமாய்த் திறந்து நகைகளை எடுக்க வேண்டும். பெண்கள் அணிந்து கொண்டிருக்கும் ஆபரணங்களை அவர்களுக்கு விழிப்பு வராதபடி பார்த்துக் கழற்ற வேண்டும். கழுத்தணிகளைக் கச்சிதமாக கத்தரிக் கோலால் கழற்ற வேண்டும். கைகால்களில் அணிந்து கொண்டிருக்கும் ஆபரணங்களைச்சத்தமின்றி வெட்டி வாயை அகலமாக்கி மெல்லக் கழற்ற வேண்டும். ஆனால் அவர்கள் திருமாங்கல்யத்தை மாத்திரம் தொடக் கூடாது. திருடப் போகும்போது பெண் ஆசை வரக்கூடாது. புறப்படும் போது வீட்டுத் தலைவனையும் தலைவியையும் வணங்கி விட்டுப் புறப்பட வேண்டும். கன்னத் திற்குள் புகுந்ததும் வேகமாக வெளியேறுவதற்குத் தக்கபடி வீதி வாசல் வரைக்கும் அல்லது பின்கட்டு வாசல் வரைக்கும் எல்லாக் கதவுகளையும் திறந்து வைக்க வேண்டும். திருடப் போகும் கும்பலில் எவருக்கேனும் பலமான காயங்கள் பட்டுக் கிடக்கும்போது, அவருக்கும் இன்னும் உயிர் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி, அவர் தலையை வெட்டி எடுத்துக் கொண்டு கிளம்பிவிட வேண்டும். உன் வேலை இதுதான். மற்றவர்கள் தத்தம் வேலை களைச் செய்வார்கள். கன்னமிடும் நாளின் பகல் பொழுதில் சன்னியாசி யாகவோ, யோகியாகவோ, சோதிடனாகவோ மாறுவேஷமிட்டு எந்த வீட்டில் கன்னமிட வேண்டுமோ அந்த வீட்டுக்குச் செல்ல வேண்டும். அந்த வீட்டு ஜனங்களுடன் நல்லபடி பேசிக் கொண்டே வீட்டில் நுழைந்து அந்த வீட்டில் நிலையையும், அமைப்பையும் புரிந்து கொள்ள வேண்டும்."

இவ்விதமாய் என் அப்பா கன்னம், களவு பற்றிய எல்லா ரகசியங் களையும் நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுத்தார். எல்லாவற்றையும் ஊன்றித் தெரிந்து கொண்டேன். எந்த வேலையும் அசாத்தியமான ஒன்றாக எனக்குத் தோன்றவில்லை.

ஏற்கனவே திட்டமிட்டபடி மூன்றாம் நாள் எல்லாரும் கோயம்புத் தூருக்குச் சென்றோம். எங்கள் கூட்டாளிகள் எல்லாம் தனித்தனியே கிளம்பி ஒன்றாகச் சேர்ந்தனர். பகல் வேளையில் எல்லாரும் தனித்தனியேதான் எங்கெங்கோ தங்கி இருந்தோம். இரவானதும் எங்கேனும் ஒரு இடத்தில் சேருவோம். கலெக்டர் ஆபிஸில் தலைமைக் குமாஸ்தாவான நவநீதலிப்த ஐயங்கார் ஏராளமான பொன்னும் பொருளுமாய் இருக்கிறான் என்ற சங்க தியைச் சேகரித்தோம். பகல் முழுக்கக் காத்திருந்துவிட்டு ஒரு நாள் இரவு எங்கள் கைவரிசையை காட்டினோம். 'ஜய் பரமேஸ்வரி' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டே நான் உள்ளே நுழைந்தேன். தங்க நகைகளும், பத்து அல்லது பதினைந்து ரூபாய் பணமும் கிடைத்தது. அன்றைய தினம் இரவே எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு காட்டு வழியாக இரவும் பகலும் நடந்து ஊருக்கு வந்து சேர்ந்தோம். அந்த தலைமைக் குமாஸ்தாவுக்கும் இன்னொரு

லஞ்சக்காரனுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்த காரணத்தால் அரசாங் கத்தார்கள் அவனைப் பிடித்துத் துன்பப்படுத்தினர் என்கிற விஷயத்தை அப்புறம் தெரிந்து கொண்டோம்.

முதல் முயற்சியிலேயே இவ்வளவு செல்வத்தோடு நான் திரும்பியதைக் கண்டு ஊரில் எல்லாருக்கும் ஆச்சரிய மானது. இப்படியே நாங்கள் ஸ்ரீரங்கம், திருச்சி, கும்ப கோணம், மதுரை, சேலம், திண்டுக்கல், தாராபுரம், திரு நெல்வேலி, ஆகிய ஊர்களிலும், அநேக கிராமங்களிலும் நுழைந்து எங்கள் கைவரிசையைக் காட்டினோம். சில ஊர்களில் நான் பிடிபட்டதுண்டு. அப்பொழுதெல்லாம் என் திறமையால் தப்பித்து வெளியே வந்தேன். சிலரைக் கத்தியால் குத்திமாய்த்துவிட்டுக் கூட ஒடி வந்திருக்கிறேன். அவர்களில் பலர் இறந்துவிட்டனர் என்கிற சங்கதியைப் பிற்பாடு கேட்டுத் தெரிந்து கொண்டேன். பணத்தை நான் எடுத்துக் கொள்வதில்லை. தங்கம், வெள்ளி, மாணிக்கங்களை மாத்திரம் எடுத்து கன்னத்திற்கு மறுபக்கம் காத்திருப்பவர் களிடம் கொடுத்து விடுவேன். சாத்தியமான அளவு எடுத்த எல்லா நகை களையும் உருக்கி விடுவோம். ஊர் காவல் நிலைய பங்கை மாத்திரம் நகை களாகவே கொடுத்து விடுவோம். சாம்ராஜ நகரக் காவல் அதிகாரிகளின் மற்றும் சேவகர்களின் வீட்டில் இப்பொழுதும் நாங்கள் கொடுத்த நகைகள் உண்டு. நான் கன்னத்திற்குள் புகுந்த பிறகு யாரும் அப்பக்கம் வராதபடி எங்கள் ஆட்கள் கத்தி, கட்டாரி, கழிவைத்துக் கொண்டு காவல் காத்து நிற்பார்கள். அந்த இடத்துக்கு நூறு கஜம் தூர அளவுக்கு யார் வருவதாகத் தெரிந்தாலும் அவர்களை அடித்து நொறுக்கி விடுவார்கள். எங்கள் ஆட்கள் எல்லாருமே ஓடுவதில் வல்லவர்கள். பெட்டி வண்டி, சாரட்டு வண்டி என்று பட்டப் பெயர் உள்ளவர்கள் அதைப் போலவே வேகத்துடன் ஓடும் வல்லமை யுள்ளவர்களாய் இருந்தனர். குத்தய்யா, நெலக விசித்தேஷ்வர் ஆகியோர் கன்னம் வைப்பதில் மிகவும் சாமர்த்தியசாலிகள். கன்னம் வைப்பதில் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு வகையான முறையும், திறமையும் இருந்தன. வெளியே உட்கார்ந்து கொண்டு உள்ளிருந்து செய்தது போல தோற்றம் தருகிற கன்னமிடுகிறவன் ஒருவன் உண்டு. அவன் மிகவும் திறமைசாலி. எங்களுக்குப் பல மொழிகள் தெரியும். பலரும் பலவிதமான வேஷங்கள் போடுவார்கள். ஒருவன் காட்டுப் பன்றியைப் போல வேஷமிட்டுக் கொண்டு அதைப் போலவே கத்தவும் செய்வான். அவனுக்கு வரகன் என்று பெயர். மற்றொ ருவன் கரடியைப் போலவே வேஷ மணிவான். இவனுக்கு ஜாம்பவன் என்று பெயர். இரவு வேளைகளில் யாரேனும் துரத்திக் கொண்டு வரும்போது பன்றியைப் போலவும், கரடியைப் போலவும் சத்தமெழுப்பி அவர்களைப் பயப்படும்படி செய்தனர். இப்படியே பல நாள்கள் தொடர்ந்து சமவெளியில் இருக்கும் அநேக செல்வந்தர்களின் வீடுகளில் கொள்ளையடித்துப் பொருள் ஈட்டினோம்.

ஒரு முறை இன்னொரு ஆச்சரியமான சம்பவம் நடந்தது. சத்தியமங்கலம் தாலுக்காவில் ஒரு கிராமம் இருந்தது. அங்கே கவுண்டர் ஒருவர் வசிக்கிறார் என்றும், அவர் பெரிய புண்ணியவான் என்றும் கேள்விப்பட்டோம் அந்த ஊருக்குப் புறப்பட்டுச் சென்றோம். அங்குமிங்கும் திரிந்து கொண்டிருந்தோம். நான் அந்தத் தெருவழியே வந்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் இரவில் யார் வீட்டில் கன்னம் வைக்க நாங்கள் திட்டமிட்டிருந்தோமோ, அதே வீட்டி லிருந்து ஒரு பெண் வெளிப்பட்டாள். அவள் பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தாள். இடுப்பில் ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டும், இன்னொரு குழந்தையை நடத்தி இட்டுக் கொண்டும் வீட்டிலிருந்து வெளிப்பட்டாள் அவள். ஏராளமான நகைகளை அணிந்திருந்தாள் அவள். அதைப் பார்த்ததுமே அன்றைய இரவு எங்கள் காரியத்துக்கு கிடைக்கக் கூடிய பயனை நினைத்து மகிழ்ச்சியுற்றேன். அவளைப் பார்த்தபடியே நான் அந்த வீட்டைத் தாண்டிக் கடக்க முனையும் போது அந்தப் பெண் என்னையே உற்று உற்றுப் பார்ப்பது தெரிந்தது. என்னை அடையாளம் காண முயல்கிறாளோ என்கிற அச்சம் மூள எனக்குள் இதயம் வெகுவேகமாக அடித்துக் கொண்டது. நடையைத் துரித மாக்கினேன். "எந்த ஊர் உனக்கு?" என்று என்னைக் கேட்டாள். அவள் கேட்டது காதில் விழாத வண்ணம் நான் மெதுவே நடந்து கொண்டிருந்தேன். மீண்டும் அவள் வேகமாக "நீ ஜெயப்பாதானே?" என்று கேட்டாள். ஜெயப்பா என்கிற பெயர் என் உண்மையான அப்பா வைத்த பெயர். என் பழைய பெயரைச் சொல்லிக் கூப்பிடும் பெண் யாராயிருக்கும் என்று பார்க்க ஆவல் தூண்டியது. நடப்பது நடக்கட்டும் என்று திரும்பி அவளை நேருக்கு நேராகப் பார்த்தேன். அவள் என்னை நெருங்கி வந்து என்னை மீண்டும் உற்று உற்றுப் பார்த்தாள். "ஜெயப்பா, எங்கேயிருந்தடா வருகிறாய் தம்பி" என்று கேட்டாள். அவள் கண்கள் குளமாகின. அப்பொழுதுதான் அவளை என் அக்கா என்று தெரிந்து கொண்டேன். எனக்கும் கண்கள் கலங்கி விட்டன. இருவருமே கொஞ்ச நேரம் பேசாமல் நின்றிருந்தோம். அப்புறம் தன் வீட்டுக்குள் என்னை அழைத்துச் சென்றாள். இளமையில் அனுபவித்த கஷ்டங்கள் எல்லாம் மீண்டும் ஞாபகத்துக்கு வந்தன. மீண்டும் கலங்கினோம். புருஷனுடன் வீட்டைவிட்டு அவள் கிளம்பின நாளிலிருந்து நடந்ததையெல்லாம் சொன்னேன் நான். சித்தப்பாவும், சின்னம்மாவும் செய்ததையெல்லாம் விவரமாய்ச் சொன்னேன். தற்சமயம் எந்த ஊரில் இருக்கிறேன் என்கிற சங்கதியை மாத்திரம் சொல்ல வில்லை. வியாபாரம் செய்து கொண்டிருப்பதாகவும், அதற்காகவே அந்த ஊருக்கு வர நேர்ந்ததாகவும் சொன்னேன். பிறகு அக்கா தனக்கு மூன்று ஆண் குழந்தைகள் என்றும், மூன்று பெண் குழந்தைகள் என்றும், தான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பதாகவும், தன் ஆஸ்தி விவரங்கள் பற்றியும் அவள் சொன்னாள். தன்னுடனேயே இருந்துவிடுமாறு மிகவும் வற்புறுத்தினாள். மறுத்துவிட்டேன். இலை போட்டுவிட்டு சாப்பிடச் சொன்னாள். உள்வீட்டில் வந்து உட்கார்ந்து சாப்பிடச் சொன்னாள். நான்தான் வெளியேயே

உட்கார்ந்து சாப்பிடுகிறேன் என்றும் உள்ளே வந்து உட்காரும் தகுதி எனக்கில்லை என்றும் சொன்னேன். அவளும் வெளியிலேயே உட்கார வைத்து சோறு பரிமாறினாள். வெற்றிலை, பாக்கும் ஆனது. அதற்குள் அவள் பிள்ளைகள் அனைவரும் வந்து வணங்கினார்கள். மீண்டும் அக்கா என்னைத் தன்னுடனேயே இருந்து விடுமாறும், தன்னுடைய இரண்டாம் மகளைக் கொடுத்து திருமணம் செய்து வைப்பதாகவும் சொன்னாள். அடுத்த முறை வருவதாகவும், கூட வந்தவர்கள் எல்லாரும் ஊருக்கு வெளியே எனக்காகக் காத்திருப்பார்கள் என்றும் அவளிடம் நான் சொன்னேன். மீண்டும் என் அக்காவுக்குக் கண்கள் கலங்கின. 'கண்டிப்பாக வருவாயா தம்பி' என்று கேட்டாள். எனக்கும் வருத்தமாயிற்று. மீண்டும் மீண்டும் பழைய அனுப வங்கள் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. இளமையில் அக்காவுக்கு என்மேல் இருந்த அன்பையும், என்னை அடிக்க வேண்டாம் என்றும் அதற்குப் பதிலாகத் தன்னை வேண்டுமானாலும் அடித்துக் கொள்ளச் சொல்லி சின்னம்மாவின் குறுக்கே நின்றதையும் நினைத்துக் கொண்டேன். பொங்கிய துயரை மறைத்துக் கொண்டு அவளை வணங்கி விட்டுப் புறப்பட்டேன். அப்போது மனத்தில் ஏகப்பட்ட குழப்பம். இரவில் என்ன செய்வது நான்? கன்னம் வைத்து வீட்டுக்குள் புகுந்து கொள்ளையடிப்பதா, சொந்த அக்கா வின் வீட்டிலேயே கொள்ளையடித்து துரோகம் செய்வதா என்று புரியாமல் தவித்தேன். இறுதி நேரத்தில் நான் பின் வாங்கினால் கூட்டாளிகள் சும்மா விடமாட்டார்கள். குழப்பம் அதிகரித்தது. இறுதியில் நானே ஒரு முடிவுக்கு வந்தேன். அன்றைய இரவு கருப்புத் துணியை இடுப்பில் சுற்றிக் கொண்டு சென்றேன். இருட்டில் யார்க்கும் தெரியாது. கன்னமிட்ட இடத்தில் மெல்ல நுழைந்தேன். கொஞ்ச நேரம் உள்ளேயே நின்றிருந்தேன். துண்டுத் துண்டாக நறுக்கிய தங்க ஆபர ணங்களை ஒரு மூட்டை யாய்க் கட்டி மடியில் செருகி வைத்திருந்தேன் நான். அது சுமார் மூன்று சேர் எடை கொண்டதாக இருக்கும். அதை அக்காவின் தலை மாட்டில் வைத்துவிட்டு அவள் கால் களின் பக்கம் சென்று வணங்கி விட்டு வெளியேறினேன். கூட்டாளிகள் 'என்ன ஆயிற்று' என்றார்கள். "சாமான்கள் எல்லாவற்றையும் நிலவறையில் வைத்திருக்கிறார்கள் போலும்" என்றேன். 'வேறெந்த பொருளும் கிடைக்கவில்லை' என்று பொய் சொன்னேன்.

ஒரு முறை இன்னொரு விபரீதமான சம்பவமும் நடந்தது. ஒரு ஊருக்குச் சென்றோம் எனில் எங்கள் கூட்டாளிகள் அனைவரும் ஒரே இடத்தில் தங்குவது கிடையாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தில் இறங்கித் தங்கு வோம். அந்த ஊருக்கு வெளியே கூப்பிடு தூரத்தில் ஒரு கோயில் இருந்தது. பெரிய கோயில் அது. முற்றம் வெகு அழகாக இருந்தது. நான் அந்த முற்றத்தில் இறங்கித் தங்கிக் கொண்டேன். சுற்றிலும் அடர்ந்த காடு. மரங்கள் எல்லாம் வானைத் தொட்டுவிடும் உயரம். நடு மதிய வேளையில் கூட உட்புறம் வெயில் விழாது. அத்தன அடர்த்தி. எப்போதும் இருட்டாகவே இருக்கும். அங்கே

ஓநாய்கள் நடமாட்டம் அதிகம். கோயிலுக்குப் பக்கத்தில் சின்ன ஓடை ஒன்று இருந்தது. ஓடைக்குப் பக்கத்தில் காட்டுத்துளசி, காட்டு மல்லிகை, சம்பங்கி ஆகிய பூவகைகள் காணப்பட்டன. பூப்பறிக்க யாரும் இல்லை. பூக்களின் நறுமணம் எங்கும் பரவி இருந்தது. அருமையான சூழல். நான் அந்த ஓடையில் குளித்துவிட்டு சாத்தியப்படும் அளவுக்கு அங்கிருந்த பூக்களைப் பறித்து கோயிலில் இருந்த ஒவ்வொரு சிலையின் மீதும் ஒவ்வொரு கொத்துப் பூவை அள்ளி வைத்தேன். அந்த கோயிலுக்குப் போனதிலிருந்து யாரோ அழுகிற சத்தம் எனக்குத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. முடிந்த மட்டும் எல்லா இடங்களிலும் தேடிப் பார்த்தும் என் கண்ணுக்கு யாரும் தென்படவில்லை. கோயிலின் கருவறைக்குப் பக்கத்தில் செல்லச் செல்ல அழுகையோசை அங்கிருந்து வருவதைத் தெரிந்து கொண்டேன். வாசல் கதவு சாத்தப்பட்டிருந்தது. அந்த பூட்டை உடைத்தேன். எத்தனையோ சிக்கலான பூட்டுக்களையெல்லாம் உடைத்தவனுக்கு அது ஒன்றும் பெரிய விஷயமாய் இல்லை. கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றேன். உள்ளே மிகவும் இருட்டாக இருந்தது. எங்கோ ஒரு விளக்கு மட்டும் இப்பவோ எப்பவோ என்று எரிந்து கொண்டு இருந்தது. அதன் திரியை மீட்டி வெளிச்சமுடன் எரிய வைத்தேன். அங்கே ஒரு மணவறை அலங்கரிக்கப் பட்டு இருந்தது. தேங்காய், வாழைப் பழம், மஞ்சள், பூ, குங்குமம், பாக்கு, வெற்றிலை, அரிசி, நான்கு வாழை இலைகள், மற்றும் மங்களத் திரவியங்கள் எல்லாம் வைக்கப் பட்டிருந்தன. எதற்கோ ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி இருந்தது. நான் உள்ளே நுழைந்ததும் அதுவரைக்கும் கேட்டுக் கொண்டிருந்த அழுகுரல் நின்றது. அங்கேயே ஆன மட்டும் தேடிப்பார்த்தேன் நான். ஒரு மூலையில் மிக அழகான பெண் ஒருத்தி உட்கார்ந்திருக்கக் கண்டேன். 'நீ யார் அம்மா' என்று கேட்டேன். அவளோ பேசவில்லை. கைகால்கள் நடுங்கத் தொடங்கின அவளுக்கு. பயத்தால் தான் அப்படி நடக்கிறது என்று நினைத்து, "யாரம்மா நீ? பேசு. வாயைத் திறந்து சொல். எவ்விதமான கஷ்டத்தில் நீ அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய், சொல். எதுவாக இருந்தாலும் நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்றேன். அவளோ மேலும் மேலும் அழுதபடி "நீ யார்?" என்றாள். "நான் ஒரு பரதேசி" என்று பொதுவாய்ச் சொன்னேன். "என்னைக் காப்பாற்றுவதாக வாக்குறுதி கொடுப்பாயா" என்றுகேட்டாள் அவள். "உனக்கு எந்த கஷ்டம் வந்திருந்தாலும், அதிலிருந்து உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்று தைரியமூட்டினேன். அப்போது அவள், "முதலில் இந்த இடத்திலிருந்து யாருமே அற்ற இடத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு போ" என்று கேட்டுக் கொண்டாள். பக்கத்தில் இருந்த காட்டுக்குள் அவளை அழைத்துக் கொண்டு போனேன். அங்கே ஒரு பெரிய பாறை இருந்தது. அதற்குக் கீழே ஒரு பொந்து இருந்தது. அதற்குள் புகுந்து சென்றோம். உள்ளே உயரமாக திண்ணை போல ஓர் இடம் இருந்தது. பக்கத்திலேயே ஒரு நீர் ஊற்றும் இருந்தது. அந்தப் பொந்தின் வழியே காற்றும் வெளிச்சமும் வந்தது. அந்த இடத்திற்கு வந்து

எவ்வளவு தேடினாலும் சுலபமாக அகப்பட்டு விட முடியாது. அவ்வளவு பாது காப்பாக இருந்தது அந்த இடம். அங்கேயே நானும், அவளும் உட்கார்ந்து கொண்டோம். அப்போது அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

இங்கிருந்து சுமார் மூன்று கிராமங்கள் தாண்டி என் கணவனுடைய வீடு இருக்கிறது. நாங்கள் உப்பலிக சமூகத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். என் புருஷன் அழகான இளைஞன். நாங்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்திருந்தோம். இந்த ஊரில் செல்வாக்கு மிக்க ஒரு செல்வந்தன் இருக்கிறான். அவனுக்கு அறுபது வயது ஆகிறது. மூன்று மனைவி மார்கள் இருக்கிறார்கள். வேறு பிள்ளைகள் இல்லை. என்னைத் திரு மணம் செய்து கொண்டால் குழந்தை பிறக்கக்கூடும் என்பது அவனது திட்டம். என் பிள்ளைகளை என் புருஷனிடம் விட்டுவிட வேண்டுமாம். என்மேல் இருக்கிற உரிமைக்காக அவனுக்கு நூறு வராகனும், தாலியையும் கொடுத்துவிட வேண்டுமாம். அதற்கப்புறம் இந்தக் கிழவனை மணந்து கொள்ள வேண்டுமாம். அவனோடு சேர்ந்து மேலும் சிலரும் இப்படி திட்ட மிட்டிருந்தார்கள். இந்தக் கிழவன்தான் சாதிக்குத் தலைவனாம். அவன் வார்த்தையை மீறுவதற்கு யாராலும் முடிவதில்லை. இச்சங்கதியையெல்லாம் அழுதுகொண்டே வந்து என் புருஷன் என்னிடம் சொன்னான். அப்பொழுது நான், சீ என்ன பேச்சு இது. இருந்தால் ஒரு புருஷனுடன் வாழ வேண்டும். இல்லாவிட்டால் இந்த உயிரே போக வேண்டும். பாழாய்ப் போன இந்த உப்பலிக சாதிப்பழக்கத்தைச் சுட்டுப் பொசுக்க வேண்டும். ஒருவன் மனைவியை இன்னொருவன் கட்டிக் கொள்வது சாதிப்பழக்கமா? எந்த காலத்திலும் இது நடக்காது. அவர்கள் கொடுக்கும் பணம், நகைகள் எதுவுமே வேண்டாம். நீயே எனக்கு ஆபரணம். உன்னையும், பிள்ளைகளையும் விட்டு எந்தக் காலத்திலும் போக மாட்டேன்' என்றேன். வெளியே நின்றிருந்தவர்கள் என் பேச்சைக் கேட்டுக்கொண்டனர். எனக்கு என்ன னென்னமோ சொல்லி சமாதானப்படுத்த முயற்சி செய்தனர். ஆனாலும் கடைசி வரை எதற்கும் ஒத்துக் கொள்ள வில்லை நான். அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். அப்புறம் பத்து நாட்கள் கழிந்தன. நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்த என் புருஷனுக்கு பகல் சாப்பாடுஎடுத்துக் கொண்டு போனேன். யாருமற்ற வழி அது. பின்பக்கத்தி லிருந்து யாரோ சட்டென எதிர்ப்பட்டு துணியால் என் கண்களை மூடினர். இன்னொருவன் வேறொரு துணியால் என் வாயையும் கட்டினர். சாப்பாட்டுக் கூடையும், செம்பும் எங்கோ உருண்டு போயின. மேலும் இருவர் வந்து என் கைகளையும், கால்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு சென்றனர். எவ்வளவு திமிறியும் பயன் இல்லை. கடை சியில் இந்த இடத்திற்குக் கூப்பிட்டு வந்து கட்டுகளை அவிழ்த்தனர். உள்ளே பார்த்தால் திருமணத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இப்படி ஒரு விபத்துக்கு ஆளாக நேர்ந்ததே என்று அழுதேன்" என்று துக்கமுடன் சொல்லி முடித்தாள்.

அதற்கு நான், "உன் புருஷனும், குழந்தைகளும் இருக்கும் இடத்திற்கே உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன். பயம் வேண்டாம்" என்று சொன்னேன். "எனக்கு அந்த உதவியை மட்டும் செய்தால் போதும், என் பங்குக்கு உன்னையே கடவுளாய் வணங்குவேன்" என்றாள். என் வசம் வைத்திருந்த ரொட்டியை எடுத்துச் சாப்பிட்டேன்.அவளுக்கும் கொடுத்தேன். அதற்கப்புறம் இருவரும் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டோம். வேறு யாருமே அற்ற இடம் அது. அந்தப் பெண்ணின் இளமையும், அழகும் என்னைக் குழப்பின. எங்கள் கூட்டத்தில் யாரேனும் ஒருவர் அடுத்தவன் மனைவிமேல் விருப்பம் கொண்டானே யானால் அந்த நிமிஷமே ஊர் முழுக்கப் பாழாகும் என்று என் அப்பா சொல்லி இருந்த புத்திமதிகள் ஞாபகத்துக்கு வந்தன. அதன்பின் மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அவளை என் சகோதரியாகவே எண்ணிக் கொண்டேன். அவளும், நானும் அந்த காட்டு வழியிலேயே புறப்பட்டோம். அந்த வழியில் பறவைகள் கூட காணோம். அவள் புருஷனின் ஊர்க்கு கட்டதமோலி என்று பெயர். ஊரை நெருங்கும் சமயம். திடுமென பத்து, பதினைந்து குண்டர்கள் எங்களை நோக்கி ஓடிவந்தனர். அவர்களை முதலில் அவள்தான் பார்த்தாள். "ஐயோ, செத்தேன்" என்று அச்சத்துடன் கூவினாள். திரும்பிப் பார்த்தேன் நான். அவள் கையை உறுதியாய்ப் பற்றிக் கொண்டு அந்த குண்டர்களை பார்த்து, "நீங்கள் எத்தனை பேர் வேண்டுமானாலும் வாருங்கள். இவள் வழியில் யாரேனும் குறுக் கிட்டால், உங்கள் மனைவிமார்கள் கழுத்தில் தாலி இருக்காது. உஷார்" என்றேன். ஆனால் என் பேச்சுக்குப் பயம் கொள்ளாதவர்கள் போல அவர்கள் அந்தப் பெண்ணின்மேல் விழ வந்தனர். அவளைச் சட்டென கீழே உட்கார வைத்துவிட்டு, என் இடுப்பில் செருகி இருந்த கத்தியை எடுத்து அவளுக்குப் பாதுகாப்பாக சுற்றிச் சுற்றி வந்து சண்டையிட்டேன். ஏற்கனவே இருந்த பயிற்சியின் காரணமாக என் கைவரிசையைக் காட்டினேன். அதனால் வந்தவர்களில் பத்து பேருக்கு கத்திக்காயம் உண்டானது. கால் முறிந்தவர்கள், கை உடைந்தவர்கள், வயிற்றில் கத்திக் காயம்பட்டவர்கள், மூக்கு அறுபட்டவர்கள் எனப் பலருக்கும் பல விதங்களிலும் அடிபட்டது. எழ முடியாதபடி அவர்களுக்குப் பலமான காயம்உண்டாயிற்று. மூன்று, நான்கு பேர்க்கு உயிரே போனது போல இருந்தது. தூரத்தில் நின்றபடியே கவனித்துக் கொண்டிருந்த மூன்று நான்கு பேர்கள் திரும்பிக் கூடப் பார்க் காமல் ஓடிப் போனார்கள். எஞ்சிய ஒரு சிலரும் காயங்களுடன் ஓடி விட்டார்கள். அந்த இடமே ரத்தமயமானது. பிறகு அவளை அழைத்துக் கொண்டு அவள் புருஷனின் இருப்பிடத்தை நோக்கி நடந்தோம். இரவில் சாப் பாட்டு நேரம். அவள் வீட்டுக் கதவைத் தட்டிக் கூப்பிட்டேன். கதவு திறக்கப் பட்டது. நானும் அவளும் உள்ளே சென்றோம். அவள் வீட்டு ஜனங்கள் எல்லாம் அழுதபடி இருந்தார்கள். அவள் புருஷன் சாப்பிட்டே மூன்று நாட்கள் ஆகி விட்டதாம். குழந்தைகளுக்கும் சாப்பாடு கொடுக்க வழியின்றி அவையாங்

பட்டினியாய்க் கிடந்தன. அந்த சூழ்நிலையைக் கண்டு அவளுக்குத் துக்கம் பெருகியது. குழந்தைகளை வாரி அணைத்துக் கொண்டாள். எல்லாரும் ஒரு வழியாய் அழுது முடித்தார்கள். அதற்கப்புறம் அவளுக்கு வந்த சோதனை களையும், அது நீங்கிய விதத்தையும் நாங்கள் விவரித்தோம். கூச்சத்தாலும், சங்கோஜத்தாலும் நான் சொல்லாமல் விட்ட விஷயங்களை அவளே விரிவாக எடுத்துச் சொன்னாள். எல்லாவற்றையும் கேட்டு, பிழைத்து வந்ததைப் பற்றி மிகவும் மகிழ்ந்தார்கள். அந்த கடவுளே என் வடிவில் வந்து உதவியதாக அவர்கள் என்னென்னமோ சொல்லி என்னைப் புகழ்ந்தார்கள். மூன்று நாட்கள் என்னைக் கட்டாயப்படுத்தி வீட்டில் தங்க வைத்து விருந்துபசாரம் செய்தனர். கடை சியில் எனக்கு பரிசுப் பொருள் கொடுக்க வந்தனர். நான் மறுத்து விட்டேன். என் சாகசத்தைக் கேட்டு அந்த ஊர் மக்களே ஆச்சரியப் பட்டுப் போனார்கள்.

அப்புறம் அந்த ஊரில் இருந்து வேறு வழிகள் மூலம் சஞ்சவாடிக்கு வந்து சேர்ந்தேன். அதற்குள் என் பிற கூட்டாளிகள் என்னை எங்கெங்கோ தேடி விட்டு என்னை யாரோ கொன்று போட்டிருக்க வேண்டும் என நினைத்துக் கொண்டு ஊர் திரும்பி இருந்தார்கள். என்னைக் காணாத என் அப்பா ரொம்பவும் கவலையுடன் தேடிக் கண்டு பிடிப்பதற்காக சிலரை அனுப்ப ஏற்பாடு செய்து கொண் டிருந்தார். அதே தருணத்தில்தான் நான் சென்று சேர்ந்தேன். என்னைக் கண்டதும் அப்பாவுக்கு ஏராளமான சந்தோஷம். "நீ ஏன் தனியாக பின் தங்கிப் போனாய்? எல்லாரும் வந்து சேர்ந்து பத்து பதினைந்துநாள்களுக்கு பிறகும் உன்னைக் காணோமே என்று ரொம்பவும் கவலையாகிவிட்டது. நான் அந்த உப்பலிக பெண்ணின் கதையையெல்லாம் சொன்னேன். அதைக் கேட்டு அப்பாவுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிற்று. 'நீ ரொம்ப நல்ல காரியம் செய்தாய்' என்று பாராட்டினார். 'ஆணாகப் பிறந்தவனுக்கு பதிவிர தைக்கு வந்த துன்பத்தை நீக்குவது போல வேறு சிறந்த ஒரு காரியமில்லை. குழந்தைகளையும், வயசானவர்களையும், நோயாளி களையும், பலமற்றவர்களையும் காப்பாற்று வதைத் தவிர வேறு நல்ல தர்மம் இல்லை. இதுவரைக்கும் ஊரில் இப்படித்தான் நடந்து வந்தது. அடுத்தவன் மனைவி மேல் ஆசைப்படாமல் இருப்பது நாம் இருக்கும் ஊர்க்குச் செய்யும் மரியாதை ஆகும். எல்லா தர்மங்களை விடவும் இது பெரிய தர்மமாகும். ஆனால் இனிமேல் எல்லாம் குலைந்து விடும் போல உள்ளது. நீ சொன்ன கதை மிகவும் வருத்தம் கொடுக்கிறது. ஊர் கெட்டுப் போவதற்கான அறிகுறியே இது. என்னமோ, எல்லாரையும் அந்த தாய்தான், கொல்லாப் பூர் அம்மன்தான் காப்பாற்ற வேண்டும்' என்று சொன்னார்.

அடுத்த இரண்டு மூன்று நாள்களுக்குள்ளேயே இன்னொரு முறை புறப் பட்டோம். வழியில் நாங்கள் பேசிக் கொண்ட விவரம் என்னவென்றால்:

அமாவாசை: "நாம் இருக்கும் ஊரிலும், அடுத்த ஊர் களிலும் மற்றவன் மனைவி மேலே ஆசை வைக்கக் கூடாது என்று அப்பா சொன்னார். இந்த

தர்மம் இப்போது கெட்டுள்ளது என்றும் சொன்னார். அதற்குக் காரணம் என்ன என்று எனக்குப் புரியவில்லை."

கலியவரதன்: "எத்தனையோ தலைமுறைகளைக் கண் டவர் உன் அப்பா. அவர் சொல்வது நிஜம். அப்பாஜியின் புத்தியும் அப்போது இப்படித்தான் தறிகெட்டுப் போய் இருக்கிறது. பிராமண வாத்தியார் வந்து அவனோடு சேர்ந்ததில் இருந்து அவனுக்கு புத்தி கெட்டு விட்டது. அதற்கு முன்பு அவன் சொன்னதே வேதமாக இருந்தது. அவன் சொன்னதில் எதுதான் தவறாக இருந்தது"

அமாவாசை: "சித்தா, அப்பாஜி என்ன செய்தான்? உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருப்பதில்லையே. அவன் வரும்போது பார்த்தேன். அவன் முகம் என்னமோ ஒரு மாதிரியாக இருந்தது. முகத்தில் அவ்வளவு களை இல்லை."

சித்தன்: "அது எப்படி வரும் அமாவாசை? மனசு எப்படியோ அப்படித்தான் மனிதன். மனிதன் எப்படிப் பட்ட வேலையைச் செய்கிறானோ அப்படித்தானே அவன் இருக்குமிடமும்."

கலியவரதன்: "அந்த நாரப்பய்யாவுக்கு தீட்சிதர் எவ்வளவு உபகாரம் செய்திருக்கிறார். எத்தனை வருஷங்கள் அங்கேயே சாப்பிட்டு வளர்ந்த உடம்பு அவனுக்கு. பாடம் சொல்லித் தரும்போது அடிக்காதே என்று ஒரு வார்த்தை புத்தி சொல்லி இருக்கிறார் தீட்சிதர். அதில் என்ன தப்பு இருக்கிறது? அதற்குப் போய் கோபித்துக் கொண்டு மனசில் விஷத்தைச் சேர்த்துக் கொண்டான் இந்த நாரப் பய்யா. மகாதேவன் மனைவி கெட்டவள். அப்படி, இப்படி, யார் வேண்டுமானாலும் அவளைக் கெடுத்துவிடமுடியும் என்று என்னென்னமோ சொல்லி அந்த அப்பாஜியின் மனசைக் கெடுத்துவிட்டான். அப்புறம் அந்த நாரப்பய்யா பேச்சைக் கேட்டுவிட்டு ஒருநாள் அவளைக் கட்டிப் பிடிக்கப் போயிருக்கிறான். சட்டென்று பக்கத்தில் இருந்த பாறையைத் தூக்கி இவன் நெஞ்சில் எறிந்துவிட்டு தப்பி ஓடிவிட்டாளாம். இப்போது நெஞ்சில் வலிவலி என்று தினமும் துடித்துக் கொண்டிருக்கிறான். அவ்வளவு தான் எனக்குத் தெரியும்"

அமாவாசை: "அவள் ரொம்ப ரோஷக்காரி ஆயிற்றே. இவனைச் சும்மா விடுவாளா? அடுத்தவர் சொத்துக்கு ஆசைப்படுவது என்று என்னென்னமோ மேற்கொண்டு அப்பா சொன்னாரே, அது என்ன?"

கலியவரதன்: "அந்த மாதிரி இன்னொரு விவகாரமும் நம் ஊரில் நடந்தது. அதைத்தான் நம் ஊர் காவல் சேவகர்களும், சுபேதார்களும் சேர்ந்து பேசிப் பேசிப் பெரிசாக்கி விட்டார்கள். மகாதேவன் பெண்டாட்டியை பின்வீட்டில் கொண்டுபோய் கிடத்தி இருக்கிறார்கள், என்கிற சங்கதியை எப்படியோ துப்பறிந்துவிட்டான் இந்த நாரப்பய்யா. அப்பாஜிக்கு இல்லாத ஆசையை எல்லாம் காட்டி அந்த பின்வீட்டுக்கு கன்னம் வைக்க ஏற்பாடு செய்தான். தயாரானதும் அப்பாஜியே உள்ளே நுழைந்தான். அந்த நேரம் பார்த்து அவளை பின் வீட்டிலிருந்து வெளித் திண்ணைக்கு மாற்றிவிட்டிருக்

கிறார்கள். கடுகடுப்பான பூசாரி பின்வீட்டில் இருந்த சில்லறைச் சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டு வந்து விட்டான். இதெல்லாம் இப்போதுதான் ஆறேழு நாட்களுக்கு முன்பு நடந்தது. கன்னம் வைக்கப் போனது நம் நெலக விசித்தன்தான். அவனேதான் இப்படி இப்படியெல்லாம் ஆச்சு என்று என்னிடம் சொன்னான்."

அமாவாசை: "எத்தனையோ தலைமுறை கண்டவர் அப்பா. அவ்வளவு அனுபவம் இல்லாமல் பேசுவாரா. இதையெல்லாம் கேட்டபிறகு எனக்கு என்னமோ கையும் காலும் ஓடவே இல்லை. இந்த முறை என்ன ஆகுமோ தெரியவில்லை."

இப்படியே பேசிக்கொண்டே நாங்கள் வாமனூர் என்னும் இடத்தைப் போய்ச் சேர்ந்தோம். அங்கே தேவாங்கச் செட்டியாரின் வீடு ஒன்றில் கன்ன மிட்டோம். உள்ளே நுழைந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டிருக்கும் போது கருப்புத் துணி போர்த்திக்கொண்டு தூங்கி இருந்த ஒருவனை இருட்டில் அடையாளம் தெரியாமல் மிதித்துவிட்டேன். அவன் தனக்குப் பக்கத்திலேயே வைத்திருந்த கழியைச் சடாரென எடுத்து என்பக்கம் இரண்டு வீசு வீசினான். முதல் அடி பலமாக வலது தோள்பட்டையில் பட்டது. வலி தாளாமல் கையிலிருந்த பெட்டி நழுவியது. அதனால் சப்தம் உண்டானது. வீட்டில் இருந்த மற்றவர்கள் எல்லாரும் எழுந்து விட்டார்கள். எப்போதும் கையில் இருக்கும் கத்தி எங்கேயோ நழுவி விழுந்து விட்டிருக்கிறது. இரண்டாவது அடி தொடையில் பட்டது. வலியில் எனக்கு பிரக்ஞை தப்பியது. சுய நினைவற்று கீழே விழுந்து விட்டேன். அதிகாலையில் நினைவு திரும்பியது. என்னை இறுக்கமாக ஒருவகைக் கொடியால் கட்டி இருந்தார்கள். என்னுடன் வந்தவர்களைப் பின் கட்டு கட்டி வைத்துக் கொண்டிருந்தார்கள். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வந்து எங்களைப் பார்த்து விட்டு நாங்கள் மைசூர்ப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்து எங்களை இங்கே அனுப்பி வைத்தார்கள்."

இவ்விதமாய் தன் கதையைச் சொல்லி முடித்தான் அமாவாசை. துப்பறியும் அதிகாரிகள் இக்கதையை சிறை அதிகாரிகளுக்கு மட்டும் ரகசியமாகச் சொன்னார்கள்.

16

தன் கதையையெல்லாம் அமாவாசை சொல்லி முடித்த மூன்று நாட்களுக்கப் புறம் மைசூரிலிருந்து அதிகாரிகள் வந்து நகர காவல் அதிகாரியின் வீட்டையும், சேவகர்கள் வீடுகளையும், தாலுகாவைச் சேர்ந்த மற்ற அதிகாரி களின் வீடுகளையும் சோதித்தார்கள். சோதனைகளில் எக்கச் சககமான நகைகள் பிடிபட்டன. அவற்றையெல்லாம் பறிமுதல் செய்தார்கள். அது மட்டு மன்றி, அவர்களையும் கைது செய்து மைசூருக்கு அழைத்துக் கொண்டுபோய் விட்டார்கள் என்று வதந்தி கிளம்பியது. என்ன காரணம் என்று யாருக்கும் தெரியவில்லை. அப்போது மாரமணராயரின் மனைவி, "ஐயோ, இந்த மாதிரியும் ஒரு அநியாயம் நடக்குமா. இந்த தாலுக்காவுக்கே முக்கிய அதிகாரி அவர். அவரைப் பிடித்துக் கொண்டு போகலாமா? இதைத் தட்டிக் கேட்க கதியில்லாமல் போயிற்றே. அவர் அதிகாரத்தைக் காட்டிலும் எது பெரிய அதிகாரம்? கொடுக்கிறவர்கள் கொடுக்கத் தயாராய் இருக்கிறார்கள். வாங்கு கிறவர்கள் வாங்குகிறார்கள். ஒன்றை லட்சமாக்குகிறார்கள். லட்சத்தை ஒன்றாக்குகிறார்கள். இவர்களுக்கு என்ன வந்தது? இப்படி அதிகாரிகளின் மானத்தைப் பறிக்கலாமா? பெருக்கி வாரிய மாதிரி எல்லாப் பொருள் களையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்களே. என் புருஷனாக ஒரு காசைக் கூட தொட்டு வாங்கியதில்லை. கதியில்லாத ஊருக்கு வந்து இப்படி ஆகிவிட்டது. எதையும் தொடாதே என்றுதான் நானும் சொன்னேன். அந்த ஆளுக்கு என் வார்த்தையின் மீது மதிப்பு ஏதேனும் உண்டா, என்ன? அதிகாரி யின் மனைவியாய் இருக்கிற நான் சும்மா இருக்க முடியுமா? இவருக்கு ஒன்று என்றால் அது எனக்கும்தானே அவமானம்? இப்படிப்பட்ட புருஷன் கூட இருப்பானா? ஒரேவடியாய் போய் ஒழிந்தால்கூட நலமாய் இருந்திருக்கும். மொட்டையடித்துக் கொண்டு ஏதாவது ஒரு மூலையில் உட்கார்ந்து கிடப்பேன். நிம்மதியாய் இருக்கும். அதற்குக் கூட வழியில்லாமல் இப்படி செய்து விட்டானே, பாவி. வெளியே தலைகாட்டக் கூட முடியாமல் ஆகிவிட்டதே. யாரிடம் சொல்வது நான்? எங்கே போய் முட்டிக் கொள்வேன்" என்று அக்கம் பக்கத்தவர்களிடம் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

அங்கே மைசூரிலிருந்து வெடிகுண்டுகள், கத்தி, ஆயுதங் களுடன் சாமராஜ

நகரை நோக்கி குதிரைப்படைகள் கிளம்பின. இதற்குக் காரணம் சாதாரண ஜனங்களுக்குத் தெரியவில்லை. தோப்பூர் சமவெளி, கெற்றளவாட்டி சமவெளி வழியாக சமவெளிக்குக் கீழே செல்லும் மக்களை வழிமறித்து திருடர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருந்தார்கள். சமயங்களில் சிற்சில உயிர்க் கொலைகளும் நடந்தன. இதைத் தடுக்கும் பொருட்டு காவலுக்காக ஆயுத மேந்திய சிப்பாய்களை நிறுத்த ஏற்பாடானது, என்று மக்கள் நினைத்துக் கொண்டார்கள். கொள்ளைக் கென்று சஞ்சவாடியிலிருந்து புறப்பட்ட கூட்டம் எதுவும் திரும்பவும் ஊருக்கு வரவில்லை. வழக்கம்போல் வந்துவிடக்கூடும் என்றும், எல்லாமே திட்டமிட்டபடி சரியாகவே நடந்து கொண்டிருக்கும் என்றும் கிராமத்தவர்கள் நம்பி பயமற் றிருந்தனர்.

அப்போது நடந்த விஷயத்தை எப்படிச் சொல்வது? சதாசிவதீட்சிதன் ஊர்க்குத் திரும்பிய பிறகும் சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலை அப்படியே இருந்தது. மூக்குப் பொடிக்காக ஆசைப்பட்டு கிட்டு ஜோசியன் அம்மன் கோயில் முற்றத்துக்குச் சென்று அரட்டை அடித்துக் கொண்டி ருந்தான். பேச்சோடு பேச்சாக அப்பாஜி, "அது சரி கிட்டு, தீட்சிதர் மைசூருக்குப் போய் வந்தாராமே, யாராவது கிடைத் தார்களா? உங்கள் மகாதேவன் மனைவிக்கு என்ன செய்தார்கள்?" என்று மெல்லக் கேட்டான். அதற்கு கிட்டு ஜோசியன், "மாமா மைசூர்க்குப் போய் வந்தது என்னமோ வாஸ்தவம்தான். எல்லாம் ஏற்பாடாகி இருக்கிறது. இன்னும் இரண்டு மூன்று நாட்களில் பெரிய மந்திரவாதி ஒருவன் வருகிறான். அது எத்தனை பெரிய வியாதியாக இருந்தாலும் சரி, சூனியமானாலும் சரி, பேய், பிசாசு வேலையாய் இருந் தாலும் சரி, மனிதன் ஏவிவிட்ட காரியமாக இருந்தாலும் சரி எல்லாவற்றையும் ஒரே நாளில் குணப்படுத்தி விட்டுத்தான், மறுவேலை பார்ப்பானாம். உன்னால்தான் எதுவும் முடியாமல் போய் விட்டது. வேறு வழி என்ன இருக்கிறது? யாரையாவது அழைத்து வந்து ஏதாவது செய்தால்தானே குண மாகும்." என்று மூக்கிலிருந்த வழியும் பொடியையும், சளியையும் உதட்டை மடித்து வாய்க்குள் இழுத்துக் கொண்டும், விரலால் வழித்துத்துடைத்துக் கொண்டும் சொல்லி முடித்தான். இதைக் கேட்டதும் அப்பாஜியின் மனசில் பயமும், குழப்பமும் மிகுந்தன. பெரிய அரண்மனையில் இருந்து வரும் மந்திர வாதியின் சக்தியும் பெரியதாகவே இருக்கும் அல்லவா? அவன்வந்த பிறகு ஏதாவது நிச்சயம் செய்யக்கூடும் என்று திகில் உண்டானது. இதே நேரத்தில் சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலை கொஞ்சம் கொஞ்சமாய் கெட்டுக் கொண்டே வந்தது. நாழிகைக்கு நாழிகை மேல்மூச்சும் கீழ்மூச்சும் வாங்கியது. வாயில் நுரை தள்ளியது. மெல்ல மெல்ல மூச்சின் வேகம் குறைந்து கொண்டே வந்தது. வீட்டில் எல்லாருக்கும் பீதியுண்டானது. அப்பொழுது திம்மம்மா, "இத்தனை நாள் சும்மா கிடந்தானே, இன்று என்ன ஆனது இவளுக்கு? மரு மகளென்றால் போதும், அப்படியே தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார் அல்லவா மாமனார். இப்படியெல்லாம் செய்தால் அவர் எப்படி நடந்து

கொள்கிறார் பார்ப்போம் என்று ஆட்டம் காட்டுகிறாள். வேண்டும் என்று தேடித்தேடி சிகப்புத் தோல்காரியை மருமகளாக்கிக் கொண்டிருக்கிறார் அவர். அவள் என்ன. என்னை மாதிரி கருப்பியா?" என்றாள். உடனே பார்வதம்மா, "என்ன இது, திம்மம்மா, சாகக் கிடக்கிறாள் இந்தப் பெண். பாவம், இன்னும் எத்தனை நாழிகையோ, நிமிஷமோ என்கிறபடி கிடக் கிறாள். இப்பவும் அவளைப் பழித்துப் பேசுகிறாயே" என்றாள். அதற்கு திம்மம்மா, "உங்கள் வேலையைப் பார்த்துக் கொண்டு ஒரு மூலையாக விழுந்து கிடங்கள். என் வழியில் குறுக்கிட வேண்டாம். இனிமேல் என்ன, எல்லாம் கைக்கு வந்துவிட்டது அல்லவா? என் அப்பா வீட்டுச் சொத்தே அழிந்து போயிற்று. இப்போது என் மேலே எல்லாரும் பாயத் தயாராய் இருக் கிறார்கள்" என்று மனசுக்கு வந்தபடி பழித்தாள். இதற்கிடையில் சீத்தம்மா இனி பிழைக்கக் கூடும் என்ற நம்பிக்கை முற்றாக எல்லாருக்கும் அற்றுப் போனது. அதனால் அன்று மூன்றாம் ஜாம வேளையில் வெளித்திண்ணையில் அவளைத் தூக்கி வந்து கிடத்தினர் அதுவரைக்கும் பயத்தின் காரணமாக யாரும் உணவு உட்கொள்ளவில்லை. அடுத்து என்னாகுமோ அதற்குள் முன் ஜாக்கிரதையாக சாப்பிட்டுவிடுவோம் என்று ஒவ்வொருவராக சாப்பாட் டுக்குக் கிளம்பினர். சதாசிவதீட்சிதன் குளிக்கக் கிளம்பினான். அவனுக்கு தண்ணீர் நிரப்ப வந்த பார்வதம்மா மகனைப் பார்த்து, "மகனே, அவள் பேசுகிற பேச்சைக் கேட்டாயா. அவளிடம் பேச்சு வாங்கி போதும் போதும் என்றாகி விட்டது. இந்த ஊருக்கு நாம் வந்ததே இப்படி ஏச்சு பேச்சு வாங்கிக் கொண்டு சோறு தின்னத்தான் என்றாகிவிட்டது. வாய்க்கு வரும் வார்த் தையையெல்லாம் பேசுகிறாள். இவளோடு சேர்ந்து வாழ்ந்து மனம் கசந்து விட்டது. மைசூரில் நாம் என்ன சும்மா திரிந்துவிட்டு வந்து சாப்பிட்டோமா? இங்கே வந்தபிறகு இவள் அப்பா வைத்த ஆஸ்தியையெல்லாம் அழித்து விட்டோமா? எது எப்படியோ போகட்டும். இன்னொருவர் வீட்டில் நாம் இருப்பது அவ்வளவு சரி யில்லை. அது மானக்கேடுதான். இந்த ஊருக்கு வந்ததி லிருந்து நமக்கு எதுவுமே ஒத்துவரவில்லை. கிராமத்துப் பழக்கம் நமக்கு சரிவர வில்லை. முதலில் இருந்தே அப்படித் தான். ரத்தினம் போல ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு வந்து கடைசியில் அவளை நம் கையாலேயே வாரிப் போடும் நிலைமை வந்துவிட்டது. இன்னும் ஒரு நாழிகையோ, இரண்டு நாழிகையோ. எல்லாம் அதற்குள் முடிந்து விடும். இந்த நிலையிலும் இவள் இப்படிப் பேசுகிறாளே, கேட்கிறவர்கள்தாம். நம்மைப்பற்றி என்ன நினைப் பார்கள்? அவளுக்கு வந்திருப்பதோ ஏதோ புது விதமான வியாதி. இதுவரை கண்டது கேட்டது கூட இல்லை. இனிமேல் கூட கேள்விப்படுவோமோ என்னமோ. இப்பவும் இவள் இப்படிப் பேசினால், இவளே ஏதோ செய்தி ருக்கக் கூடும் என்று கேட்கிறவர்கள் பேசு வார்களா, மாட்டார்களா? யார் யார் மனம் என்ன என்ன நினைக்கும் என்பது அந்த கடவுளுக்குத்தான் வெளிச்சம். நம் மனம் களங்கம் இன்றி இருந்தால் போதும். அது எப்படியோ போகட்டும்.

இனிமேல் நான் இந்த ஊரில் இருக்கமாட்டேன். பழைய இடத்துக்கே போகிறேன். நீயும் வந்துவிடு. இல்லாவிடில் என்னை மட்டுமாவது அனுப்பி வை. பசுபதியின் வீட்டில் தங்கிக் கொள்கிறேன். கூடப் பிறந்த தம்பி எனக்கு ஒருவேளைச் சோறு போடாமல் போய்விடுவானா? சாகும் கடைசிக் காலத்தி லாவது இப்படி ஏச்சு பேச்சு வாங்கிக் கொண்டு சோறு தின்னாமல் நல்லபடி இருந்துவிட்டுப் போகிறேன்" என்று கண்களில் நீர் ததும்பக் கூறினாள். அப்போது தன் தாயை நோக்கி சதாசிவ தீட்சிதன், "எல்லாம் எனக்குத் தெரியும். இப்போது பேசி எந்த பிரயோஜனமும் இல்லை. நீ சொன்ன தெல்லாம் எனக்கும் தெரியும். எல்லாவற்றையும் நீ வாயால் சொல்லி விட்டாய். நான் உள்ளுக்குள்ளேயே வைத்துக் கொண்டு மருகுகிறேன். இந்த ஊரை விட்டுச் சென்றுவிடவேண்டும் என்கிற எண்ணம் எனக்குள்ளும் உண்டு. அதற்கும் வேளை வரும். அதுவரைக்கும் வந்ததையெல்லாம் அனுபவித்துத் தான் தீர வேண்டும்." என்று சொல்லி அமைதிப்படுத்தினான். எல்லாரும் மடி அணிந்துகொண்டு இலை முன்னால் உட்கார்ந்து மந்திரம் முணுமுணுத்து விட்டு மனசில்லாத மனசோடு சாப்பிட்டார்கள். கையைக் கழுவிக் கொண்டு போய்ப் பார்க்கும்போது சீத்தம்மாவின் ஆரோக்கிய நிலை ஆபத்துக் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வீட்டு மனிதர்கள் அனைவரும் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது திம்மம்மா தன் மகளிடம், "சாவித்திரி, நீ அங்கே சென்றுவிடாதே. பயந்து விடுவாய். இங்கே வா" என்று தனியே அழைத்தாள். சீத்தம்மாவின் வாய்க்குள் கொஞ்சம் கொஞ்சமாய் நீரை ஊற்றினாள் பார்வதம்மா. கடைவாயிலேயே அந்த நீர் வழிந்தது. சட்டென உடம்பு, கை, கால் எல்லாம் சில்லிட்டு விட்டது. கையில் நாடி அகப்படவில்லை. மெல்லக் குறைந்து வந்த மூச்சுக்காற்று ஒரேமுறை கொர்ரென்று எழுந்து அப்புறம் அடங்கிவிட்டது. மீண்டும் கையைப் பிடித்து ருத்ரநாடி அகப்படு கிறதா என்று பார்த்தார்கள். அதுவும் நின்றிருந்தது. எல்லாமே முடிந்து விட்டிருந்தது. எல்லாருமே ஓ என்று அழ ஆரம்பித்தார்கள். சீத்தம்மாவின் குழந்தை கிருஷ்ணசாமியும் திகிலில் அழ ஆரம்பித்தது. தாயின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு 'அம்மா, அம்மா' என்று சொன்னபடி நகர்ந்து அவள் உதடுகளைப் பிரித்தது. நெஞ்சின் மேல் விழுந்தது. புடவையைப் பிடித்து இழுத்தது .ஓயாமல் அழுதது. இதைக்கண்டு எல்லாருக்கும் துக்கம் அதிகரித்தது. பார்வதம்மா ஒரு பக்கம் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். வெங்கம்மா வுக்கு வயது ஏறிவிட்டது. இரண்டுபேர் தூக்கித்தான் உட்கார வைக்க வேண்டும். அவளும் மூலையில் இருந்தபடி அழுதாள். திம்மம்மாவோ. பிணத்தின் அருகிலேயே வரவில்லை. அந்த பச்சைக் குழந்தையின் துக்கத்தைப் பார்க்கச் சகிக்காமல் சதாசிவ தீட்சிதனே முன்வந்து அக்குழந் தையைத் தூக்கிக் கொண்டான். ஐந்தாறு மாதங்களுக்கு சோறு, தண்ணீர் இல்லாமல் கிடந்தாலும் சீத்தம்மாவின் முகப் பொலிவு குறைந்திருக்கவில்லை பார்த்தவர்கள் எல்லாரும், "ஐயோ, பயம் கொள்ள வேண்டாம். முகம்

அப்படியே குலையாமல் இருக்கிறது. உயிர் இருக்கிறது ஏதேனும் நினைவு தப்பி இருக்கக்கூடும்" என்று சொன்னார்கள். அந்த அளவுக்கு உடலும், முகமும் பொலிவுடன் இருந்தன. அந்த ஊரில் வசிக்கும் ஆண்கள், பெண்கள் எல்லாரும் வந்து சேர்ந்தார்கள். சீத்தம்மா இறந்து விட்டாள் என்கிற விஷயம் கேள்விப்பட்டு அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்தெல்லாம் பலர் வந்து பார்த்தார்கள்.

புரோகிதர்கள், பிணம் சுமப்பவர்கள் முதலானவர்களையெல்லாம் சதா சிவதீட்சிதன் அழைத்துவர ஏற்பாடு செய்தான். இறுதிக் காரியத்தக்குத் தேவை யான பொருள்கள் எல்லாம் வாங்கப்பட்டன. "இன்றைக்கு பௌர்ணமி இரவு. முழுநிலவு இருக்கும். வைகாசி மாதம். மழை ஏதும் வரக்கூடும் என்கிற பயமும் கிடையாது. இப்போதே பிணம் எடுத்துவிடலாம்" என்று சொன்னான் அவன். சிதை உள்ளிட்ட அனைத்தும் தயாரானது. பிணத்தைத் தூக்கி வந்து பாடை யின்மேல் கிடத்தினார்கள். சுமங்கலியானதால் முகத்தைத் தவிர்த்து உடம்பு முழுக்க புதுத்துணியால் போர்த்தினார்கள். மஞ்சள் பூசி, குங்குமம் இட்டு, பூ முடித்தனர். பிணம் தூக்கிகள் பிணத்தையும், பாடை மூங்கிலையும் சேர்த்து கயிற்றால் கட்டினர். அப்பொழுது பார்வதம்மா, அந்த பிணத்துக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு "ஐயோ சீத்தம்மா, உன்னை எப்படி யம்மா சுடுகாட்டுக்கு வழியனுப்புவேன்? பசுபதிக்கு என்ன பதிலைச் சொல்வேன்? உன் தாய் தந்தைக்கு என்ன பதில் சொல்லி சமாதானப் படுத்துவேன்? உலகத்தில் யாருக்குமே வராத வியாதி உனக்கு வந்துவிட்டதே அம்மா. வீட்டில் வயதுகடந்த இரண்டு பேர் விழுந்து கிடக்கிறோமே. அந்த எமராஜன் உன்னை விட்டு என்னைக் கொண்டு போய் இருக்கக் கூடாதா? அந்த எமனுக்குக் கண் இல்லையா? இந்தக் குழந்தையை எப்படி சமாதானப் படுத்துவேன்? அதன் அழுகையை அப்படி நிறுத்துவேன்? ஐயோ கடவுளே,இப்படி ஒரு தர்ம சங்கடத்தைக் கொடுத்து விட்டாயே" என்று சொல்லிச் சொல்லிப் புலம்பினாள். அதுவரைக்கும் சும்மாவே உட்கார்ந் திருந்த திம்மம்மா பிணத்தின்மேல் அரிசி போடுவதற்கு வந்த போது எங்கி ருந்தோ துக்கம் பீறிட்டுக்கொண்டு வந்தது. "ஐயோ சீத்தம்மா, போகிறாயா! உன்னைப் போல ஒரு மருமகளை இனிமேல் எங்கே காணப்போகிறேன். இன்னும் ஏழு ஜென்மம் எடுத்தாலும் அகப்படுவாளா? ஐயோ. தூங்குகிற மாதிரி இருக்கிறாயே. உன்னை திட்டிவிட்டேன் என்று கோபித்துக்கொண்டு படுத்திருக்கிறாயோ? நான் எதைச் சொன்னாலும் எதிர்த்து ஒரு வார்த்தை பேசாதவளாயிற்றே நீ. இப்பொழுது வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசு, ஒரே ஒரு வார்த்தை பேசு சீத்தம்மா. நான் பேசினதெல்லாம் தப்பு, சீத்தம்மா தப்பு. ஒரே முறை பேசம்மா. நீ சிரித்தமுகத்தோடு பேசிக் கொண்டிருப்பதைக் காண எவ்வளவு அழகாக இருக்கும். மனசுக்குள்ளேயே எத்தனை சந்தோஷப் பட்டுக் கொள்வேன் தெரியுமா. உன் பேரைப் போலவே நீ இருக்கிறாய் என்று எத்தனை பேர் உன்னைப் பாராட்டுவார்கள் தெரியுமா. உன் மருமக

ளுக்குச் சமமில்லை யாரும் என்ற உன்னைப் புகழ்ந்து எத்தனை பேர் என்னிடம் சொல்லி இருக்கிறார்கள் தெரியுமா, குழந்தையை அனாதையாக்கி விட்டுப் போகிறாயே தாயே, உனக்கு இப்படி நேரும் பொருட்டு யார் எந்த வேலையைச் செய்தாரோ, அவர்கள் வீடு பாழாகட்டும். ஐயோ கடவுளே. உனக்கு விரைவில் குணமாகட்டும் என்று பதினெட்டு கடவுளுக்கும் பிரார்த் தித்துக்கொண்டிருந்தேன். கொல்லாப்பூர் அம்மன் கோயிலுக்கு மாவிளக்கு ஏற்றுகிறேன் என்று வேண்டிக் கொண்டிருந்தேனம்மா. சீத்தம்மா, ஐயோ, விதியே, நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று இப்படி செய்துவிட்டாய். எங்களுக்காக எந்தக் கடவுளும் நின்று காப்பாற்றாமல் போயிற்றே. ஐயோ, எமராஜனே, என் மருமகள் ஒருத்தி இல்லாமல்தானா உன்பட்டணம் நிறை யாமல் இருந்தது? இந்த முழுநிலா முகம் இல்லாமல் உன் ஊர் வெளிச்சம் இல்லாமல் இருக்கிறதா, பாவி! யாரும் பார்க்காத, யாரும் கேட்காத நோய் வந்துவிட்டதா உனக்கு. ஐயோ மகனே கிருஷ்ணசாமி, நீ அழுவதைப் பார்த்து எப்படிச் சகித்துக் கொள்வேன். ஐயோ, உன்னிடம் ஒரு நாள் கூட சரியானபடி பேசியதில்லையே. இனிமேல் சரியாகப் பேசு கிறேன் உன்னைக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். என் தப்பு எதுவாக இருந்தாலும் மன்னித்து எழுந்து வா சீத்தம்மா, சீத்தா, சீத்தா" என்ற புலம்பி ஒப்பாரி வைத்து அழுதாள் திம்மம்மா. பிணத்தின் மேல் விழுந்து புரள்வதும், தலையில் அடித்துக் கொள்வதும், வாயிலும் நெஞ்சிலும் மாறி மாறி அடித்துக் கொள் வதும் அழுவதுமாக இருந்தாள் திம்மம்மா. அவளது புலம்பலைக் கேட்டு அங்கு நிறைந்திருந்த மற்றவர்களுக்கும் அழுகை வந்தது. வழியெங்கும் அப் பிணத்தின் மேல் மஞ்சள், குங்குமம் இறைத்தனர். பூ தூவினர். "எங்கள் ஊர் மகாலட்சுமி போகிறாளே" ,என்று ஊரே அழுதது. ஊரிலிருந்து சுடுகாடு வெகு தொலைவில்லை. நதியோரத்தில் இரண்டு மூன்று கல் ஏறி தூரத்தில் இருந்தது. பிணத்தைச் சுடுகாடுவரைக்கும் சுமந்து சென்று இறக்கினர். சதாசிவதீட்சிதன் நெருப்பைச் சுமந்து கொண்டு போனான். ஏற்கனவே சிதை தயாராய் இருந்தது. பக்கத் திலேயே காடு இருந்த காரணத்தால் ஏராளமான விறகு களை உடைத்து வந்து போட்டிருந்தனர். சாஸ்திரப்படி பிணத்தில் மேல் இருக்கும் துணியை அகற்றும் மந்திரத்தைப் புரோகிதர் உச்சரித்த போது பிணந் தூக்கிகள் துணியை அகற்றச் சென்றனர். அப்போது தீட்சிதன், "அவள் ரொம்ப மானஸ்தி அப்பா. அந்தப் புடவையை அகற்ற வேண்டாம். அப் படியே போகட்டும். வேண்டுமென்றால் பிற்பாடு ஏதேனும் பிராயச்சித்தம் செய்து கொள்ளலாம். என்றான். விக்கி விக்கி அழுதான் அவன். கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அதன்படியே புடவைத்துணி அகற்றப் படாமலேயே விடப்பட்டது. இறுதியாக நெருப்பிடப்பட்டது. விறகுகள் கொஞ்சம் ஈரமாக இருந்த காரணத்தால் நெருப்பு பற்ற கொஞ்சம் தாமத மானது. எல்லாரும் கொஞ்ச நேரம் காத்திருந்து "சரி இனிமேல் என்ன,

தானாய்ப் பற்றிக் கொள்ளும்' என்று சொல்லிப் புறப்பட்டனர். அப்போது இரவு பத்து நாழிகை ஆகி இருந்தது.

கோயம்புத்தூருக்குச் செல்லும் வழி, நதியோரத்தில் உள்ள சுடுகாட டுக்குப் பக்கத்தில் இருந்தது. சமவெளிக்குக் கீழே சென்று அங்கங்கே தங்கி விட்டு பொழுது சாயும் வேளையில் புறப்பட்ட இரண்டு பிராமணர்கள் மடித் துணி மூட்டைகளை தோள்மேல் போட்டுக் கொண்டு நிலா வெளிச்சத்தில் பேசிக் கொண்டே அந்த வழியே நடந்து வந்தார்கள். இருவரில் ஒருவன் ஆந்தி ராவைச் சேர்ந்தவன். அவன் பெயர் ஆனந்தபட்ஜி. இன்னொருவன் கர்நாட கத்தைச் சேர்ந்தவன். சீரங்கப்பட்டினத்தில் வசிப்பவன். இவன் பெயர் கிரி யண்ணா. இவர்கள் இருவருமே நீண்ட காலமாக சிநேகிதர்களாக இருந் தார்கள். தொலைவில் அவர்கள் நடந்து வரும்போது நெருப்பின் வெளிச்சம் தெரிந்தது. இன்னும் நெருங்கி வரவர சுடுகாட்டிலிருந்து அவ்வெளிச்சம் வரு வதைத் தெரிந்து கொண்டார்கள். அந்நெருப்பைத் தொலைவிலிருந்தே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வந்தான் பட்ஜி. சிறிது நேரத்துக்கு கிரியண்ணாவுடன் கூட அவன் பேசவில்லை. கேட்கப்பட்ட கேள்வி களுக்குக் கூட பதில் சொல்லவில்லை. நெருப்பையே கவனித்துக் கொண்டு வந்தான். திடுமென அவன் பேச ஆரம்பித்தான்.

பட்ஜி. "கிரியண்ணா, அந்த நெருப்பைப் பார்த்தாயா?"

கிரியண்ணா: "பார்த்தேன். செங்கல் ஏதேனும் சுடுவதற்கு நெருப்பு பற்ற வைத்திருக்கிறார்களோ என்னமோ. இல்லை பிணம் ஏதேனும் எரிகிறதோ என்னமோ. தெரியவில்லை. நிச்சயமாய் ரெண்டில் ஒன்று."

பட்ஜி: "சூளைக்கு வைத்த நெருப்பு அல்ல பிணம் சுடும் நெருப்பு. ஏதோ ஊர் பக்கத்தில் இருக்கிறது. ஒரு வேளை சஞ்சவாடியாக இருக்கலாம். தொலை வில் விளக்குகள் தெரிகின்றன."

கிரியண்ணா: "நீ சொல்வதுதான் சரி. பிணம் சுடும் நெருப்பு போல தான் தெரிகிறது. இப்பொழுதுதான் நெருப்பு வைத்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றிருக்க வேண்டும்".

பட்ஜி : "பிணம் என்று அதைச் சொல்லாதே. மனித உடல் என்பது என்னமோ உண்மைதான். ஆனால் இன்னும் இறக்கவில்லை. உயிர் இருக் கிறது. ஆனாலும் தெரியாமல் நெருப்பிட்டுவிட்டுப் போய் இருக்கிறார்கள்."

கிரியண்ணா: "நெருப்பு பற்றி எரிகிறது. உயிர் இருக்கிறது என்கிறாயே?"

பட்ஜி: வேண்டுமென்றால் சோதிக்கலாம். நிரூபிக் கிறேன். அந்த உடலில் இன்னும் உயிர் இருக்கிறது."

கிரியண்ணா: உயிர் இருக்கிறது என்று எப்படிச் சொல்கிறாய்?"

பட்ஜி: "கொஞ்சம் நிதானித்து கவனமுடன் கேள். அந்த உயிர் கூவும் ஒலியை உன்னால் உணர முடியும்"

கிரியண்ணா: "ரொம்ப நேரமாக அந்த ஒலி வருவது என்னமோ உண்மைதான். ஆனால் அது காற்றின் ஒலியா அல்லது அந்த உயிர் கூவும் ஒலியா?"

பட்ஜி: அந்த உயிர் கூவும் ஒலிதான் அது.

கிரியண்ணா: பிணம் பற்றி எரிகிறது. அதற்குள் இருந்து உயிர் கூவும் ஒலி கேட்கிறது என்றால் நம்பும்படி இல்லை.

பட்ஜி: உறுதியாய் இதை என்னால் நிருபிக்க முடியும். தைரியமாய் ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு பார். பாவம், இந்த உயிரை ஏகமாய் ஒருவன் வதைத்திருக்கிறான். இருக்கட்டும். அதுவும் நல்லதுதான். ஆனால் நீ மட்டும் எதற்கும் பயப்பட வேண்டாம்"

கிரியண்ணா : "அப்படியே ஆகட்டும் "

இப்படியே பேசிக் கொண்டு இருவரும் அந்த ஊருக்குக் கொஞ்ச தூரத்திலேயே நின்று கொண்டார்கள். தன் மடித்துணி மூட்டையை கிரி யண்ணாவின் வசம் கொடுத்து அவனை ஒரு இடத்தில் உட்கார்த்தினான் பட்ஜி. மடி வேட்டியை அணிந்து கொண்டு நதியில் இறங்கிக் குளித்தான். நெற்றியில் பட்டையாய் விபூதி பூசிக் கொண்டு, மூட்டையில் இருக்கும் குங்கு மத்தை எடுத்து இட்டுக் கொண்டு உறுதியான குரலில் ஏதேதோ மந்திரத்தைச் சொன்னான். நெருப்பின் பக்கம் திரும்பி உட்கார்ந்தான். இரண்டு பக்கமும் வெள்ளிப் பூண் போட்ட நீண்ட பிரம்பை எடுத்தான். நீர் வழியும் அவிழ்ந்த தன் குடுமி முடியை தலையால் உதறி தரையில் அடித்தான். மீண்டும் அதே இடத்தில் பிரம்பால் அடித்தான். அநேக கடவுள்களின் பெயர்களையும் தேவதைகளின் பெயர்களையும் உச்சரித்தான். ஓம், ரீம், என்று ஏதேதோ மந்திரங்களைச் சொன்னான். "முப்பத்தது மூன்று கோடி தேவதைகளையும் கட்டுவேன். பூதம், வேதாளம், பிரம்மராட்சஸ், சாகினி, டாக்கினி, பிரேத பிசாசுகளையும் கட்டுவேன். துஷ்டர்களின் கையைக் கட்டுவேன். நீசர்களின் மனசைக் கட்டுவேன். ஓம் படுஸ்வாஹா. ஓம் படுஸ்வாஹா. ஓம் படுஸ்வாஹா", என்று வேகமாகக் கூவினான். நான்கு கற்களைக் கூட்டி வைத்து ஒரு பிடி மண்ணை மந்தரித்து "இந்த கல்லைப் பிடி. இந்த மண்ணைப் பிடி. நீ தைரியமாய் உட்கார்ந்து கொள். உன் நான்கு திசைக்கும் இந்த நான்கு கற் களையும் எறி. எந்தத் திசையில் இருந்து உனக்குப் பயமாக இருக்கிறதோ, அந்தத் திசையில் ஒரு பிடி மண்ணை அள்ளி எறிந்து கொண்டு வா" என்று கிரியண்ணாவிடம் சொன்னான். மீண்டும் அவன் நதிக்குச் சென்று குளித்து விட்டு வந்தான். மீண்டும் மந்திரங் களை வேகமாய் உச்சரித்தபடி கையில் நீரை அள்ளி நெருப்பை ஒரு முறை சுற்றி வந்து அந்நீரை நெருப்புக்கு மத்தியில் ஊற்றினான். தன் குடுமியின் நீரையும் பிழிந்து நெருப்பில் விழுமாறு செய்தான். மீண்டும் மீண்டும் இதே போல் நீரில் மூழ்குவதும், குடுமி நீரைப் பிழிந்து நெருப்பின் மேல் விழுமாறு செய்வதுமாக இருந்தான். இப்படியே மூன்று முறைகள் செய்தான். அப்புறம் பிரம்பால் நில்த்தில் ஒரு சக்கரத்தை வரைந்தான். அதற்குள் பல வீடுகளைப் பிரித்தான். ஒவ்வொரு பகுதியிலும் ஓம்கார எழுத்துக்களை எழுதினான். அப்புறம் அதன்முன் உட்கார்ந்து பிரம்பால் அந்த எழுத்துக்களை அடிக்கவும், மந்திரங்களை உச்சரிக்கவும் ஆரம்பித்தான்.

ஐயோ அப்போது நடந்த அற்புதத்தை என்னென்று விவரிப்பேன். இந்த உலகின் பல ரகசியங்கள் நம் கண் ணுக்குப் புலனாகாத விதத்தில் உள்ளன. எல்லாம் அறிந் தவன் சர்வஞானியான ஈஸ்வரன் ஒருவனே. நெருப்பிலிருந்து எழுந்து வந்த அக்குரல் மெல்ல மெல்ல அதிகரித்து அலறலானது. அப்போது மிகவும் பயந்து விட்ட கிரியண்ணா மோசமான குரலில் அலறினான். உட்கார்ந்த இடத்திலிருந்தே பட்ஜி அவன் இருந்த திசையில் பிரம்பை மூன்று முறை அசைத்ததும் கிரியண்ணா அமைதியடைந்து உட்கார்ந்து கொண்டான். மீண்டும் குளத்தில் குளிக்கச் சென்றான் பட்ஜி. முன்பு போலவே மூன்று முறைகள் குளத்தில் மூழ்கி கைகளால் நீரைக் கோரி வந்து நெருப்பில் ஊற்றியும் குடுமி நீரைப் பிழிந்து நெருப்பில் வழிய விட்டும் மந்திரங்களை உச்சரித்தான். பழைய இடத்திலேயே மீண்டும் உட்கார்ந்தான். சிதையின் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அப்பொழுது ஒளிந்து கொண் டிருந்த முழுநிலா மேகங்களுக்கு நடுவில் மறைந்தது. சிதை அசைந்தது. கைகால்கள் அசைவது போலத் தெரிந்தது. ஒரு மனித உருவம் எழுவது போலத் தோன்றியது. மீண்டும் மோசமான குரலில்அலறியபடி நடுங்கத் தொடங் கினான் கிரியண்ணா. அந்த தருணத்தில் எப்படிப்பட்ட தைரியசாலி களுக்கும் பயம் உண்டாகிவிடும். நடு இரவு சுடுகாடு. மேகங்கள் கவிந்த இருட்டு. சுற்றிலும் சாம்பல் மேடுகள். ஓநாய்களின் ஊளை. பிணம் கிழித்துத் தின்னும் அவற்றின் கோர உருவம். ஆள் அரவமற்ற இடம். சகிக்கமுடியாத பிணங்களின் முடைநாற்றம். இதனிடையே எரியும் சிதையில் இருந்து பிணம் எழுந்து வருவது. எத்தனை பயங்கரமான சூழல். பீதி உண்டாக இதைவிட வேறு என்ன காரணம் வேண்டும்? இது எல்லாம் போதாது என்று எழுந்து வந்த பிணம், “அப்பா, பெண் ஜென்மம் நான். துணி வேண்டும்” என்று கேட்டது. இதைக் கேட்டதும் கிரியண்ணாவுக்கு சப்த நாடியும் அடங்கியது. அப்போது பட்ஜியும் விருட்டென்று எழுந்தான். தன் உடுப்பு ஒன்றை பிணத்தின் பக்கம் எறிந்தான். பீதியில் நடுங்கிக் கொண்டிருக்கும் கிரியண் ணாவின்மேல் விபூதியை வீசி, மந்திரங்கள் சொல்லி அவனை அமைதியாய் இருக்கச் செய்தான். பிறகு பட்ஜியும் உறுதியான குரலில் ஆர்ப்பாட்டத்துடன் ஏதேதோ மந்திரங்கள் சொன்னான். கையால் சமிக்ஞை செய்தான். அந்தப் பெண் ஜென்மம் நதியில் நீராடிவிட்டு வந்து நின்றது. தலையில் இருந்து கால்வரைக்கும் தன் பிரம்பால் மந்திரித்தான். அப்புறம் அவளை உட்கார வைத்தான். அவளைச் சுற்றிக் கோடு இழுத்து அதற்குள் என்னென்னமோ எழுத்துக்களை எழுதினான். தன் கரண்டவத்தில் இருந்து கொஞ்சம் குங்குமத்தை எடுத்து அவள்மேல் வீசினான். பிரம்பைக் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் விசேஷமான மந்திரங்களை உச்சரிக்க ஆரம்பித்தான். அப்போது ஊர்ப்பக்கத்தில் இருந்து பெரிய அலறல் கேட்டது. “அய்யோ அய்யோ” என்று உரக்கக் கூவியபடி ஒரு மனிதன் ஓடோடி வந்து கொண் டிருந்தான். பதட்டத்தில் அங்கங்கே கீழே விழுந்து விடுவதும், “ஐயோ

எரிகிறதே. தாயே. உடம்பு எரிகிறதே. தப்பாகிவிட்டது, தப்பாகி விட்டது" என்று கூவுவதும் கேட்டது. ஒவ்வொரு அடிதூரத்துக்கும் விழுந்து விழுந்து வணங்கியபடி வந்தான். அப்போது பட்ஜி தன் முன்னாலிருக்கும் சக்கரச் சித்திரத்தின் மேல் மீண்டும் மீண்டும் பிரம்பால் அடித்துக் கொண்டிருந்தான். இவன் அடிக்கும் போதெல்லாம் ஒடி வருகிறவனின் கூச்சலும், அலறலும் அதிகரித்தன. கடைசியில் மிகக நெருக்கமாக அவ்வுருவம் நெருங்கிய போதுதான் அது ஓர் ஆணின் உருவம் என்று தெரிந்தது. அவன் பட்ஜியின் காலில் ஒடிவந்து விழுந்து வணங்கினான். அழுதான். அப்போது குரூரமான குரலில் பட்ஜி, "புதைத்து வைத்த பொம்மையை எடுத்து வா" என்றான். உடனடியாக அந்த மனிதன் மீண்டும் திரும்பி ஓடி பிருந்தாவனத் தோட்டத்தில் தினந்தோறும் பூசைக்காக சீத்தம்மா வந்து போய்க் கொண்டிருந்த இடத்தில் புதைத்திருந்த ஜாண் உயர மரப் பொம்மையை அகழ்ந்து எடுத்துக் கொண்டு திரும்பினான். அது மரத்தால் செய்யப்பட்ட பெண்பொம்மை அதை பட்ஜி யின் முன் வைத்தான். அந்த பொம்மையின் தலை, கை, கால், உடம்பு எங்கும் முள்கள் அடிக்கப்பட்டிருந்தன. அந்த பொம்மையின் மேல் கொஞ்சம் தண்ணீர் தெளித்து மந்திரித்தான் பட்ஜி. அப்புறம், "அதை எடுத்து அந்த நெருப்பில் போடு" என்று கர்ஜித்தான். அவன் சொற்படியே அந்த பொம்மையை நெருப்பில் போட்டான். நெருப்பின் வெளிச்சத்தில் அவனைப் பார்த்த சீத்தம்மா, "ஐயோ, இவன் எங்கள் ஊர் அம்மன் கோயில் பூசாரி" என்றாள். பட்ஜி தன் பிரம்பால் அவனது இரண்டு கன்னங்களையும் தீண்டினான். அப்போதே அந்த நீசனுக்கு கடுமையான வயிற்று வலி ஆரம்பித்தது. ரத்த வாந்தி எடுத்தான். வாந்தியோடு அவன் வாயில் இருந்த எல்லா பற்களும் கீழே உதிர்ந்தன. மீண்டும் பட்ஜி தன் பிரம்பால் அவனது தலையில் ஒரு அடி கொடுத்தான். "உன் எல்லாப்பற்களையும் உதிர்த்து விடுகிறேன். நீ மகா நீசன். இன்னொருமுறை இந்த மாதிரி வேலையை நீ யாருக்கும் செய்யக் கூடாது. இந்த பதிவிரதைக்கு நீ செய்திருக்கும் மோசடிக்கு இன்னும் நீ அனுபவிப்பாய். தொலைந்து போ" என்று கூவினான். அவன் வாயில் ரத்தம் ஒழுகியது. "பாழாய்ப் போன அந்த நாரப்பய்யாவின் பேச்சைக் கேட்டதற்கு இவ்வளவு ஆகிவிட்டது கடவுளே" என்று புலம்பிக் கொண்டே தன் வீட்டுக்குப் புறப் பட்டுப்போனான். இவ்விதமாய் நெருப்பில் எரிந்து கொண்டிருந்த சீத்தம்மா மீண்டும் எழுந்து வந்தாள்.

அப்போது இரவு பதினைந்து நாழிகை. பட்ஜி மீண்டும் குளித்தான். வேறு மாற்றுடை அணிந்துகொண்டான். சீத்தம்மாவின் கதையை அவள் வாயா லேயே ஆரம்பத்திலிருந்து சொல்லக் கேட்டுத் தெரிந்து கொண்டான். அவளையும் கிரியண்ணாவையும் அழைத்துக் கொண்டு ஊருக்குள் பிர வேசித்தான். ஜோசியர் வீட்டு வாசலில் நின்று அழைத்தான். "கதவைத் திறவுங்கள்" என்றான். அங்கே வீட்டுக்குள் ஒரிருவர் உட்கார்ந்த இடத்திலேயே சுருண்டு கிடந்தனர். சதாசிவதீட்சிதன், திம்மம்மா, மகாதேவன், ஆகியோர்

மட்டும் சீத்தம்மாவைப் பற்றிப் பேசிப் புலம்பிக் கொண்டிருந்தனர். ஒரு கம்பத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த நேரத்தில 'வேளை கெட்ட வேளையில் கூவுவது யார்' என்று நினைத்து யோசித்தனர். மகாதேவனே எழுந்து போய் கதவைத் திறந்தான். கிரியண்ணனுடனும், சீத்தம்மாவுடனும் உள்ளே நுழைந்த பட்ஜி திண்ணையில் வந்து உட்கார்ந்து கொண்டான். வெள்ளை வேட்டி கட்டிக் கொண்டிருந்த சீத்தம்மாவின்அடையாளம் யாருக்கும் தெரியவில்லை. இரவில் அன்ன ஆகாரமின்றி, தூக்கமுமின்றி, துக்கத்தில் முழுகிய அவ்வீட்டு மனிதர்களுக்கு யாரையும் பார்த்துத் தெரிந்து கொள்ளும் அவசியமும் இல்லை. விளக்கு இருந்தாலும் கூட அது எங்கோ ஒரு மூலையில் மினுக்மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. மிகவும் இருட்டாய் இருக்கிற ஓர் இடத்தைப் பார்த்து சீத்தம்மா போய் நின்றுகொண்டாள். அப்போது சதாசிவ தீட்சிதன் வந்திருப்பது பசுபதி சாம்பசாஸ்திரியாக இருக்கக் கூடும் என்று நினைத்து,

சதாசிவதீட்சிதன் : "யார், மாமாவா?"

பட்ஜி: "ஸ்வாமி. நாங்கள் கோயம்புத்தூரில் இருந்து வருகிறோம். பகலெல்லாம் நல்ல வெயில். அதனால் இருள் நேரத்தில் நடந்து செல்லலாம் என்று நினைத்தோம். ரொம்பவும் களைத்து விட்டோம். இந்த ஊரில் வேறு எங்கும் சென்று தங்கத் தோன்றவில்லை. எங்கே கேட்டாலும் ஜோசியர் வீட்டுக்குச் செல்லுங்கள் என்றுதான் கையைக் காட்டுகிறார்கள். உங்கள் புகழைப் பற்றிக் கேள்விப்பட்டு இங்கே வந்து சேர்ந்தோம். நாளைக்கு சாயங் காலம் வரைக்கும் இங்கிருந்துவிட்டு அதற்கப்புறம் புறப்பட்டு விடுகிறோம்."

சதாசிவதீட்சிதன்: "ஐயா. நீங்கள் வேறு யாருடைய வீட்டிலாவது தங்கிக் கொள்ளுங்கள். எனக்கு இருட்டில் சரியாகத் தெரியவில்லை. மைசூரில் இருந்து எங்கள் சொந்தக்காரர்கள்தான் வந்துள்ளார்கள் போலும் என்று நினைத்துக் கொண்டோம். மைசூரில் இருந்து வந்தவர்கள் அல்ல என்று முதலிலேயே தெரிந்திருந்தால் நாங்கள் கதவையே திறந்திருக்கமாட்டோம். எங்கள் வீட்டில் துக்ககரமான சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. இதனால் தீட்டு. தயவு செய்து நீங்கள் வேறு இடம் பார்க்க வேண்டும்".

பட்ஜி : "எந்த மாதிரியான துக்கம்?"

சதாசிவதீட்சிதன் : "மரணம்"

பட்ஜி: என்ன காரணம்?

சதாசிவதீட்சிதன்: "எங்கள் மருமகள் இறந்துவிட்டாள். சுடுகாட்டில் எரித்து விட்டு வந்து இன்னும் ஒரு ஜாமம்கூட ஆகவில்லை."

பட்ஜி: "என்ன ஐயா இப்படிச்சொல்கிறீர்கள்? உங்கள் மருமகள் இறந்த மாதிரி தெரியவில்லையே".

சதாசிவதீட்சிதன்: "இப்பொழுதுதானே சுட்டு வந்து உட்கார்ந்திருக் கிறோம். உங்களுக்கு எப்படிப் புரிய வைப்பது?"

பட்ஜி: நீங்கள் என்னமோ இப்படிச் சொல்கிறீர்கள். எனக்கு என்னமோ அவள் இறந்தமாதிரி தெரியவில்லை. ஓரளவு நானும் ஆருடம் தெரிந்தவன்.

சதாசிவதீட்சிதன்: "எதார்த்தமாக நடந்து முடிந்த ஒன்றுக்கு உங்கள் ஜோசியம் எதற்கு? வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் போது உங்களோடு விதண்டாவாதம் புரிய நேரமில்லை. தீட்டான வீட்டில் இருப்பது சரியல்ல. வேறு யாருடைய வீட்டிலாவது தங்கிக் கொள்ளுங்கள். அல்லது கோயில் வெளிப்புறம் நன்றாக வசதியாக இருக்கும். அங்கு தங்கிக் கொள்ளலாம்."

பட்ஜி: நீங்கள் துக்க வேளையில் இருக்கும்போது உங்களைத் தொந்தரவு செய்வது சரியன்று. என்னமோ தெரியாமல் வந்து விட்டோம். விடிந்ததும் புறப்பட்டு விடுகிறோம். அந்த அளவுக்காக நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும். இந்தவேளை கெட்ட வேளையில் இனிமேல் எங்கே செல்வது, எங்களோடு எங்கள் தங்கையும் வந்துள்ளாள். அவளுக்காகத்தான் இங்கே வந்தோம்"

சதாசிவதீட்சிதன்: "அப்படியென்றால் தெருவை ஒட்டிய திண்ணை இருக்கிறது. அங்கே படுத்துக் கொள்ளுங்கள்".

அவ்விதமாகவே திண்ணையில் கிரியண்ணாவும் பட்ஜியும் உட்கார்ந்து கொண்டார்கள். ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டாள் சீத்தம்மா. மெல்ல மெல்ல விடிந்தது. உள்ளே சென்ற பட்ஜி, தீட்சிதரே, விடிந்து விட்டது. நாங்கள் புறப்படுகிறோம். என் தங்கையின் புடவை வரும் வழியில் நெருப்பு பட்டு எரிந்து போய் விட்டது. எங்கள் வேட்டியைத்தான் கட்டிக் கொண்டுள்ளாள். வெளியே கிளம்ப அவள் வெட்கப்படுகிறாள். உங்கள் மருமகளின் பழைய புடவை எதையேனும் கொடுத்து உதவினால், அந்த உதவியை என்றென்றும் மறக்க மாட்டேன். நீங்கள் பெரிய சத்தியவான் என்று கேள்விப்பட்டு இங்கே வந்தோம். எங்கள் மானத்தைக் காப்பாற்ற உதவியதாக இருக்கும். என்று மிக்க பணிவுடன் கூறினான். அப்பொழுது பார்வதம்மாவை அழைத்து தீட்சிதன் "அம்மா, அவள் அணிந்து கொண்டிருந்த ஏதாவது ஒரு புடவையையும், ரவிக் கையையும் கொண்டு வந்து கொடுத்து விடு", என்றான். அதேவிதமாகக் கிழவியும் உள்ளே சென்று புடவை, ரவிக்கை கொண்டு வந்து தந்தாள். அப்பொது திம்மம்மா, "அவள் இருந்து இந்தப் புடவையை உடுத்திக் கொள்வதாக இருந்தால் இவற்றை வைத்துக் கொள்ளலாம். இல்லாத பட்சத்தில் என்ன பயன்? அதைப் பார்க்கும் போதெல்லாம் துக்கம்தான் அதிகமாகும். இந்தப் புடவையை அணிந்து கொண்டு வந்தால் அப்படியே ஆதிலட்சுமியே நடந்து வருகிற மாதிரி இருக்கும். ஐயோ ஐயோ... அப்படி ஒரு அழகு, குணம் யாருக்கு வரும். இனி மேல் எப்படி அதைப் பார்க்கப் போகிறோம். எடுத்துக் கொள்ளுங்கள். யாராவது புண்ணியம் செய்தவர்கள் கட்டிக் கொள்ளட்டும்" என்றாள். அதற்குப் பதிலாக பட்ஜி, "தாயே உங்களுக்கு என்ன குறைச்சல்?

நீங்கள் எதற்கு துக்கப்படுகிறீர்கள். அப்படிப்பட்ட மருமகளே உங்களுக்குக் கிடைப்பாள்", என்று சொன்னபடி ஆடைகளையும், அத்தோடு கொஞ்சம் குங்குமமும் கேட்டு வாங்கி சீத்தம்மா விடம் கொடுத்தான். அவள் அந்த புடவை ரவிக்கையை அணிந்து கொண்டு குங்குமம் இட்டுக் கொண்டாள். அவள் திண்ணையிலேயே இருந்தாள். கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் பட்ஜியும், கிரியண்ணாவும் உள்ளே சென்று உட்கார்ந்து கொண்டார்கள். "இன்னும் என்ன வேண்டும் உங்களுக்கு " என்று கேட்டான் சதாசிவ தீட்சிதன். "உங்க ளோடு நானும் வாதிக்க விரும்பவில்லை. உங்கள் மருமகள் இறந்துவிட்டாள் என்று தெரிவித்தீர்கள். அப்படியே நீங்கள் நம்பிக் கொள்ளலாம். ஒரே ஒரு விஷயம் மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். தயவு செய்து அதற்காக உங்கள் வீட்டில் இருக்கிறவர்களையெல்லாம் இங்கே கூப்பிடுங்கள். சொல்கிறேன்" என்றான் பட்ஜி. அதைக் கேட்ட தீட்சிதன் தன் மனத்துக்குள்ளாகவே, "திரும்பத் திரும்ப இந்த பிராமணன் இப்படிச் சொல்கிறானே, எதற்காக இப்படிச் சொல்கிறான். நம் கண் முன்னாலேயே மருமகள் செத்தது என்னமோ நிஜம். பயத்தாலா, மந்திரத்தாலா என்ன விஷயம் என்று எல்லா மந்திரவாதி களிடமும் தீர விசாரித்துத் தெரிந்து கொண்டோம். இவனோ விடாமல் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்கிறான். இப்படி அமைதியாய் வரும் ஆண்களிடம் ஏதேனும் விசேஷ சக்தி இருக்கக் கூடும். இவனும் என்ன சொல்கிறான் என்று சோதித்துப் பார்க்கலாம்" என்று யோசித்தபடி வீட்டில் இருக்கிறவர்கள் அனைவரையும் அங்கே சேரும்படி சொன்னான். எல்லாரும் வந்து நின்று கொண்டார்கள்.

அப்போது நேர்ந்த ஆச்சரியத்தைப் பற்றி எப்படிச் சொல்வது? எதற்காக எல்லாரையும் கூப்பிட்டிருக்கிறார்கள் என்று எல்லார்க்கும் சந்தேகம் வந்தது. எல்லாரின் பார்வையும் அந்த பிராமணனின் மேலேயே கவிந்திருந்தது. அங்கிருந்தோர் பயந்து விடாத அளவுக்கு மந்திரங்கள் சொன்ன பட்ஜி 'சீத்தம்மா, வா' என்று உறுதியான குரலில் அழைத்தான். திண்ணையில் இருந்து சட்டென உள்ளே நுழைந்த சீத்தம்மா எல்லாரையும் வணங்கியபின் தலை குனிந்து நின்றாள். எல்லாருக்கும் ஒரே ஆச்சரியம். அனைவரின் கண்களும் விரிந்தன. சீத்தம்மாவின் மேலேயே பார்வை குவிந்திருந்தது. வாய்கள் திறந்தே இருந்தன. பயம், வியப்பு, மகிழ்ச்சி மூன்றும் எல்லாருடைய முகங்களிலும் மாறி மாறித் தோன்றின. அப்பொழுது பார்வதம்மா வந்து "சீத்தம்மா" என்றாள். அவளும் பதில் சொன்னாள். உடனே வீட்டில் இருந்த பெண்கள் எல்லாரும் சேர்ந்து "என் தங்கமே, எங்கே போயிருந்தாய் அம்மா. என்ன ஆயிற்று உனக்கு?" என்று ஒவ்வொருவரும் அவளை ஆரத் தழுவினர். தலையைத் தடவிக் கொடுத்தனர். கையைப் அழுத்தினர். "அக்னியிலிருந்து சீதா தேவி வந்ததைப் போல வந்தாயே. எங்கள் பாக்யலட்சுமியே நீதான்" என்றான் சதாசிவ தீட்சிதன். அது வரைக்கும் ஆச்சரியக் கடலில் மூழ்கி இருந்த திம்மம்மா

அவனை நெருங்கிக் கட்டித் தழுவி உச்சி மோர்ந்தாள். 'அம்மா, எங்களை எல்லாம் விட்டு எங்கே போய் விட்டாய் தாயே. மீண்டும் எப்படி உயிர் பிழைத்தாய்? இது என்ன ஆச்சரியம். என்னதான் ஆயிற்று உனக்கு? எந்த கெட்டவன் உனக்கு என்ன செய்தான்? ராமலட்சுமணர் போல வந்து இவர்கள் உன்னைக் காப்பாற்றி இருக்கிறார்கள். மீண்டும் ஒரு தாய் வயிற்றில் பிறந்து வந்ததைப் போல வந்தாயே. புருஷனுக்கு மனைவியானாய். குழந்தைக்கும் தாயானாய்" என்று வகைவகையாய்ச் சொல்லி மகிழ்ச்சியில் திணறினான். எல்லாரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. தீட்சிதன் எழுந்து நின்று அந்த இரண்டு பிராமணர்களையும் விழுந்து வணங்கினான். "ஐயா, என்றென்றும் காண முடியாத இந்த ஆச்சரியத்துக்குக் காரணம் என்ன? சொல்லவேண்டும் என்று இரண்டு கைகளையும் குவித்து வணங்கி கேட்டுக் கொண்டான். அதற்குப் பதிலாக பட்ஜி, "சீத்தம்மாவே தன் வாயால் நடந்ததை எல்லாம் சொல்லட்டும்" என்றான். மிக மோசமான பூசாரி அப்பாஜி, செய்த அக்கிரமங்களைத் தன்னால் முடிந்த மட்டும் விவரித்தாள் சீத்தம்மா. முதலி லிருந்து தொடங்கி பின்கட்டு வாசலில் மயங்கி விழுந்தது வரைக்கும் நடந்ததை யெல்லாம் ஒன்றுவிடாமல் சொன்னாள். அதற்கப்புறம் சுடுகாட்டில் நடந்த சம்பவங்களையெல்லாம் விவரித்தான் கிரியண்ணா. பூசாரி மாடவேலை செய்ததையும் மாடம் செய்த பொம்மையை எடுத்து வந்து பூசாரி நெருப்பில் வீசியதையும் அவன் ரத்த வாந்தி எடுத்ததையும் வாயில் இருக்கிற பற்கள் எல்லாம் உதிர்ந்து போனதையும், ரத்தம் ஒழுக ஒழுக அவன் ஊருக்குள் ஓடிப் போனதையும் தாம் ஊருக்குள் எல்லாருடனும் நுழைந்ததையும் ஒன்று விடாமல் விவரித்தான். அதைக்கேட்டதும் வீட்டில் இருக்கிற ஆண்களும், பெண்களும், ஒரே நேரத்தில் தரையில் படிந்து பட்ஜியை சாஷ்டாங்கமாக வணங்கினர். "ஐயா, கடவுளே உங்கள் உருவத்தில் வந்திருந்து இப்படி செய்திருக்கிறான்" என்று வாயாரப் புகழ்ந்தனர்.

நீத்தார் கடன்களால் தீட்டாகி இருந்த வீட்டுக்கு உடனடியாக சுண்ணாம்பு நீர் தெளித்து தூய்மை செய்தனர். கடவுளுக்குச் சமமாய் வந்திருக்கும் அந்த இரண்டு பிராமணர்களுக்கும் விசேஷமான உபசரணைகள் நடந்தன. நடந்த செய்திகளையெல்லாம் விரிவாக எழுதி பசுபதி சாம்ப சாஸ்திரியிடம் சேர்க்கச் சொல்லி ஒர் ஆளிடம் கொடுத்தனுப்பினான். செத்துப் போன சீத்தம்மா பிழைத்து வந்தாள் என்கிற சங்கதி விடிவதற்குள்ளாகவே வாசனைத் தைலத்தின் நறுமணம்போல வேகமாகப் பரவியது. நிமிஷ நேரத்துக்குள் ஊருக்குள் பரவி பக்கத்து ஊர்களுக்கும் பரவத் தொடங்கியது. சீத்தம்மாவைத் தூக்கிக் கொண்டு செல்லும் போது எவ்வளவு ஜனங்கள் குழுமி இருந் தார்களோ, அதேபோல பத்து மடங்கு ஆட்கள் கூடிவிட்டார்கள். எல்லாரும் சீத்தம்மாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனால் அவளைப் பார்த்து கொண்டே இருக்க வேண்டும் என்று விரும்பி அவ்விடத்தை விட்டு நீங்காமல் அங்கேயே சுற்றி வந்தனர். எத்தனை முறைகள் பார்த்தாலும் திருப்தியடை

யாதவராய், எத்தனை முறைகள் அவள் பற்றிய செய்தியைக் காது குளிரக் கேட்டாலும் மீண்டும் மீண்டும் கேட்க விழைகிறவர்களாய் ஆச்சரியத்தில் மூழ்கியபடி அங்கேயே இருந்தனர். ஒருவர்பின் ஒருவராய் ஜனங்கள் வந்து கொண்டே இருந்தார்கள். பட்ஜியையும், கிரியண்ணாவையும் மிக மரியாதை யோடு விசேஷமாக உபசரித்த தீட்சிதன் அவர்களை வீட்டிலேயே தங்கி இருக்குமாறு செய்தான்.

மைசூரில் சதாசிவதீட்சிதன் கொடுத்தனுப்பிய கடிதம் சென்று சேர்வ தற்குள்ளேயே செய்தி தெரிந்துவிட்டது. உடனேயே எல்லா விவரங்களையும் தெளிவாக எழுதி இருந்த கடிதமும் கிடைத்துவிட்டது. சாஸ்திரியும், வீட்டில் இருந்த மற்றவர்களும் செய்தியறிந்து நம்பமுடியாமல் ஆச்சரியத்தில் முழுகினர்.அந்த நிமிஷமே அவர் அரண் மனைக்குச் சென்று சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொண்டு அம்பாவிலாஸில் இருந்த அரசரைச் சந்தித்து சதாசிவ தீட்சிதனின் கடிதத்தைக் காட்டினான். விஷயம் அறிந்ததும் அரசரும் மற்றும் அங்கிருந்த சபையோர்கள் எல்லாரும் அளவு கடந்த ஆச்சரியத்தில் மூழ்கி மீண்டும் மீண்டும் கடித விவரத்தைப் படிக்கச் சொல்லிக் கேட்டனர். "இது என்ன ஆச்சரியம். எங்கும் நடக்காத சங்கதி நம் ராஜ்யத்தில் நடந் திருக்கிறது. செத்த பிணத்துக்கு மீண்டும் உயிர் கொடுத்து நடமாடச் செய்த அந்த பிராம ணர்களை நாமும் பார்க்க வேண்டும். அவர்களை இங்கேயும் அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று கட்டளையானது. சாம்பசாஸ்திரியும் அவர் வீட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் புறப்பட்டு உடனேயே சஞ்சவாடியை அடைந்தார்கள். சீத்தம்மாவைக் கண்டதும் அவர்களுக்குண்டான ஆனந்தத் திற்கு அளவே இல்லாமல் போனது. எல்லாரும் மீண்டும் மீண்டும் இது எப்படி நடந்தது. இது எப்படி நடந்தது என்று திருப்பித் திருப்பிக் கேட்டனர்.

காவல் அதிகாரிகள் ஏற்கனவே சாமராஜ நகருக்கு வந்து சேர்ந்திருந் தார்கள். சீத்தம்மாவைத் தூக்கிச் சென்று நெருப்பிட்ட இரவே யாருக்கும் தெரியாமல் புறப்பட்டு வந்து ஊரைச் சுற்றி நின்று கொண்டனர். அம்மன் கோயில் பூசாரி அப்பாஜியின் வீட்டைச் சுற்றிலும் முற்றுகை யிட்டனர். இந்த ஊர் மக்களின் போக்கையும், சரித்திரத்தையும் அம்மாவாசை மூலம் அவர்கள் அறிந்திருந்தார்கள். அங்கே திருடர்கள் கூட்டமே சேர்ந்திருந்தது. எதற்கும் தயங்காதவர்கள் இவர்கள். சந்தர்ப்பம் சரியாக அமைந்தால் எத்தனை பேர்களை வேண்டுமானாலும் கொன்றுவிட்டுத் தப்பித்துச்செல்லும் சாமர்த் தியமும், பயிற்சியும் அவர்களுக்கிருந்தன. பூசாரி அப்பாஜியின் ஆட்கள் கை தேர்ந்தவர்கள் என்பதாலும், வெறுமனே கிடந்த கோயிலைச் சீரும் சிறப்பு மாக்கி பூசைகளைச் செய்து வந்ததால் உருவான பகதர்கள் ஒன்றுபட்டு எதிர்க்கக் கூடும் என்பதாலும் சற்றே பயம் இருந்தது. விடிவதற்கு முன்பேயே ஊருக்குள் நுழைந்தாள் சீத்தம்மா. அதற்குச் சற்று நேரம் கழித்து சேவகர்கள் இந்த முற்றுகையைத் தொடங்கினர். ஒரே சமயத்தில் எல்லா வீடுகளுக்குள்ளும் புகுந்த சேவகர்கள் அங்கிருந்த ஆண்கள் மற்றும்பெண்களை பிடித்து பின்

கட்டு கட்டி உருட்டிவிட்டு வீடுகளைச் சோதனையிட்டனர். சுவர்களை இடித்துப் பார்த்தனர். நிலத்தை அகழ்ந்து பார்த்தனர். கணக்கற்ற ஆபரணங்கள் பொற் காசுகள், ரத்தினங்கள் எல்லாம் அங்கே கிடைத்தன. அப்பாஜியின் வீட்டிலும், கோயிலுக்குள்ளும் கணக்கற்ற ஆபரணங்களும் பணமும் கிடைத்தன. வாய்க்குள் ஒரு பல்லும் இன்றி ரத்தம் ஒழுகியபடி முகமெல்லாம் வீங்க நடக்கவும் முடியாமல் தள்ளாடித் தள்ளாடி வந்த அப்பாஜியை உடனே கைது செய்தனர். நாரப்பய்யாவையும் கைது செய்தனர். கைதானவர்கள் அனைவரையும் ஒரு வண்டியில் ஏற்றி, அவ்வண்டியிலேயே அவரவர்களிடம் இருந்து பறி முதலான ஆபரணங்களின் மூட்டைகளையும் ஏற்றி, பாதுகாப்புக்காக ஆயுதமேந்திய குதிரை வீரர்கள் சுற்றிலும் வர வண்டிகள் எல்லாம் மைசூருக்குக் கிளம்பியது. திருடர் கும்பலில் சேர்ந்து அதிகாரிகளின் கையில் அகப்படாத சிலர் தப்பிச் சென்று காட்டுக்குள் தலைமறைவாயினர். ஓரிரு நாட்களில் ஊரே வெறிச்சென்றாகிவிட்டது.சுற்று வட்டாரத்தில் இருக்கும் பத்து கிராமங்களிலும் செய்தி பரவிவிட்டது. தம்மையும் கைது செய்யக் கூடுமோ என்கிற பயத்தால் சஞ்சவாடிக்கு வரு வதையும், சஞ்சவாடியின் திசையில் பார்ப்பதையும் விட்டொழித்தனர் அயலூர்க்காரர்கள். அம்மன் கோயிலுக்குள் விளக்கு ஏற்றக்கூட யாருமின்றிப் போனது. கொல்லாப்பூர் மகாலட்சுமியும் அந்த ஊரைவிட்டு விலகி வேறு ஊர்க்குப் பிரயாணமானாள். நகரத்தின் உயர் அதிகாரிகள், காவல் சேவ கர்கள், மணியக்காரர்கள், கணக்குப் பிள்ளைகள், படேல்கள், கோவில் பூசாரிகள், ஆசிரியர்கள், குமாஸ்தாக்கள், சமூக முக்கியஸ்தர்கள், கொள் ளைக்கும் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் அனைவரும் மைசூர்க்குச் சென்றார்கள். எல்லாரிடமும் கடுமையான விசாரணை நடந்தது. சஞ்சவாடி யிலிருந்து கொண்டு வந்த ஆபரணங்களை வேறு வேறு ஊர்களில் இருந்து வந்திருந்த வர்கள் தம்முடையவை இவை என அடையாளம் காட்டினர். பல மாதகாலம் தொடர்ந்து விசாரணை நடந்தது. இந்தக் கள்ளர் கும்பலைச் சேர்ந்த அப்பாஜி ஆகியோருக்கு சிறைத்தண்டனை கிடைத்தது. அவர்கள் அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார்கள். மற்றவர்களுக்கு பத்து, பதினைந்து, இருபது வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆசிரியர் நாரப்பய்யாவுக்கு ஐந்து வருஷக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. இதற்கெல்லாம் மறை முகமாய்த் துணையிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்கள் சிலருக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது. மற்றும் சிலரை விடுதலை செய்தனர்.

இங்கே சஞ்சவாடியில் சதாசிவதீட்சிதனும், பசுபதி சாம்ப சாஸ்திரியும சேர்ந்து கிரியண்ணா, பட்ஜி இருவரையும் நான்கைந்து நாட்களுக்கு வீட்டிலேயே தங்கவைத்து உபசரித்தனர். பிறகு ஒரு நாள் இருவருக்கும் பல மான விருந்து ஏற்பாடானது. முடிந்ததும் பரிசுப் பொருள்களையும் ஐம்பது பொற்காசுகளையும் தட்டு ஒன்றில் வைத்து வெகுமதியாக இருவருக்கும் தனித்தனியே கொடுத்தனர் அப்போது பட்ஜி, "ஐயா. நீங்கள் விவரம்

அறிந்தவர். என்னிடம் இருக்கும் அற்பசக்தியை நான் வெளிப்படுத்தினேன். அவ்வளவுதான். அதற்கு பிரதி உபகாரமாக இந்த வெகுமதிகளை அளித்து எங்களை எடுத்துக் கொள்ளச் சொல்வது உங்கள் பெருமைக்கு மேலும் மேலும் அழகூட்டும் காரியம். ஆனால் எதையும் நான் ஏற்றுக் கொள்ள இயலாது. அப்படி ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் என் மந்திர சக்தி எல்லாம் மாயமாய் மறைந்து விடும். அதனால் இந்த வெகுமதிகளை நான் ஒரு தண்டனையாய்க் கருதுகிறேன். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள். நான் எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது என் குருவின் ஆணை. ஆபத்துக்காலங்கிளில் என் சக்தியை உபயோகித்து ஜனங்களுக்கு நான் செய்யும் உபகாரத்தை, இதை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் செய்ய இயலாமல் போவேன்" என்று சொன்னான். அப்போது சாம்ப சாஸ்திரியும், சதாசிவதீட்சிதனும் பட்ஜியைப் பார்த்து, "ஐயா, நீங்கள் பெரிய ரிஷி என்பதை ஒத்துக் கொள் கிறேன். இந்த கலியுக காலத்தில் கூட உலகுக்கு உபயோகமான காரியங்களைச் செய்கி றீர்கள். உங்கள் தரிசனம் கிடைத்தது போன ஜென்மத்தில் நாங்கள் செய்த புண்ணியம் தானே தவிர வேறு இல்லை. நீங்கள் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னால் கூட அதைச் செய்து முடிக்கும் சக்தி எங்களுக்குப் போதாது. ஆனாலும் உங்களிடம் இரண்டு வேண்டுகோள்கள். அதைமட்டும் நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டும். இந்த வெகுமதியை நாங்கள் திரும்பவும் எடுத்துக் கொள்ளக் கூடாது. அது உங்களுக்குத் தரும் பொருட்டு எடுத்து வந்த காரணத்தால் உங்களைத் தவிர வேறு யாருக்கும் கொடுத்தல் பிழையாகும். வேறு யாருக்கு இதைத் தருவது? நீங்கள் யாருக்குச் சொல்கிறீர்களோ, அவர் களுக்குத் தந்துவிடலாம். உண்மை யிலேயே ஒரு கடவுளைப் போலத் தோன்றி உயிர்ப்பிச்சை கொடுத்து எங்களைக் காப்பாற்றி இருக்கிறீர்கள். எங்கள் வம்சம் இருக்கும் மட்டும் தங்கள் உருவத்தை வைத்து பூசை செய்ய வேண்டும். இந்த உடம்பையே தங்களுக்கு அர்ப்பணித்தாலும் கூட அதற்கு சமமாகாது. இதைவிட அதிகமாகத் தங்களைக் கேட்டுக் கொள்ள வேறு ஒன்றுமில்லை." என்றார்கள். அப்போது பட்ஜி தன் நண்பனைப் பார்த்து, "கிரியண்ணா, அவர்கள் செய்யும் மரியாதையையும் வெகுமதிகளையும் நீ ஏற்றுக் கொள். அவர்கள் வீட்டில் இருந்து விட்டு, அவர்கள் மனம் நோகுமாறு எதற்கு நடக்க வேண்டும்" என்றான். பட்ஜியின் சொற்படியே கிரியண்ணாவும் தட்டிலிருந்து ஒரு வேட்டியை எடுத்துக் கொண்டான். மீண்டும் பசுபதி சாம்பசாஸ்திரி, "நாங்கள் கேட்டுக் கொள்ள நினைத்ததில் ஒரு அம்சம் ஞாபகத்துக்கே வராமல் போனது. நீங்கள் பெரிய மகாத்மா. நேர்மையாளர். நீங்கள் செய்த உயிர் தானத்துக்கு நன்றிக் கடனாக எங்களை எதையுமே செய்ய நீங்கள் அனு மதிக்கா விட்டாலும், மனத்திற்குள் நன்றியுணர்வோடு இருப்போம். அது இருக் கட்டும். இன்னொரு விஷயம் என்ன என்றால், உங்கள் பெருமையும் புகழும் கிருஷ்ணராஜ உடையாரின் அரசசபை வரைக்கும் பரவிவிட்டது. உங்களைக் காண அரசர் வெகு ஆவலுடன் இருக்கிறார். உங்களை அழைத்து வரும்

பொருட்டு என்னை அனுப்பினார். கண்டிப்பாக நீங்கள் என்னோடு மைசூருக்கு வரவேண்டும். அரசரைச் சந்திக்க வேண்டும். அதற்கப்புறம் நீங்கள் விரும்பும் இடத்துக்குப் புறப்பட்டுச் செல்லலாம்", என்றான். உடனே பட்ஜி, "இது நடக்காத விஷயம். ராஜசபையில் எனக்கு எந்த வேலையும் இல்லை. அங்கே வந்த பிறகு அவர்கள் சொல்கிறபடி நடக்க வேண்டிய திருக்கும். ஏதாவது வெகுமதி அளிப்பார்கள். அதை அங்கீகரிக்க வேண்டிய திருக்கும். ஏற்றுக் கொள்ளா விட்டால் அவர்களை அவ மரியாதை செய்ததாக இருக்கும். ஏற்றுக் கொண்டால் என் குருவின் ஆணையை மீறியதாக இருக்கும். அது மட்டுமல்ல. ராஜசபைக்குச் சென்று அரசரைச் சந்திக்கிற அளவுக்கு நம் செல்வாக்கு உயர்ந்திருக்கிறதே என்று ஒரு வேளை இல்லாவிட்டாலும் ஒரு வேளை செருக்கு தோன்றும். ஒரு நிமிஷமாவது அந்தசெருக்கு தோன்றி மறையும். அப்படி செருக்கு தோன்றும்பட்சத்தில் எம் சக்தி குறையும். அதனால், என்னால் மைசூருக்கு வர இயலவில்லை" என்றான். மீண்டும் பசுபதி சாம்பசாஸ்திரி, "உங்கள் மனசுக்கு எந்த ரீதியிலும் குறைவராமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு என்னுடையது. கண்டிப்பாக நீங்கள் மைசூருக்கு வர வேண்டும்" என்றான். இதை எல்லாம் கேட்டு முடிந்த பிறகு அன்றைய தினம் இரவு கிரியண்ணாவும் பட்ஜியும் வெளித்திண்ணையில் படுத்துக் கொண் டனர். விடிந்ததும் பார்க்கும்போது தெருவாசல் கதவு பாதி திறந்திருந்தது. அந்த இருவருமே அங்கு இல்லை. எவ்வளவு தேடியும் அகப்பட வில்லை. 'இவ்வளவு பெரியவர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்களே' என்று சொல்லிச் சொல்லி அரற்றினர்.

மூன்று நாள்களில் சஞ்சவாடியே பாழும் ஊரானது. விழுந்து சிதைந்த சுவர்கள்? முரிந்த கதவுகள், திறந்த வாசல், அகண்ட குழிகள், உடைந்த மண் பானைகள், எல்லாம் எந்தத் திசையில் பார்த்தாலும் தென்பட்டன. ஊரில் வசிப்பவர்கள் எல்லாரும் மூலைக்கு ஒருவராய்ச் சிதறினர். ஓரிரு வீட்டில் மட்டும் தள்ளாடும் வயது முதிர்ந்த கிழவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். அந்த ஊர் பிராமணர்கள் எல்லாம் வேறு ஊருக்குப் பிரயாணம் சென்று அங்கே சேர்ந்து கொண் டார்கள். 'இனிமேலும் இந்த ஊரில் இருப்பது நமக்கு அழ கில்லை' என்று முடிவுகட்டிய சதாசிவதீட்சிதனும், பசுபதி சாம்ப சாஸ்திரியும் முடிவெடுத்து மூன்றாம் நாளே சாமான்களை யெல்லாம் மூட்டை கட்டிக் கொண்டும் மற்ற எல்லாரையும் அழைத்துக் கொண்டும் மைசூருக்குப் புறப் பட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். பதினைந்து நாள்களுக்குள் ஊருக்குள் சுத்த மாய் ஓர் உயிரும் இல்லாதபடி ஆயிற்று. பசுபதி சாம்ப சாஸ்திரியும், சதாசிவ தீட்சிதனும், கிருஷ்ண ராஜ உடையாரைச் சென்று சந்தித்தனர். நடந்த சம்பவங்களையெல்லாம் விரிவாகச் சொன்னார்கள். 'அந்த மகாத்மாக் களைச் சந்திக்க இயலாமல் போய்விட்டதே' என்று மிகவும் மனம் வருந்தினார் அரசர். அவர்கள் வரவில்லை என்கிற சங்கதியைக் கேட்டு அரசவையில் இருந்தவர்களும் ஏமாற்றம் அடைந்தார்கள். குடும்பசகிதமாக மைசூரிலேயே

தங்கிவிட்டான் சதாசிவதீட்சிதன். மகாதேவனும், சீத்தம்மாவும் வெகுகாலத்துக்குக் குடும்பம் நடத்திச் சுகமாக வாழ்ந்தார்கள்.

அங்கே சஞ்சவாடியில் திருடர்கள் மறைவிடமே தகர்ந்து போனது. அந்தக் கும்பலில் அநேக பேருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அமாவாசையின் மூலமாய்த்தான் இத்தனை பெரிய திருட்டுக் கும்பலைப் பிடிக்க முடிந்தது என்கிற காரணத்தால், அவனுடைய குற்றங்களை மன்னித்து அரசாங்கம் அவனை விடுவித்துவிட்டது. சஞ்சவாடியைச் சேர்ந்த திருடர் கூட்டத்தை சிறையில் அடைக்க அழைத்துச் செல்லப்படும் போது விடுதலையாகிய அமாவாசை வெளியே வந்தான். அவர்களைக் கண்டதும் 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்று கூவினான்